மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

சட்டப்பேரவையில் ஆற்றிய உரைகள்

(12.02.2018 - 08.01.2019)

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

சட்டப்பேரவையில் ஆற்றிய உரைகள்

(12.02.2018 – 08.01.2019)

சிறப்பு வெளியீடு எண். 31

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

பொருளடக்கம்

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

1. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருவுருவப்படத்தினை சட்டப்பேரவையில் திறந்து வைத்து ஆற்றிய உரை (12.02.2018) 1

2. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் தனித் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை. (15.03.2018).................... 13

3. தேனி வனக் கோட்டம், கொட்டக்குடி காப்புக் காட்டில் (குரங்கணி பகுதியில்) ஏற்பட்ட தீ நிகழ்வு தொடர்பாக விளக்கம். (19.03.2018)................................. 23

4. காவல்துறையில் நடக்கும் தற்கொலை சம்பவங்கள் குறித்து விளக்கம். (19.03.2018) 31

5. தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்வது பற்றியும், காவல்துறை பெற்ற சிறப்புகள் மற்றும் விருதுகள் பற்றியும் விளக்கம். (19.03.2018) 33

6. ராம ராஜ்ய ரத யாத்திரைக்கு வந்துள்ள எதிர்ப்பு குறித்து விளக்கம். (20.03.2018)..36

7. திருவெறும்பூரில் வாகன சோதனையின் போது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த பெண் தவறி விழுந்து இறந்தது குறித்த விளக்கம். (21.03.2018)..40

8. அரசு மணல் விற்பனை செய்தல் தொடர்பான விளக்கம் (21.03.2018)..43

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
9.	காவேரி மேலாண்மை வாரியம் அமைத்திட மத்திய அரசிற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது என்று விளக்கம். (21.03.2018)	46
10.	நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து விளக்கம். (21.03.2018)	48
11.	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டது குறித்து விளக்கம். (21.03.2018)	49
12.	விழுப்புரம் மாவட்டம், வெள்ளாம்புதூர் கிராமத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் பள்ளி மாணவன் கொலை செய்யப்பட்டு, அவரது தாய் மற்றும் சகோதரி காயப்படுத்தப்பட்டது குறித்து விளக்கம். (22.03.2018)	52
13.	எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் சாலை வசதி குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம். (22.03.2018)	54
14.	எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் தமிழ்நாட்டில் ரவுடிகள் கைது மற்றும் தமிழ்நாட்டின் வளம் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம். (22.03.2018)	57
15.	மதுரை கூடல் புதூர் மற்றும் சிக்கந்தர்சாவடியில் உள்ள ஜெபவீடுகளில் ஜெபம் நடத்துவது தொடர்பாக கிறிஸ்தவர்களை அடையாளம் தெரியாத சிலர் மிரட்டியது தொடர்பான சம்பவம் குறித்து விளக்கம். (22.03.2018)	60

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
16.	எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்தேக்க திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம். (22.03.2018)	63
17.	தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்தில் ஆற்றிய உரை. (29.05.2018)	66
18.	தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)	101
19.	வனத்துறை தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)	108
20.	எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவை நடவடிக்கையில் கலந்து கொள்வது குறித்த கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)	110
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 04.06.2018 அன்று சட்டமன்றப் பேரவையில், காவேரி நதிநீர் பிரச்சினையில் 18.05.2018 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த சாதகமான அம்சங்கள் குறித்து அளித்த விளக்கம்.	112
22.	தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை நிரந்தரமாக மூடுவது தொடர்பான போராட்டத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (04.06.2018)	130
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 05.06.2018 அன்று, சட்டமன்றப் பேரவையில், மணல் குறித்து அளித்த விளக்கம்.	134

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

24. சட்டப்பேரவையில், நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக தற்கொலை செய்து கொண்ட செல்வி பிரதீபா குடும்பத்திற்கு நிவாரணம். (06.06.2018) 135

25. விவசாய சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு மற்றும் சிலர் இன்று கைது செய்யப்பட்ட நடவடிக்கை குறித்து விளக்கம். (07.06.2018) 136

26. எம்–சாண்ட் மணல் குறித்து விளக்கம். (07.06.2018).......... 138

27. நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம், பெருமாள் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம். (07.06.2018).......... 140

28. தூத்துக்குடி சம்பவம் குறித்து விளக்கம். (07.06.2018).......... 141

29. திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொலக்குணம் கிராமத்தில் கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மண் சரிந்து உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம். (07.06.2018).......... 143

30. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 08.06.2018 அன்று சட்டப்பேரவையில், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது குறித்து விளக்கம்.......... 144

31. தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் சென்னை – பெங்களூரு விரைவுச் சாலை குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (11.06.2018) 149

32. சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை சந்திரசேகர் அவர்கள் அனுமதியின்றி மணல் அள்ளப்படுவது குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (11.06.2018) 151

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
33.	தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் பசுமை வழி விரைவுச் சாலை, தரமணி முதல் சிறுசேரி வரையிலான உயர்மட்ட பாலம் மற்றும் பெருங்களத்தூர் – வண்டலூர் 8 வழிச்சாலையாக விரிவுபடுத்துதல் குறித்து எழுப்பிய வினாவிற்கு அளித்த பதிலுரை. (11.06.2018)	154
34.	தஞ்சாவூரில் காவேரி உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளர் திரு.பெ.மணியரசனிடம் வழிப்பறி செய்த சம்பவம் குறித்து விளக்கம். (11.06.2018)	157
35.	தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் சென்ட்ரல் இரயில்நிலைய ஸ்கைவாக் திட்டம் குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (11.06.2018)	159
36.	சென்னை–சேலம் பசுமை வழி விரைவுச் சாலை திட்டம் மற்றும் திட்டத்திற்கான எதிர்ப்பு குறித்து விளக்கம். (11.06.2018)	161
37.	சென்னை–சேலம் பசுமை விரைவுச் சாலை திட்டம் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அளித்த விளக்கம். (11.06.2018)	170
38.	2018–2019ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு அளித்த பதிலுரை. (11.06.2018)	173
39.	கோவை மாநகரில் புதிய தலைமுறை தொலைக்காட்சியின் வட்டமேசை விவாத நிகழ்ச்சியின் போது ஆட்சேபகரமான கருத்து பதிவு செய்தது தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து விளக்கம். (11.06.2018)	215
40.	தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் புதிய பாலங்கள் கட்டுமானம் பற்றி எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (11.06.2018)	222

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
41.	தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் டெண்டர் விதிமுறை குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (11.06.2018)	224
42.	ஜாக்டோ – ஜியோ போராட்டம் மற்றும் தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை பற்றியும் விளக்கவுரை. (12.06.2018)	226
43.	திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் விழுப்புரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி குறித்த கவன ஈர்ப்பு மீது ஆற்றிய உரை. (14.06.2018)	228
44.	திருச்சி பால் பண்ணை – துவாக்குடி அணுகு சாலை அமைத்தல் குறித்த கவன ஈர்ப்பு மீது ஆற்றிய உரை. (14.06.2018)	230
45.	மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மீது ஆற்றிய உரை. (14.06.2018)	233
46.	சிலை திருட்டு குறித்து விளக்கம். (26.06.2018)	238
47.	தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலை குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அளித்த விளக்கம். (26.06.2018)	239
48.	பசுமை வழிச்சாலை குறித்து அளித்த விளக்கம். (26.06.2018)	242
49.	மணல் குறித்து அளித்த விளக்கம். (26.06.2018)	245
50.	தமிழகத்தில் கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, கூட்டுக் கொள்ளை மற்றும் கன்னக்களவு சம்பந்தமான குற்றங்கள் குறித்து அளித்த விளக்கம். (26.06.2018)	248

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

51. மத்திய அரசின் 2018ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு வரைவு மசோதாவின் மீதான சட்டமன்றப் பேரவைத் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை. (26.06.2018) 251

52. கோவையில் சட்டவிரோதமாக குட்கா தயாரித்தது தொடர்பாக காவல் துறையினர் சோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தது குறித்து விளக்கம். (26.06.2018) 256

53. காவல்துறை பணியிடங்கள் குறித்து விளக்கம். (26.06.2018) 260

54. காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உடல் நலத்தை பேணி காக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கம். (26.06.2018) 263

55. சிலை திருட்டு தடுப்புப் பிரிவு – உயர்நீதிமன்ற வழக்கு தொடர்பான விளக்கம். (29.06.2018) 266

56. புதுடில்லியில் நடைபெறும் காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம் குறித்து விளக்கம். (02.07.2018) 272

57. இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பது பற்றிய விளக்கம். (02.07.2018) 275

58. புதுடில்லியில் இன்று நடைபெற்ற காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அளித்த விளக்கம். (02.07.2018) 276

59. நேபாளம் – திபெத் எல்லையில் உள்ள மானசரோவர் யாத்திரை சென்ற தமிழர்களை நலமுடன் மீட்டு, அழைத்துவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விளக்கம். (04.07.2018) 278

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
60.	காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் தொடர்பான உச்சநீதிமன்ற ஆணை குறித்து விளக்கம். (05.07.2018)	280
61.	மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்கள். (05.07.2018)	282
62.	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில், மேகதாது பிரச்சினை தொடர்பாக முன்மொழிந்த தனித் தீர்மானம் (06.12.2018)	286
63.	மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திரு.மு. கருணாநிதி அவர்களின் மறைவுக்காக சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை (03.01.2019)	288
64.	கஜா புயலால் வீடுகளை இழந்த ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது தொடர்பாக ஆற்றிய உரை. (04.01.2019)	295
65.	கஜா புயல் மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை. (04.01.2019)	297
66.	கஜா புயல் தாக்குவதற்கு முன்பாக அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆற்றிய உரை. (05.01.2019)	318
67.	அணை பாதுகாப்பு சட்ட மசோதா பற்றிய விளக்கம். (05.01.2019)	320
68.	அணை பாதுகாப்பு சட்ட மசோதா பற்றிய விளக்கம். (05.01.2019)	323

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்

69. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் செயல்பட்டு வரும் TCPL ஆலையை மூட வேண்டும் என்பது தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம். (07.01.2019) 324

70. ஸ்டெர்லைட் ஆலை தொடர்பாக அளித்த விளக்கம். (07.01.2019) 325

71. மேகதாது அணை மற்றும் விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக அளித்த விளக்கம். (07.01.2019) 327

72. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 02.01.2019 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் பதிலுரை – 08.01.2019 331

ஃஃஃ

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்து புகழாரம் (12.02.2018)

அம்மா தெய்வத்தை வணங்கி, இந்திய அரசியல் வரலாற்றின் ஈடு இணையற்ற சகாப்தம்! உலகமே தமிழ்நாட்டை உற்றுநோக்க வைத்த சரித்திரம்! இளகும் உள்ளமும், இரும்பு உறுதியும் கொண்ட தங்கத் தாரகை! தென்னகத்தின் திலகம்! முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய் கோலோச்சிய கொள்கைக் குன்று! பாரதி கண்ட புதுமைப் பெண்! பாரதம் கண்ட புரட்சி வேள்வி! அரசியல்வாதிகளின் நம்பிக்கை நட்சத்திரம்! கனிவும், கண்டிப்பும் ஒருங்கே பெற்ற ஆளுமை! வீரத்தில் ஜான்சி ராணியாய், அன்பில் அன்னை தெரசாவாய், தொண்டரைக் காப்பதில் வீரமங்கை வேலுநாச்சியாராய், கழகத்தைக் காப்பதில் மங்கையர்கரசியாய், தமிழகத்தையும், தமிழக மக்களையும் காப்பதில் காவல் தெய்வமாய், மறைந்தும் மறையாத மாணிக்கமாய் அனைவரது உள்ளங்களிலும் வீற்றிருக்கும் வீரத்தாய், ஆறு முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, அனைவரின் அன்பையும், பாசத்தையும் பெற்ற ஆருயிர் தெய்வம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த சட்டமன்றப் பேரவையில், வரலாறு படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் திருஉருவப்படத்தை திறந்து வைத்த மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்களே

இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுள்ள மாண்புமிகு நாடாளுமன்ற துணை சபாநாயகர் அவர்களே,

இந்நிகழ்ச்சிக்கு வரவற்புரை வழங்கிய மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, நன்றியுரை வழங்க இருக்கும் மாண்புமிகு கொறடா அவர்களே,

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தலைமைச் செயலாளர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, சட்டப்பேரவைச் செயலாளர் அவர்களே,

அரசு உயர் அதிகாரிகளே, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் வருகை தந்துள்ள முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வருகை தந்துள்ள சான்றோர் பெருமக்களே, வருகை தந்துள்ள பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாறு படைத்த சாதனைத்தலைவியின் திருவுருவப்படத்தை திறந்து வைக்கும் இந்த விழாவில் நான் பங்கேற்பதை என் வாழ்நாள் பாக்கியமாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இவ்வரசு பதவியேற்று, ஓராண்டை வெற்றிகரகமாக நிறைவு செய்யும் இவ்வேளையில், இந்த விழா நடப்பது, மாண்புமிகு அம்மா அவர்களே நேரில் வந்து ஆசி வழங்குவதைப் போல் உணர்கிறேன்.

இந்த உயிரோட்டமுள்ள ஓவியம், மாண்புமிகு அம்மா அவர்களின் கம்பீரம், கண்ணியம், ஆளுமை, தாய்மை, மாட்சிமை, பெருந்தன்மை ஆகிய குணங்களை ஒருங்கே தத்ரூபமாக பிரதிபலிக்கின்றது.

இந்த உயிரோட்டமுள்ள திரு உருவ ஓவியத்தை தீட்டிய ஓவியரை நான் மனதார பாராட்டுகிறேன்.

ஒருவர் தான் வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் சரி, வாழ்ந்து மறைந்த பிறகும் சரி, அனைவரது உள்ளங்களிலும் நீங்காப் புகழைப் பெற்றிருக்க வேண்டுமெனில், அதற்குத் தேவை தன்னலமின்மை. இந்தத் தன்னலமின்மைக்கு சொந்தக்காரர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

வரலாறு என்பது, வந்து போனவர்களின் தொகுப்பு அல்ல; தந்து போனவர்களின் தொகுப்பு என்பார்கள். ஆம்! நலத் திட்டங்களை,

வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை, மாநிலத்தின் உரிமைகளை பெற்றுத் தந்து போனவர்களின் தொகுப்பு.

வரலாறு படிப்பது முக்கியமல்ல; வரலாறு படைக்க வேண்டும். பிறர் தடம் பார்த்து நடப்பது முக்கியமல்ல; நாமும் தடம் பதிக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் இலக்கணமாய் வாழ்ந்து காட்டி, இந்திய வரலாற்றின் கலைத்துறை பக்கங்களிலும், அரசியல் பக்கங்களிலும், தென்னகத்திலிருந்து குறிப்பிடத்தக்க இடம் பிடித்த கலையரசியாகவும் வரலாறு படைத்த சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்

மண்ணை விட்டு மறைந்து விண்ணுக்குச் சென்றாலும், நம்முடைய மனங்களில், தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் நிரந்தரமாக வீற்றிருக்கும் தங்கநிகர்த் தலைவி, பூமி உள்ளவரை, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு நேர்காணலில் பேசியபோது, ‘என்னை திரைப்படத் துறையிலும், அரசியல் களத்திலும் முதல்வராக்கியது என் தமிழ் மக்கள் தான்’ என்று நன்றிப் பெருக்கோடு கூறினார்கள்.

அந்தக் கூற்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் முற்றிலும் பொருந்தும்.

தமிழ் மக்களால், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களால், தமிழ் மக்களும் வளர்ந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசியல் வளர்ச்சி என்பது அக்னியில் இருந்து மீண்ட பீனிக்ஸ் பறவையை போன்றதாகும்.

அ.இ.அ.தி.மு.க.–வில் இணைந்து பின் கொள்கை பரப்புச் செயலாளராகவும், பிறகு மாநிலங்களவை உறுப்பினராகவும் அரசியலில் திடமாக தடம் பதித்து வளர்ந்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் மறைவிற்குப் பின்னர், அ.இ.அ.தி.மு.க.–வின் தலைமைப் பொறுப்பினை ஏற்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனார்கள்.

அதன் பின்னர் பல சோதனைகளையும், வேதனைகளையும் வெற்றிகரமாக கடந்து, 1991 முதல் 6 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் திரு உருவப் படத்திற்கு கீழே எழுதப்பட்டுள்ள, மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரமான, "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற பாதையில், தமிழ்நாட்டை திறம்பட வழிநடத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தனக்கென்று ஒரு தனி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், தமிழ்நாட்டின் நலனை, தன் நலன் என்று கருதி, அயராது உழைத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தனது ஆட்சிக் காலங்களில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தார்கள்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஒரே அரசியல் வாரிசாக மாண்புமிகு அம்மா அவர்கள் உருவெடுத்தார்கள்.

அதேபோல 2001, 2011 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க.வை வெற்றி பெறச் செய்து சாதனை படைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டின் 39 தொகுதிகளில் 37இல் வெற்றி பெற்று, இந்திய நாடாளுமன்றத்தில் 3ஆவது பெரிய கட்சியாக அ.இ.அ.தி.மு.க.–வை அமர வைத்து சரித்திரம் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் – மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தன் பொற்கால ஆட்சியில் ஏழைகளுக்காக எண்ணற்ற உன்னதமான முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் மக்கள் மனதில் தெய்வமாகவே இன்றும் வாழ்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை ராஜ்யசபா உறுப்பினராகவும், ராஜ்யசபா அ.இ.அ.தி.மு.க.–வின் துணைத் தலைவராகவும் ஆக்கினார். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ராஜ்யசபாவில் ஒதுக்கப்பட்ட அதே இருக்கை தான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. அப்போது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை இந்திய அரசியல்வாதிகளையும் உற்று நோக்க வைத்தது.

“திட்டத்திற்காக அல்ல மக்கள், மக்களுக்காகவே திட்டங்கள்” என்று கூறியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

“நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்”, என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுக்கும் வகையிலும், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், அவர்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழித்திடும் வகையில் உலகத்திற்கே முன்னோடியாக “அனைத்து மகளிர் காவல் நிலையங்களை” மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

அது மட்டுமன்றி, “தமிழ்நாடு பெண்கள் இன்னல் தடுப்புச் சட்டத்தின்” கீழ் குற்றவாளிகளுக்கான தண்டனைகளை கடுமையாக்கி சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்தார். மாண்புமிகு எம்.ஜி.ஆர், அம்மா வழியில் செயல்படும் இவ்வரசால், தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்கிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போல, பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் உட்பட அனைத்துத்

தரப்பு மக்களுக்காகவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த அபூர்வத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இறுதி மரியாதை செய்ய வந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களும், “ மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவு இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது; மாண்புமிகு அம்மா அவர்களின் மக்களுடனான உறவு, ஏழை எளிய மக்கள், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் மீதான அவரது அக்கறை பிறருக்கு என்றென்றும் ஊக்கமாகத் திகழும்” என்று பாராட்டினார்.

சட்டப் போராட்டத்தின் மூலம், தனது தொடர் முயற்சியால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட செய்தார். இது காவேரியை மீட்ட காவியத் தாயின் ஒரு வரலாற்றுச் சாதனையாகும். அதே போல முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் உச்சநீதிமன்றம் வரை சென்று போராடி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அணையின் நீர் தேக்கும் அளவினை 142 அடியாக உயர்த்த ஆணை பெற்றார்.

நிலத்தடி நீர் உயரும் வகையில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தி, அனைத்து வீடு மற்றும் கட்டடங்களும் கட்டாயம் மழைநீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் ஆணை வெளியிட்டார்கள்.

வறட்சிக் காலங்களிலும், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்ததை உலகம் பாராட்டியது. “என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தன் சொல்லை செயலாக்கும் வண்ணம், குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தினார்கள்.

“தேசியமும், தெய்வீகமும் தனது இரு கண்கள்” என்று முழங்கியவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். இந்த பொன்மொழியை தனது வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகப் பணி அனைவரும் அறிந்த ஒன்று.

திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம், ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம், அனைத்து மதத்தினரும் தங்கள் புனிதத் தலங்களுக்குச் செல்ல மானியம் வழங்கும் திட்டம் என மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகப் பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தேசப் பற்று என்பது இளம் வயதிலிருந்தே மாண்புமிகு அம்மா அவர்களின் இரத்தத்தில் ஊறிய ஒன்று. 1965ஆம் ஆண்டு பாகிஸ்தான் போர் நடைபெற்ற போது, அப்போதைய பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களைச் சந்தித்து, தன்னுடைய நகைகளை நாட்டிற்காக வழங்கிய புனிதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தத் தருணத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தினை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர், பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

இந்த உறுப்பினர், 2005ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோது, மத்திய அரசு நிதி தராததை சுட்டிக்காட்டி, மத்திய அரசை தாக்கிப் பேசியதோடு, தேச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஒரு வார்த்தையை பயன்படுத்தினார்.

உடனே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் “இந்தப் பேச்சை பதியவைக்கக்கூடாது” என்று வலியுறுத்தினர்.

இதற்கு பதில் அளித்த மாண்புமிகு அம்மா அவர்கள், “அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பிரிவினைக் கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. நாட்டின் ஒற்றுமையை என்றைக்கும் காப்போம்“ என்று சூளுரைத்தார். இதோடு நின்றுவிடவில்லை. “மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்“ என்றும் கேட்டுக் கொண்டார்.

இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், 2005இல், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் தி.மு.க. அங்கம் வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தாலும், தேச ஒற்றுமை, தேசப் பற்று என்று வந்தவுடன், அதற்கு ஆதரவாக குரல் எழுப்பியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அனைவருக்கும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்; ஏழைகள் பசி போக்க அம்மா உணவகங்கள்; பசுமை பண்ணை நுகர்வோர் கடைகள்; அம்மா குடிநீர், அம்மா மருந்தகங்கள்; முதியோர், விதவை, ஓய்வூதியம்; நெசவாளிகள் மற்றும் வீடுகளுக்கு குறிப்பிட்ட அளவு விலையில்லா மின்சாரம், ஏழைத் திருமணப் பெண்களுக்கு 50,000 ரூபாய் வரை உதவி மற்றும் எட்டு கிராம் தாலிக்கு தங்கம்; விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் விலையில்லா மின்விசிறி வழங்கும் திட்டம், கிராமப்புற ஏழை மக்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம், முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம் என பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்காக ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் நலன்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

கல்வித்துறையில் மாணவ, மாணவியருக்கு 14 வகையான நலத்திட்ட பொருட்கள், விலையில்லா மடிக்கணினி, கட்டணமில்லா பேருந்து வசதி, என பல்வேறு திட்டங்கள், பள்ளிகளை தரம் உயர்த்தல் உயர்கல்வியில் குறைந்த கட்டணத்தில் மாணவர்கள் பயில்வதற்கு

ஏதுவாக, பல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பால்டெக்னிக் கல்லூரிகள் திறக்கப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஒரு சிறுதுளி கூட மாறாமல் அனைத்து நலத்திட்டங்களையும் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இங்கு பெருமையாக குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு சிறு கதை மூலம் தெய்வத்தின் அருள் எவ்வளவு முக்கியமானது என தெரிவிக்க விரும்புகிறேன்.

காந்தபுர நகரம் என்றொரு நகரம். "அரசர் இருப்பதால் எல்லாம் சுபிட்சமாக இருக்கிறது. அவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது" என்று சொல்லும் ராஜபக்தன் ஒருவன் இருந்தான்.

அதே நேரத்தில், "எல்லாம் ஆண்டவர் அருள். அவன் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது." என்று சொல்லும் இறை பக்தனும் இருந்தான். ராஜாவின் ஆட்சியா, ஆண்டவரின் ஆட்சியா என்பதில் இருவரும் வாக்குவாதம் செய்து கொள்வார்கள்.

மாறுவேடத்தில் வந்த ராஜா இவர்கள் இருவரையும் கவனித்தார். பின்னர், பூசணிக்காய் ஒன்றை எடுத்துக் குடைந்தார் ராஜா. அதற்குள் சில தங்க நாணயங்களையும், வைரங்களையும் போட்டார். அதனைக் குடைந்து எடுத்த இடம் தெரியாமல் மூடியும் விட்டார்.

ராஜா பக்தனைக் கூப்பிட்டு அதனை பரிசாகக் கொடுத்தார். இதனைப் பெற்றுக் கொண்ட ராஜா பக்தன், சிறிய பரிசை ராஜா கொடுத்திருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டே அதனைக் கடையில் விற்றுவிட்டான்.

அதே வீதி வழியாகக் ஆண்டவனின் பக்தன் சென்றான். பூசணிக்காயை பார்த்தான். கடையிலிருந்து அதனை 2 ரூபாய் விலை கொடுத்து வாங்கி, சிவனடியார்க்கு அன்னதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பூசணிக்காயை நறுக்கச் சொன்னான்.

அவ்வாறு நறுக்கும்போது, அந்த பூசணிக்காய்க்கு உள்ளே 20 தங்க நாணயங்கள், சில வைரக் கற்கள் இருந்தன. ஆச்சர்யம் தாங்கவில்லை ஆண்டவ பக்தனுக்கு. ஆண்டவனின் பக்தன் இது

யாருடைய பொருள் என்று தெரியாததால் ராஜாவிடம் முறையிடச் சென்றான்.

அந்த நேரத்தில், ராஜாவும், அந்த ராஜா பக்தனை அழைத்து வர ஆள் அனுப்பினார். ‘‘உனக்குத் தங்கப் பூசணிக்காய் கொடுத்தேனே! என்ன செய்தாய்?’’ என்று கேட்டார்.

‘‘சாதாரண பூசணிக்காய்! அதை ஒரு ரூபாய்க்கு விற்று விட்டேன்.’’ என்றான் ராஜபக்தன். ராஜா வாயை மூடிக் கொண்டார்.

‘‘ராஜாவே! நேற்று நான் கடைவீதிக்குப் போனேன். அங்கே ஒரு பூசணிக்காய் வாங்கினேன். அதில் 20 தங்க நாணயங்களும், சில வைரக் கற்களும் இருந்தன. அதுபற்றி தங்களிடம் முறையிடவே அவற்றோடு வந்து இருக்கிறேன்.’’ என்று கூறி அதனை ராஜா முன்பு வைத்தான் ஆண்டவ பக்தன்.

‘‘இதை நீயே வைத்துக்கொள். ஆண்டவர் அருள் மிகப் பெரிது. என்று ராஜா கூறி ஆண்டவ பக்தனை ஆச்சரியப்பட வைத்தார்.

ராஜா பக்தனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ‘‘இந்த நாட்டு மக்களை நான் அரசாட்சி செய்யவில்லை. ஆண்டவன் ஆட்சி செய்கிறான்.’’ என்று ராஜா சொல்லிவிட்டு, இருவருக்கும் உணவு படைத்து அனுப்பினான்.

ஆம்! இந்த நாட்டை, தமிழ்நாட்டை, மாண்புமிகு அம்மா என்கின்ற தெய்வம் எங்களை வழிநடத்தி ஆட்சி செய்கின்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒரு உரையில், உருக்கமாக கூறியதை இங்கே நினைவு கூருகிறேன்.

‘‘உங்களுக்கு வரும் துன்பங்களை எல்லாம் நான் சுமக்கிறேன். எனக்கென்று தனி வாழ்க்கை கிடையாது. எனக்கென்று உறவினர் கிடையாது.

எனக்கு சுயநலம் அறவே கிடையாது. எனக்கு எல்லாமும் நீங்கள் தான். என் இல்லமும், உள்ளமும் தமிழகம் தான்’’ என்று கூறினார்.

இப்படிப்பட்ட உன்னதமான தலைவரின் பெருமை மற்றும் சாதனை மிக்க சரித்திரத்தை வருங்கால சந்ததியினர் தெரிந்து

கொள்வதற்காக அவர் வாழ்ந்த வேதா நிலையத்தை அவரது நினைவு இல்லமாக மாற்றவும், வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பிரமாண்டமான நினைவு மண்டபமும் அமைக்க இவ்வரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

“இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அ.இ.அ.தி.மு.க. மக்களுக்காகவே இயங்கும்” என்று இதே அவையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதை இங்கே நான் நினைவு கூருகிறேன்.

சாதனை என்றால் அம்மா! சரித்திரம் என்றால் அம்மா! சகாப்தம் என்றால் அம்மா! என்பதை இந்த மண்ணுக்கு உணர்த்தி எங்களையெல்லாம் விட்டு விண்ணுக்குச் சென்ற மனித சக்தி கடந்த மகா சக்தி,

ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் சக்தி, உலகத் தமிழர்களின் இதய சக்தி, அம்மா என்னும் அற்புத சக்தியின் திருவடியினை மீண்டும் ஒருமுறை பணிந்து வணங்கி, இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நாமம் வாழ்க! அம்மாவின் புகழ் ஓங்குக! என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை. (15.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு, கருநாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கிடையே பல காலமாக இருந்துவந்த இப்பிரச்சினையில் மாநிலங்களுக்கிடையே பலமுறை பேச்சு வார்த்தை நடைபெற்றும், மத்திய அரசு தலையிட்டும் தீர்வு காண முடியவில்லை.

மதராஸ் மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமைகளை தெளிவாக்குகின்றன. இருப்பினும், 1924ஆம் ஆண்டைய மதராஸ்– மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில், கருநாடகம், 1960களின் பின்பகுதியிலும், 1970களின் தொடக்கத்திலும், காவேரி நதிநீரில் உரிமை உள்ள மாநிலங்களை கலந்து ஆலோசிக்காமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், பல்வேறு அணைகளைக் கட்ட நடவடிக்கை எடுத்தது.

தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினர் 1983இல் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1986ஆம் ஆண்டு, காவேரி நடுவர் மன்றம் அமைக்கக்

கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 1986இல் அவ்வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டது. இவ்வழக்கில், உச்சநீதிமன்றம் 04.05.1990 அன்று நடுவர் மன்றத்தை அமைக்க மத்திய அரசிற்கு உத்தரவிட்டது. இதனடிப்படையில், மத்திய அரசு 02.06.1990 அன்று காவேரி நடுவர் மன்றத்தை அமைத்து அதனை மத்திய அரசிதழில் வெளியிட்டது.

காவேரி நடுவர் மன்றம், 25.06.1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இதில், மேட்டூர் அணைக்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கருநாடகா அதன் நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என ஆணையிட்டது. இதில் புதுச்சேரிக்கு 6 டிஎம்சி அடி போக தமிழ்நாட்டின் பங்கு 199 டிஎம்சி அடி ஆகும். மேலும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்றும், அந்த இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இடைக்கால ஆணைக்கு எதிராக அவசரச் சட்டம் ஒன்றை கருநாடக அரசு இயற்றியது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், கருநாடகா அரசின் அவசரச் சட்டம் குறித்து உச்சநீதிமன்றத்தின் கருத்தை அளிக்கக் கோரினார். இதனை விசாரித்த உச்சநீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என்றும், கருநாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் 22.11.1991 அன்று தனது கருத்துரையை வழங்கியது. இதன் அடிப்படையில், 10.12.1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதற்கு பிறகு, காவேரி நடுவர் மன்றம் 16 ஆண்டுகள் விசாரணையை மேற்கொண்டு, 05.02.2007 அன்று அதன் இறுதி ஆணையை பிறப்பித்தது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, கருநாடக அரசு, பில்லிகுண்டுலு நீரளவை

நிலையத்தில் ஆண்டுக்கு 192 டிஎம்சி அடி நீரை, மாதாந்திர அடிப்படையில் வழங்க வேண்டும். இந்த இறுதி ஆணையை, திறம்பட செயல்படுத்தி மாநிலங்களுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் காவேரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்தது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து, கருநாடகா மற்றும் கேரளா மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் உள்ள சில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக் கோரி தமிழ்நாடு அரசும் ஒரு சிவில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சி பொறுப்பேற்றவுடன், மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட வேண்டும் என பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல்வேறு கடிதங்கள் வாயிலாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் இடையறா முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியாலும், உச்சநீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. எனவே, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி இடைக்கால மனு ஒன்றை 18.03.2013 அன்று தமிழ்நாடு அரசு, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த

மனுவினை 10.05.2013 அன்று விசாரித்த உச்சநீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில் ஒரு தற்காலிக ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது. இந்த ஆணையின்படி மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு 22.05.2013 அன்று அமைத்தது.

மத்திய அரசு தற்காலிக ஏற்பாடாக மேற்பார்வைக் குழுவை அமைத்த போதிலும், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை முழுமையாக செயல்படுத்துவதற்கு, ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும் என்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.

இவை தவிர, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு, கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக இவ்விரு அமைப்புகளையும் விரைவில் அமைக்க வேண்டி மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், 05.12.2014, 27.03.2015 மற்றும் 02.09.2016 ஆகிய தேதிகளில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும் என்று இம்மாமன்றத்தில் ஒருமனதாக தீர்மானங்கள் இயற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும், மத்திய அரசு தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவில்லை.

மாநில அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு உகந்ததா என்பது பற்றி உச்சநீதிமன்றத்தில் எல்லா மாநிலங்களும் மத்திய அரசும் வாதிட்டன. உச்சநீதிமன்றம், இம்மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு உகந்தவை என தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு 20.09.2016 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது காவேரி மேலாண்மை வாரியத்தை 4 வார காலத்திற்குள்

மத்திய அரசு அமைக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், மத்திய அரசு தாக்கல் செய்த மனுவினை விசாரித்த உச்சநீதிமன்றம் 04.10.2016 அன்று இந்த உத்தரவை தள்ளி வைத்தது.

இதன் பின்னர், ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை இறுதி கட்ட வாதங்கள் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றன. இதில், கருநாடக அரசு 9 நாட்களும், கேரள அரசு 2 நாட்களும், தமிழ்நாடு அரசு 13 நாட்களும், புதுச்சேரி அரசு மற்றும் மத்திய அரசு தலா ஒரு நாளும் தங்கள் வாதங்களை எடுத்துரைத்தன. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்சநீதிமன்றம், 20.09.2017 அன்று தீர்ப்பினை ஒத்திவைப்பதாக அறிவித்தது.

உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் என (பத்தி 403, பக்கங்கள் 456–457) குறிப்பிட்டுள்ளது. இதன் விவரம் வருமாறு:–

"We have referred to the aforesaid passages as the award of the Tribunal has to be treated as decree of the Supreme Court. It is so stated in Section 6(2) to give teeth to the award passed by the Tribunal so that none of the States can raise objection to the same and be guided by the directions of the Tribunal. The purpose of framing the scheme is exclusively for implementation of the award. The authorities cited by Mr. Ranjit Kumar, (Solicitor General) we are afraid, are of no assistance in the present context. It needs no special emphasis to state that the purpose of Section 6A is to act in the manner in which the award determines the allocation and decides the dispute with regard to allocation or sharing of water. Keeping that in view, we direct that a scheme shall be framed by the Central Government within a span of six weeks from today so that the authorities under the scheme can see

to it that the present decision which has modified the award passed by the Tribunal is smoothly made functional and the rights of the States as determined by us are appositely carried out. When we say so, we also categorically convey that the need based monthly release has to be respected. It is hereby made clear that no extension shall be granted for framing of the scheme on any ground.”

மேற்கண்ட இந்தத் தீர்ப்பின் மூலம், தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டியநீரின் அளவில் 14.75டி.எம்.சி. அடிநீர் குறைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாட்டிற்கு வருத்தமளிப்பதாக உள்ளது. எனவே, இது குறித்தும், காவேரி நதிநீர் பங்கீடு தொடர்பாக, உச்சநீதிமன்றம் அளித்துள்ள இறுதி தீர்ப்பு குறித்தும் விவாதிப்பதற்காக எனது தலைமையில் 22.02.2018 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி தலைவர்கள் மற்றும் விவசாய சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அ. தமிழ்நாட்டுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்சநீதிமன்றத்தின் 16.02.2018ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டி வலியுறுத்தப்படும்.

ஆ. உச்சநீதிமன்றத் தீர்ப்பில், தமிழ்நாட்டிற்கு, காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையில் வழங்கிய நீரில், 14.75 டிஎம்சி அடி நீரை குறைத்து கருநாடகத்திற்கு கூடுதலாக வழங்கி உத்தரவிட்டது குறித்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொண்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இ. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய

குழுவுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்கவும் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பிலுள்ள தமிழ்நாட்டிற்கு சாதகமான அம்சங்களை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் வலியுறுத்தப்படும்.

24.02.2018 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த தினத்தில், மானிய விலையில் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்ட துவக்க விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, உரிய காலத்திற்குள் அமைத்துத் தருமாறு நான் நேரில் கேட்டுக் கொண்டேன். இதன் தொடர்ச்சியாக, 25.02.2018 அன்று மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகம், நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவரிடம் இதனை வலியுறுத்தி நேரில் கடிதம் அளித்தேன். மேலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனைத்துக்கட்சி தலைவர்கள், விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனது தலைமையில் நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையினை வலியுறுத்த நேரம் கேட்டு கடிதமும் அனுப்பினேன்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையினை செயல்படுத்துவது குறித்து 05.03.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக, மத்திய நீர்வள ஆதாரத்துறை செயலாளர் அவர்கள், 09.03.2018 அன்று புது டெல்லியில் தமிழ்நாடு, கருநாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் நீர்வள ஆதாரத் துறை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது மாநிலங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் எடுத்துரைக்கப்பட வேண்டிய தமிழ்நாட்டின் நிலை குறித்து விவாதிக்க, நான், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் 07.03.2018 அன்று கலந்து ஆலோசித்தேன். மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டத்தில், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை, உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலக் கெடுவுக்குள் மத்திய அரசு அமைப்பதற்கு தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்த வேண்டும் என அறிவுறுத்தினேன்.

காவேரி நடுவர் மன்ற தீர்ப்பு மற்றும் ஆணைகளை செயல்படுத்துவதற்கு ஒரு "திட்டத்தை" (scheme) ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள "திட்டம்" என்னவென்பதை 1956ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் பிரிவு 6(A)(2)இல் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, "திட்டம்" என்பது, நடுவர் மன்ற இறுதி ஆணையையும், தற்போது உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் செயல்படுத்த ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த அமைப்பின் உறுப்பினர்கள், அதிகார வரம்புகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன வரையறுக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், உச்சநீதிமன்றம், அதன் 16.02.2018 நாளிட்ட தீர்ப்பில், பத்தி 397இல், நீர்ப் பங்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டதைத் தவிர, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர இனங்களில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இது தவிர, பத்தி 399இல், காவேரி நடுவர் மன்றம், நீர் முறைப்படுத்தும் குழு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய நீர்வளக் குழுமம் ஆகியவற்றின் உதவியோடு நீர் விடுவிப்பதை மாதாந்திர வாரியாக கண்காணிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளதை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்கண்ட தீர்ப்பின்படி, உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட "திட்டம்" என்பது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு தான் என்றும், அது மட்டுமல்லாமல், இவ்வமைப்புகள் அனைத்து அதிகார வரம்புகளுடன் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக உள்ளது. காவேரி மேலாண்மை வாரியத்தை, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதைத் தவிர, மத்திய அரசுக்கு வேறு மாற்று வழி இல்லை என தமிழ்நாடு அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் சார்பில் 09.03.2018 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில், மேற்கண்ட கருத்துக்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

எனவே, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரங்களும் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

❖ ❖ ❖

தேனி வனக் கோட்டம்,
கொட்டக்குடி காப்புக் காட்டில் (குரங்கணி பகுதியில்) ஏற்பட்ட தீ நிகழ்வு தொடர்பாக விளக்கம்.
(19.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014–2015ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் (Tamil Nadu Biodiversity Conservation & Greening Project) கீழ் முதுவாக்குடி பழங்குடியினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கத்தின் ஒரு பகுதியாக சூழலியல் மேம்பாட்டுக் குழு அமைத்து, சமுதாயம் சார்ந்த சூழலியல் சுற்றுலா (Community Based Eco Tourism) தொடங்க, 11.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 7 முதல் 10 அடி அகலம் கொண்ட ஒரு மலையேற்றப் பாதை அமைக்கப்பட்டது. இந்த மலையேற்றப் பாதை, போடி சரகத்திலுள்ள கொட்டக்குடி காப்புக்காட்டில் உள்ளது. குரங்கணியில் தொடங்கும் இந்த மலையேற்றப் பாதை தமிழ்நாடு–கேரளா மாநில எல்லையில் உள்ள Top Station வரை செல்கின்றது. இப்பாதையின் மையப் பகுதி மற்றும் Top Station பகுதிகளில் இவ்வனப்பகுதியை நன்கு அறிந்த பழங்குடியினர், சூழலியல் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவி புரிகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் குரங்கணியிலிருந்து Top Station வரை செல்வதற்கும், கேரளா மாநிலப் பகுதிகளிலிருந்து Top Station வழியாக குரங்கணி வருவதற்கும் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 200 ரூபாய் வீதம் நுழைவுச் சீட்டு பெற்று செல்ல வேண்டும். இந்தத் தொகையானது சூழலியல் மேம்பாட்டு குழுவின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, முதுவாக்குடி பழங்குடியினரின் நலனுக்காக பயன்படுத்தப்படுகிறது.

10.03.2018 அன்று ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதியினை சார்ந்த 12 நபர்கள் கொண்ட குழு ஒன்று, குரங்கணிக்கு வந்துள்ளது.

அன்றைக்கே குரங்கணியிலிருந்து Top Station செல்வதற்கு சூழலியல் மேம்பாட்டு குழுவிலிருந்து 12 நுழைவுச் சீட்டுகள் பெற்று சென்றுள்ளனர். ஆனால், இக்குழு மேற்காணும் பகுதிக்கு செல்வதற்கு பதிலாக, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத குரங்கணியிலிருந்து கொட்டக்குடி காப்புக்காடு வழியாக, 7.1 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு சென்றுள்ளனர். கொழுக்குமலையில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்கும் மட்டுமே இப்பாதையில் செல்ல அனுமதி உள்ளது. இந்தக் குழுவினர் 10.03.2018 அன்று இரவு கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்தில் தங்கியுள்ளனர். இவர்கள் பெற்ற நுழைவுச்சீட்டு 10.03.2018 அன்று மட்டுமே செல்லத்தக்கதாகும். அன்று இரவே அந்த நுழைவுச்சீட்டு காலாவதி ஆகிவிட்டது. மேலும், இது போன்ற குழுக்கள் இப்பகுதியில் இரவில் தங்குவதற்கு அனுமதி கிடையாது. இக்குழுவினர், 11.03.2018 அன்று முன் அனுமதி ஏதுமின்றி, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையின் வழியாக கொழுக்குமலையில் தனியார் தேயிலை தோட்டத்திலிருந்து, கொட்டக்குடி காப்புகாடு வழியாக குரங்கணிக்கு சென்று கொண்டு இருந்தனர்.

இதே போன்று, சென்னையிலிருந்து 27 நபர்கள் கொண்ட மற்றொரு குழு, சென்னை மலையேற்ற சங்கம் மூலமாக குரங்கணிக்கு 10.03.2018 அன்று வந்தடைந்தனர். அங்கிருந்து வனத் துறையினரிடம் எந்தவித முன் அனுமதியும் பெறாமல், கொட்டக்குடி காப்புக்காடு வழியாக மலை ஏற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையில் கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு சென்று, அன்றிரவு அங்கு தங்கியுள்ளனர். இந்த தனியார் தேயிலைத்தோட்டம் ஒய்வு இல்லமாக செயல்படுவதற்கு அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்குழுவிலுள்ள 27 நபர்களில், மூன்று நபர்கள் கேரளாவிற்கு சென்று விட்டனர். மற்ற 24 நபர்கள், மலை ஏற்றத்திற்கு

அங்கீகரிக்கப்படாத வழிப்பாதை மூலம் கொட்டக்குடி காப்புக்காடு வழியாக 11.03.2018 அன்று மலை ஏற்றத்தை தொடங்கியுள்ளனர்.

இந்த இரண்டு குழுவினரும் 11.03.2018 அன்று கொழுக்கு மலையிலிருந்து குரங்கணிக்கு செல்வதற்கு எந்தவிதமான அனுமதியும் பெறவில்லை. இவ்வாறு வரும்பொழுது, எதிர்பாராத விதமாக அன்றைய தேதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இந்த இரண்டு குழுக்கள், 10.03.2018 அன்று குரங்கணியில் இருந்து கொழுக்குமலை தனியார் தேயிலை தோட்டத்திற்கு செல்லும்போது தீ ஏதுமில்லை. அது மட்டுமல்லாமல், களத்தின் தன்மையின் அடிப்படையிலும் மற்றும் இந்திய வன நிலஅளவை நிறுவன அறிக்கையின்படியும் கொட்டக்குடி காப்புக்காட்டில் கடைசியாக தீ நிகழ்வு ஏற்பட்ட நாள் 15.02.2018 ஆகும். இத்தீ, வனத்துறையால் அணைக்கப்பட்டது. இத்தீ அணைக்கப்படவில்லை என்றால், இந்திய வன நில அளவை நிறுவனத்திடமிருந்து தொடர் எச்சரிக்கை பெறப்பட்டு இருக்கும். கடந்த பல நாட்களில், இப்பகுதிகளில் தீ நிகழ்வு குறித்து எச்சரிக்கை எதுவும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை.

வனத் துறை களப் பணியாளர்கள் தீ நிகழ்வு ஏற்பட்டதை 11.03.2018 அன்று மதியம் 2.30 மணியளவில் கண்டறிந்தனர். திரு. முத்துப்பாண்டி, வனக் காவலர் மற்றும் மூன்று சூழலியல் மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் தீயினை அணைக்கும் பொருட்டு தீ நிகழ்வு ஏற்பட்ட பகுதிக்கு விரைந்து சென்றுள்ளனர். இவர்கள் இப்பகுதிக்கு மாலை சுமார் 5 மணி அளவில் சென்ற போதுதான், மலையேற்றக் குழுவினர் தீயில் சிக்கிக் கொண்டது தெரிய வந்தது. இதுமட்டுமல்லாமல், தீ விபத்தில் சிக்கிக்கொண்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையத்திற்கும், அவர்களது உறவினர்களுக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதற்கிடையில், போடி வட்டத்தில் அணைக்கரைப்பட்டி பகுதியிலுள்ள சன்னியாசிபுரத்தில், தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் தீ விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த

நேரத்தில், அவருக்கு அத்தீ விபத்து பற்றி தெரிய வந்தது. மாவட்ட ஆட்சித் தலைவருடன், அந்நிகழ்ச்சியில் பங்கேற்று இருந்த திரு. மகேந்திரன், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் இதர வனத் துறை களப் பணியாளர்களை தீ விபத்து நிகழ்ந்த பகுதிக்கு உடனடியாக விரைந்து செல்லும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். திரு. மகேந்திரன், பிற வனப் பணியாளர்கள் குழுவுடன் தீ விபத்து நடந்த பகுதிக்கு மாலை சுமார் 6.30 மணியளவில் சென்றார்.

இந்த தகவல் கிடைக்கப் பெற்றவுடன், மலைப்பகுதியில் சிக்கியவர்களை பத்திரமாக மீட்க அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், வனத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் உள்ளிட்டோர் குரங்கணிக்கு விரைந்து சென்று, மீட்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வந்தனர்.

மலைப்பகுதியில் சிக்கியவர்களை மீட்பதற்கு ஏதுவாக தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டன. மற்றும் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியை மேற்கொள்ள அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து, தீயணைப்புத் துறையினர், வனத்துறையினர், வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீட்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடம் இருந்து, தமிழ்நாடு அரசு ஹெலிகாப்டர்களைக் கோரியது. மாண்புமிகு அம்மாவின் அரசு மீட்பு நடவடிக்கைகளை தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் 11.03.2018 அன்று இரவு முழுவதும் மேற்கொண்டது.

எனது உத்தரவின் பேரில், 12.03.2018 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர், சுற்றுக் சூழல் மற்றும் வனத்துறை

அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் குரங்கணிக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர். நானும், மதுரைக்கு சென்று, தீக்காயம் அடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

காட்டுத் தீயில் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வரும் நபர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவ துறையினருக்கும் நான் உத்தரவிட்டேன்.

மலை ஏற்றத்தில் ஈடுபட்ட 36 நபர்களில், 10 நபர்கள் காயமின்றி மீட்கப்பட்டனர். 17 நபர்களுக்கு பலத்த தீ காயங்கள் ஏற்பட்டது. மீதம் 9 நபர்கள் சம்பவ இடத்தியேயே இறந்து விட்டனர். இறந்தவர்களின் உடல்கள் பாதுகாப்புத்துறையின் ஹெலிகாப்டர்கள் மூலம் 12.03.2018 அன்று எடுத்து வரப்பட்டது. தீக்காயம் அடைந்தவர்களை மீட்டு, குரங்கணியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் உதவி அளிக்கப்பட்டு பின்னர் தேனியில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மிகவும் பலத்த தீக்காயம் அடைந்தவர்கள் மதுரையிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நிஷா என்பவர் 12.03.2018 அன்று உயிரிழந்தார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டேன்.

மேலும், காட்டுத்தீ சம்பவம் தொடர்பாக, உரிய விசாரணை மேற்கொள்ளவும், வனத்துறையினரிடம் உரிய அனுமதி பெறாமல் மலை ஏற்றத்திற்கு அழைத்துச் சென்றவர்கள்மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் நான் உத்தரவிட்டேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு, தலா 4 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும்,

பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும் வழங்க உத்தரவிட்டேன்.

உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டும், தீக்காயம் அதிகமாக இருந்த காரணத்தினால், சிகிச்சை பலனின்றி திரு. விபின் என்பவரின் மனைவி திவ்யா, திரு. விவேக் என்பவரின் மனைவி திவ்யா, திரு. பழனிச்சாமி என்பவரின் மகள் தேவி, திரு. முத்துமாலை என்பவரின் மகள் அனுவித்யா, திரு. கிரி என்பவரின் மகன் கண்ணன், திரு. சரவணன் என்பவரின் மனைவி சக்தியகலா மற்றும் திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. சதீஷ்குமார் ஆகிய 7 நபர்களும் இறந்துள்ளனர். இவர்களுக்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா 4 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்.

விபத்து நடந்த பகுதியில், எண்ணெய் பதம் கொண்ட உயர்ந்து வளர்ந்த சுக்குநாரி புற்கள் (Lemon Grass) அதிகம் இருந்ததால், தீ மிகவும் விரைவாக பரவியுள்ளது. இக்குழுவினருக்கு தீ விபத்து ஏற்பட்டபோது, அவர்கள் மதிய உணவுக்கு பின்னர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர்.

Top Station–ல் இருந்து குரங்கணிக்கு மலை ஏற்றம் செல்வதற்கு நுழைவுச் சீட்டு பெற்றிருந்தும், 12 நபர்கள் அங்கீகரிக்கப்படாத வேறு பாதையில் கொழுக்குமலைக்கு செல்வது தொடர்பான தகவல் திரு. ஜெயசிங், வனவருக்கு கிடைக்கப் பெற்றது என்பது வனத் துறையின் முதற்கட்ட விசாரணையின்போது தெரிய வந்தது. அந்த வனவரும் விசாரணையின்போது இதனை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார். எனவே, அவர் 12.03.2018 அன்றே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அனுமதியின்றி 12 நபர்களை காப்புக்காடு பகுதிக்குள் அழைத்துச் சென்ற காரணத்தினால், போடி வட்டம், முந்தல் பகுதியைச் சேர்ந்த திரு. கணேசன் மகன் திரு. ரஞ்சித்குமார் என்பவர் மீது தமிழ்நாடு வனச்சட்டம், 1882, பிரிவு 21இன் உட்பிரிவு (டி)யின் படி, 12.03.2018

அன்று போடி வனச்சரக வனக் குற்ற எண்.13/2018இல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு விதி மீறல்களுக்கு, சென்னை மலையேற்ற சங்கம் மற்றும் ஈரோட்டில் உள்ள Tour de India ஆகிய நிறுவனங்களின் மீது காவல் துறையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த தீ விபத்து குறித்தும், மலையேற்ற சுற்றுலாவை ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் மற்றும் வனத் துறை அலுவலர்களால் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்தும், மலையேற்றத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து மறு ஆய்வு செய்வதற்கும், எதிர்காலங்களில் இதுபோன்ற நிகழ்வு ஏற்படுவதை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்கவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மை செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள், விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டு மாத காலங்களில் அவர் தனது அறிக்கையினை சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

காவல்துறையில் நடக்கும் தற்கொலை சம்பவங்கள் குறித்து விளக்கம்.
(19.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல்துறையில் பணிபுரிந்து வரும் காவல் ஆளிநர்கள் குடும்ப பிரச்சினை, உடல் நல கோளாறு, காதல் விவகாரம் உள்ளிட்ட சில தனிப்பட்ட காரணங்களால் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களைத் தடுக்கும் பொருட்டு காவல்துறையில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் சென்னை பெருநகர ஆயுதப்படையில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வந்த அருண்ராஜ் என்பவர் 04.03.2018 அன்று அதிகாலை முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் நினைவிடத்தில் காப்பு பணியில் இருந்தார். தான் பணியில் வைத்திருந்த துப்பாக்கியை பயன்படுத்தி தனக்கு தானே சுட்டு கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதே போன்று, சென்னை அயனாவரம் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த சதீஷ்குமார் என்பவர் கடந்த 07.03.2018 அன்று அதிகாலை அயனாவரம் காவல் நிலைய வளாகத்தில் தனது அலுவலக துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இவ்விரண்டு சம்பவங்களிலும் அவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக தற்கொலை செய்து கொண்டார்கள் என்று விசாரணையில் தெரியவருகிறது.

எனினும், காவல் ஆளிநர்களுக்கு பணிச்சுமைக் காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதிலும், ஆரோக்கியத்தை பேணி காப்பதிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

- ✶ காவல் ஆளிநர்கள் அனைவருக்கும் கூடுமானவரை வாராந்திர ஓய்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✶ மாநகரங்களில் பணி நேரம் வரன்முறைப்படுத்தப்பட்டு, இயன்ற அளவில் 8 மணி நேர பணி அளிக்கப்பட்டு வருகிறது.

✶ அனைத்து காவல் நிலையங்களிலும் காவல் ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளின் உடல் நலத்தை பேணி காக்க, அவர்களுக்கு வாராந்திர கவாத்து பயிற்சியுடன், யோகாசனம் மற்றும் உடற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

✶ இத்துடன் பிரபல தனியார் மருத்துவமனைகள் மூலம், அவ்வப்போது காவல் அலுவலகம் மற்றும் காவலர் குடியிருப்புகளில், காவல் ஆளிநர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயனுறும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்னும் நிறைய இருக்கிறது. ஆகவே, காவலர்கள் அவர்களது தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என விசாரணையில் தெரியவருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்வது பற்றியும், காவல்துறை பெற்ற சிறப்புகள் மற்றும் விருதுகள் பற்றியும் விளக்கம். (19.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிக சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாக தான் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி,

- ✶ அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
- ✶ இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான பெரு நகரங்களில் கோயம்புத்தூர் முதலாவதாகவும், மெட்ரோ நகரங்களில் சென்னை மாநகரம் முதலாவதாகவும் உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✶ கடந்த 2016ஆம் ஆண்டு பெண்களுக்கெதிரான மொத்த குற்றங்களின் தமிழ்நாட்டின் குற்ற விகிதம் 10.7 ஆகும். இதனை தேசிய சராசரி ஆன 51.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும் போது 40.7 புள்ளிகள் குறைவாக உள்ளன. சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு சிறப்பாக உள்ளது என்பதற்கான புள்ளி விவரம்.

அதேபோல், இந்திய தர நிர்ணய குழு, ஒன்றல்ல, இரண்டல்ல, 80 பல்வேறு விதமான காரணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளித்து, இந்தியாவிலுள்ள 15,000க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில், மிகச்சிறந்த 10 காவல் நிலையங்களை

தேர்ந்தெடுத்தது. அதில் இந்தியாவிலேயே கோவை மாநகரிலுள்ள R.S. புரம் காவல் நிலையம் முதல் காவல் நிலையமாகவும், சென்னை மாநகரிலுள்ள அண்ணா நகர் காவல் நிலையம் 5ஆவது காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டு, விருதுகள் பெற்றுள்ளன.

- ✶ மகளிர் துயர் துடைக்கவும், அவர்களுடைய புகார்களுக்கு பிரத்யேகமாக தீர்வு காணும் பொருட்டும், நாட்டிலேயே அதிகபட்சமாக பெண்களுக்கென்று 200 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. நாட்டின் ஒட்டு மொத்த எண்ணிக்கையில், 40 விழுக்காடு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் நமது மாநிலத்தில்தான் உள்ளன.

- ✶ மேலும், நாட்டிலேயே அதிக காவல் நிலையங்களை கொண்ட மாநிலம் தமிழ்நாடு. 1,832 காவல் நிலையங்களை கொண்டு, முதலாவதாக தமிழ்நாடு விளங்குகிறது. பரப்பிலும், மக்கள் தொகையிலும், தமிழ்நாட்டை விட அதிகமுள்ள உத்தர பிரதேச மாநிலம், 1,525 காவல் நிலையங்களை கொண்டு, இரண்டாம் இடத்தில்தான் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

- ✶ தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், கடந்த ஓராண்டில் மட்டும் 12 ஆயிரத்து 535 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- ✶ கடந்த வருடம், மொத்தம் 21 ஆயிரத்து 919 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ✶ இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாடு காவல் துறையில் தான் திருநங்கைகள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

- ✶ 33 துணை காவல் கண்காணிப்பாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

- ✶ காவல் துறையில், முதல்நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 5,235 பணியிடங்கள் பதவி உயர்வுகள் மூலம் நிரப்பபட்டுள்ளன.

கடந்த ஆண்டு 244.32 கோடி ரூபாய் செலவில் 2,047 காவலர் குடியிருப்புகளும், 51.53 கோடி ரூபாய் செலவில் 85 காவல் நிலையங்களும், 83.85 கோடி ரூபாய் செலவில் 56 இதர காவல் துறை கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது. பணியிடங்கள் பெரும்பாலும் நிரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பணியிடங்கள் காலியாகின்றன. அந்த காலி பணியிடங்கள் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் நிரப்பப்படுகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

ராம ராஜ்ய ரத யாத்திரைக்கு இருந்து வரும் எதிர்ப்பு குறித்து விளக்கம். (20.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கத்தின்" சார்பில் "ராம ராஜ்ய ரத யாத்திரை" ஒன்று கடந்த 13.02.2018 அன்று அயோத்தியாவில் துவங்கியது.

இந்த ரதயாத்திரை, அச்சங்கத்தின் தேசிய செயலாளர் திரு. சக்தி சாந்த ஆனந்த மகரிஷி தலைமையில், உத்திரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் புறப்பட்டு, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கருநாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை கடந்து தமிழ்நாட்டிற்கு இன்று வந்துள்ளது. 20.03.2018 அன்று கேரளா மாநிலம் புனலூரிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வழியாக நமது மாநிலத்திற்குள் நுழைந்து, ராஜபாளையம், மதுரையை வந்தடைந்து, மறுநாள் 21.03.2018 அன்று ராமேஸ்வரத்தை அடைகிறது.

பின்னர், ராமேஸ்வரத்தில் இருந்து 22.03.2018 அன்று தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் வழியாக கன்னியாகுமரி அடைந்து, மறுநாள் 23.03.2018 அன்று திருவனந்தபுரத்திற்கு செல்கிறது.

ராம் ராஜ்ய ரத யாத்திரை நமது மாநிலத்தில் வருவதற்கு சில முஸ்லீம் அமைப்புகளும், தமிழ் ஆதரவு அமைப்புகளும் மற்றும் சில அரசியல் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து, அந்த ரத யாத்திரையை தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்று கோரி காவல் துறையினரிடம் மனுக்கள் அளித்தனர்.

ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கம் என்ற அறக்கட்டளை சார்பாக இந்த ராம ராஜ்ய ரத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஐந்து மாநிலங்களிலும் இந்த ரத யாத்திரைக்கு எந்தவிதமான எதிர்ப்பும் எழவில்லை. அம்மாநிலங்களில் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் இதுவரை இந்த யாத்திரை கடந்து வந்துள்ளது.

இந்த ரத யாத்திரை தமிழ்நாட்டிற்குள் வருவதை முன்னிட்டு சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க, யாத்திரை செல்லும் மாவட்டங்களில் காவல் துறையினர் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கவும், திருநெல்வேலி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி மாவட்டங்களில் 121 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சொல்கிறேன், ஐந்து மாநிலத்திலே இந்த ரத யாத்திரை நடந்திருக்கிறது. இதில் அரசியல் சாயம் பூசுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசும்போது எங்களுடைய உறுப்பினர்கள் அமைதியாக இருந்தார்கள். நான் பேசும்போது, தொடர்ந்து குறுக்கிடுகிறார்கள். கடுஞ்சொற்களை எல்லாம் உபயோகப்படுத்தினார். அதை எல்லாம் நாங்கள் பொறுத்துக் கொண்டு தான் இருக்கிறோம். இங்கே அரசியல் சாயம் பூசுவது சரியல்ல.

தமிழகத்தை பொறுத்த வரைக்கும் எல்லா மதத்திற்கும் சம உரிமை உண்டு. அதை யாரும் தடை செய்ய முடியாது. ஜனநாயக நாடு. இந்த மதம், அந்த மதம் என்று வேறுபடுத்தி காட்ட முடியாது. ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுப்பது அரசின் கடமை. அந்த கடமையை கடைப்பிடித்து தான் இங்கே பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே கூறியது போல, இந்த ரதம் பல மாநிலங்கள்; மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கருநாடகா, கேரளா எல்லாவற்றையும் கடந்து தான் வந்திருக்கிறது. மீண்டும் இங்கே முடித்து விட்டு கேரளா வழியாகத் தான் செல்கிறது. இதிலே எவ்வித பிரச்சினையும் எழுந்ததாக எனக்கு தெரியவில்லை. நீங்களும், சில அரசியல் கட்சித் தலைவர்களும் இதில் அரசியல் ஆதாயம் தேட முற்படுகிறீர்கள். அதுதான் தெளிவாகத்தெரிகிறது.

❖ ❖ ❖

திருவெறும்பூரில் வாகன சோதனையின் போது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த பெண் தவறி விழுந்து இறந்தது குறித்து விளக்கம். (21.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மாவட்டம், துவாக்குடி சுங்கச்சாவடி அருகில், 07.03.2018 அன்று இரவு, திருவெறும்பூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜ் குழுவினருடன் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்துள்ளார். அப்போது, தஞ்சாவூர் சாலையில் திருச்சி நோக்கி தலைக்கவசம் அணியாமல் வேகமாக வந்த இரு சக்கர வாகனம் ஒன்றை ஆய்வாளர் நிறுத்தி, அவ்வாகனத்தின் சாவியை எடுத்துள்ளார். அவ்வாகனத்தை ஓட்டி வந்த தஞ்சாவூர் மாவட்டம், சூலமங்கலத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவர், தான் வாகன சோதனைக்கு ஒத்துழைப்பதாகவும், சாவியைத் தருமாறும் கேட்டதால் ஆய்வாளர் சாவியைக் கொடுத்துள்ளார். காவலர்கள் எதிர்பாராத சமயத்தில், திரு. ராஜா தனது வாகனத்தை தனது மனைவியுடன் வேகமாக அவ்விடத்தை விட்டு ஓட்டிச் சென்றுள்ளார். உடனே காவல் ஆய்வாளர் மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின்னால் விரட்டிச் சென்று, பாரத மிகு மின் நிலையம், கணேசா ரவுண்டானா அருகில் வேகமாக சென்று கொண்டிருந்த திரு.ராஜாவை நிறுத்திய போது, திரு.ராஜா கட்டுப்பாட்டை இழந்து அவரும், பின்னால் அமர்ந்திருந்த அவரது மனைவி திருமதி உஷாவும் நிலை தடுமாறி கீழே விழுந்து காயமடைந்துள்ளனர். உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் காயமடைந்த இருவரையும் துவாக்குடி அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்ற போது, அங்கு மருத்துவர்கள் திருமதி உஷா உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். திரு. ராஜா வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றார்.

இதற்கிடையே இச்சம்பவம் குறித்து அறிந்த அப்பகுதி பொதுமக்கள் சுமார் 2,000 பேர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, திருச்சி–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டும், அவர்கள் கலைந்து செல்ல மறுத்து கல் வீச்சில் ஈடுபட்டனர். இக்கல்வீச்சு சம்பவத்தில் 44 அரசுப் பேருந்துகள், 6 காவல் வாகனங்கள், ஒரு வருவாய்த் துறை வாகனம் ஆகியவற்றின் கண்ணாடிகள் சேதமடைந்தன. ஒரு பெண் காவலர் உட்பட 11 காவலர்களுக்கு காயங்கள் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து காவல் துறையினர் வேறு வழியின்றி தகுந்த எச்சரிக்கைக்கு பின், குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து, அவர்களை கலைந்து போகச் செய்து, போக்குவரத்தை சரி செய்தனர்.

திருமதி உஷா இறந்து போனது தொடர்பாக BHEL காவல் நிலையத்தில் திருமதிஉஷாவின் கணவர் திரு.ராஜா அளித்த புகாரின் பேரில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 304(2), 336இன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையில் சாலை மறியலில் ஈடுபட்டு கல் வீசி பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியது தொடர்பாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 21 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

உயிரிழந்த திருமதி உஷாவின் உடல் திருச்சி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டு, 08.03.2018 அன்று அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி உஷா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, உயிரிழந்த திருமதி உஷா குடும்பத்தினரின் நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு 7 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டேன்.

இது சம்பந்தமாக, திருவெறும்பூர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜ், உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பணி இடைநீக்கமும் செய்யப்பட்டுள்ளார். மேலும், இச்சம்பவம் தொடர்பாக குற்றவியல் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணையின் முடிவின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

அரசு மணல் விற்பனை செய்தல் தொடர்பான விளக்கம். (21.03.2018)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, மணல் குவாரி இன்னும் திறக்கப்படவில்லை என்ற செய்தியை சொல்லுகின்றார். சில பொதுநல வழக்குகள் நீதிமன்றத்திலே உள்ள காரணத்தினாலே, பல மாதங்களாக அந்த வழக்கு நடைபெற்று, இப்பொழுதுதான் நமக்கு தீர்ப்பு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. பொதுநல வழக்கு சிலபேர் போட்ட காரணத்தினாலே நீதிமன்றத்திற்கு சென்று அது தடை செய்யப்பட்டது. இப்பொழுது கிடைக்கப் பெற்ற பிறகு, அரசாங்கமே மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, இப்பொழுது குவாரிகள் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது, முழுக்க முழுக்க எவ்வித தவறும் நடக்கக்கூடாது என்பதற்காக அரசு சில வழிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தம் கோரப்பட்டது. கடந்த 15 நாட்களுக்கு முன் ஒப்பந்தம் கோரப்பட்டது. ஒருசில குவாரிகளுக்கு எடுத்திருக்கின்றார்கள். மற்ற குவாரிகள் யாரும் முன்வரவில்லை. மீண்டும் நாளையதினம் ஒப்பந்தம் கோர இருக்கின்றார்கள். விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டு இருக்கின்றது. இதிலே எந்தத் தவறும் ஏற்படக்கூடாது என்பதற்காக கடுமையாக அந்த விதிகள் எல்லாம் வகுக்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தம் விடுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டு, விரைவிலே ஒப்பந்தம் விடப்பட்டு, குவாரிகள் துவக்கப்பட்டு, அரசாங்கமே அந்தக் குவாரிகளை நடத்தும். அதாவது, ஆற்றிலோ அல்லது ஓடையிலோ இருந்து அள்ளுகின்ற மணல் Yardக்கு வர வேண்டும். அள்ளுகின்ற இடத்திலே சிசிடிவி கேமரா பொருத்தப்படும். அதேபோல, அந்த ஆற்றுப் பகுதியிலோ அல்லது ஓடைப் பகுதியிலோ இருந்து அள்ளிக் கொண்டு வருகின்ற அந்த மணல், Yard இடத்திற்கு சேர்க்கின்ற

அளவிற்கு ஒரு ஒப்பந்தம். அதற்கு, Poclain மற்றும் லாரிகள், டிப்பர் போன்ற வாகனங்கள் மூலமாக எடுத்து வர வேண்டும். அதற்கு என்னென்னவெல்லாம் வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாகனத்திற்கு GPS பொருத்தப்பட வேண்டும். ஏனென்றால் அந்த வாகனம் Yard–க்கு தான் வந்து செல்கிறது என்ற தகவலை அரசு பெறுவதற்காக இந்த வழிமுறை வகுத்திருக்கிறது. அதேபோல, Yard–க்கு வந்த பிறகு, அங்கேயும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, அங்கேயும் யார் யார் எல்லாம் மணல் வேண்டி ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கிறார்களோ அது பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மணல் விநியோகம் செய்யப்படுகிறது. பணம் ஆன்லைனிலே கட்டப்படுகிறது. ஆக, இப்படி எல்லாமே சட்டத் திட்ட விதிகளின்படி கடுமையாக்கப்பட்டு, எந்த இடத்திலும் தவறு ஏற்படாதவண்ணம் நீதிமன்றத்தினுடைய வழிமுறைகளை பின்பற்றி, மணல் குவாரிகளை துவக்குவதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அரசால் பல்வேறு மணல் குவாரிகள் துவக்கப்பட்டு, பொதுமக்களுக்குத் தேவையான மணல் தட்டுபாடின்றி வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வெளிநாட்டில் இருந்து மணல் இறக்குமதி செய்வதற்கும் இப்போது ஒப்பந்தம் கோரப்பட்டுவிட்டது. அதற்கும், சில விதிமுறைகளை வகுத்து ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆன்லைன் மூலமாகவே ஒப்பந்தம் பெறப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, வெளிநாட்டிலிருந்தும் மணல் இறக்குமதி செய்யப்பட்டு, அரசாங்கமே அதையும் விற்பனை செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்வது வரைக்கும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. மணல் சென்னைக்கு வந்தவுடன் அல்லது தூத்துக்குடிக்கு வந்தவுடன், அரசு அதை எடுத்து விற்பனை செய்யும். அங்கேயும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, யார் யாரெல்லாம் மணல் வேண்டி விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கும் தங்குதடையில்லாமல் மணல் விநியோகம் செய்ய

வெளிநாட்டிலிருந்தும் மணல் இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு வெளிநாட்டிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக மணல் இறக்குமதி செய்யப்பட்ட காரணத்தினால் நிறுத்தப்பட்டு இருக்கின்றது. அதிலே சிலிகான் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, இறக்குமதி செய்யப்படுகின்ற மணல் கூட, ஒவ்வொரு முறையும் சோதனை செய்யப்பட்ட பிறகு தான் அந்த மணலை விநியோகம் செய்கிறோம். ஏனென்றால், மணல் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும்போது, கலப்பட மணலா, அது கட்டுமானத்திற்கு உகந்ததா, என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையிலே அது சரி என்று வந்த பிறகுதான் அந்த மணல் விற்பனைக்கு அரசால் அனுமதிக்கப்படுகிறது என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிமேல் தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் தனியார் யாரும் மணல் விற்பனை செய்வதற்கு அனுமதி கிடையாது என திட்டவட்டமாக அரசால் அறிவிக்கப்பட்டுவிட்டது. அதற்கு தேவையான சட்டமும் இயற்றப்பட்டுவிட்டது. ஆகவே, யார் கொண்டு வந்தாலும், அரசின் மூலமாக தான் அந்த மணலை விற்பனை செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் இஷ்டம் போல விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டால், நம்முடைய ஆற்றுப் பகுதி இருக்கிறது; ஓடை பகுதி இருக்கிறது, எங்கு வேண்டுமானாலும் மணலை அள்ளிக் கொண்டு சென்றுவிடுவார்கள். யாரும் கட்டுப்படுத்தவே முடியாது. ஆகவே தான், அரசாங்கமே அந்த மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து அதனுடைய தொடர்ச்சியாகத்தான் மாநிலத்திலும் சரி, வெளிநாட்டிலும் சரி, வெளிமாநிலத்திலும் சரி, மணல் கொண்டு வருகின்றபோது அரசின் மூலமாகத்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

காவேரி மேலாண்மை வாரியம் அமைத்திட மத்திய அரசிற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தல். (21.03.2018)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

இந்த கதை உங்களுக்கு பொருந்துமா அல்லது எங்களுக்கு பொருந்துமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் என்று சொன்னால், நீங்கள் ஐந்து ஆண்டு காலம் மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கின்ற போது, ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தீர்கள். அதனால்தான், அந்த கதையை நன்றாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். எங்களை பொருத்தவரைக்கும், நாங்கள் எந்த கூட்டணியும் அமைக்கவில்லை, அவர்களுக்கு ஆதரவும் தரவில்லை. தமிழகத்தினுடைய நிலைபாட்டைத் தான் உரிய முறையிலே நாம் முன்னெடுத்து வைத்து கொண்டு இருக்கின்றோம். தமிழ்நாட்டு மக்களுக்காக வாதாடிக் கொண்டு இருக்கின்றோம். இதுவரை தமிழக வரலாறு காணாத வகையில், இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி இதுவரை முடக்கப்பட்டு இருக்கிறது.

தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தொடர்ந்து நாடாளுமன்றத்திலே அழுத்தம் கொடுத்து, நாடாளுமன்றத்தை முடக்கி கொண்டு இருக்கின்றோம். எந்த அளவிற்கு நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழக மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட வேண்டாம். எங்களுக்கு நன்றாக தெரியும். நீங்கள் அனுபவம் வாய்ந்தவர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நீங்கள் ஏற்றுவீர்கள் என்று எங்களுக்கு நன்றாக தெரியும். இது அவர்களுடைய ஆந்திரா பிரச்சினைக்காக கொண்டு வருகிறார்கள். நேற்றைய தினமே மாண்புமிகு துணை முதலமைச்சர் விளக்கமாக சொல்லி இருக்கின்றார். அவர்கள் கூட்டணி வைத்து போட்டியிட்டார்கள். பாரதிய ஜனதாவோடு தெலுங்கு தேசம் கூட்டணி அமைத்து போட்டியிட்டு வெற்றி பெற்று, அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார்கள். அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக, அவர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருகிறார்கள். நம்முடையது அப்படியல்ல. காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதற்காக நாம் குரல் கொடுத்து கொண்டு இருக்கின்றோம். அதற்கு யாருமே குரல் கொடுக்கவில்லையே, யாருமே சப்போர்ட் செய்யவில்லையே. அவர்களுடைய பிரச்சினைக்காக தான் அவர்கள் குரல் கொடுக்கிறார்களே ஒழிய, நம்முடைய பிரச்சினையை சுட்டிக் காட்டவில்லை. ஆகவே, நம்முடைய பிரச்சினைக்கு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்து, அழுத்தம் கொடுத்து கொண்டிருக்கிறார்கள், நாடாளுமன்றமும் தொடர்ந்து முடங்கக்கூடிய அளவிற்கு நாம் அழுத்தம் கொடுத்து கொண்டு இருக்கின்றோம் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவரின் குடும்பத்திற்கு நிவாரணம். (21.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 05.12.2017 அன்று வேளாங்கண்ணி அருகே வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 05.12.2017 அன்று ஒகி புயலால் வெள்ளாற்றில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழக்கவில்லை என்றும் இவர் சிறிய கட்டுமர படகில் தனது நண்பர் தாமோதரன் என்பவருடன் மீன் பிடிக்கச் சென்ற போது, ஆற்றின் குறுக்கே இருந்த மதகு சுவரில் படகு மோதி கவிழ்ந்ததில், பலத்த அடிபட்டு, ஆற்றில் விழுந்துள்ளார் என்றும், தலையில் அடிபட்டதன் காரணமாக நீச்சல் தெரிந்தும், அவரால் மீண்டு வர முடியாமல் வெள்ளாற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், உயிரிழந்த செல்வன் சுஸ்மிதாசனின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டது குறித்து விளக்கம். (21.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காவல் நிலைய சரகம், புதுக்கோட்டை விடுதி என்ற கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி அருகில் சிமெண்டினால் ஆன முழு உருவ பெரியார் சிலை ஒன்று திராவிடர் கழகத்தினரால் 25.04.2013 அன்று நிறுவப்பட்டது. கடந்த 19.03.2018 அன்று இரவு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சிலையின் தலைப்பகுதியை சேதப்படுத்தியுள்ளார்.

இது பற்றி தகவலறிந்த காவல் துறையினர் உடனடியாக கிராமத்திற்கு சென்று கிராம மக்கள் உதவியுடன் சேதம் அடைந்த சிலையின் தலைப்பகுதியை சீரமைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக திராவிடர் கழக மண்டலத் தலைவர் திரு.ராவணன் என்பவர் அளித்த புகாரின் பேரில், ஆலங்குடி காவல் நிலையத்தில் பிரிவுகள் 295, 153 (B) இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் உடன் இணைந்த பிரிவு 3 தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரியை அடையாளம் கண்டுபிடித்து உடனடியாக கைது செய்ய தனிப்படைகள் அமைத்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் பற்றி அறிந்த திருச்சி சரக காவல் துறைத் துணைத் தலைவர், புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவயிடம் சென்று, கிராமத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாவண்ணம் பார்த்துக்கொண்டனர்.

விசாரணையின் போது, சத்தீஸ்கர் மாநிலத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையில் ஹவில்தாராக பணிபுரியும் புதுக்கோட்டை விடுதி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் 15.03.2018 முதல் விடுப்பில் கிராமத்திற்கு வந்துள்ளார். மேற்படி செந்தில்குமார் சம்பவத்தன்று இரவு குடிபோதையில் அப்பகுதியில் நடமாடியுள்ளதை அவ்விடத்தில் பொறுத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகள் மூலமும், சாட்சிகளிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலமும் தெரியவந்துள்ளது. செந்தில்குமாரை பிடித்து விசாரணை மேற்கொண்ட போது, அவர் பெரியார் சிலையை சேதப்படுத்தியது ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், கடந்த 2013ஆம் ஆண்டு பெரியார் சிலையை அவ்விடத்தில் நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட போது, தனது வீட்டின் அருகில் பெரியார் சிலையை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மீறி நிறுவினால் அச்சிலையை உடைத்து விடுவேன் என்று மிரட்டியதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து செந்தில்குமார் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரியை சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர்.

அதேபோல, 06.03.2018 அன்று இரவு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருக்கும் தந்தை பெரியார் சிலையை விஷமிகள் சேதப்படுத்தினர்.

இது பற்றி தகவல் அறிந்த காவல் துறையினர், அப்பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக் கொண்டனர். மேலும், இது தொடர்பாக திராவிடர் கழக நகரச் செயலாளர் திரு. இளங்கோவன் அளித்த புகாரின் பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், பாஜக நகர செயலாளர் முத்துக்குமரன் மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டது

தெரியவந்ததையடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு நிகழ்வுகளும் கண்டிக்கத்தக்கது. அது யாராக இருந்தாலும் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும், இப்படி தலைவர்களுடைய சிலையை சேதப்படுத்தியது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது அரசு பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

விழுப்புரம் மாவட்டம், வெள்ளாம்புதூர் கிராமத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் பள்ளி மாணவன் கொலை செய்யப்பட்டு, அவரது தாய் மற்றும் சகோதரி காயப்படுத்தப்பட்டது குறித்து விளக்கம். (22.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம், வெள்ளாம்புதூர் கிராமத்தில் திருமதிஆராயி என்பவரும் 8ஆம் வகுப்பு படிக்கும் அவரது மகள் செல்வி.தனம் மற்றும் 4ஆம் வகுப்பு படிக்கும் அவரது மகன் செல்வன் சமயன் ஆகியோரும் 22.02.2018 அன்று காலை வீட்டிலிருந்து வெளியே வராத காரணத்தினால், சந்தேகமடைந்த திருமதிஆராயியின் உறவினர் திரு. காசி என்பவர், வீட்டிற்குள் சென்று பார்த்தபோது திருமதிஆராயி மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் ரத்த காயங்களுடன் கிடந்ததைப் பார்த்துள்ளார். அவர்களுள் சிறுவன் சமயன் இறந்து கிடந்து உள்ளார். உடனடியாக திரு. காசி, காயமடைந்த இருவரையும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார். பின்னர் அவர்கள் இருவரும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மேல் சிகிக்சைக்காக கொண்டு செல்லப்பட்டு, அங்கு தற்போது சிசிக்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக திரு. காசி அளித்த புகாரின் பேரில் அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தடயவியல், விரல் ரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, தடயங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, துரிதமாக குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இதன் பேரில், காவல் துறையினர், 4 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்ய, தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி ஆராயி மற்றும் செல்வி தனம் ஆகியோருக்கு தலா 50,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என தெரிவித்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிவாரணத் தொகை போதவில்லை இதை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார். இதை அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் சாலை வசதி குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம்.
(22.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிச்சயமாக, உறுதியாக, அத்திக்கடவு – அவிநாசி திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை உறுதியாக சொல்கிறேன். ஏனென்று சொன்னால், ஏற்கெனவே போடப்பட்ட திட்டத்தில், மலையிலிருந்து உபரி தண்ணீரை நாம் கீழே கொண்டு வர வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் உபரி நீர் கிடைக்கிறது. அது, மலையிலிருந்து, மணல் பகுதியிலிருந்து, தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, நாம் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். ஆகவே, மாற்று திட்டமாக புதிய திட்டத்தை உருவாக்கி, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, காலிங்கராயன்பாளையத்திலிருந்து Lift Irrigation மூலமாக தண்ணீர் எடுக்கப்பட்டு இந்த திட்டம் நிறைவேற்றப்படும். அதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை விரைவில் அறிவிக்கப்பட்டு, அதற்கான டெண்டரும் அறிவிக்கப்பட்டு, உடனடியாக திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதில் சிறிதளவு கூட சந்தேகம் தேவையில்லை. இந்த திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் பேரவைத் தலைவர் தொகுதிக்கும் இந்த திட்டம் வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது போல, மத்திய அரசிடமோ அல்லது நபார்டு திட்டத்தின் மூலமாகவோ, கடனுதவி பெற்றால் கூட இந்த திட்டம் காலதாமதம் ஆகிவிடுமோ என்று கருதி, இந்த தொகை முழுவதும் மாநில அரசின் நிதியிலிருந்தே

செலவிடப்பட்டு, இந்த திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதன் அடிப்படையிலே, மாநில அரசால் முழு நிதியும் ஒதுக்கப்பட்டு இந்த திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும், என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சாலையை பற்றி குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்தபிறகு தான், தமிழகத்தில் அதிக அளவு சாலைகளை விரிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டு முறை மத்திய அமைச்சர் சென்னைக்கு வந்து, இரண்டு முறையும் ஆய்வு செய்து, சுமார் 1 இலட்சம் கோடி ரூபாய் தமிழகத்திலே சாலைப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவரே பேட்டி கொடுத்திருக்கிறார். பல சாலைகள் விரிவுபடுத்தப்பட இருக்கின்றன. நீங்கள் சொல்வது போல, உட்கட்டமைப்பு வசதி அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான், தொழிற்சாலைகள் அதிகமாக வரும் என்ற நோக்கத்தில், இன்றைக்கு தமிழகத்திலே உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, சாலைகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, பசுமை சாலை Greenfield Corridor சேலத்திலிருந்து சென்னை வரை 10,000 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்று மத்திய தரைவழி போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார். எதற்காக சொல்கிறேன் என்றால், இன்றைக்கு தமிழ்நாட்டிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், போக்குவரத்து நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு செல்கின்ற காரணத்தினாலும், புதிய தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினாலும், எளிதாக வாகனங்கள் செல்வதற்காக மத்திய அரசை நாம் அணுகினோம். மத்திய அரசு தேவையான உதவிகளை செய்வதாக அறிவித்து,

ஒரே வருடத்தில் இரண்டு முறை மத்திய அமைச்சர் சென்னைக்கு வந்து ஆய்வு மேற்கொண்டு, எந்தெந்த பகுதிகளில் சாலை வசதி விரிவாக்கம் செய்யப்பட வேண்டும், அதற்கு தேவையான உதவிகளை செய்வேன் என்று சொல்லி, அதற்கு தேவையான நிதியும் ஒதுக்கீடு செய்திருக்கிறார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மதுரவாயல் பொருத்தவரைக்கும், Alignment எல்லாம் மாற்றியமைக்கப்பட்டு அந்தப் பணியும் விரைந்து செயல்படுத்தப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் தமிழ்நாட்டில் ரவுடிகள் கைது மற்றும் தமிழ்நாட்டின் வளம் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம். (22.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், ரவுடிகளைப் பற்றி குறிப்பிட்டார். ரவுடிகள் என்பவர்கள் ஒரேநாளில் உருவாவது அல்ல. பல ஆண்டுகாலமாக, பல திருட்டுகள், கொலை வழக்குகளில் ஈடுபட்டவர்கள் தான் ரவுடிகள். உங்கள் ஆட்சியிலும் இருந்தவர்கள் தான், இப்போதும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நாங்கள் கண்டுபிடித்திருக்கின்றோம். நீங்கள் கண்டுபிடிக்கவில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே, ரவுடிகளை கண்டுபிடித்தது நாங்கள். நீங்கள் கண்டுபிடிக்க தவறிவிட்டவர்கள். ஆகவே, இன்றைக்கு ரவுடிகள் தமிழகத்திலே எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை எல்லாம் கணக்கிடப்பட்டு, இன்றைக்கு தமிழகத்திலிருந்து ரவுடிகள் வெளிமாநிலத்திற்கு தப்பி செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, எந்த மாநிலத்திலும் சரி, எந்த நாட்டிலும் சரி, எல்லா பகுதிகளிலும் இது நடந்து கொண்டிருக்கின்றன. அதை சரியாக கட்டுப்படுத்துகிறோமா என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும். தமிழகத்தை பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மாவுடைய அரசால், சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுகின்றது. அமைதிப்பூங்காவாக தமிழகம் திகழ்கின்றது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, தமிழகத்திலே குற்றங்கள் குறைந்திருக்கின்றது. குற்றங்களை நாம் அதிக அளவிலே கண்டுபிடித்திருக்கின்றோம். அதைத்தான் நாம் பார்க்க வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் வளத்தைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2011 முதல் 2016 வரைக்கும் சிறப்பான ஆட்சி தந்த காரணத்தினாலே தான், தமிழக மக்கள், மீண்டும் 32 ஆண்டு காலத்திற்கு பிறகு ஆளுகின்ற கட்சியே ஆளுகின்ற ஒரு வாய்ப்பை கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த சான்று மக்களிடத்திலே இருந்து எங்களுக்கு கிடைத்திருக்கின்றது. ஒரு அரசாங்கம் சிறந்த முறையிலே செயல்பட்டால் தான், மீண்டும் அந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர முடியும். அந்த சான்றை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு, மாண்புமிகு அம்மாவுக்கு தந்திருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது, வளம் காணவில்லை என்று சொன்னார்கள். 2011 முதல் இன்றுவரை எவ்வளவு திட்டங்களை நாங்கள் செயல்படுத்தினோம் என்பதை எங்களுடைய ஓராண்டு சாதனை விழாவில் நாளை சொல்ல இருக்கிறோம். அதற்கு முன்பு, மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் படித்து பார்த்திருந்தால் நிச்சயம் நன்றாக தெரியும். ஏனென்றால் அவர் அனுபவம் வாய்ந்தவர். மிகுந்த ஆற்றல் படைத்தவர். ஆகவே, அவருக்கு தெரியாத விஷயமே கிடையாது. அந்த வரிசையிலே இருக்கின்ற காரணத்தினாலே, இந்த வார்த்தையை அவர் பயன்படுத்துகின்றார்.

உண்மையிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து அவர்கள் மறைகின்ற வரை எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு கல்வியிலே மிகப் பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக தான் இன்றைக்கு, உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே உயர்ந்திருக்கின்றது. 2011இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அப்போது உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை 100–க்கு 21 சதவிகிதம். இன்றைக்கு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்கள் கல்வியிலே ஏற்படுத்திய புரட்சி, கல்வி பயில கொடுத்த உதவித்தொகையின் வாயிலாக, அதிக கல்லூரிகளை தமிழகத்திலே ஏற்படுத்தியதன் வாயிலாக, இன்றைக்கு கல்வியில் உயர்ந்து, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் அதிகயளவிலே உயர்கல்வி படிக்கிறார்கள் என்று சொன்னால், இது வளம் அல்லவா. இதைவிட என்ன வேண்டும். இன்னும் ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம். நீங்கள் வந்து வளம் இல்லை என்று சொல்கிறீர்களே, தமிழகத்தில் அதிக வளங்கள் அம்மாவுடைய ஆட்சியிலே கிடைத்திருக்கிறது. அம்மாவுடைய அரசினால் கிடைத்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மதுரை கூடல் புதூர் மற்றும் சிக்கந்தர்சாவடியில் உள்ள ஜெபவீடுகளில் ஜெபம் நடத்துவது தொடர்பாக கிறிஸ்தவர்களை அடையாளம் தெரியாத சிலர் மிரட்டியது தொடர்பான சம்பவம் குறித்து விளக்கம். (22.03.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாநகரில் அன்புநகர், செல்லையா நகர் மற்றும் ஆணையூர் ஆகிய இடங்களில் கடந்த 11.03.2018 அன்று, ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு கிறிஸ்தவர்கள் ஜெப வீடுகளில் ஜெபம் நடத்திக் கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத சில நபர்கள் அங்கு சென்று ஜெபம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அதனை நடத்திக் கொண்டிருந்த போதகர்கள் மற்றும் கலந்து கொண்டிருந்த கிறிஸ்தவ மக்களை தகாத வார்த்தைகளால் பேசி ஜெபம் நடத்தக்கூடாதென எச்சரித்து மிரட்டியுள்ளனர்.

இதே போன்று, அன்றைய தினமே மதுரை மாவட்டத்தில் சிக்கந்தர் சாவடி, மந்தையம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு ஜெபக்கூடத்தில் ஜெபம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் அவ்விடத்திற்கு சென்று அங்கிருந்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, சிலரை கைகளால் தாக்கி அங்கிருந்த சில பொருட்களை சேதப்படுத்தியதுடன், அவர்களிடமிருந்த பைபிளைப் பிடுங்கி, தீ வைத்து எரித்துள்ளனர்

இச்சம்பவங்கள் தொடர்பாக, மதுரை மாநகர், கூடல் புதூர் காவல் நிலையத்தில் திரு. இமானுவேல், திரு. ஸ்டனீஸ் லாஸ் மற்றும் திரு. ஜெகதீசன் ஆகியோர் தனித்தனியே அளித்த புகார்களின் பேரில் மூன்று வழக்குகளும், மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் திரு. ரவி ஜேக்கப் என்பவர் அளித்த புகாரின் பேரில் ஒரு வழக்கும் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது, காவல் துறையினர், அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக தினேஷ் மற்றும் சதீஷ்பாபு ஆகிய இருவரை 16.03.2018 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

கூடல் புதூர் காவல் நிலைய வழக்குகள் தொடர்பாக இந்து முன்னணி ஆரப்பாளையம் பகுதித் தலைவர் அரவிந்தன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையே, இந்து முன்னணி ஆணையூர் பகுதி பொறுப்பாளர் சதீஷ்பாபு என்பவர் கூடல்புதூர் காவல் நிலையத்தில் 11.03.2018 அன்று அளித்துள்ள புகாரில், அனுமதியின்றி ஜெபக்கூடங்கள் செயல்படுவதாகவும், அக்கூடங்களில் மத்திய அரசுக்கு எதிராகவும், கிறிஸ்தவத்தை பரப்புவதற்காகவும் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்படுவதாகவும், எனவே இதுபோன்று மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜெபக்கூடங்கள் மற்றும் போதகர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஒரு புகார் மனு கொடுத்துள்ளார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க நான் உத்தரவிட்டதன் பேரில், காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, மேலும் சம்பவங்கள் ஏதும் நடக்காமல் பார்த்துக் கொண்டனர். மத அமைதியை குலைக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖

எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்தேக்க திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம். (22.03.2018)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து சரியில்லாத கருத்து. ஏன் என்று சொன்னால், நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கடந்த முறை கூட நானும் அண்ணனும் நேரடியாக ஆந்திரா மாநிலத்திற்கு சென்று, மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் திரு.சந்திரபாபு நாயுடு அவர்களை சந்தித்து கேட்டோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், மாநிலம் இரண்டாக பிரிந்து விட்டது. எங்களுக்கு உள்ள 5 டி.எம்.சி. தண்ணீரில், நாங்கள் 2.5 டி.எம்.சி தண்ணீர் தான் தருவோம் என்கிறார்கள். மீதமுள்ள 2.5 டி.எம்.சி தண்ணீரை நீங்கள் போய் தெலுங்கானாவில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். மீறி கேட்டால், நீங்கள் போய் கருநாடகாவில் வாங்க வேண்டும், மத்திய பிரதேசத்தில் வாங்க வேண்டும் என்று ஒவ்வொருத்தர் மீதும் காரணம் காட்டி நமக்கு தண்ணீர் தர மறுக்கிறார்கள். இப்போது கூட, நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி, நம்முடைய செயலாளர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், நானும் தொடர்ந்து கடிதம் எழுதியதன் வாயிலாகத் தான், இந்த தண்ணீர் நமக்கு கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 டி.எம்.சி. தண்ணீருக்கு மேல் நமக்கு கிடைத்திருக்கிறது. இப்போது கிட்டத்தட்ட 4.5 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதுமட்டுமல்ல, சென்னை மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்காக அம்மாவுடைய அரசு இன்றைக்கு கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை நீர்தேக்கம் கட்டப்பட்டு 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. கிட்டத்தட்ட 330 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு

செய்து, அந்தப் பணி துவங்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் சில பேர் நீதிமன்றம் போய் விட்டார்கள். நீதிமன்றத்திற்கு போன காரணத்தினால் தான் இந்த திட்டம் முடிக்க முடியாமல் இருக்கிறது. அதுகூட பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாடு ஏற்பட்டு, அந்த நிலத்தை எல்லாம் கையகப்படுத்தி இன்னும் நான்கு, ஐந்து மாதத்திற்குள் அந்தப் பணி நிறைவு பெற்று, 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கி, நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கையை அம்மாவுடைய அரசு எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அம்மாவுடைய அரசு தான் இதை செய்திருக்கிறது. உங்களுடைய அரசு கூட செய்யவில்லை. இப்பொழுது புதிதாக இந்த நீர்தேக்கத்தை கட்டியதும் அம்மாவுடைய அரசு தான் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்தேக்க திட்டம். இந்த திட்டம், 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11.09.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணி துவங்கப்பட்டது. அந்த திட்டம் மூலம் 1 டி.எம்.சி. நீரை தேக்க வழிவகை செய்யப்பட்டது. அந்த திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் கையகப்படுத்தப்படும் போது சில நில உரிமையாளர்கள் நிலத்தை கொடுக்க மறுத்து, நீதிமன்றத்திற்கு சென்று விட்டார்கள். ஆகவே, நீதிமன்றத்திற்கு சென்றபிறகு, அந்தப் பணி முழுமை பெறவில்லை. கிட்டத்தட்ட 85 சதவிகித பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. எஞ்சிய 15 சதவிகித பணிகள் தான் நிறைவு பெறவுள்ளது. இப்போது நீதிமன்றத்திலிருந்து நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கப் பெற்ற காரணத்தினாலே, அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கி, எஞ்சியுள்ள பகுதியும் கட்டிமுடிக்கப்பட்டு, அந்த 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கப்பட்டு, நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பாரத பிரதமர் அவர்களிடத்திலே கடிதம் கொடுத்ததாக ஒரு விளக்கத்தை சொன்னார். நமக்கு எப்படியாவது எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்திற்கு வரவேண்டும். அதுதான் நம்முடைய குறிக்கோள். ஏனென்றால், ஐந்து இடங்களை தேர்வு செய்து கமிட்டி எல்லாம் வந்து பார்த்தார்கள். ஒவ்வொரு இடத்திலும், ஒரு குறைபாட்டை சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஈரோட்டில் பார்த்தீர்களானால், சாலை நடுவில் போகிறது, அதனால் இந்த இடத்தை தேர்வு செய்ய முடியாது. மதுரையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் குழாய் போகிறது, அதனால் இங்கேயும் அமைக்க முடியாது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணத்தை சொல்லி, நமக்கு வர ஒரு வாய்ப்பை தட்டி கழித்து விடுவார்களோ என்று கருதி தான், அந்த இடத்தில் 300 ஏக்கர் ஒரே பகுதியில் இருக்கிறது. இங்கே கொடுங்கள் என்றால், அதற்கும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் எங்களை பொறுத்தவரைக்கும் ஐந்து இடத்தில் ஏதாவது ஒரு இடத்தை நீங்கள் தேர்வு செய்து எங்களுக்கு எய்ம்ஸ் மருத்துவமனை தமிழகத்தில் வருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி கொண்டு இருக்கின்றோம். எனவே, தமிழகத்திலே எந்த இடத்தில் வந்தாலும் அது நமக்கு பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, நமக்கு வரவேண்டிய எய்ம்ஸ் மருத்துவமனை வரவேண்டும். அதுதான் நம்முடைய நோக்கம். ஆகவே, அதை எப்பாடுபட்டாவது நிச்சயம் வாங்கிவிடுவோம். ஆகவே, எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு அந்த சந்தேகம் தேவை இல்லை.

❖ ❖ ❖

தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீதான விவாதத்தில் ஆற்றிய உரை.
(29.05.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஸ்டெர்லைட் ஆலை சம்பந்தமாக நடைபெற்ற பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றார்கள். முதலிலே, நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். ஏதோ 100 நாள் போராட்டம் என்று சொன்னார். 22 ஆண்டு காலமாக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். முதலில் அதை தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, ஆனால் இந்த அரசு தான் தீர்வு காணும் என்ற நோக்கத்தோடு போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அதுதான் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

முதலிலே, போராட்டத்தில் இறந்து போன குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், வேதனையையும் பதிவு செய்ய விரும்புகின்றேன். நான் ஏற்கெனவே இரங்கலை தெரிவித்திருக்கின்றேன். இந்த அவையின் வாயிலாக அந்த குடும்பங்களுக்கு இந்த தருணத்திலே எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை நிறுவனம் தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் கிராமத்தில் கடந்த 22 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது.

கடந்த 23.03.2013இல் மேற்படி தொழிற்சாலையிலிருந்து வாயு கசிவு ஏற்பட்டு, பொதுமக்களுக்கு கண் எரிச்சல் ஏற்படுவதாக புகார் வந்ததின் அடிப்படையில், 24.03.2013 அன்று தொழிற்சாலை நிருவாகத்திற்கு விளக்கம் கேட்கும் அறிவிப்பு அளிக்கப்பட்டு,

பின்னர் தொழிற்சாலையை மூடுவதற்கும், மின் இணைப்பை துண்டிப்பதற்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 29.03.2013 அன்று உத்தரவிட்டார்கள். அதன் பேரில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, தொழிற்சாலை உடனடியாக மூடப்பட்டது. அதனை எதிர்த்து, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு ஸ்டெர்லைட் நிருவாகம் செய்த முறையீட்டை விசாரித்து தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கு இடைக்கால அனுமதி அளித்து, தனது இறுதி தீர்ப்பை 08.08.2013 அன்று அளித்தது. இதை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2013இல் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். மேற்படி வழக்கின் விசாரணை தற்பொழுது உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிறுவனத்திற்கு வழங்கிய இசைவாணை மார்ச், 2018 உடன் முடிவடைந்த நிலையில், ஸ்டெர்லைட் நிருவாகம் இதனை புதுப்பிக்க கோரிய போது, ஏற்கெனவே பிறப்பித்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதால், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 09.04.2018 அன்று அதனை நிராகரித்து உத்தரவிட்டது. அன்றிலிருந்து ஸ்டெர்லைட் தொழிற்சாலை இயங்கவில்லை.

09.04.2018 தேதியிட்ட மாசு கட்டுப்பாடு வாரிய நிராகரிப்பு ஆணையை எதிர்த்து ஸ்டெர்லைட் நிருவாகம் "மேல் முறையீட்டு ஆணையத்தில்" மேல் முறையீடு செய்தது. இது குறித்த விசாரணை 04.05.2018 அன்று நடைபெற்றபோது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் ஆஜரான தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர், இத்தொழிற்சாலையை மீண்டும் இயக்க அனுமதிக்கக் கூடாது என கடுமையாக வாதிட்டார். இவ்விவரம் அன்றைய செய்தித்தாள்களில் விரிவாக பிரசுரிக்கப்பட்டது. ஆகவே, 09.04.2018 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவர்கள் விண்ணப்பித்ததை ரத்து செய்துவிட்டது. அதிலிருந்து ஆலை இயங்கவில்லை.

தூத்துக்குடி, குமரெட்டியாபுரம் கிராமத்தில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் பல நாட்களாக அமைதியான முறையில் நடைபெற்று வந்தது. மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு, 05.02.2018, 14.02.2018, 26.02.2018, 26.03.2018, 28.03.2018, 02.04.2018, 09.04.2018, 12.04.2018, 13.04.2018 ஆகிய நாட்களில் பல்வேறு அமைப்பினரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம், மனு அளித்தல் போன்ற நிகழ்வுகள் காவல் துறையினரின் பாதுகாப்புடன் நடைபெற்றது. அந்நிகழ்வுகளின்போது மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளை அவர்களுக்கு எடுத்துரைத்து, போராட்டங்களை கைவிட கேட்டுக்கொண்டார். குறிப்பாக, கூற வேண்டுமென்றால்,

- 12.02.2018 அன்று, மீளவிட்டான் கிராமம், சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் முன்பு சுமார் 500 பேர் ஆர்ப்பாட்டமும், அதில் ஒரு பகுதியினர் தூத்துக்குடி–பாளையங்கோட்டை சாலையில் எம்.ஜி.ஆர் பூங்கா முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சார் ஆட்சியர் தலைமையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

- இதனைத் தொடர்ந்து 28.03.2018 அன்று, தூத்துக்குடி, சார் ஆட்சியர், ஒட்டப்பிடாரம் வட்டம், தெற்கு வீரபாண்டியபுரம், டி.குமாரகிரி ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் போது, மக்களின் பொது நலன் முற்றிலும் பாதுகாக்கப்படும் என்றும், ஸ்டெர்லைட் விவகாரத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், போராட்டக்காரர்களிடம் தெரிவித்தார். இதனடிப்படையில் போராட்டத்தைக் கைவிட கேட்டுக் கொண்டார்.

- 02.04.2018 அன்று, ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கத்தினர் சுமார் 800 பேர், மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து, ஆலையை மூடக் கோரி மனு அளித்தனர். அதே நாள், குமரெட்டியாபுரத்தில்

பல்வேறு அரசியல் கட்சி அமைப்பினர் உட்பட 200 பேர் காத்திருப்பு போராட்டம் நடத்தினர். அன்றே, பண்டாரம்பட்டி, வ.உ.சி. கலைக் கல்லூரி போன்ற இடங்களிலும் சுமார் 200 பேர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இப்பிரச்சினையில், போராட்டம் நடத்தி வரும் மக்களிடம், மாவட்ட நிருவாகம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளது எனவும், அனைத்து போராட்டக் குழுவினரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சியரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

- ✶ 09.04.2018 அன்று, குமரெட்டியாபுரம், பண்டாரம்பட்டி, சங்கரப்பேரி, தெற்கு வீரபாண்டியபுரம், மீளவிட்டான், மடத்தூர், P&T காலனி, 3ஆவது மைல், சில்வர்புரம், முருகேசன் நகர், மாதவன் நகர் போன்ற இடங்களில் கிராம மக்கள் சுமார் 30 முதல் 50 பேர் வரை கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைக்கு, சுமார் 700 பேர் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சாலை மறியலிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைத்தளத்தில் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அப்போது, மாவட்ட ஆட்சியர் அக்கிராம மக்களை நேரில் சந்தித்து, அரசு பொது மக்களின் நலன் சார்ந்தே செயல்பட்டு வருகிறது எனவும், போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

- ✶ 13.04.2018 அன்று, இந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் 200 பேர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம் நடத்தினர்.

- ✶ 14.04.2018 அன்று, சங்கரப்பேரி, தெற்கு வீரபாண்டியபுரம், மீளவிட்டான், மடத்தூர், சில்வர்புரம், P&T காலனி, 3ஆவது மைல், முருகேசன் நகர், மாதவன் நகர், சிலோன் காலனி, பாத்திமா நகர், தேவர் காலனி ஆகிய இடங்களில் ஊர் பொதுமக்கள் சுமார் 30 முதல் 40 பேர் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

- ✶ அன்றைய தினம், தெற்கு வீரபாண்டியபுரம் மக்களை ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் சந்தித்து, 16.04.2018 அன்று பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தார். பொதுமக்களும் ஒப்புக்கொண்டனர். ஆனால் பேச்சுவார்த்தைக்கு எவரும் முன்வரவில்லை.

- ✶ அதேநாளில், தூத்துக்குடி பனிமய மாதா ஆலய வளாகத்தினுள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்களை தூத்துக்குடி வட்டாட்சியர் சந்தித்து, பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தார். பொதுமக்கள் இசைவு தெரிவித்த நிலையில், எவரும் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை.

- ✶ 17.04.2018 முதல் 19.05.2018 வரை, ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கிராமங்களில் சுமார் 50க்கும் குறைவான எண்ணிக்கையில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

12.02.2018 முதல் 25.04.2018 வரை, 14 முறை போராட்டக் குழுவினருடன் தூத்துக்குடி ஆட்சியர், சார்ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி, தமிழ்நாடு அரசு எடுத்துள்ள திடமான, சட்டரீதியான நடவடிக்கைகளை அவர்களிடம் விளக்கினர்.

ஆகவே, காங்கிரஸ் எதிர்கட்சித் தலைவர் அவர்களிடம் கூறிக் கொள்கிறேன். 14 முறை மாவட்ட ஆட்சித் தலைவர், சார்ஆட்சியர் ஆகியோர் போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றனர்.

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசின் நிலையைக் குறித்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் 31.03.2018 அன்று ஒரு அறிக்கை வெளியிட்டார். அதேபோல், 14.04.2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டினை தெளிவான ஒரு செய்தி வெளியீடு மூலம், அனைத்து பத்திரிகைகளுக்கும் வழங்கி, அந்த செய்தி பல பத்திரிகைகளிலும்

வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், ஆலை நிருவாகத்தின் விண்ணப்பத்தினை நிராகரித்து இருந்தது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் பத்திரிகை செய்தியின் வாயிலாக எல்லா பத்திரிகையிலும் விளம்பரப்படுத்தினார். ஆலையினர் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு மேலும் 5 ஆண்டு காலம் தொடர்ந்து இயக்குவதற்கு அவர்கள் அனுமதி கேட்டார்கள். அந்த அனுமதியை மாண்புமிகு அம்மாவுடைய அரசு 09.04.2018 அன்று ரத்து செய்தது என்ற செய்தியை பத்திரிகையின் வாயிலாக மாவட்ட மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

20.05.2018 அன்று, தூத்துக்குடி சார் ஆட்சியர், போராட்டக் குழுவினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தைக்குப் பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டத்தை கைவிட்டு, தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள விளையாட்டு மைதானத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை இல்லாமல் ஒரு நாள் அமைதியான முறையில், போராட்டம் நடத்திட போராட்டக் குழுவினர் ஒப்புக் கொண்டனர். போராட்டக் குழுவின் ஒரு பிரிவினர் இதற்கு ஒப்புக்கொள்ளாமல், திட்டமிட்டபடி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என அறிவித்தனர்.

எனவே, முன்னெச்சரிக்கை கருதி சுமார் 2 ஆயிரம் காவல் துறையினர் அங்கு பணியில் அமர்த்தப்பட்டனர். மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவை பிறப்பித்தார்.

அதோடு, போராட்டக் குழுவினர் அமைதியாக கவன ஈர்ப்புப் போராட்டம் மட்டுமே நடத்த ஒப்புக்கொண்ட முடிவுக்கு மாறாக, 22.05.2018 அன்று காலை 10 மணியளவில், ஆயிரக் கணக்கானோர் மடத்தூர் பகுதியிலிருந்தும், பண்டாரம்பட்டி, மீளவிட்டான், திரேஸ்புரம், குரூஸ்புரம் பகுதிகளிலிருந்தும் வந்தனர். தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரும் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான திருமதி கீதா ஜீவன் மற்றும் சுமார்

200 தி.மு.க.வினர்களும் காலை 9 மணியளவில் இந்த முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொள்ள ஊர்வலமாக சென்றனர்.

மேலும் சில அமைப்புகளைச் சார்ந்தவர்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். இவர்களின் தூண்டுதலின் பேரில், அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் எண்ணத்தில், திடீரென மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் ஸ்டெர்லைட் ஆலையை குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 144 தடை உத்தரவையும் மீறி முற்றுகையிட்டனர்.

சில விஷமிகள் இக்கூட்டத்தில் ஊடுருவி, காவல் துறையினர் மீது கல்லெறிந்தும், அவர்களை விரட்டித் தாக்கியும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை கல்லெறிந்து சேதப்படுத்தியும், மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 35 அரசு துறை வாகனங்களையும், இரண்டு காவல் வாகனங்களையும், 110 தனியார் வாகனங்களையும் தீயிட்டுக் கொளுத்தியும், கல்லெறிந்தும் சேதப்படுத்தி கலவரத்தில் ஈடுபட்டனர். ஆகவே, தான் இதை சொல்கின்றேன். ஆகவே, அப்பாவி பொதுமக்கள் பலமுறை போராட்டம் நடத்தி இருக்கின்றார்கள். நீங்கள் சொல்வதைப் போல 99 நாட்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது எந்த சம்பவம் நடைபெறவில்லை. அதற்கு முன்பும் போராட்டம் நடத்தினார்கள். எந்த சம்பவமும் நடைபெறவில்லை. ஆகவே, இந்த அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, சில விஷமிகள் அதிலே ஊடுருவி இப்படிப்பட்ட செயலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அதை எல்லாம் சட்டப்படி காவல்துறை கண்டுபிடிக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், அருகில் இருந்த ஸ்டெர்லைட் ஆலை ஊழியர் குடியிருப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 24 நான்கு சக்கர வாகனங்களையும், ஒரு இருசக்கர வாகனத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர். ஆகவே, பக்கத்திலே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அருகிலே ஸ்டெர்லைட் ஆலை குடியிருப்பு பகுதி இருக்கிறது. அங்கே

நூற்றுக்கணக்கானோர் வசித்து வருகிறார்கள். அந்த பகுதிக்கு சில விஷமிகள் சென்று, அங்கே இருக்கின்ற வாகனங்களுக்கு தீயிட்டு கொளுத்தி இருக்கின்றார்கள். மேலும், போராட்டக்காரர்கள், மாவட்ட தொழில் மைய அலுவலகம், தூத்துக்குடி தெற்கு காவல் நிலையம் மற்றும் பல்வேறு வணிக நிறுவனங்களையும் சேதப்படுத்தினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குள் போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்ட போதும், ஸ்டெர்லைட் குடியிருப்பிற்குள் நுழைய முற்பட்ட போதும், போராட்டக்காரர்களின் வன்முறைகளை கட்டுக்குள் கொண்டு வரவும், பொதுமக்களின் உயிரையும் உடமைகளையும் பாதுகாக்கவும், பொதுச் சொத்துக்களுக்கு மேலும் சேதம் விளைவிக்காமல் தடுக்கவும், கலவரக்காரர்களை தடுத்து நிறுத்த முயற்சித்தும், அவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகித்தும், வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வர தடியடியும் நடத்தப்பட்டது.

பொதுமக்களின் உடமைக்கும், உயிருக்கும் ஆபத்து விளைவிக்கும் வகையில் வியாபார நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் மீது கல் வீசி வன்முறையில் ஈடுபட்ட போது, காவல் துறையினர் அவர்களை கலைந்து செல்லுமாறு பலமுறை கூறியும், கலைந்து செல்லாமல் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், காவல் துறையினர் பொதுமக்களின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்கும் நோக்கில், தவிர்க்க முடியாத சூழ்நிலையில், தகுந்த எச்சரிக்கைக்கு பிறகு நடவடிக்கை மேற்கொண்டு அவர்களைக் கலைந்து போக செய்தனர்.

அன்று மாலையில், திரேஸ்புரத்தில் கூடிய கும்பல் ஒன்று, தூத்துக்குடி வடக்கு காவல் நிலையம், தூத்துக்குடி மத்திய காவல் நிலைய குடியிருப்பு, மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகங்களை முற்றுகையிட்டு, தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய வளாகத்திற்குள் பெட்ரோல் குண்டு ஒன்றை வீசியது. காவல் துறையினர், அவர்களை எச்சரித்தும் கலைந்து செல்லாமல் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு, அரசு

சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கில், முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைய முற்பட்ட போது, தவிர்க்க முடியாத சூழ்நிலையில், தகுந்த எச்சரிக்கைக்கு பின்னர் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து அவர்களை கலைந்து போக செய்தனர்.

இவ்விஷயத்தைக் கேள்விப்பட்ட உடன், நான் காவல் துறை தலைமை இயக்குநரை நேரில் அழைத்து, நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்து, தூத்துக்குடி நகரில் அமைதி திரும்பிட துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டேன்.

இச்சம்பவங்களையடுத்து, முக்கிய இடங்களில் காவல் துறையினர் போதுமான அளவிற்கு பாதுகாப்பு பணிக்கு நியமிக்கப்பட்டும், ரோந்து பணிகள் மேற்கொண்டும், தூத்துக்குடி நகரில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டனர்.

இந்நிலையில், 23.05.2018 அன்று, தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் காயமடைந்தவர்களின் உறவினர்கள் என்ற போர்வையில் ஒரு கும்பல், தடையை மீறி மருத்துவமனையில் குழுமி, அமைதிக்கு குந்தகம் விளைவிக்க முயன்றனர், காவல்துறையினர் அவர்களை கலைந்து போக செய்தனர். மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர், காயமடைந்தவர்களை சந்திக்க மருத்துவமனைக்கு வந்த போது, அவரை பார்க்கும் போர்வையில் மீண்டும் கூடிய ஒரு கும்பல், அவர் சென்ற பிறகும் கலைந்து செல்லாமல், மருத்துவமனை வளாகத்தில் அமைதிக்கு குந்தகம் விளைவிக்க முயன்றதால், காவல் துறையினர் அவர்களை கலைந்து போகச்செய்தனர். அவர்கள் மீண்டும் விவிடி (VVD) சிக்னல் சந்திப்பு அருகே அண்ணா நகர் பகுதியில் ஒன்று கூடி, காவல் துறையினர் மற்றும் பொதுமக்களின் உடமைகளுக்கு தீவைத்தும், தாக்குதல் நடத்தியும், வன்முறையில் ஈடுபட்டதால், காவல் துறையினர் தகுந்த எச்சரிக்கைக்கு பின்னர் கண்ணீர் புகை உபயோகித்தும், தடியடி நடத்தியும், கும்பல் கலைந்து செல்லாமல்

தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டது. எனவே, அவர்களை கலைந்து போக செய்ய, உரிய எச்சரிக்கைக்கு பின்னர், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தகுந்த நடவடிக்கை எடுத்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இச்சம்பவங்களில் சில போராட்டக்காரர்களும், காவல் துறையினரும் காயமடைந்ததோடு, 2 காவல் துறை பேருந்துகள், விவசாயத் துறைக்கு சொந்தமான 2 வாகனங்கள், 1 தனியார் வாகனம், 2 மதுபான கடைகள் ஆகியவை தீவைத்து சேதப்படுத்தப்பட்டன.

முன்னதாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தனது காரில், ஜெயராஜ் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, அவரது வாகனத்தை பின் தொடர்ந்து சென்ற வாகனங்கள் மீது போராட்டக்காரர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தியதுடன், கடைசியாக சென்று கொண்டிருந்த தி.மு.க. விளாத்திகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் திரு.மாரிமுத்து என்பவரின் ஸ்கார்பியோ காரை நிறுத்தி, அவரை இறக்கி விட்டுவிட்டு, காருக்கு தீவைத்தனர். ஆகவே, போராட்டக் குழுவினர் அவர்களை ஒன்றும் வரவேற்கவில்லை. அவர்கள் செய்த தவறு மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டு விட்டது. அவர்கள் ஊர்வலமாக சென்ற காரை தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஒன்றியச் செயலாளருடைய காரை, காரிலிருந்து இறக்கிவிட்டு தீ வைத்திருக்கிறார்கள். அதிலிருந்து மக்கள் யார் மீது கோபம் கொண்டுள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பின்னால் உடன் வந்த மேலும் 6 கார்கள் மீது கற்களை வீசி சேதப்படுத்தினர். இது தொடர்பாக, தூத்துக்குடி மத்திய காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களின் போது போராட்டக்காரர்கள் 58 பேரும், காவல் ஆளிநர்கள் 72 பேரும் காயமடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். 196 அரசு மற்றும் பொதுமக்கள் வாகனங்களை தீயிட்டும், கல்வீசி தாக்கியும், கலவரக்காரர்களால் சேதப்படுத்தப்பட்டன.

காயமடைந்த 58 நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கும் பொருட்டு, மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்களும், மதுரை மற்றும் திருநெல்வேலியிலிருந்து பல்வேறு துறைகளைச் சார்ந்த 20 சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற மருத்துவப் பணியாளர்கள் பலரும் தூத்துக்குடிக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இச்சம்பவங்களையடுத்து, பொது மக்களிடையே வன்முறையை தூண்டும் விதத்திலும், பீதியை ஏற்படுத்தும் வகையிலும், உண்மைக்கு புறம்பான செய்திகளை, விஷமிகள் சமூக ஊடகங்களில் பரப்பி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்க முயன்ற சம்பவங்கள் குறித்து அரசுக்கு தகவல் தெரிய வந்தது. அவ்வாறான புரளிகள் மக்களிடையே பரவுவதைத் தடுக்கவும், அதனால் ஏற்படக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்னைகளை தடுக்கவும், 23.05.2018 முதல் ஐந்து நாட்களுக்கு தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வலைதள சேவையை நிறுத்த, தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டதை அடுத்து, அம்மாவட்டங்களில் வலைதள சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

22.05.2018 மற்றும் 23.05.2018 ஆகிய தினங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போராட்டக்காரர்களில், 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இச்சம்பவங்களில் உயிரிழந்த 13 நபர்களுள், ஏழு நபர்களின் பிரேத புலன் விசாரணை நீதித்துறை நடுவர்களால் நடத்தப்பட்டது (28.05.2018 வரை). பின்னர், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிமுறைகளைப் பின்பற்றி மருத்துவர்கள் குழுவால் பிரேத மருத்துவ பரிசோதனை முடிக்கப்பட்டு மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி சடலங்கள் மருத்துவமனையில் குளிர் பதன கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆறு பிரதேங்களைப் பொறுத்தமட்டில், அவர்களது உறவினர்கள், நீதித்துறை நடுவரின் பிரேத புலன் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் இருந்து வருவதால், மருத்துவ பரிசோதனை 28.05.2018 வரை மேற்கொள்ளப்படாமல் இருந்து வருகிறது.

தற்போது, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நிறுத்தப்பட்ட இணையதள சேவை, மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை அடுத்து, 26.05.2018 முதல் தூத்துக்குடி நகரில் அனைத்து விதமான போக்குவரத்தும் வழக்கம் போல் இயங்கி வருவதோடு, வங்கிகள், அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள், உணவகங்கள், காய்கறி சந்தைகள், கடைகள் போன்றவை திறக்கப்பட்டு, எப்போதும் போல் செயல்பட்டு வருகின்றன. அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் கிடைக்க தமிழ்நாடு அரசால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

மாண்புமிகு காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர், அங்கே பதட்டமான சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார். இப்பொழுது இயல்புநிலை திரும்பி விட்டது. ஆகவே, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு எடுத்துவரும் நடவடிக்கையின் காரணமாக, அங்கே மக்கள் அச்சமில்லாமல் அனைத்துப் பகுதிக்கும் செல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்டெர்லைட் தொழிற்சாலையினால் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுவதாக அருகில் உள்ள கிராமத்தினர் புகார் கூற ஆரம்பித்த நாள் முதலிலே, நீங்கள் சொன்னா மாதிரி இந்த 99 நாள் கிடையாது, ஸ்டெர்லைட் தொழிற்சாலையால் உடல்நலத்திற்கு தீங்கு ஏற்படுவதாக அருகிலுள்ள கிராமத்தினர் புகார் கூற ஆரம்பத்த நாள் முதலே இந்தப் போராட்டம் ஆரம்பித்து விட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அந்த ஆலையின் தன்மையையும், மக்களின் நிலையையும் உணர்ந்து, அந்த ஆலையை மூடுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியைப் பின்பற்றி, மாண்புமிகு அம்மாவின் அரசும் அவ்வழியே நின்று ஸ்டெர்லைட் ஆலையை தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதி மறுத்து வந்தது.

தூத்துக்குடியில் இயங்கி வரும் ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு 16.01.1995இல் மத்திய அரசின் சுற்றுச் சூழல் அனுமதி (Environmental clearance) வழங்கப்பட்டது. மத்தியில் உங்கள் ஆட்சி இருந்த போதுதான். நான் அதைத்தான் சொல்கிறேன். இந்த clearance உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது. ஆகவே, இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்ததாக நீங்கள் கருத வேண்டாம். ஏற்கெனவே, காங்கிரஸ் ஆட்சி மத்தியிலே இருந்தபோது 1995—லே, அதாவது எந்த ஆலையாக இருந்தாலும், ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக பில்டிங் கட்டுவதற்கு அனுமதி கொடுப்பது எல்லாமே அரசு செய்தது. ஆனால், திறக்கும்போது, அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றினார்களா என்று பார்த்துத்தான் திறக்க வேண்டும், அதுதான் முக்கியம். அது பின்பற்றப்படவில்லை. அதுதான் இப்பொழுது முக்கிய பிரச்சினையே. அங்கு மக்கள் வைக்கின்ற பிரச்சினையே அதுதான். ஏனென்றால், அதை பின்பற்றி அந்த ஆலை திறக்கப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட பிரச்சினையே வந்திருக்காது. ஆகவேதான், நீங்கள் எங்கள் மேலேயே குற்றம் சுமத்தினீர்கள் அல்லவா, அதற்காக சொல்கிறேன். லைசன்ஸ் கொடுத்தது நீங்கள்தான்.

மேற்கூறிய ஆணைக்கு எதிராக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அதாவது 1996 முதல் 1998 வரை பல்வேறு தேதிகளில் கீழ்கண்டவர்களால் பொதுநல வழக்குகள் தொடரப்பட்டன :—

மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் சொல்வது போல 99 நாட்கள் நடைபெறவில்லை, 1996 முதல் 1999 வரைக்குமே பொதுநல வழக்குகள் எல்லாம் போட்டுவிட்டார்கள். யார் என்றால்,

(1) தூய சுற்றுச்சூழலுக்கான தேசிய அறக்கட்டளை

(2) திரு.வைகோ, ம.தி.மு.க பொதுச்செயலாளர்

(3) திரு.கனகராஜ், செயலாளர், சி.ஐ.டி.யு, தூத்துக்குடி மாவட்ட குழு

இவர்களெல்லாம் உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குகள் போட்டார்கள் இந்த ஆலையை மூடவேண்டும் என்று ஸ்டெர்லைட் தொழிற்சாலை பாதுகாப்பு முறைகளை சரியாக அமைக்காததனால் ஏற்படும் மாசு மற்றும் விபத்துகள் குறித்தும் மேற்கூறிய வழக்குகள் தொடரப்பட்டது. இந்த வழக்கில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், எல்லாவிதமான விதிமுறைகளையும், சட்டங்களையும், பின்பற்றி தொழிற்சாலையின் பணிகளை தொடர்ச்சியாக கண்காணித்த பிறகே அனுமதி வழங்கப்பட்டது என்று தனது நிலைப்பாட்டை உயர்நீதிமன்றத்தில் எடுத்துரைத்தது. அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க அரசு. இப்பொழுது சொல்கிறார்களே, தூய்மை, நேர்மை என்றெல்லாம் சொன்னார்களே. அப்பொழுது இதெல்லாம் சரியாக இருக்கிறதென்று உயர்நீதிமன்றத்தில் இவர்கள் செய்தி சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம், இந்த ஆலைக்கு ஆதரவாக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நீதிமன்றத்திலே இந்தக் கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அப்பொழுது ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவான இந்த நிலைப்பாட்டை எடுத்தது. இதை 28.09.2010 அன்று வழங்கப்பட்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பில் பக்கம் எண்.10இல், பத்தி 6இல் குறிப்பிடப்பட்டுள்ளதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அப்பொழுது இந்த பொதுநல வழக்குகள் எல்லாம் தொடர்ந்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அப்பொழுது, 28.10.2010இல் உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. இந்த உயர்நீதிமன்ற தீர்ப்பு வழங்கும்பொழுது, அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

“On the part of the Government of India and the State Government and also the Tamil Nadu Pollution Control Board, it has been contended that all the procedures contemplated under law have been duly followed while granting permission to the company and periodical checks have been conducted regarding the affairs and activities of the company”.

ஆகவே, அப்பொழுது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக, இந்த affidavit–ஐ தாக்கல் செய்திருக்கின்றது, ஆலைக்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு வேண்டுமென்றே ஒரு நாடகம் நடிக்கின்றார்கள், ஆலைக்கு யார் ஆதரவு கொடுக்கின்றார்கள், அந்த ஆலையை யார் மூடியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இது record ஆக இருக்கின்றது. உயர்நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்பிலே இது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, அன்றைக்கு இருந்த அரசு, உயர்நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக affidavit தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஆகவேதான், இதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அவர் சொன்னார் இல்லையா, நியாயப்படுத்துகிறேன் என்று, அதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கிறேன், நிறைய இருக்கிறது. எல்லாம் நீங்கள் கேட்க வேண்டும். ஏனென்றால், இது மிகப் பெரிய பிரச்சினை, 22 ஆண்டுகாலமாக நடைபெறுகின்ற போராட்டம்.

ஆனால், மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்கூறிய வழக்குகளை ஒன்றிணைத்து விசாரித்து 28.09.2010 அன்று, கீழ்கண்டவாறு தீர்ப்பினை வழங்கியது:

1. ஸ்டெர்லைட் தொழிற்சாலை உடனடியாக மூடப்பட வேண்டும். ஆகவே, அன்றைக்கு அந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக, affidavit தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், அதையும் நிராகரித்து உயர்நீதிமன்றம் ஆலையை மூடவேண்டுமென்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

2. தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர், தொழிலாளர்களுக்கு மாற்றுப்பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கூறிய உயர்நீதிமன்ற ஆணைக்கெதிராக, தொழிற்சாலை நிருவாகம் 01.10.2010 அன்று, உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. உச்சநீதிமன்றம், 01.10.2010 அன்றே, உயர்நீதிமன்ற மூடுதல் ஆணையை நிறுத்தி வைத்தது. உச்சநீதிமன்றம் இவ்வாறு ஆணை பிறப்பிக்க, தி.மு.க. ஆட்சியில் தாக்கல் செய்த வாதுரை தான் காரணம்.

அதாவது உச்சநீதிமன்றத்தில் போய் ஒரே நாளில் Stay வாங்கிவிட்டார்கள். இன்றைக்கு சொல்கிறார்கள், அழுத்தம் கொடுக்கவில்லை, அழுத்தம் கொடுக்கவில்லை என்று. உயர்நீதிமன்றம், அந்த ஆலையை மூடவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே, அந்த நிருவாகம், உச்சநீதிமன்றத்திலே அதை இயக்க வேண்டுமென்று அதற்குத் தேவையான அனுமதி எங்களுக்கு வழங்க வேண்டுமென்று அங்கே வழக்கு தொடர்ந்து, வழக்கு தொடர்ந்தவுடனேயே அதற்கு stay கொடுத்தது, அப்படியென்றால், எந்த அளவுக்கு வாதித்திருப்பார்கள் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இன்றைக்கு ஆலை நிருவாகத்திற்காக அவர்கள் தான் சாதகமாக இருந்தார்கள். சரியான முறையில் வாதாடி இருந்தால், தடை ஆணை கொடுத்திருக்க மாட்டார்கள்.

உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்த பொழுதே, முதன்முதலில் ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு 14.10.1996 அன்று இயக்குவதற்கான இசைவாணை அப்போதைய தி.மு.க ஆட்சியால் தான் வழங்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 391 டன் காப்பர் மற்றும் 1,060 டன் கந்தக அமிலம் (சல்ப்யூரிக் ஆசிட்) தயாரிப்பதற்கும், இந்த ஆலையை இயக்க அனுமதியும் தி.மு.க. ஆட்சியில் தான் வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னீர்களே, ஆலை கட்டுவதற்கு நாம் கொடுத்தோம், ஆனால் ஆலை இயக்குவதற்கு யார் கொடுத்தார்கள், தி.மு.க. தான். ஆகவே, அதை

கண்காணித்து சரியா, தவறா என்று பரிசோதித்து கொடுத்திருக்க வேண்டும். ஆகவே, ஒரு ஆலையை இயக்குகின்ற பொழுது, அந்த ஆலைக்கு என்ன அனுமதி கொடுத்தார்களோ, அந்த அனுமதியெல்லாம் பின்பற்றினார்களா என்பதை பார்க்காமலேயே கொடுத்திருக்கின்றார்கள்.

அவ்வாறு ஆலையினை இயக்க அனுமதி வழங்கும்போது ஆலையில் உரிய மாசு தடுப்பு சாதனங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு சாதனங்கள் முறையாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து இயக்க இசைவாணை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல், வழக்குகள் நிலுவையில் இருக்கும்போதே, அவசர கதியில், 14.10.1996 அன்று தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்குவதற்கு என்ன அவசியம்? என்ன அவசரம்? சொல்கிறாரே, நீங்கள் எல்லாம் துணை என்று, யாருக்கு அவசரம், அவர்களுக்குத்தான் அவசரம். வேக, வேகமாக திறந்தார்கள். அந்த இசைவாணை வழங்கிய போது சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தவர் திரு. NKK பெரியசாமி அவர்கள். எனவே, முதன்முதலில் இந்த ஆலை இயங்க ஆரம்பித்தது தி.மு.க. ஆட்சி காலத்தில்தான்.

ஸ்டெர்லைட் நிறுவனம் உற்பத்தி செய்து கொண்டிருந்த சல்ப்யூரிக் ஆசிட் விற்பனையில் ஏற்பட்ட மந்த நிலையை களைவதற்காக, அந்த அமிலத்தை உபயோகித்து ஃபாஸ்பாரிக் அமிலம் தயாரிப்பதற்கு ஸ்டெர்லைட் நிருவாகத்தினர் முனைந்தனர். இவ்வாறு ஃபாஸ்பரிக் அமிலம் தயாரிக்கும்போது தான், ப்ளோரின் என்ற வாயு வெளியேறும். அப்பொழுது தி.மு.க. ஆட்சியில்தான் அதற்கும் permission கொடுத்தார்கள். அந்த கூடுதலான அந்தப் பொருளும் தயாரிப்பதற்கு அன்றைக்கு இருந்த அரசுதான் அனுமதி கொடுத்தது. அதன் விளைவாக, அந்த வாயுவில் ஏற்படுகின்ற அந்த விஷத்தன்மையினால் தான் சுவாசக் கோளாறு, தொண்டை, மூக்கு மற்றும் கண் எரிச்சல் எல்லாம் வந்தது. இதுதான் அவர்கள் செய்த மிகப் பெரிய பாதகமான செயல். இன்றைக்கு தர்மம், நியாயம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தவறு செய்ததைப் போல,

ஒரு நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் இவ்வாலைக்கு புதிய இசைவாணை வழங்கப்பட்டதும் 20.05.1999 அன்று தான்; அதாவது, தி.மு.க. ஆட்சியில்தான். அதாவது, ஸ்டெர்லைட் ஆலையின் வியாபார நோக்கத்தினை பாதுகாக்கவும், நிருவாகத்தினர் அதிக லாபம் ஈட்டவும் தேவையான அனுமதிகளை வழங்கியது தி.மு.க. ஆட்சியில் தான். அன்று சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தவர் திரு. பொங்கலூர் பழனிச்சாமி அவர்கள்.

இதுமட்டுமல்லாமல், 02.11.2006 அன்று, தற்போதைய ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்தை நிறுவ இசைவாணை வழங்கியதும் மற்றும் 15.11.2006 அன்று ஆலையை இயக்குவதற்கு இசைவாணை வழங்கியதும் தி.மு.க. ஆட்சியில்தான். இந்த இசைவாணை மூலம் ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் டன் என்றிருந்த காப்பர் உற்பத்தி 3 இலட்சத்து 60 ஆயிரம் டன் என உயர்த்தி வழங்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில் தான். மேலும், உபரிப் பொருட்களாக ஆண்டொன்றுக்கு 12 இலட்சத்து 60 ஆயிரம் டன் கந்தக அமிலம், 2 இலட்சத்து 40 ஆயிரம் டன் பாஸ்பாரிக் அமிலம், 7 ஆயிரத்து 500 டன் ஹைட்ரோ ஃப்ளோரோ சிலிசிக் அமிலம் தயாரிப்பதற்கும் இசைவாணை வழங்கப்பட்டது. அப்போது சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தவர் திரு. மொய்தீன் கான் அவர்கள்.

மேலும், இந்த ஆலையின் விரிவாக்கத்திற்கு 30.04.2008 அன்று 100 ஏக்கர் நிலம் வழங்கியதும், அப்போதைய தொழில்துறை அமைச்சராக இருந்த அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய திரு.மு.கருணாநிதி அவர்கள்தான் அந்த விரிவாக்கத்திற்கு 100 ஏக்கர் நிலத்தை கொடுத்திருக்கிறார்.

மேலும், இவ்வாலைக்கு 19.01.2009 அன்றும், 14.08.2009 அன்றும், இசைவாணையினை புதுப்பித்து வழங்கியதும், 12.03.2009 அன்று ஆலையின் மூன்றாவது விரிவாக்கத்திற்கு நிறுவ இசைவாணை வழங்கியதும் தி.மு.க. அரசு தான். அப்போதும்

சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்தவர் திரு. மொய்தீன்கான் அவர்கள்.

இன்று ஸ்டெர்லைட் ஆலையை மூடவேண்டும் என்று கபட நாடகம் ஆடும் எதிர் கட்சித் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் தான், 23.09.2009 அன்று தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, இந்த ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்திற்கு 230.63 ஏக்கர் நிலத்தை வழங்கியவர் இவர்தான். ஏற்கெனவே, pollution அதிகமாக இருக்கிறது, மக்கள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இதற்கு விரிவாக்கம் கொடுத்து, மேலும் 2ஆவது யூனிட் கொண்டு வருவதற்கும் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருந்தபொழுதுதான் இதற்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள் சிப்காட் மூலமாக. இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறார். கேட்டால், அந்த உண்மையெல்லாம் வெளி வந்துவிடும் என்றுதான் வெளிநடப்பு செய்துவிட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த தவறை மறைப்பதற்காக அடிக்கடி பேட்டி கொடுத்து, பேட்டி கொடுத்து தன்னை நிரபராதி என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார் மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

22.09.2004இல் ஸ்டெர்லைட் ஆலையின் முதல் விரிவாக்கத்திற்கும் அப்பொழுது முன்னாள் மத்திய அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் திரு. ராஜா அவர்கள் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சராக இருந்தார். அப்பொழுது தான் முதல் விரிவாக்கத்திற்கு அனுமதி கொடுத்தார்கள். ஏற்கெனவே மக்கள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள், இந்த ஆலை மூடிவேண்டுமென்று உயர்நீதிமன்றத்தில், பொதுநல வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த காலகட்டத்தில், தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு.ராஜா அவர்கள் ஆலையினுடைய முதல் விரிவாக்கத்திற்கு அனுமதி கொடுத்தார் என்றால், யார் ஸ்டெர்லைட் நிருவாகத்திற்கு துணை போனது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதுமட்டுமல்லாமல், தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் ஆட்சியில்

- ✶ 22.09.2004இல் ஸ்டெர்லைட் ஆலையின் முதல் விரிவாக்கத்திற்கும்,
- ✶ 09.08.2007இல் ஸ்டெல்லைட் ஆலையின் இரண்டாம் விரிவாக்கம். நீங்கள் (காங்கிரஸ்) தான் மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள்.
- ✶ 22.02.2008இல் ஸ்டெர்லைட் ஆலையின் மூன்றாம் விரிவாக்கத்திற்கும் அதற்கும் அனுமதி கொடுத்தார்கள்.
- ✶ 01.01.2009இல் ஸ்டெர்லைட் ஆலையின் நான்காவது விரிவாக்கம்.

இதையெல்லாம் எதற்காக சொல்கிறேனென்றால், இந்த வரலாறு உங்களுக்கு தெரியுமோ, தெரியாதோ என்று தெரியவில்லை. இதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும், இது எல்லாம் record ஆக இருக்கிறது, யார் நினைத்தாலும் மறைக்க முடியாது, தகவல் உரிமைச் சட்டத்தில் யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இதை யாரும் மறைக்க முடியாது. இந்த தகவலை அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஏற்கெனவே அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இதெல்லாம் நான் சொல்கிறேன். இதெல்லாம் நடக்கக்கூடாது என்று சொல்கிறீர்களே, இவ்வளவு வருத்தப்பட்டு சொன்னீர்களே. இது கொடுக்காமல் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அதைத்தான் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்தே உச்சநீதிமன்றத்தில் நிலுவையாக இருந்த ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு எதிராக ஆலை தொடுத்த வழக்கின் மீது, 2011ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எடுத்த திடமான நிலைபாட்டினால் தான், மாண்புமிகு உச்சநீதிமன்றம், 02.04.2013 அன்று இத்தொழிற்சாலை பல வருடங்களாக இசைவாணையினைப்

புதுப்பிக்காமலேயே அதாவது renewal செய்யாமலேயே இயங்குவது குறித்து தனது ஆணையில் குறிப்பிட்டது. மேலும், சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்திய ஆலைக்கு அபராதம் விதித்து, அதனை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் வைப்புத் தொகையாக குறைந்த பட்சம் 5 ஆண்டுகளுக்கு இருக்குமாறு செலுத்த வேண்டும் என்றும், அதன் மூலம் வரும் வட்டித் தொகையினை தூத்துக்குடி மாவட்ட சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டது. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் இவ்வாணையின் பேரில் தான் ஆலை இயங்கி வந்தது.

இதற்கிடையில், 23.03.2013 அன்று, அதிக அளவில் சல்பர் டை ஆக்சைடு ஆலையிலிருந்து வெளி வந்த காரணத்தினால், 29.03.2013 அன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஸ்டெர்லைட் ஆலைக்கு மூடுதல் ஆணை பிறப்பித்தது. மேற்கூறிய ஆணைக்கு எதிராக, ஸ்டெர்லைட் ஆலை, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் 01.04.2013 அன்று மேல் முறையீடு செய்து, 31.05.2013 அன்று, இடைக்கால தடையாணை பெற்றது.

மேலும், 08.08.2013 அன்று, தேசிய பசுமைத் தீர்ப்பாயம், தனது இறுதி தீர்ப்பில், இவ்வாலையை மூடிய உத்தரவினை ரத்து செய்தது. இதனையடுத்து இவ்வாலை இயங்கி வந்தது. 08.08.2013 நாளிட்ட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து, மாண்புமிகு அம்மா அவர்கள், 27.09.2013 அன்று மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் சிவில் மேல் முறையீடு செய்தார்கள்.

ஸ்டெர்லைட் ஆலை மூடுதல் ஆணைக்கான முக்கிய காரணமாக அதிகப்படியான சல்பர் டை ஆக்சைடு வெளியேற்றம் பற்றியும், அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலுவாக எடுத்துக் கூறியும், சட்டப் பிரிவு 31இன்படி, மாநில மேல்முறையீடு ஆணையத்திடம் (Appellate Authority) ஆலை முறையிட்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், ஸ்டெர்லைட் தொழிற்சாலையை உடனடியாக

மூடவேண்டும் என மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. இவ்வழக்கு 29.07.2016 அன்று விசாரணைக்கு வந்து, தற்போது நிலுவையில் உள்ளது.

ஆலையை இயக்குவதற்கான இசைவாணையை புதுப்பிப்பதற்கு 31.01.2018 அன்று, ஆலை நிருவாகம் விண்ணப்பித்தது. முக்கிய நிபந்தனைகளை தொழிற்சாலை நிறைவேற்றாத காரணத்தால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு 09.04.2018 அன்று, அவ்விண்ணப்பத்தினை நிராகரித்தது.

மேற்கண்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உத்தரவினை ஆலை நிருவாகம் பின்பற்றுகிறதா என சரிபார்க்க, 18.05.2018 மற்றும் 19.05.2018 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) இந்த ஆலையினை ஆய்வு செய்தார். அப்போது, ஆலையினை இயக்குவதற்கான ஆயத்த வேலைகளை ஸ்டெர்லைட் நிருவாகம் செய்து கொண்டிருப்பது கண்டறிந்து, ஆலையினை மூடுவதற்கும், மின் இணைப்பினை துண்டிப்பதற்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் 23.05.2018 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் பேரில், ஆலையின் மின் இணைப்பு 24.05.2018 அன்று துண்டிக்கப்பட்டது.

ஸ்டெர்லைட் தொழிற்சாலை உற்பத்தி செய்யும் மின்சாரமும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் துணை மின் நிலையம் மூலமாகவே விநியோகிக்கப்படுவதால், தொழிற்சாலை எந்த விதத்திலும், தான் சுயமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை உபயோகப்படுத்தவும் முடியாது; ஆலையை இயக்கவும் முடியாது. தொழிற்சாலை பயன்பாட்டிற்காக வழங்கப்படும் தண்ணீரும் நிறுத்தப்பட்டுள்ளது.

25.04.1997 அன்று, உங்கள் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய திரு.மு.கருணாநிதி அவர்கள், இதே சட்டப்பேரவையில் “ஒரு துப்பாக்கி பிரயோகம் கூட நடைபெறாமல் பார்த்துக் கொள்ள

வேண்டிய பெரும் பொறுப்பு காவல்துறைக்கு மாத்திரமல்ல, அனைத்து கட்சிகளுக்கும் இருக்கிறது. சமுதாயத்தினுடைய தலைவர்களுக்கும் இருக்கிறது.'' என்று கூறியுள்ளார். இதை, நான் கூறவில்லை. ஏற்கெனவே சட்டமன்ற பேரவையில், அன்றைய முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கூறியதை நான் இங்கே குறிப்பிடுகிறேன். ஆனால், தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள், காவல்துறையின் கட்டுப்பாட்டையும், மாவட்ட ஆட்சியர் தடை உத்தரவையும் மீறி, முற்றுகை போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். இது சரிதானா? அவருடைய தலைவரே சொல்லியிருக்கிறார், இப்படியெல்லாம் செய்ய வேண்டாம் என்று. அதையும் மீறி, அந்த சட்டமன்ற உறுப்பினர் தடையையும் மீறி செய்திருக்கிறார், அதைத்தான் இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

தி.மு.க. ஆட்சி காலங்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை சமாளிக்க, காவல் துறையினர் எடுத்த நடவடிக்கைகளின் போது, குறிப்பாக துப்பாக்கி சூட்டின்போது, நடந்த உயிரிழப்பு சம்பவங்களையும், அச்சம்பவங்களை அடுத்து விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த சம்பவங்களை சொல்லியிருக்கிறார், நிறைய தகவல் சொன்னார், விசாரணைக் கமிஷன் எப்படி அமைக்க வேண்டும் என்று. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்கள், அதற்காக விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்ட விவரத்தை நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

* கடந்த 19.06.1970 அன்று, தற்போதைய திருப்பூர் மாவட்டம், கனக்கம்பாளையம் பிரிவில் விவசாய சங்கத்தினர் மின் கட்டண உயர்வை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட போது, ஏற்பட்ட வன்முறையை சமாளிக்க, காவல்துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் மூன்று விவசாயிகள் பலியாகினர். இதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற சம்பங்கள்.

* கடந்த 05.07.1972 அன்று, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர், மாநிலம் தழுவிய பந்த் நடத்திய போது ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை சமாளிக்க காவல் துறையினர் பல்வேறு இடங்களில் துப்பாக்கி சூடு நடத்தியதில், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் எட்டு பேரும், கோயம்புத்தூர் மாவட்டம், அய்யம்பாளையத்தில் இரண்டு பேரும், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் ஒருவரும், இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர், அழகாபுரி, மானாமதுரை ஆகிய இடங்களில் மூன்று பேரும் என மொத்தம் ஒரே நாளில் 14 விவசாயிகள் உயிரிழந்தனர்.

* 16.09.1989 அன்று, தற்போதைய தேனி மாவட்டம், தேவாரத்தில், இருசமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதலின் போது, அவர்களை கலைக்க காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஆறு பேர் உயிரிழந்தனர். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி மரியாதைக்குரிய திரு. பாஸ்கரா தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது.

விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது கண்துடைப்பு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். அப்படியென்றால், இந்த விசாரணைக் கமிஷன் கண்துடைப்பிற்காக அமைக்கப்பட்டதா என்று தான் கேட்கின்றேன். ஏனென்றால், 1989இல் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதியை தான் விசாரணைக் கமிஷன் அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள்.

* 17.09.1989 அன்று, தற்போதைய தேனி மாவட்டம், கண்டமனூரில், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை, காவல் துறையினர் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருந்த போது, அச்சமுதாயத்தினர் காவல் நிலையத்தை தாக்கி வன்முறையில் ஈடுபட்ட போது, அவர்களை கலைந்து போக செய்ய, காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. பாஸ்கரா தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அப்பொழுதும், இந்த துப்பாக்கிச் சூட்டை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைத் தான் நியமித்திருக்கிறார்கள், தி.மு.க. ஆட்சியில். 07.05.1997 அன்று, விருதுநகர் மாவட்டம், சிவகாசியில், அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஒரு தலைவரின் பெயர் வைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வன்முறையில் ஈடுபட்ட போது, காவல்துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் மூன்று பேர் உயிரிழந்ததுடன், இரண்டு பேர் காயமடைந்தனர். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. தன்ராஜ் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. ஆகவே, இந்த துப்பாக்கிச் சூடு எல்லாம் ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதியைத் தான் நியமித்திருக்கிறார்கள். அதுதான் நாங்களும் நியமித்திருக்கிறோம்.

✶ 30.11.1997 அன்று, கோவை நகர், உக்கடத்தில், இரு மதத்தினர் இடையே நடைபெற்ற மோதலைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஆறு நபர்கள் உயிரிழந்ததுடன், 10 நபர்கள் காயமடைந்தனர். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. கோகுலகிருஷ்ணன் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது.

11.07.1998 அன்று, சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டையில், இருதரப்பினரிடையே ஏற்பட்ட வன்முறையை ஒடுக்க காவல் துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் இரண்டு பேர் உயிரிழந்ததுடன், ஏழு பேர் காயமடைந்தனர். இது குறித்து வருவாய் கோட்ட ஆட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இதை ஓய்வு பெற்ற நீதிபதி கூட விசாரிக்கவில்லை. அங்கு இருக்கின்ற ஆர்.டி.ஓ.–யை விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் அவர்களுடைய ஆட்சியில். துப்பாக்கிச் சூட்டில், இறந்தவர்களைப் பற்றி விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட கமிஷனுக்கு, ஆர்.டி.ஓ.யை

விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் தி.மு.க. ஆட்சியில்.

- ✶ 03.10.1998 அன்று, ராமநாதபுரம் மாவட்டம், திருப்புலானியில், இருசமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதலை கட்டுப்படுத்த காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தியதில் இரண்டு பேரும், மறுநாள் 04.10.1998 அன்று சூரங்கோட்டை பகுதியில் ஏற்பட்ட மோதலை தவிர்க்க காவல் துறையினர் துப்பாக்கி சூடு நடத்தியதில் மூன்று பேரும் உயிரிழந்ததுடன், ஆறு பேர் காயமடைந்தனர். இது குறித்து வருவாய் கோட்ட ஆட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

04.01.1999 அன்று, திருவாரூர் மாவட்டம், தேவாம்பாள்பட்டிணம் கிராமத்தில் நிலத்தை தோண்டும் போது கிடைத்த சாமி சிலைகளை வருவாய் துறையினர் கைப்பற்றி எடுத்து சென்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கிராமத்தினர் வன்முறையில் ஈடுபட்ட போது, காவல் துறையினர் நடத்திய துப்பாக்கி சூடு சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர். இது குறித்து வருவாய் கோட்ட ஆட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இந்த இறப்பிற்கும் துப்பாக்கிச் சூட்டில் இறந்த அவர்களை விசாரிப்பதற்கும், அங்கு இருக்கக்கூடிய கோட்டாட்சித் தலைவர் விசாரணை மேற்கொண்டார் தி.மு.க. ஆட்சியில். 23.07.1999 அன்று, திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு திருநெல்வேலி மாநகரில் நடத்திய பேரணியின் போது வன்முறையில் ஈடுபட்டதால், காவல் துறையினர் நடத்திய தடியடியில் சிதறி ஓடி தப்பிக்க முயன்ற தொழிலாளர்கள், தாமிரபரணி ஆற்றில் குதித்ததில் 17 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. மோகன் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. ஆகவே, இது எல்லாம் ஓய்வு பெற்ற நீதியரசரை வைத்துத்தான் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

17.11.1999 அன்று, சென்னை, மத்திய சிறையில், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சிறைவாசி ஒருவர் இறந்து போனதையடுத்து, சிறைவாசிகள் சிலர் துணை ஜெயிலரை எரித்து கொன்ற சம்பவத்தின் போது, வன்முறையைக் கட்டுப்படுத்த காவல் மற்றும் சிறைத் துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில், 10 சிறைவாசிகள் உயிரிழந்தனர். 93 சிறைவாசிகள் காயமடைந்தனர். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு டேவிட் கிரிஸ்டியன் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அதற்கும் ஓய்வு பெற்ற நீதிபதியைத் தான் விசாரணை கமிஷன் அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள்.

09.03.2008 அன்று, விழுப்புரம் மாவட்டம், எறையூர் கிராமத்தில் இரு வகுப்பினர் இடையே மோதல் ஏற்பட்ட போது, காவல் துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இது குறித்து வருவாய் கோட்ட ஆட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. கோட்டாட்சியர் தான் இதற்கு விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார், தி.மு.க. ஆட்சியில். 04.11.2008 அன்று, மதுரை மாவட்டம், உத்தபுரம் கிராமத்தில் இரு வேறு சமூகத்தினர் குடியிருந்து வரும் பகுதிக்களுக்கிடையே அமைக்கப்பட்ட பிரச்சினைக்கு உரிய சுவர் ஒன்றை அகற்றக்கோரி, அவர்களிடையே ஏற்பட்ட மோதலை கட்டுப்படுத்த காவல்துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இது குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு திருப்பதி தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. இதில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி தான் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

- ✶ தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரணை ஆணையம் அமைத்தது பற்றி மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் “இது வெறும் கண்துடைப்பு நாடகம்”, என்ற குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

அவர் பேசும்பொழுது, இந்த விசாரணைக் கமிஷன் கண்துடைப்பு நாடகம் என்று சொல்கின்றார். ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியில் துப்பாக்கிச் சூடு சம்பவத்தைப் பற்றி விரிவாகத் தெரிவித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் யார் விசாரணை கமிஷன் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்கள் என்ற பட்டியலின் முழு விவரத்தை தெரிவித்திருக்கின்றேன். அப்படியென்றால், கண்துடைப்புக்குத்தான் அந்த விசாரணைக் கமிஷன் அமைத்தார்களா தி.மு.க. ஆட்சியில் ? ஆகவே, இறந்தவர்களை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை உண்மையிலேயே வேதனையோடு இந்த நேரத்தில் நினைத்துக் கொள்கிறேன். நான் அதை நியாயப்படுத்தவில்லை, அதற்கு உண்மையான தீர்வு கிடைக்கவேண்டும், நீதி கிடைக்க வேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய அரசினுடைய நோக்கம். ஆனால், இதை ஒரு அரசியல் பிரச்சினையாக திருப்பி, திசை திருப்ப பார்க்கின்றார்கள். இவர்களுடைய ஆட்சி காலத்திலே நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் எல்லாம் விரிவாகச் சொன்னேன். அதற்கு யார், யாரெல்லாம் விசாரணைக் கமிஷனுடைய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள் என்றெல்லாம் சொன்னேன். அதே அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், இன்றைக்கு ஒரு தூய்மையான ஒரு நேர்மையான, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரை விசாரணை கமிஷன் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அப்படியென்றால் தி.மு.க. ஆட்சிக்காலங்களில் ஓய்வுபெற்ற நீதிபதிகள் தலைமையிலும், வருவாய் கோட்ட ஆட்சியர் தலைமையிலும் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதும் வெறும் கண் துடைப்புதானா ?

தற்போதைய தமிழ்நாடு அரசு, இது போன்ற சம்பவங்களுக்காக விசாரணை ஆணையம் அமைத்தால், அது உண்மையை மறைப்பதற்கு என்றும், கண்துடைப்பு நாடகம் என்றும், குற்றவாளிகளை காப்பாற்றுவதற்கு என்றும் குறை கூறுவது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தான் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் ஆட்சியில் இருந்தால் ஒரு நியாயம்,

இல்லாவிட்டால் ஒரு நியாயம் என்பதே அவர்கள் கொள்கையாக இருந்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இன்னும் ஒன்று சொன்னார், ஏன் முதலமைச்சர் பாதிக்கப்பட்ட இடத்திற்கு போகவில்லை என்று சொன்னார். அங்கே நிலைமை இயல்புக்கு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் செயல்பட தொடங்கிவிட்டோம். 27ஆம் தேதியே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் நேரடியாகச் சென்று அங்கே பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையெல்லாம் ஆறுதல் கூறிவிட்டு, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலே வந்து, நிலைமையை ஆய்வு செய்து எங்களிடம் நிலைமையை தெரிவித்தார். மாண்புமிகு தமிழகத்தின் துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களும், மற்றும் அமைச்சர் பெருமக்களும் தூத்துக்குடிக்குச் சென்று, அங்கே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற நபர்களையெல்லாம் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்படும் என்று உறுதியளித்தனர். அதுமட்டுமல்லாமல், அங்கே மருத்துவம் செய்ய விரும்பினால் அங்கேயே மருத்துவம் பெற்றுக் கொள்ளலாம், இல்லாவிட்டால் அவர்கள் எங்கு விரும்புகிறார்களோ, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற விரும்பினால்கூட, அந்த மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அனைத்து வசதியும் செய்து கொடுக்கப்படும் என்ற உறுதியும் அளித்திருக்கிறோம்.

23.07.1999 அன்று அடுத்த நாளே, இந்த சம்பவம் திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்த சம்பவம். மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு ஊர்வலமாக செல்கின்றார்கள். அந்த ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்முறையால் காவல் துறையினர் தடியடி பிரயோகம் செய்தபொழுது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தாமிரபரணி ஆற்றிலே அதிலே குதிக்கின்றார்கள், அப்பொழுது இறந்தார்கள். இறந்தவுடனேயே அடுத்த நாளே அப்போது இருந்த

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் 23.07.1999 அன்று, அடுத்தநாளே, திருநெல்வேலி மாவட்டத்தில், மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் 17 பேர் உயிரிழந்திருந்த சமயத்தில் அதைப்பற்றி கவலைப்படாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி அவர்கள் 25.07.1999 அன்று திருவாரூர் சென்று, அங்கு முத்துவேலர்–அஞ்சுகத்தம்மாள் அரங்கில் நடைபெற்ற பவள விழா மற்றும் பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்தான் அன்றைய முதலமைச்சர் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இது 12.03.1969 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு மு. கருணாநிதி சட்டப்பேரவையில் துப்பாக்கி சூடு பற்றி பேசியது.

“துப்பாக்கி பிரயோகத்தைப் பொறுத்தவரையில் ‘ஷுட் டு கில்’ (shoot to kill) என்ற கொள்கை தான் கடைபிடிக்கப்படுகிறது. சுடுவதற்கு முன் கண்ணீர் புகை, தடியடிப் பிரயோகம் முதலியவைகளை எல்லாம் பயன்படுத்திய பிறகு தான் இது கையாளப்படுகிறது. அப்படிச் சுடும்பொழுது உயிரிழப்பு ஏற்படுமானால் போலீஸ் அதற்கு பொறுப்பல்ல. இப்படிப்பட்ட நேரத்தில் சிலர் உயிரிழந்தால் அதற்கு போலீஸ் பொறுப்பாளி அல்ல”.

நாங்கள் சொல்லவில்லை, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் அவர்கள் தான் சட்டமன்றத்திலே இதை தெரிவித்திருக்கிறார். இன்றைக்கு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் பேசுகின்ற போது கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தினார். அதை சட்டமன்றப் பேரவைத் தலைவர் நீக்கினார். ஆகவே, 1969இல் அவையிலே தெரிவித்த கருத்தை மறுப்பாரா அல்லது ஆமோதிப்பாரா என்று சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

“கலவரங்களை அடக்குகின்ற சூழ்நிலையிலேயே, துப்பாக்கி பிரயோகம் தடுக்க முடியாமல் ஆகிவிட்டன” என 25.05.1998

அன்று முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சட்டப்பேரவையில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை கையாளும் போது, காவல் துறையினர் துப்பாக்கி பிரயோகம் செய்து உயிரிழப்பு ஏற்படும் சம்பவங்களின் போது, அந்நிகழ்வுகள் குறித்து விசாரிக்க, உச்சநீதிமன்றம் சில வழிக்காட்டு முறைகளை கூறியுள்ளது. அதன்படியே, இது போன்ற சம்பவங்களின் போது விசாரணை ஆணையம் அமைத்து, சம்பவம் நடைபெற்றதன் காரணங்கள், அது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைள், சம்பவங்களில் காவல் துறையினர் வரம்பு மீறியதாக தெரியவந்தால் அவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்க கோரப்படுகிறது. அவ்வறிக்கையின் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. அதன்படியே, தற்போது தூத்துக்குடியில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை இந்த அரசு அமைத்துள்ளது. விசாரணை முடித்து, ஆணையம் அளிக்கும் அறிக்கையின் மீது தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது, பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படுவது போன்ற பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு காலக்கட்டத்திலும், அவ்வாலையை மூடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசு தான். இதுவரை இரண்டு முறை ஆலை இயக்கம் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் மூடப்பட்டது. இதிலிருந்து மக்களின் மீது உண்மையிலேயே அக்கறை கொண்டுள்ள அரசு அ.தி.மு.க. அரசு தான் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஸ்ரீ வைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் 28.05.2018 அன்று, தூத்துக்குடியில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களை சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, நிவாரண நிதி உதவியை வழங்கினார்கள். மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். இத்துடன், அப்பகுதி மக்களையும் நேரில் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு போராட்டக் குழுவினர் 28.05.2018 அன்று, தலைமைச் செயலகத்தில் என்னையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மூத்த அமைச்சர்களையும், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளையும் சந்தித்து, ஆலையை நிரந்தரமாக மூட அரசாணை பிறப்பிக்குமாறு வைத்த கோரிக்கையும், தூத்துக்குடி மக்களின் கோரிக்கைகளும், அவர்களின் உணர்வையும், தமிழ்நாடு அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற தாரக மந்திரத்தோடு செயல்பட்டு வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியிலேயே மாண்புமிகு அம்மாவின் அரசும், மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருவதனால், பொதுமக்களின் உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பு அளித்து, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட முடிவெடுத்து, அதற்கான அரசாணைகளை 28.05.2018 அன்று வெளியிட்டுள்ளது. அதன்பேரில், மாவட்டச் ஆட்சித் தலைவர் முன்னிலையில், ஸ்டெர்லைட் ஆலைக்கு சீல் வைக்கப்பட்டு ஆலை மூடப்பட்டது. தூத்துக்குடி பொதுமக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களது கோரிக்கையை ஏற்று,

மாண்புமிகு அம்மாவின் அரசு ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடியுள்ளது என்று இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சில கட்சித்தலைவர்களும், எதிர்க்கட்சி சேர்ந்த தலைவர் மரியாதைக்குரிய திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும் சொன்னார்கள். வெறும் கண்துடைப்பு, ஆகவே இந்த உத்தரவு எல்லாம் செல்லாது என்று சொன்னார்கள். அதை எல்லாம் ஒன்றும் கிடையாது. தெளிவாக இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1974ஆம் ஆண்டு நீர், மாசு தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 18(1)B பிரிவின்படி, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஆலைக்கு ஏதேனும் உத்தரவு Directions பிறப்பித்திருந்து, அதன்பிறகு தமிழ்நாடு அரசு அதிலிருந்து மாறுபட்ட வேறு ஏதேனும் உத்தரவு வெளியிட்டால் தான், தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. ஆனால், இன்றைய தேதி மத்திய மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் ஸ்டெர்லைட் ஆலைக்கு உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. இந்நிலையில், தமிழ்நாடு அரசு ஆலையினை நிரந்தமாக மூடுவதற்கு வெளியிட்ட அரசாணை, சட்டப்படி செல்லும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதை எல்லாம் தெளிவாக, ஏற்கெனவே சட்டத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த அரசாணை வெளியிடுவதற்கு முன்பாக, மூத்த வழக்கறிஞர்களுடன் கலந்து ஆலோசித்து, சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து தான், இந்த அரசாணையே வெளியிடப்பட்டு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சொன்னார், சரியான நடவக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள், நான் எவ்வளவு தூரம் கிட்டத்தட்ட 48 பக்கம் புள்ளி விவரமாக எப்படி எப்படி எல்லாம் ஆலை துவங்கப்பட்டது, என்னென்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டது, என்ற விவரங்கள் அனைத்தும் சொல்லி இருக்கின்றேன். எனவே, அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைவிற்கு முன்பாகவே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோதே,

அங்கிருக்கின்ற மக்களுடைய கோரிக்கை வந்தவுடனேயே, 2013 அன்றே இந்த ஆலையை மூட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். ஆனால் நீதிமன்றத்தின் மூலமாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் மூலமாக அவர்கள் அந்த உத்தரவை பெற்று ஆலையை நடத்தி வந்தார்கள். இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ன நினைத்தார்களோ, அதை நடைமுறைப்படுத்துகின்ற விதமாகவும், அங்கே இருக்கின்ற பொதுமக்களின் உணர்வை மதித்தும், அங்கிருக்கின்ற மக்களின் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு அம்மாவுடைய அரசு நிரந்தரமாக மூடி ஒரு தீர்வு கண்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள் 99 நாட்களாக எங்கே போய்விட்டீர்கள் என்று, 99 நாட்கள் அல்ல 22 ஆண்டு காலமாக இந்த போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைய தினம் தான் அது வெளியே வந்திருக்கிறது. ஏன் என்றால், இன்றைக்கு அம்மாவுடைய அரசு தான் எல்லாவற்றிற்கும் தீர்வு காணக் கூடிய அரசு என்பதால், இன்றைக்கு வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1996லிருந்து 2001 வரைக்கும், அதேபோல 2016 முதல் 2011 வரைக்கும் பத்து ஆண்டுகாலம் இருந்தார்கள். ஏன் அந்த ஆலையை மூடவில்லை ? ஆகவே, அங்கே இருக்கின்ற பொதுமக்கள் ஸ்டெர்லைட் ஆலையின் மூலமாக வெளியிடும் வாயு மூலமாக கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று வழக்கு தொடர்ந்து, வழக்கும் நடைபெற்று கொண்டிருக்கிறது. அவருக்கு எல்லாமே தெரியும். தெரிந்தும் பத்தாண்டு காலமாக மூடவில்லை. ஆகவே, இன்றைய தினம், மக்களிடம் நாடகம் ஆடிக் கொண்டு இருக்கிறார்கள். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்துவிட்டதாகவும், இவர்கள் தான் அந்த ஆலையை மூடுவதற்கு சாதகமாக இருப்பதை போலவும் ஒரு தோற்றத்தை அளிப்பதற்காக, தான் ஒரு நிரபராதி என்று நிரூபித்து கொள்வதற்காக இன்றைக்கு சட்டப்பேரவையை

புறக்கணித்திருக்கிறார்கள். இது எல்லாம் வேஷம், ஒரு நாடகம். உண்மை நிலை மக்களுக்கு தெரியும். பத்தாண்டு காலம் ஏன் மூடவில்லை? அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, விரிவுபடுத்துவதற்கும் இவருடைய ஆட்சியிலே தான் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, 1996இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இந்த ஸ்டெர்லைட் ஆலை துவக்கப்பட்டு இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. மேலும், இரண்டாவது யூனிட்டுக்கு விரிவுபடுத்துவதற்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி என்றால், யார் மக்களுக்கு நன்மை செய்தார்கள்? யார் தீமை செய்கிறார்கள்? என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, நீதிமன்றத்திலே சொன்ன அந்த வாசகத்தை எல்லாம் படித்து காட்டினேன், இன்றைக்கு அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், மக்களுடைய நலன் தான் முக்கியம், மக்களுடைய நலனில் முழுவதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஸ்டெர்லைட் ஆலை இரண்டாவது யூனிட் விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்ட நிலம், சிப்காட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிலம், ரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம், தூத்துக்குடி சம்பவம், வருந்தத்தக்க சம்பவம், வேதனை அளிக்கக்கூடிய சம்பவம், அந்த சம்பவம் குறித்து நீதி விசாரணை உரிய முறையிலே விசாரிக்கப்பட்டு, யார் தவறு செய்திருந்தாலும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இங்கே காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் அன்றையதினம் அமர்ந்திருந்தார்கள். நாங்கள் எந்த தவறான கருத்தையும் சொல்லவில்லை. நடைபெற்ற சம்பவங்களை தெளிவாக சொன்னோம். அந்த ஆலை என்றைக்கு துவங்கப்பட்டது, என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதற்கு எந்த ஆட்சியில், யார் யார் என்னென்ன அனுமதி கொடுத்தார்கள் என்பதை பற்றியெல்லாம் விளக்கமாக, தெளிவாக ஒரு மணிநேரத்திற்கும் மேலாக நான் விளக்கி இந்த அவையிலே குறிப்பிட்டேன். மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இங்கே தான் இருந்தீர்கள். அன்றைக்கு எந்தவித தவறான கருத்தையும் நாங்கள் சொல்லவில்லை. நடைபெற்ற சம்பவங்களைத்தான் சொன்னேன். ஆகவே, எந்த ஒரு குறைபாடும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. இது தனிப்பட்ட ஆலை சம்பந்தமானது. ஆகவே, நாங்கள் எல்லாம் அரசு வழக்கறிஞர்களை வரவழைத்து, சட்ட வல்லுநர்கள், மூத்த அமைச்சர்களோடு கலந்து பேசி தான், இதற்கு அரசாணை வெளியிடப்பட்டு இருக்கின்றது. ஆகவே, 1974ஆம் ஆண்டு நீர், மாசு தடுப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 88 (1) (B) பிரிவின்படி, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஆலைக்கு ஏதேனும் உத்தரவு Directions பிறப்பித்திருந்து, அதன்பிறகு தமிழ்நாடு அரசு அதிலிருந்து மாறுபட்டு வேறு ஏதேனும் உத்தரவு வெளியிட்டால் தான் தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல.



ஆனால், இன்றைய தேதியில், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஸ்டெர்லைட் ஆலைக்கு உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. இந்நிலையில், தமிழ்நாடு அரசு ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு வெளியிட்ட அரசாணை மேற்படி சட்டப்படி செல்லும் என்பதை தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்த மாவட்ட மக்களுடைய உணர்வுகளையும் கருத்துக்களையும் மதித்து, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், பல்வேறு போராட்டங்களை அங்கே நடத்தப்பட்டு இருக்கின்றது. அதையெல்லாம் சுட்டிக்காட்டி, இன்றைய தினம் இந்த ஆலை நிரந்தரமாக மூடப்பட்டு இருக்கிறது. இதுவரை இந்த ஆலைக்கு சீல் வைத்தது கிடையாது. இப்போது தான் சீலே வைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஒரு கருத்தை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். நான் அன்றைக்கு சொல்லவில்லை. சொல்லக்கூடாது என்றுதான் இருந்தேன். என்னை சொல்ல வைக்கிறார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு கருத்தை சொன்னார். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் மூடுவதாக இருந்ததாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் கால நீட்டிப்பு செய்ததாகவும், அதற்கு அவர்கள் அந்த ஆலை உரிமையாளர்களுக்கு ஆதரவாக இருப்பதாகவும் ஒரு கருத்தை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவர் 2010 மே 3ஆம் தேதி அவர் தொழில்துறை அமைச்சராக இருந்த போது, பதிலுரையில் குறிப்பிட்ட வாசகத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நிறைய பேசியிருக்கிறார், அதனை இங்கே குறிப்பிடுகிறேன்:

“டயஸ் என்ற டயர் நிறுவனம் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்கே அமைக்கப்பட்டு இருக்கிறது. அது செயல்படத் தொடங்கும். கடந்த 2009 அன்று நெல்லைக்கு தான் சென்றிருந்த போது தான் தொழிற்சாலையை பார்வையிட வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இதுதவிர, சிப்காட் மூலமாக திண்டுக்கல் மாவட்டத்தில், நிலக்கோட்டை, சிவகங்கை மாவட்டத்திலே, மானாமதுரை மற்றும் தூத்துக்குடியிலே தொழிற்சாலை வளாகங்களை தற்போது நிறுவப்பட்டு அவை செயல்படுத்தப்படுகின்றன. அடுத்தது, மதுரை, திருமங்கலத்திலும், தூத்துக்குடி, ஒட்டப்பிடாரத்திலும் சிப்காட் புதிய தொழிற்சாலை வளாகங்களை அமைத்து வருகின்றோம். தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் நிறுவனம் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்க திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறது.''

நான் பேசவில்லை. அவர் தொழில்துறை அமைச்சராக இருந்தபோதே, விரிவாக்கத்திற்கு இவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அவர் பதிலுரையிலே தெரிவித்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, இந்த ஆலை விரிவாக்கத்திற்கு அவர் தொழில்துறை அமைச்சராக இருந்த போது, சுமார் 230 ஏக்கர் நிலத்தையும் வழங்கி இருக்கின்றார். அதாவது, இரண்டாவது யூனிட் ஆலை விரிவாக்கத்திற்கு 230 ஏக்கர் இவரே கொடுத்திருக்கிறார். இவர் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது, அந்த சிப்காட் நிறுவனத்திலிருந்து 230 ஏக்கர் கொடுத்தாரா இல்லையா ? அப்படி இருக்கும்போது, ஆலைக்கு Support செய்தது யார்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையை சொல்கின்றேன், அவர் பேசியதை தான் சொல்கின்றேன். நான் ஒன்றும் மாறுபட்ட கருத்தை, இட்டுகட்டி நான் சொல்லவில்லை. அவர் தொழில்துறை அமைச்சராக இருந்த போது, இப்படி பதிலுரையிலே குறிப்பிட்டதை தான் நான் இங்கே சொல்கின்றேன்.

ஆகவே, யார் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு ஆதரவாக

செயல்பட்டார்கள் என்பது மக்களுக்கு இந்த அரசு வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் என்ன பேசினாலும், மக்களை ஏமாற்ற முடியாது. தகவல் உரிமைச் சட்டம் வந்துவிட்டது. ஆகவே, நீங்கள் பேசினாலும், பேசாவிட்டாலும், மக்கள் தகவல் உரிமைச் சட்டத்தின் மூலமாக தகவல் பெற்று உண்மையை ஏற்கெனவே தெரிந்திருக்கின்றார்கள். ஆகவே, மக்களுக்கு தெரிந்த உண்மையை தான், நான் இந்த அவையிலே சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இதை தாராளமாக பெற்றிருக்கலாம். ஏன் என்றால், அவர் பேசிய பேச்சுக்களை எல்லாமே தகவல் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது.

ஆகவே, உண்மை இவ்வாறு இருக்க, இவர்கள் செய்த தவறை எல்லாம், மறைப்பதற்காக, தாங்கள் நிரபராதி என்று நிரூபிப்பதற்காக, நேற்று ஒரு கூட்டத்தை போட்டு பேசியிருக்கிறார்கள். இது என்னவென்று எனக்கு தெரியவில்லை. இங்கு சட்டமன்றம் நடக்கிறது. இதில் யாரும் வெளியே போக சொல்லவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு பயம், உண்மை வெளியே வந்துவிட்டால், மக்களுக்கு தெரிந்துவிடும். ஆக, அவர்கள் ஆட்சி காலத்திலே, என்னென்ன அறிவிப்புகளை கொடுத்தார்கள், என்னென்ன அனுமதி கொடுத்தார்கள், என்பதை தான் நேற்று விளக்கமாக தெரிவித்தேன். அதில் ஏதாவது இட்டுக்கட்டியோ அல்லது கூடுதலாக எதையும் சொல்லவே இல்லை.

இதை எல்லாம் சொல்லக்கூடாது என்றுதான் இருந்தேன். ஆனால் சொல்ல வைத்துவிட்டீர்கள். நேற்று நீங்கள் பேசியதால், இதையும் நான் சொல்லிதான் ஆக வேண்டிய நிலைக்கு

எங்களை தள்ளிவீட்டீர்கள். ஆகவே, அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், நிரந்தரமாக அந்த ஆலையை மூடுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இல்லை, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலத்திலேயே, மக்கள் கோரிக்கை வைத்தார்கள். அப்போது 2013ஆம் ஆண்டு, இந்த ஆலை மூடுவதற்கான நடவடிக்கையை அம்மாவுடைய அரசால் துவக்கப்பட்டுவிட்டது. எனவே, சில பிரச்சினையின் காரணமாக, நீதிமன்றத்திலே சில உத்தரவுகளை பெற்ற காரணத்தினாலே, சட்டத்தின் வாயிலாக அவர்கள் தப்பித்து கொண்டு, அந்த ஆலையை இயக்கிக் கொண்டு இருந்தார்கள். நான் ஏற்கெனவே விளக்கமாக தெளிவாக எல்லாமே இந்த அவையிலே தெரிவித்திருக்கின்றேன். இன்றைக்கு அம்மாவுடைய அரசு படிப்படியாக நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

மாசு கட்டுப்பாடு வாரியம் புதுப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தது, அதை 09.04.2018 அன்று ரத்து செய்து, 14.04.2018 அன்று மாவட்ட மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பத்திரிகையின் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது. தெளிவாக குறிப்பிடப்பட்டது. ஆலை மேலும் இயங்கக்கூடாது, மாசு கட்டுப்பாடு வாரியம் அதற்கு ரத்து செய்து விட்டது என்ற தகவலை அந்த மாவட்ட மக்களுக்கே தெரிவிக்கப்பட்டது. அப்பொழுதே அந்த ஆலையை இயக்க முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது. அதற்கு பிறகு, சில நேரங்களிலே, மாசு கட்டுப்பாடு வாரியத்தை அந்த ஆலை மதிப்பதில்லை. நாம் என்னதான் உத்தரவு போட்டாலும், அவர்கள்

இயக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆகவே, மின்துறை சேர்ந்த அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, அதை எல்லாம் சோதனை செய்து, மாசு கட்டுப்பாடு துறை அதிகாரிகளும் சோதனைகளை மேற்கொள்ள முற்பட்டபோது, சில தகவல் கிடைத்த அடிப்படையிலே, மே 18ஆம் தேதி அங்கே போய் ஆய்வு செய்தார்கள். அதன் அடிப்படையிலே தான், மே 23ஆம் தேதி அந்த மின்சாரத்தை துண்டித்தோம். ஆக, அம்மாவுடைய அரசு, நிரந்தரமாக ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலேயும், சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வழிமுறைகளை எல்லாம் பின்பற்றி இந்த நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடுவதற்கு சூழ்நிலையை உருவாக்கி, அதற்கு சீலும் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை தெளிவாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

வனத்துறை தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்துறை சம்பந்தமாக ஆய்வுக் கூட்டம் நடந்தபோது பல்வேறு பிரச்சினைகள் குறித்து அங்கே ஆய்வு செய்யப்பட்டது. அதிலே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், வனத்துறையைச் சேர்ந்த செயலாளர், அதிகாரிகள், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் அனைவரும் கலந்துகொண்டனர். அதிலே 20 மாவட்டங்களிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் நிலவிக் கொண்டிருக்கின்றது, மலைகளில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள், அவர்களுக்குத் தேவையான பாதை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி, அதேபோல தெருவிளக்கு வசதி, அவர்களுக்கு தேவையான குடியிருப்பு வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று 20 மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்காக, வருவாய்த் துறை, வனத்துறை, உள்ளாட்சித் துறை போன்ற துறைகள் எல்லாம் இணைந்து, மாவட்ட அளவில் ஒரு ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையை பெற்று, எந்தெந்த மாவட்டத்திலே, எந்தெந்த மலைப்பகுதியிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றது என்றெல்லாம் ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து, அந்த ஆய்வறிக்கையின் அடிப்படையிலே, அந்தந்த மலைப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எவ்வாறு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது, அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த அறிக்கைகள் எல்லாம் கிடைக்கப்பெற்ற பிறகு, பல ஆண்டுகாலமாக

இருந்துவரும் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். எந்தெந்த மலைப்பிரதேச பகுதிகளுக்கு, மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும் என்பதெல்லாம் கண்டறியப்பட்டு, அது உரிய முறையிலே மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, மலை கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க, அம்மாவினுடைய அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முயற்சி செய்யும் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவை நடவடிக்கையில் கலந்து கொள்வது குறித்த கேள்விக்கு அளித்த விளக்கம். (31.05.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2006ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். அப்பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருமே சட்டமன்றத்திற்கு வராத அளவிற்கு நீக்கப்பட்டார்கள், வெளியேற்றப்பட்டார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மக்களுடைய பிரச்சினை சட்டமன்றத்தில்தான் எடுத்து வைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எப்படி செயல்பட வேண்டுமென்ற விதத்தை, 2006ஆம் ஆண்டு தன்னந்தனியாக இந்த அவையிலே அமர்ந்து 1 மணி நேரத்திற்கு மேலாக உரையாற்றினார்கள். அவர் உரையாற்றுகையில் கிட்டத்தட்ட எனக்கு தெரிந்தவரை, 67 முறை குறுக்கிட்டார்கள். பல்வேறு அமைச்சர்களும் அதிலே குறிக்கிட்டுப் பேசினார்கள். அத்தனை பேருக்கும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சரியான பதிலை கொடுத்தார்கள்.

ஆகவே, ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இருந்தவர்கள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதேபோல, ஆளுகின்றவர்களாக வருகின்றபோதும், அதற்கு உதாரணமாக இருந்தவர்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை பின்பற்றிதான் அம்மா அவர்களின் அரசும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அன்றையதினம் நடந்த நிகழ்வு உங்கள் அனைவருக்குமே தெரியும். யாரும், சட்டப்பேரவைத் தலைவரால் வெளியேற்றப் படவில்லை, அவர்களாகவே வெளியேறினார்கள். ஆக, அவர்கள் திரும்பி வந்து, ஜனநாயக கடமையாற்றுவதற்கு, எவ்வித தடையும் கிடையாது. இங்கே காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் இருந்தீர்கள், நீங்கள் பேசினீர்கள், வெளியேறினீர்கள், மீண்டும் ஜனநாயக முறைப்படி உங்களுடைய பணியை ஆற்றுவதற்கு வந்திருக்கிறீர்கள். அவர்கள் வெளியேறினார்கள், அவர்கள் வந்தால், இந்த அவையிலே கலந்துகொண்டால் யாரும் தடுப்பது கிடையாது. அது அவர்களுடைய விருப்பம்தான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும், மக்களுக்குப் பணியாற்றுகின்ற அரசாகத்தான் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பதிய வைக்க விரும்புகின்றேன்.

29ஆம் தேதி அன்றே நான் தெளிவாக, தெள்ளத் தெளிவாக, விளக்கமாக குறிப்பிட்டேன். இந்த ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடவேண்டுமென்ற எண்ணத்தில் அம்மாவினுடைய அரசு செயல்படுகின்றது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும், எவ்வித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. மக்களுக்கு நல்லது செய்யவேண்டும், எந்தெந்த வகையிலே நல்லது செய்யவேண்டுமென்பதை அறிந்துதான் அம்மாவினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே தங்கள் வாயிலாக மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்க உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 04.06.2018 அன்று சட்டமன்றப் பேரவையில், காவேரி நதிநீர் பிரச்சினையில் 18.05.2018 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த சாதகமான அம்சங்கள் பற்றி அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

உச்சநீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட திறமையான வாதத்தினால், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட அயராத, உறுதியான சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும், அவர்களது வழியில் செயல்படும் அம்மா அரசின் சட்டப் போராட்டத்திற்கும், தமிழ்நாடு விவசாய பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும்.

உச்சநீதிமன்றம், தனது 18.05.2018 தேதியிட்ட ஆணையில், காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை, மத்திய அரசு, இந்த பருவமழை தொடர்வதற்கு முன் அமைக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது. மேலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில், காவேரி மேலாண்மை வாரியத்திற்கு பரிந்துரை செய்யப்பட்ட பணிகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பெரும்பாலும் மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வரைவு திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த வரைவு திட்டத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று, காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைமையிடம் புதுடில்லியிலும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவின் தலைமையிடம் பெங்களூருவிலும் செயல்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் சாசன

அமைப்பின்படி (Entry 17, List II of the Seventh Schedule), அந்தந்த மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரை, அம்மாநிலங்களே பகிர்ந்துகொள்ள அதிகாரம் உள்ளது என்ற கருநாடகா மற்றும் கேரளா மாநிலங்களின் கூற்றை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த உத்தரவினால், தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் மீட்டு எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மூத்த உறுப்பினர், எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பல ஆண்டு காலம் அவையிலே இருந்திருக்கின்றார், பல ஆண்டு காலம் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவர், முழுக்க, முழுக்க அத்தனையுமே தெரியும். ஆகவே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டார். நானும் சிலவற்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

1983	–	தமிழ்நாடு காவேரிநீர் பாசன விவசாய விளை பொருள்கள் நல உரிமை பாதுகாப்பு சங்கம் நடுவர் மன்றம் அமைக்க உச்சநீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்தது. அப்பொழுதுதான் முதன்முதலாக உச்சநீதிமன்றத்திலே இந்த வழக்கு பதியப்பட்டது.
06.07.1986	–	மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த பொழுது, நடுவர்மன்ற அமைக்கக் கோரி மத்திய அரசிற்கு கடிதம் எழுதினார்.
18.11.1986	–	தமிழ்நாடு காவேரிநீர் பாசன விவசாய விளைபொருள்கள் நல உரிமை பாதுகாப்பு சங்கம் தொடுத்த வழக்கில் தமிழ்நாடு அரசும் தன்னை இணைத்துக் கொண்டது. ஏற்கெனவே ஒரு வழக்கு தொடர்ந்தார்கள், அந்த வழக்கிலே பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த

போது, அந்த வழக்கோடு, தமிழ்நாடு அரசும் இணைத்துக் கொண்டது.

04.05.1990 – உச்சநீதிமன்றம், நடுவர்மன்றம் அமைக்க மத்திய அரசிற்கு ஆணையிட்டது.

04.06.1990 – காவேரி நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைத்தது.

25.06.1991 – நடுவர்மன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்தது. இதில், கருநாடகம், தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. அடி நீர், மாதாந்திர / வாராந்திர அடிப்படையில் மேட்டூர் அணையில் வழங்க ஆணை வழங்கப்பட்டது.

25.07.1991 – கருநாடக அரசு, நடுவர்மன்ற இடைக்கால ஆணையை செயலிழக்கும் விதமாக ஒரு அவசர சட்டத்தைப் பிறப்பித்தது.

27.07.1991 – குடியரசுத் தலைவர் கருநாடகத்தின் அவசர சட்டம் குறித்து, உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரினார்.

22.11.1991 – உச்சநீதிமன்றம், கருநாடக அரசின் அவசர சட்டம் செல்லாது எனவும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் எனவும் கருத்துரு வழங்கியது.

10.12.1991 – நடுவர் மன்ற இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

14.05.1992 – நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கான ஒரு அமைப்பினை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி தமிழ்நாடு அரசு ஒரு அசல் வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

ஜூலை 1993	–	நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால், இதனை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 80 மணி நேரம் மெரினா கடற்கரையில் உண்ணா விரதம் மேற்கொண்டார். மத்திய நீர்வளத்துறை அமைச்சரின் உத்திரவாதத்தினை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த உண்ணா விரதத்தை முடித்துக்கொண்டார்கள்.
11.08.1998	–	மத்திய அரசு, இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைத் தலைவராகக் கொண்டும், கருநாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மாநில மாண்புமிகு முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டும், ஒரு காவேரி நதி ஆணையம் அமைத்தது. இந்த ஆணையத்தின் செயலாளர் மத்திய நீர்வள ஆதார அமைச்சகச் செயலாளர் ஆவார். இந்த ஆணையம் தேவைப்படும் போதெல்லாம் கூடி முடிவெடுத்தது. இந்த ஆணையத்தின் கூட்டம் ஏழு முறை நடைபெற்றது. இந்த ஆணையத்திற்கு உதவி செய்வதற்காக மத்திய நீர்வள ஆதார அமைச்சகச் செயலாளர் தலைமையில், கருநாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள், மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், நான்கு மாநிலத்தின் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவேரி கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. மத்திய நீர்வளக் குழுவின் தலைமைப் பொறியாளர், இதன் உறுப்பினர் செயலர் ஆவார். இக்குழு,

குறைந்தபட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறையோ, அல்லது தேவைப்படும்போதெல்லாம் கூட வேண்டும். இக்குழு, 32 முறை கூடியுள்ளது. இவ்வமைப்புகளின் உத்தரவுகளை கருநாடக அரசு மதித்து நடக்கவில்லை.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை, மத்திய அரசிதழில் 19.02.2013 அன்று வெளியிடப்பட்ட பின்னர், மேற்கண்ட அமைப்புகள் செயலாக்கத்தில் இல்லை.

19.09.2001 – காவேரி நதி ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்பு குழு ஆகியன திறம்பட செயல்படாததால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில், கருநாடக அரசு, நடுவர் மன்ற இடைக்கால ஆணையை மதித்து தமிழ்நாட்டிற்குரிய நீரை விடுவிக்க வேண்டும் என்றும், காவேரி நதி ஆணையம் தமிழ்நாட்டிற்கு நீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, அவ்வாணையத்தை திருத்தியமைக்கவோ, மாற்றம் செய்யவோ உரிய உத்தரவை மத்திய அரசிற்கு வழங்க வேண்டும் என கோரி சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

10.07.2002 – 2001இல் தாக்கல் செய்த வழக்கு நிலுவையிலிருக்கும் போது, கருநாடக அரசு 2002ஆம் ஆண்டிற்குரிய நீரை தமிழ்நாட்டிற்கு வழங்காத நிலையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில், மீண்டும் ஒரு சிவில் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில், தமிழ்நாடு அரசு ஒரு வரைவு திட்டத்தையும் உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்காக தாக்கல் செய்தது.

05.02.2007 – நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை பிறப்பித்தது.

19.02.2007 – நடுவர் மன்ற இறுதி ஆணை குறித்து அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில், கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது:
“இந்த சூழ்நிலையில், மேற்படி தீர்ப்பில் உள்ள தமிழகத்திற்குப் பாதகமான விஷயங்கள் குறித்து அதனை நீக்கறவு செய்யவும், மேலும் அதிக நீர் பெறவும் உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டும். மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள அளவு நீரைப் பெறுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.
உச்சநீதிமன்றத்தை அணுகுவதற்கும், மேற்படித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள நீரினைப் பெறுவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இரண்டும் வெவ்வேறு தனிப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.
தமிழக நலன் கருதி மேற்படி நதிநீர் பங்கீடு தீர்ப்பினை உடனடியாக மத்திய அரசு கெஜட்டில் வெளிவரச் செய்து காவேரி மேலாண்மை வாரியம் (Cauvery Management Board) மற்றும் காவேரி நீர் முறைபடுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) ஆகியவற்றை எவ்வித காலதாமதமும் இன்றி நடைமுறைப்படுத்த, மனப்பூர்வமான, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உச்சநீதிமன்றத்தில் மேற்படி தீர்ப்பு குறித்து தமிழகத்திற்குப் பாதகமான விஷயங்களை நீக்கறவு செய்து சாதகங்களைப் பெறுவதற்கு சில ஆண்டுகள் பிடிக்கும். இந்த இடைப்பட்ட காலத்தில்

		மேற்படி நடுவர் மன்றத் தீர்ப்பினை அமல்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்க வேண்டும்" என்று அப்பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது.
ஏப்ரல், மே 2007	–	நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மீது கருநாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளால் உச்ச நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் தொடரப்பட்டன. அந்த நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை இருந்திருக்காது. ஆனாலும், நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினால், மீண்டும் நீதிமன்றத்தை நாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.
07.06.2011	–	தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசினார்கள். அப்போது, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு, முதலாவதாக எடுக்க வேண்டிய நடவடிக்கை, அதனை மத்திய அரசிதழில் வெளியிடச்செய்ய வேண்டும் என்றும், மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டவுடனேயே அது கருநாடக அரசுக்கு ஒரு நிர்பந்தத்தை ஏற்படுத்தும் என்றும் தெளிவாக தெரிவித்தார்கள். அதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு உடனடியாக மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்கள்.
2011 முதல் 2013 வரையில்	–	மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மே 2011இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்கு

செயல்வடிவம் கொடுக்க, மத்திய அரசிதழில் வெளியிட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை பலமுறை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை அளித்தார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு கடிதங்கள் வாயிலாக நடுவர் மன்ற ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். மத்திய அரசால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2013இல் இதை நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலே, மீண்டும் வழக்கு தொடரப்பட்டது.

19.02.2013 – அந்த வழக்கின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், மத்திய அரசு, நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட வேண்டுமென ஆணை பிறப்பித்ததின்படி மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. அம்மா அரசு தொடர் முயற்சி எடுத்ததனால், 05.02.2007 அன்று பிறப்பிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 19.02.2013 அன்று செயலாக்கத்திற்கு வந்தது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

18.03.2013 – இதற்கிடையே, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடும்படி உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவை அம்மாவின் அரசு தாக்கல் செய்தது. அரசிதழில் வெளியிட்ட பிறகு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை மத்திய அரசு அமைக்காமல் காலம்

தாழ்த்தி வந்தது. பலமுறை தெரிவித்தும் அவர்கள் இதை பொருட்படுத்தவில்லை. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களால் மீண்டும் உச்சநீதிமன்றத்திலே காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைக்க வேண்டுமென்று வழக்கு தொடரப்பட்டது

11.11.2013	–	காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால், மீண்டும் ஒரு இடைக்கால மனுவை உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்தது.
05.12.2014 27.03.2015 02.09.2016 ஆகிய தேதிகளில்,	–	காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைப்பதற்கு தமிழ்நாடு சட்டப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டன.
20.09.2016	–	தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் இவ்வமைப்புகளை உடனடியாக அமைக்க ஆணை வேண்டியதன் பேரில் 20.09.2016 அன்று காவேரி மேலாண்மை வாரியத்தை நடுவர் மன்ற இறுதி ஆணையில் பரிந்துரைத்தபடி 4 வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என மத்திய அரசிற்கு ஆணையிட்டது.
30.09.2016	–	உச்சநீதிமன்றம் இதை மீண்டும் உறுதி செய்து 4 நாட்களுக்குள் இவ்வமைப்புகள் அமைக்கப்பட வேண்டுமென ஆணையிட்டது.
03.10.2016	–	மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளை மாற்றியமைக்கும்படி ஒரு மனுவை

உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இம்மனு 04.10.2016 அன்று விசாரணைக்கு வந்தபோது, உச்சநீதிமன்றம் காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதை ஒத்திவைத்து ஆணையிட்டது. இதையெல்லாம் எதற்கு சொல்கிறேனென்றால், எவ்வளவு போராடினோம் என்பதை இந்த அவையிலே தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இன்றைக்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

11.07.2017 முதல் 20.09.2017 வரை	–	சிவில் வழக்குகள் மீது உச்சநீதிமன்றத்தில் இறுதி வாதங்கள் நடைபெற்றன. இந்த இறுதி வாதத்தில் கருநாடக அரசு 9 நாட்கள் வாதிட்டது. கேரள அரசு 2 நாட்கள் வாதிட்டது. தமிழக அரசு 13 நாட்கள் வாதிட்டது, புதுச்சேரி அரசு 1 நாள் வாதிட்டது, மத்திய அரசு 1 நாள் வாதிட்டது. தமிழ்நாடு வாதிடும்போது காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர்முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
16.02.2018	–	சிவில் மேல்முறையீட்டு மனுக்களில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதில் மத்திய அரசு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் அதனை மாற்றி அமைத்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மத்திய அரசு ஒரு செயலாக்கத் திட்டத்தை 6 வார காலத்திற்குள் அமைக்க வேண்டும் என்றும் எக்காரணம் கொண்டும் இந்த கால நீட்டிப்பு வழங்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் தெளிவாக சொன்னார்கள்.

22.02.2018 – எனது தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

அ. தமிழ்நாட்டுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்சநீதிமன்றத்தின் 16.02.2018ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டி வலியுறுத்தப்படும்.

ஆ. உச்சநீதிமன்றத் தீர்ப்பில், தமிழ்நாட்டிற்கு, காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையில் வழங்கிய நீரில், 14.75 டிஎம்சி அடி நீரை குறைத்து கருநாடகத்திற்கு கூடுதலாக வழங்கி உத்தரவிட்டது குறித்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொண்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இ. எனது தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை விரைவில் நேரில் சந்தித்து, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை

உடனடியாக அமைக்கவும் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பிலுள்ள தமிழ்நாட்டிற்கு சாதகமான அம்சங்களை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் வலியுறுத்தப்பட்டது. அன்றைக்கு நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

05.03.2018 – மத்திய அரசு, 16.02.2018 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்பினை நிறைவேற்றுவதற்காக 4 மாநில தலைமைச் செயலாளர்களின் கூட்டத்தை கூட்டியுள்ளதாகத் அறிவித்தது.

07.03.2018 – எனது தலைமையில், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன், மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில், தமிழ்நாடு சார்பில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில், குறிப்பிடப்பட்டுள்ளபடியே அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் அமைக்க வலியுறுத்த வேண்டும் என வழக்கறிஞர்களுடன் கலந்து பேசி தகுந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

09.03.2018 – மத்திய அரசு கூட்டிய கூட்டத்தில் தமிழ்நாடு சார்பில், தலைமைச் செயலாளர் கலந்து கொண்டு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது.

10.03.2018 – உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட “திட்டம்” என்பது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு தான் என்றும், அவ்வாணையில் அனைத்து அதிகாரங்களுடன் இவ்வமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக உள்ள நிலையில், காவேரி மேலாண்மை வாரியத்தை, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதைத் தவிர மத்திய அரசுக்கு வேறு மாற்று வழி இல்லை என பத்திரிகை செய்தி வாயிலாக தமிழ்நாடு அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

15.03.2018 – காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பது குறித்து நான், முன்மொழிந்த பின்வரும் தீர்மானத்தை இம்மாமன்றம் ஏற்றுக் கொண்டு, ஒருமனதாக நிறைவேற்றியது.

“காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று இந்த மாமன்றம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.”

இந்தத் தீர்மானம் 15.03.2018 அன்றே மாண்புமிகு

பாரதப் பிரதமர் அவர்களின் உடனடி நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

29.03.2018 – உச்சநீதிமன்றம் அளித்த காலக்கெடு முடிவுறும் தருவாயில் இருந்த நிலையில், எனது தலைமையில், மூத்த அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு மாநில தலைமை வழக்கறிஞர், தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் விரிவாக விவாதிக்கப்பட்டது. அப்பொழுது, தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் மீது உச்சநீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தாக்கல் செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

31.03.2018 – மத்திய அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது (எண். 898 / 2018)

31.03.2018 – மத்திய அரசு, இவ்விரு அமைப்புகளை ஏற்படுத்த, மேலும் 3 மாத அவகாசம் கோரி மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

02.04.2018 – தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது. 09.04.2018 அன்று விசாரிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

09.04.2018 – இம்மனுக்கள் விசாரணைக்கு வந்த போது 03.05.2018க்குள் மத்திய அரசு அதன் வரைவு திட்டத்தை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

03.05.2018 – ஆனால், மத்திய அரசு திட்டம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. எனவே, திட்டம் அமைப்பது பற்றி மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஒரு பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய

வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு, வழக்குகளின் விசாரணையை 08.05.2018க்கு ஒத்திவைத்தது.

07.05.2018 – அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தது.

08.05.2018 – அன்றும் மத்திய அரசு வரைவு திட்டத்தை தாக்கல் செய்யவில்லை. வரைவுத் திட்டத்தை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஆவதைக் கருத்தில் கொண்டு, மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகச் செயலாளர் 14.05.2018 அன்று ஒரு வரைவுத் திட்டத்துடன் நேரில் ஆஜராக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

14.05.2018 – மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு செயலாளர் உச்ச நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, வரைவு திட்டத்தை அளித்தார். இந்த வரைவுத் திட்டம் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி உள்ளதா என்பது பற்றி அறிந்து கொள்வதற்காக மாநிலங்களுக்கு நகல் வழங்கப்பட்டது. வழக்கு 16.05.2018க்கு தள்ளி வைக்கப்பட்டது.

15.05.2018 – எனது தலைமையில், மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோருடன் வரைவு திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

அதன்படி, வழக்குரைஞர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

16.05.2018 – எனது அறிவுரையின் பேரில், தமிழ்நாடு அரசு சார்பாக வாதாடிய மூத்த வழக்கறிஞர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில், குறிப்பிட்டபடி அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைத்து செயல்படுத்த வேண்டும் என தகுந்த ஆதாரங்களுடன் கடுமையாக வாதிட்டனர். மேலும், காவேரி மேலாண்மை வாரியத்தின் தலைமையிடம் புதுடில்லியில் தான் இருக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், மத்திய அரசு 17.05.2018 அன்று திருத்திய வரைவு திட்டத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

17.05.2018 – நாம் கோரிய, காவேரி மேலாண்மை வாரியம் என்ற பெயருக்கு பதிலாக காவேரி நீர் மேலாண்மை ஆணையம் என்ற பெயருடன் அமைக்க, மத்திய அரசு, ஒரு திருத்திய வரைவு திட்டத்தை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. வழக்கு 18.05.2018க்கு ஒத்திவைக்கப்பட்டது.

18.05.2018 – இந்த வரைவு திட்டத்தினை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. மத்திய அரசு இந்த வரைவு திட்டத்தை மத்திய அரசிதழில் உடனடியாக வெளியிட வேண்டும் என்றும், வரவிருக்கின்ற மழைக் காலத்திற்கு முன்னர் இந்த அமைப்பினை

நடைமுறைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டு, வழக்குகளை முடித்து வைத்தது.

26.05.2018 – காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைபடுத்தும் குழு ஆகிய அமைப்புகளை பருவ மழைக்காலம் துவங்குவதற்கு முன்னர் அமைக்க வேண்டி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் மத்திய நீர்வள ஆதார அமைச்சர் அவர்களுக்கும் என்னால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்ற முழு விவரத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உச்சநீதி மன்றத்திலே எப்படி வாதிட்டது என்பதை முழுமையாக இங்கே தெரிவித்திருக்கின்றேன். அதுமட்டுமல்ல, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உடனடியாக அமைக்கப்படவேண்டும்.தமிழ்நாட்டுமக்களுடையஉணர்வுகளையும், உரிமைகளையும் நிலைநாட்ட வேண்டும். நமக்கு கிடைக்கவேண்டிய பங்கு நீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரு அவைகளினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், தினமும், அவை தொடங்கிய காலத்திலிருந்து, முடிகின்ற காலம் வரை, கிட்டத்தட்ட 22 நாட்கள் தொடர்ந்து நம்முடைய தமிழக விவசாயிகளுக்காகவும், தமிழக மக்களுக்காகவும் குரல் கொடுத்து, அவையை ஒத்தி வைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எந்தளவிற்கு அழுத்தம் கொடுத்தது என்பதை மாமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் தெரிந்துகொள்ள வேண்டும், அதுமட்டுமல்ல, சட்டவல்லுநர்களுடன் திறமையாக வாதிட்டு நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமையை அம்மாவினுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

10:15

சட்டமன்றப் பேரவையில், தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை நிரந்தரமாக மூடுவது தொடர்பான போராட்டத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம். (04.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களை இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே 29ஆம் தேதி சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்த போது, அதை விளக்கமாக, தெளிவாக, இந்த அவையிலே எடுத்து சொன்னேன். ஏற்கெனவே மூன்று உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து, தங்களுடைய சிறப்பு அதிகாரத்தின் பேரிலே, அவர்களும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை எல்லாம், விளக்கமாக தெளிவாக ஒரு மணிநேரத்திற்கு மேலாக அன்றைய தினம், அவையிலே தெரிவித்தேன்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களும், அதனுடைய தலைவர் கூட இங்கே அமர்ந்திருந்தார்கள். எனவே, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்ற விவரங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டது. இப்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்போது நிரந்தரமாக மூடி சீல் வைக்கப்பட்டு விட்டது. ஆலை திறக்க முடியாது. 1974ஆம் ஆண்டு நீர், மாசு தடுப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 18 (1)Bஇன் படி, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஆலைக்கு ஏதேனும் உத்தரவு Directions பிறப்பித்திருந்தால், அதன்பிறகு, தமிழ்நாடு அரசு அதிலிருந்து மாறுபட்டு வேறு ஏதேனும் உத்தரவு வெளியிட்டால் தான், தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. ஆனால் இன்றைய தேதியில், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஸ்டெர்லைட்

ஆலைக்கு உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. இந்நிலையில், தமிழ்நாடு அரசு ஆலையை நிரந்தரமாக மூடுவற்கு வெளியிட்ட அரசாணை, மேற்கண்ட சட்டப்படி செல்லும் என்பதை இந்த அவையின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசாணை வெளியிடுவதற்கு முன்பாக, சட்ட வல்லுநர்கள், அரசு வழக்கறிஞர்கள், மூத்த அமைச்சர்களோடு கலந்து பேசி, இந்த ஆலை நிரந்தரமாக மூட வேண்டும், அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, இந்த உத்தரவு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அந்த ஆலைக்கு என்னென்ன அனுமதி கொடுத்தார்களோ, அந்த அனுமதி எல்லாம் ரத்து செய்யப்பட்டு விட்டது. அதேபோல, மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. பாய்லர் லைசன்ஸ், அதுவும் ரத்து செய்யப்பட்டு விட்டது. விரிவாக்கத்திற்கு தேவையான நிலம் கொடுக்கப்பட்டது. அதுவும் ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே, இன்றைக்கு ஆலை இயங்காத அளவிற்கு அனைத்து வகையிலும் அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றும் பலபேரை காவல்துறை அதிகாரிகள் தேடி வருகிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கின்றேன், விஷமிகள், சமூக விரோதிகள் இவர்களின் புகைப்படங்களை எல்லாம் அன்றைக்கே காட்டினேன். யார் யாரெல்லாம் உருட்டுக்கட்டை வைத்துக் கொண்டு அடித்தார்கள், அதுபோல யார் யாரெல்லாம் பெட்ரோல் குண்டு வைத்து கார்களுக்கு தீ வைத்தார்கள். அந்த புகைப்படங்களும், ஊடகத்தில் வந்துள்ளது. ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும், பொதுமக்கள் தங்களுடைய உரிமைக்கு போராடுவதிலே எந்தவித தடையும் கிடையாது.

அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், பல்லாயிரக்கணக்கான போராட்டம் தமிழகத்திலே நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிக போராட்டம் நடைபெறும் மாநிலம் தமிழ்நாடு தான். அந்த அளவிற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அளவிற்கு உரிமையை நிலைநாட்ட போராடுகின்றவர்கள், உண்மையிலே மக்களுக்கு சேவை செய்ய வேண்டும், அரசிடம் உரிமை பெற வேண்டும் என்று போராடியவர்கள் எல்லாம், தகுந்த பாதுகாப்போடு தக்க அனுமதி கொடுத்து இருக்கின்றது. இன்றைக்கு பல்வேறு கட்சிகள் போராடுகின்றனர். எதிர்க்கட்சிகளும் போராடுகின்றனர். ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியாக இருந்த போது போராடியது, ஊர்வலம் நடத்தியது. அப்போது எங்காவது உருட்டுக்கட்டை எடுத்துக் கொண்டு சென்றோமா ? பெட்ரோல் குண்டு எடுத்துக் கொண்டு சென்றோமா ? என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், எதிர்க்கட்சி மாமன்ற உறுப்பினர்களும் நினைத்து பார்க்க வேண்டும்.

எவ்வளவு புகைப்படங்கள் இருக்கின்றது. வேண்டும் என்றால் காண்பிக்கின்றேன். காரை உடைத்து பெட்ரோல் குண்டை உள்ளே போடுகிறார்கள். அவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களா ? அதேபோல, உருட்டுக்கட்டை எடுத்துக் கொண்டு அடிக்கின்றார்கள். பொது சொத்திற்கு சேதம் விளைவிக்கின்றார்கள். அவர்கள் பொதுமக்களா ? ஆகவே, சில விஷமிகளும், அங்கே சமூக விரோதிகளும் இருக்கின்றனர். இவர்களை தான் நாங்கள் சமூக விரோதிகளாக சித்தரிக்கிறோமே தவிர, பொதுமக்களை அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறேன்.

இப்படி, வன்முறையாளர்களையும், சமூக விரோதிகளையும், விஷமிகளையும் எந்த அரசும் ஊக்கப்படுத்தக் கூடாது. ஏனென்றால், அது பிற்காலத்திலே ஒரு மிகப் பெரிய சோதனையை உட்படுத்திவிடும். ஆகவே தான், அதில் ஈடுபட்டவர்கள், தீ வைத்தவர்கள், உருட்டுக்கட்டைகளை வைத்து காரை இடித்தாலும் சரி, அது தவறுதான். ஆகவே, வன்முறையில் ஈடுபட்டவர்களை தான்

காவல் துறையினர் கைது செய்துள்ளார்களே தவிர, பொதுமக்களை அல்ல என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு தக்க ஆதாரங்கள் இருந்தால் தான் கைது செய்கிறார்கள். உடனடியாக யாரையும் போய் கைது செய்யவில்லை. அதற்கு தகுந்த ஆதாரங்கள் இருந்தால், அப்படி வன்முறையில் ஈடுபட்டவர்கள், விஷமிகள், ஆதாரத்துடன் தான் கைது செய்யப்படுகின்றனர் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

போராட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களை யாரையும் கைது செய்யவில்லை. அதற்கு அரசும் அனுமதிக்காது. அதுமட்டுமல்லாமல், இப்போது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலே விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு விட்டது. ஸ்டெர்லைட் பிரச்சினை சம்பந்தமாக தூத்துக்குடியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான விவரங்களை தாராளமாக அவர்களிடத்திலே அளிக்கலாம். தகுந்த ஆதாரங்களுடன் அளித்தால், யார் தவறு செய்தாலும், உரிய நடவடிக்கை அரசு எடுக்கும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அந்த நீதி விசாரணை முடிந்த பிறகு, ஓய்வு பெற்ற நீதிபதி அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையிலே, யார் யார் என்னென்ன தவறு செய்தார்களோ, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அரசு உரிய முறையிலே மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும். அதுமட்டுமல்லாமல், நடைபெற்ற சம்பவங்கள் உரிய முறையிலே விசாரிக்கப்பட்டு, அந்த நீதி விசாரணையின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடனே உரிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 05.06.2018 அன்று, சட்டமன்றப் பேரவையில், மணல் குறித்து அளித்த விளக்கம்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மணல் திருட்டை ஒழிப்பதற்குத்தான், அரசாங்கமே மணலை விற்பனை செய்ய வேண்டும் என்று ஒரு முறையை கொண்டு வந்திருக்கிறது. இன்றைக்கு, e-tender மூலமாக வெளிநாட்டிலிருந்து மணல் இறக்க யார் விருப்பப்படுகிறார்களோ, தகுதியானவர்கள் அதிலே கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு டெண்டர் விடப்பட்டு, டெண்டர் இறுதி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மணல் என்பது மிகப்பெரிய விஷயம். எங்கு கொண்டு போகிறார்கள், எங்கு எடுக்கிறார்கள் எதுவுமே கண்டுபிடிக்க முடியாது. ஆகவேதான், அரசாங்கமே இந்த மணலை விற்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, இறக்குமதி செய்கின்ற மணல் கட்டுமானத்திற்கு உகந்ததா என்பதையும் சோதனை செய்ய வேண்டும். அதெல்லாம் இல்லாமல், அவர்கள் கட்டுமானத்திற்கு உகாத மணலை இங்கே இறக்குமதி செய்து கட்டுமானத்திற்கு பயன்படுத்துகின்ற பொழுது, அதனால் மக்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற மணலை, அரசாங்கமே அதை கொள்முதல் செய்து, சோதனை செய்து, அது கட்டுமானத்திற்கு உகந்ததா என்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிறகுதான் விற்பனை செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் தான், இப்பொழுது, இன்றைக்கு செய்தித்தாளின் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டு, தகுதியானவர்கள் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற மணல் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு, அது டெண்டர் விடப்பட்டு, இன்றைக்கு இறுதி செய்யும் சூழ்நிலையில் இருக்கின்றது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். ❖

நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக தற்கொலை செய்து கொண்ட செல்வி பிரதீபா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்
(06.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், பெருவளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகள் செல்வி பிரதீபா என்பவர் நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாக மனமுடைந்த நிலையில், 04.06.2018 அன்று இரவு தற்கொலை செய்து கொண்டு உயிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

உயிரிழந்த செல்வி பிரதீபா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிரிழந்த செல்வி பிரதீபா அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து 7 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாணவர்களின் நலனில் எப்போதும் அக்கறையோடும், அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்கும் என்பதையும், மாணவ மணிகள் இதுபோன்ற விபரீத முடிவுகளை தவிர்க்க வேண்டும் என்பதையும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

விவசாய சங்கத் தலைவர் திரு. அய்யாக்கண்ணு மற்றும் சிலர் இன்று கைது செய்யப்பட்ட நடவடிக்கை குறித்து விளக்கம் அளித்தார்கள். (07.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலையிலே திரு.அய்யாக்கண்ணு அவர்கள் கைது செய்யப்பட்ட விவரத்தை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

சென்னை பெருநகர பகுதியில், சென்னை பெருநகர காவல் சட்டம் பிரிவு 41இன் கீழ் தடை உத்தரவு அமலில் உள்ளது. உரிய அனுமதி பெற்று அமைதியான முறையில் பிரசாரம் மற்றும் போராட்டங்கள் நடத்த அனுமதிக்கப்படுகிறது.

அதன் அடிப்படையில், திரு. அய்யாக்கண்ணு, விவசாய சங்கத் தலைவர் அவர்களின் கோரிக்கையின் பேரில், பூவிருந்தவல்லி, மாதவரம், அம்பத்தூர் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் மட்டுமே பிரசாரம் மேற்கொள்ள சென்னை பெருநகர காவல் துறை மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பிரசாரம் மேற்கொள்ளாமல், உரிய அனுமதியின்றி, வடபழனி பகுதியில் திரு. அய்யாக்கண்ணு மற்றும் சிலர் இன்று (07.06.2018) காலை பிரசாரம் மேற்கொண்டனர். உரிய அனுமதியின்றி, வடபழனி பகுதியில் பிரசாரம் மேற்கொண்ட காரணத்தால், இன்று காலை சுமார் 11.00 மணியளவில், வடபழனி கோவில் அருகில் காவல் துறையினரால் திரு. அய்யாக்கண்ணு மற்றும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மரியாதைக்குரிய திரு.துரைமுருகன் அவர்கள், இங்கே எதிர்க்கட்சித் தலைவரை பார்ப்பதற்காக திரு.அய்யாக்கண்ணு அவர்கள் வந்தார்,

இடைமறித்து கைது செய்யப்பட்டார் என்ற ஒரு செய்தியை சொன்னார். அது அல்ல. நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, அவர் துண்டு பிரச்சாரம் செய்வதற்காக ஓரிடத்திலே கேட்டிருந்தார். அனுமதி இல்லாத இடத்திலே துண்டு பிரச்சாரம் செய்த காரணத்தினாலே, அங்கிருக்கின்ற காவல்துறை அதிகாரிகளால் அவர்களை கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதுதான் விவரம் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.ராஜா அவர்கள், இங்கே சில கருத்துக்களை சொன்னார். இங்கே நீங்கள் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்திருக்கின்றீர்கள். ஆனால், புதிதாக ஒரு இன்டஸ்டிரியல் பார்க் துவங்கப்படுகிறதே ? என்ற கேள்வியை எழுப்பினார். தடை செய்யப்பட்ட பொருள், அதிலே உற்பத்தி செய்யப்படமாட்டாது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

எம்–சாண்ட் மணல் குறித்து விளக்கம்
(07.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எம்–சாண்ட் பற்றி கேள்வி கேட்டார்கள். ஆற்று மணல் மற்றும் ஓடையிலே இருக்கின்ற மணல் எல்லாம் கட்டுமானத்திற்காக மூன்று ஆண்டுகளிலே தடை செய்யப்பட்டு படிப்படியாக, எம்–சாண்டை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் அரசு அறிவித்தது. ஆனால், உங்களுடைய ஆட்சியிலும் ஆற்றிலிருந்து மணலை அள்ளி கட்டுமான தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டது. மாண்புமிகு அம்மாவுடைய அரசிலும் கட்டுமானத்துக்கு ஆற்றிலும் ஓடையிலும் மண் அள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது. ஏனென்றால் மணல் என்பது முக்கியமான அத்தியாவசியமான ஒரு பொருள். கட்டுமான தொழிலுக்கு நிச்சயம் அது தேவைப்படுகிறது. பொதுமக்களை பொறுத்தவரைக்கும், உடனடியாக எம்–சாண்டை பயன்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது. கடந்த காலத்திலே, 10 சதவிகிதம் தான் எம்–சாண்ட் பயன்படுத்தி வந்தார்கள். விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் விளைவாக, இப்பொழுது 40 சதவிகிதம் பேர் எம்–சாண்டை பயன்படுத்த துவங்கி இருக்கிறார்கள். இன்னும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி 100 சதவிகிதம் எம்–சாண்ட்டை பயன்படுத்தக் கூடிய அளவிற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

எத்தனை பேருக்கு இந்த எம்–சாண்ட் தயாரிக்கின்ற உரிமத்தை வழங்கியிருக்கிறீர்கள் என்ற கேள்வியை கேட்டு இருக்கிறீர்கள். தமிழகத்தில் மொத்தம் 24 எம்–சாண்ட் உற்பத்தி நிறுவனங்களுக்கு பொதுப்பணித் துறையின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தரச்சான்று அளிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

யார் யாரெல்லாம் இந்த எம்—சாண்ட் தயாரிப்பதற்கான ஆலைகளை நிறுவுகின்றார்களோ, அவர்களுக்கு எல்லாம் அரசு தாராளமாக உரிமை வழங்கும். அதாவது, அரசு நிர்ணயிக்கப்பட்ட விதிக்கு உட்பட்டு அவர்கள் விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு அந்த உரிமத்தை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. இன்றைக்கு காலையில் கூட, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எத்தனை குவாரிகள் இருந்தன.

ஆகவே, இது மக்களுக்கு ஒரு அத்தியாவசியமான பொருள். கட்டுமான தொழிலுக்கு மிக மிக முக்கியமானது மணல். உடனடியாக நிறுத்த முடியாது.

அரசாங்கத்தில் பல்வேறு கட்டுமானத் தொழில் நடைபெற்று கொண்டிருக்கின்றன. பொதுப்பணித் துறையாக இருந்தாலும் சரி, அல்லது நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும், கட்டுமானத்திற்கு தேவையான மணல் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதேபோல, பல்வேறு கட்டிடங்கள் இன்றைக்கு தமிழகத்திலே கட்டப்பட்டு வருகின்றது. அதற்கும் இந்த மணல் தேவைப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஏழை, எளிய மக்களுக்கு பசுமை வீடுகள், அதுமட்டுமல்லாமல், அரசால் ஏழை மக்களுக்கு கட்டித்தரப்படுகின்ற வீடுகள், இதற்கெல்லாம் மணல் மிக மிக முக்கியம். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு தான், ஆற்றிலும், ஓடையிலும் அரசு விதிகளுக்கு உட்பட்டு, அந்த மணலை அள்ளி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு தேவையான மணல் வாங்குவதற்கும், அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே, இது அறிவிக்கப்பட்டு, வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்வதற்கு, டெண்டர் விடப்பட்டு, டெண்டரை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சட்டப்பேரவையில், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம், பெருமாள் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் (07.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பெருமாள் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் 08.05.2018 அன்று திரு. கணேசன் என்பவர் தொலைக்காட்சி பெட்டிக்கு கேபிள் இணைப்பை கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இது சம்பந்தமாக காவல் துறையினர் விசாரணைக்கு வந்தபோது, அவருடைய சகோதரர் திரு. ராஜு என்பவர், தனது அண்ணன் எவ்வாறு இறந்தார் என்பதை காவலர் முன் செய்து காண்பிப்பதற்காக மீண்டும் தொலைக்காட்சி பெட்டிக்கு இணைப்பை கொடுக்க முற்பட்டபோது, அவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இவ்விருவரும் உயிரிழந்த செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சகோதரர்கள் திரு. கணேசன் மற்றும் திரு. ராஜு அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு.கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தூத்துக்குடி சம்பவம் குறித்து விளக்கம்
(07.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்டெர்லைட் பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து முழு விசாரணை மேற்கொள்வதற்காக ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையிலே விசாரணை தொடங்கப்பட்டு, தற்போது விசாரணை நடைபெற்று கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த பிரச்சினை குறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கும் தற்போது நடைபெற்று கொண்டிருக்கிறது. ஆகவே, நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு சம்பவத்தை பற்றி, பொருளைப் பற்றி, அவையிலே விவாதிப்பது, மரபல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அப்பொழுது அமைச்சராக இருந்து, தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற துணைத் தலைவராக இருக்கின்ற மரியாதைக்குரிய திரு.துரைமுருகன் அவர்களே, இதைப்பற்றி சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு பொருளைப் பற்றி அவையிலே பேசுவது மரபல்ல என்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றார். அதன் அடிப்படையிலே, எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும், எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், இது தொடர்பாக விசாரணை கமிஷனிலே அளிக்கலாம் என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொலக்குணம் கிராமத்தில் கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மண் சரிந்து உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் (07.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், பொலக்குணம் கிராமத்தில் 31.05.2018 அன்று பாறைகளை வெடிக்கச் செய்து கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. குமார், திரு. பாண்டியன் என்பவரின் மகன் திரு. தங்கராஜ் மற்றும் திரு. நீலகண்டன் என்பவரின் மகன் திரு. சீதாராமன் ஆகியோர் 31.05.2018 அன்று மண் சரிந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு. குமார், திரு. தங்கராஜ், திரு. சீத்தாராமன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மூலம் நிவாரணமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

நிலத்தின் உரிமையாளர் திரு. பாலசுப்பிரமணியன் 01.06.2018 அன்று கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்ற விபரத்தை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 08.06.2018 அன்று சட்டப்பேரவையில், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது குறித்து விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இங்கே எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அவர்களும், காவேரியிலே ஜுன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்க இயலாது என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதைக் கண்டித்து நான் வெளிநடப்பு செய்கிறேன் என்றார்.

நான் சில விவரங்களை இங்கே அவைக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று கொண்டிருந்த போது 1988–89ல், அப்போது, அவர்கள் அந்த உரிய காலத்திலே தண்ணீர் திறக்கப்படவில்லை. ஜுன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 07.08.1988 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதற்குப்பிறகு, 1989–1990லிலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். அப்பொழுதும் ஜுன் 12ஆம் தேதி குறுவை சாகுபடி செய்வதற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கு மாறாக, 20.08.1989 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 1996–1997இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, தண்ணீர் திறக்கப்பட்ட தேதி 26.07.1996. அப்பொழுதும் ஜுன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. அதேபோல, 1999ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்று கொண்டிருந்த அந்த காலக்கட்டத்தில், அப்பொழுதும் ஜுன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 01.07.1999 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 2007–2008ஆம் ஆண்டு திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. 18.07.2007 அன்று தான் தண்ணீர் திறந்தார்கள். அதேபோல, 2009–2010இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுதும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28.07.2009 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது. அதேபோல, 2010–2011இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. குறுவை சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. 28.07.2010 அன்று தான் தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லாம் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறந்த வரலாறு இல்லை எனத் தெளிவாக இருக்கிறது. ஏன் என்றால், தண்ணீர் அணையிலிருந்தால் தான் திறக்க முடியும். அது காங்கிரஸ் கட்சி தலைவருக்கு தெரியும், ஏன் என்றால் அவர் ஒரு விவசாயி. ஆகவே, பருவமழை நன்றாக பெய்தால், நீர் வரத்து அதிகமாக இருக்கும், மேட்டூரில் நீர் இருப்பு அதிகமாக இருக்கும், நீர் இருப்பு இருந்தால் தண்ணீர் திறக்கப்படும். குறைந்தபட்சம் 90 அடி தண்ணீர் இருந்தால் தான், பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியும். இல்லாவிட்டால், அதற்கு குறைவாக இருந்தால், அங்கே சாகுபடிக்கு தேவையான தண்ணீர் இல்லாமல் பயிர் காய்ந்துவிடும். விவசாயிகள் நஷ்டத்திற்கு உட்பட்டுவிடுவார்கள்.

ஆகவே, உரிய காலத்திலே தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய எண்ணம் தான். ஆனால், அணையில் போதிய நீர் இல்லை. பருவமழை பொய்த்ததன் காரணமாக, அணையில் குறைவான நீர் இருக்கின்ற காரணத்தினாலே, தண்ணீர் திறக்க இயலவில்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு, இன்றைக்கு விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு அம்மாவுடைய அரசு. ஆகவேதான், ஒரு குறுவை தொகுப்பு திட்டத்தை இன்றைக்கு அம்மாவுடைய அரசு அறிவித்தது. கடந்த காலத்தில் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக, நீர் இல்லாமல் இருந்தால் கூட, இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்ய வேண்டும்

என்பதற்காக, பயிர் வகைகளை சாகுபடி செய்ய வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அம்மாவுடைய அரசு குறுவை தொகுப்பு திட்டத்தை இன்றைக்கு அறிவித்து, அதற்காக 115 கோடி ரூபாயை அறிவித்த அரசு, அம்மாவுடைய அரசு. அதையெல்லாம் பட்டியலிட்டு காட்டினேன்.

இன்றைக்கு பார்த்தீர்களானால், குறுவை சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் 3 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் அந்த சீசனில் பருவ காலத்திலே தண்ணீர் திறந்து விட்டு வேளாண் பெருங்குடி மக்கள் பயிர் சாகுபடி செய்வார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவுடைய அரசு, இந்த குறுவை தொகுப்பு திட்டத்தின் மூலமாக, நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளுக்கு இந்த நிதி வழங்குகின்ற காரணத்தினாலே, சுமார் 3 இலட்சம் ஏக்கர் அளவிற்கு அந்த பாசன பரப்பு குறையாமல் சாகுபடி செய்கின்ற சூழ்நிலையை அம்மாவுடைய அரசு உருவாக்கி தந்திருக்கிறது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்தவகையிலும், விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்ற அக்கறையுள்ள அரசு அம்மாவுடைய அரசு தான் என்பதை இந்த நேரத்திலே அவையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், இன்றைக்கு தண்ணீர் உரிய காலத்திலே திறக்கவில்லை என்று இங்கே வெளிநடப்பு செய்திருக்கின்றார். நீங்களும் வெளிநடப்பு செய்திருக்கின்றீர்கள். நன்றாக சிந்திக்க வேண்டும். அதாவது, குறுவை சாகுபடி 3 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் தான் செய்கின்றோம். ஆனால், அம்மாவுடைய அரசு அங்கே இருக்கின்ற நிலத்தடி நீரை விவசாயிகள் முறையாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு குறுவை தொகுப்பு திட்டத்தின் மூலமாக நிதியுதவி அளித்து, அதே அளவிற்கு, அந்த நெல் சாகுபடியும், பயிர் வகைகளையும் சாகுபடி செய்வதற்கு, இன்றைக்கு அம்மாவுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே,

விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை அம்மாவுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, குறுவை சாகுபடி செய்வதற்கும், பயிர் வகைகள் சாகுபடி செய்வதற்கும், தேவையான நிதியை இந்த குறுவை தொகுப்பு திட்டத்தின் வாயிலாக, நிதியுதவி செய்து, விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய செய்ய வேண்டும். விவசாயிகளுடைய நிலை உயர வேண்டும் என்ற அக்கறை கொண்ட அரசு என்பதை தாங்கள் வாயிலாக காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்களுக்கும் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக கட்சி உறுப்பினர்களும், அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தாலும், அவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே, 2011ஆம் ஆண்டு தான் ஜூன் 12க்கு முன்பு, 6ந் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, 2001–2002இல், 12.06.2001லும், அம்மாவுடைய ஆட்சியிலே ஜூன் 12 தேதியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, தண்ணீர் இருக்கின்ற காலத்திலே எல்லாம், உரிய காலத்திலே அம்மாவுடைய அரசு தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் அணையிலே குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, பருவமழை சரியாக பெய்யாததன் காரணத்தினாலே, போதிய தண்ணீர் இருப்பு மேட்டூர் அணையிலே இல்லாத காரணத்தினாலே, அந்த சூழ்நிலை காரணமாகத்தான், ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இருந்தாலும், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, குறுவை தொகுப்பு திட்டத்தின் வாயிலாக, நிதியுதவி செய்து, எந்த அளவிற்கு, ஏற்கெனவே, 3 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி செய்கின்ற பயிரிடுகின்ற அந்த விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை செய்து, அந்த அளவிற்கு குறையாத அளவிற்கு வேளாண் பணி செய்வதற்கு வேளாண் பெருங்குடி மக்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜூன் மாதத்திற்கு முன்பு மேட்டூர் அணை திறக்கப்பட்டது பத்து முறை. அதேபோல, ஜூன் 12ஆம் தேதிக்கு திறக்கப்பட்டது 16 முறை. ஜூன் 12ஆம் தேதிக்கு பிறகு திறந்தது 17 முறை. ஜூலை மாதத்திலே திறந்தது 25 முறை. ஆகஸ்ட் மாதம் திறந்தது 10 முறை. ஆகஸ்ட் மாதத்திற்கு பிறகு திறந்தது 5 முறை. மேட்டூர் அணை கட்டப்பட்டு 83 ஆண்டு காலம் தண்ணீர் திறப்பு பற்றிய விவரம். ஆகவே, தண்ணீர் இருப்பு இருந்தால் உரிய காலத்திலே திறக்கப்படும். நீர் இருப்பு இல்லை என்றால், உங்களுடைய ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி, நீர் இருப்பு இருந்தால் தான் தண்ணீர் திறக்க முடியும். நான் ஏற்கெனவே, உங்களுடைய ஆட்சியிலே எந்த எந்த காலத்திலே, எப்படி தண்ணீர் திறக்கப்பட்டது என்ற விவரத்தை எல்லாம் சொன்னேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற போது, மேட்டூர் அணையில் நீர் அதிகமாக இருந்த காரணத்தினாலே 06.06.2011 அன்று குறுவை சாகுபடிக்காக முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது. ஜூன் 12ஆம் தேதிக்கு பிறகு அணையை திறப்பதற்கு பதிலாக 6ஆம் தேதியே முன்கூட்டியே திறந்த அரசு அம்மாவுடைய அரசு என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் சென்னை – பெங்களூரு விரைவுச் சாலை குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சென்னை–பெங்களூரு விரைவுச் சாலை நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக மத்திய அரசால் ரூபாய் 20 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்வதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாலை அறிவித்தவுடனே எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது. அதுபோலத்தான் கடந்த காலத்தில் நீங்கள் பல பாலங்களை அறிவித்தீர்கள், சென்னையில்கூட போரூர் பாலத்தை அறிவித்தீர்கள். அதற்கு அடிக்கல் நாட்டி, விழாவெல்லாம் நீங்கள் எடுத்தீர்கள். ஆனால், அதற்குத் தேவையான நிலத்தை எடுக்காமல் விட்டுவிட்டீர்கள். அதற்குத் தேவையான நிலம் எடுக்காத காரணத்தினால், அந்த பாலப்பணியை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க முடியவில்லை. அதிகளவு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், வியாபாரிகள் பல்வேறு வழக்குகள் போட்டார்கள், அந்த வழக்குகளுக்கெல்லாம் நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்று அம்மாவினுடைய அரசுதான் நிறைவேற்றியிருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, சாலைகள் அமைப்பதாக இருந்தாலும், பாலங்கள் அமைப்பதாக இருந்தாலும், முதற்கட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். முதற்கட்டப் பணி என்பது, முதலிலே பாலத்திற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், சாலையோ, பாலங்களோ அமைக்கப்படுகின்ற இடத்தில் தொலைதொடர்பு சாதனங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும், மின் பாதைகள் சென்று கொண்டிருந்தால் அவை மாற்றி அமைக்கப்படவேண்டும், குடிநீர் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் சென்று கொண்டிருக்கும்பொழுது, அவையும் மாற்றியமைக்கப்படவேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட

பணிகளையெல்லாம் செய்து முடித்த பிறகுதான், பாலப் பணிகளை திட்டமிட்டபடி குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்ற முடியும். ஆகவேதான்,இன்றைக்கு ஒரு புதிய சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், முதற்கட்டப் பணி, நிலம் கையகப்படுத்தும் பணியை துவக்கி அதை முடித்த பிறகுதான், கட்டுமானப் பணியை துவக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இங்கே Peripheral சாலைகூட அமைக்க வேண்டுமென JICA மூலமாக கடனுதவி பெறுவதற்காக நாங்கள் முயற்சி செய்தோம். ஜப்பான் நிறுவனம், JICA திட்டத்திலே குறிப்பிட்டார்கள், முதலிலே, நீங்கள் நிலத்தை கையகப்படுத்துங்கள், நிலத்தைக் கையகப்படுத்தாமல் நீங்கள் கடனைப் பெற்றுக் கொண்டால் பாதியிலேயே நின்று விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையையெல்லாம் மாற்றுவதற்காக முதலிலே எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அந்தத் திட்டத்திற்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்திய பிறகு அந்தப் பணியை ஆரம்பியுங்கள் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல, ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டால் உடனே கொண்டுவரமுடியாது. திட்டத்தை கொண்டுவருவதற்கு முன்னோடியாக ஒரு காலஅளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 2023–க்குள் தமிழகத்திலே ஒரு வளர்ச்சி காண, உள்கட்டமைப்பைப் பெருக்க வேண்டும், புதிய, புதிய தொழிற்சாலைகளை தமிழகத்திலே கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, விஷன்–2023–க்குள் தமிழகத்திலே பல்வேறு சாலை உட்கட்டமைப்புகளை நிறைவேற்ற வேண்டும், அப்படி நிறைவேற்றுகின்றபொழுது, இந்தியாவிலேயே தமிழகம் ஒரு சிறந்த மாநிலமாக திகழும். உட்கட்டமைப்பு சிறந்த மாநிலமாக வருகின்றபொழுது புதிய, புதிய தொழிற்சாலைகள் கிடைக்கும், அதன்மூலமாக வேலைவாய்ப்புகள் பெருகும், பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடுதான் அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை சந்திரசேகர் அவர்கள் அனுமதியின்றி மணல் அள்ளப்படுவது குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மணல் அனுமதியின்றி அள்ளப்படுவதாக இங்கே குற்றச்சாட்டு சொன்னார்கள். அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதில், எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. கடந்த 5 ஆண்டுகாலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 18,000 லாரிகள் அனுமதியற்ற முறையில் மணல் அள்ளுவதை கண்டுபிடித்து நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த 6 ஆண்டு காலத்திலே 48000 லாரிகள் அனுமதி இல்லாமல் அள்ளப்பட்டதை தடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே, அனுமதியின்றி மணல் அள்ளிச் செல்கின்ற லாரிக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை 50 கோடி. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, 6 ஆண்டு காலத்திலே, அனுமதியின்றி மணல் அள்ளிச் செல்கின்ற அந்த லாரிகளை பிடித்து, 120 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதிகம் அல்ல, 5 ஆண்டு காலத்திலே, நீங்கள் கண்டுபிடிக்கவில்லை, நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம். 48,000 லாரிகள் அனுமதியின்றி மணல் அள்ளப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அபராதத் தொகையாக 120 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கு மணல் ஒரு அத்தியாவசியமான பொருள். இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்பது எல்லாம், எல்லா கட்சியுமே ஈடுபட்டதாக சொன்னீர்கள். மணல் கட்டுமானத் தொழிலுக்கு தேவையானது. ஆகவே, படிப்படியாக குறைக்க வேண்டுமென்பது தான் அரசினுடைய நிலைப்பாடு. இருந்தாலும், M-Sand–ஐ பயன்படுத்த வேண்டும், அதற்கு அரசு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இப்பொழுது படிப்படையாக M-Sand–ஐ கட்டுமானத் தொழிலுக்கு பயன்படுத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

பொதுமக்களும் பயன்படுத்துகின்றார்கள், கட்டுமானத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் பயன்படுத்தி வருகின்றார்கள். நாளடைவில் படிப்படியாக குறைத்து, ஆற்றிலிருந்து, ஓடையிலிருந்து மணல் அள்ளப்படுவதை தடுத்து நிறுத்த, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அதற்கு டெண்டர் அறிவிக்கப்பட்டு, அந்த டெண்டர் எல்லாம் பெறப்பட்டு, பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. விரைவாக டெண்டர் இறுதி செய்யப்பட்டு, இன்னும் ஓரிரு மாதத்தில் வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாவற்றையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டுதான், அரசு விழிப்புணர்வோடு இந்த மணலை மக்களுக்கு விநியோகம் செய்கிறது. ஆற்றிலிருந்தோ, ஓடையிலிருந்தோ மணல் அள்ளுகின்றபொழுது, அந்த லாரிகளுக்கெல்லாம் GPS பொருத்தப்பட்டிருக்கின்றது. அங்கேயே கேமரா வைக்கப்பட்டு, பொதுப்பணித் துறை அதிகாரிகள் அங்கேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கிருந்து yard–க்கு கொண்டுவந்த பிறகு, அங்கிருந்து மணல் விநியோகம் செய்கின்றபொழுது, அங்கேயும் கேமரா பொருத்தப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பணமாக யாரும் பெற்றுக்கொள்ளக்கூடாது. ஸ்வைப்பிங் மிஷின் அல்லது ஆன்லைன் மூலமாக பணம் பெறப்பட வேண்டும் என்ற உத்தரவையும் அரசு செயல்படுத்துகின்றது. இதுமட்டுமல்ல, இதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, அரசாங்கமே போக்குவரத்துத் துறை அதிகாரிகளோடு ஆங்காங்கே உள்ள லாரி உரிமையாளர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அங்கே போலியாக ஆன்லைனில் பதிவு செய்தவர்களை நீக்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, அரசைப் பொறுத்தவரைக்கும், பொதுமக்களுக்கும், கட்டுமானத்

தொழிலுக்கும், அரசு சார்பாக நடைபெறுகின்ற பணிக்கும் முறையாக மணல் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான், இப்பொழுது அரசு இத்தனை வழிமுறைகளையும் பின்பற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் எந்தத் தவறும் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அங்கிருந்து ஒரு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் இமெயில் டெண்டர் வழியாக ஒப்பந்தம் விடப்பட்டு, அந்த ஒப்பந்ததாரர்தான் அந்த ஆற்று மணலை அந்த yard–க்கு கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆற்றிலிருந்து, சுமார் 25 கிலோமீட்டர் yard–க்கு வருகிறோம், அதற்கு மேல் போனால் எளிதில் கண்டுபிடித்து விடலாம். ஆகவே, நீங்கள் சொல்கிறது மாதிரி, அந்தத் தவறு நடைபெறாவண்ணம் அரசு பார்த்துக் கொள்ளும்.

இப்பொழுது எல்லாம், முறையாக மாற்றியமைக்கப்பட்டு சீர் செய்யப்பட்டு விட்டது. இப்படிப்பட்ட தவறெல்லாம் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான், நான் முன்னரே கூறியபடி, அங்கே ஆற்றிலிருந்து லயசன வரைக்கும் டெண்டர் விடப்பட்டிருக்கின்றது, அதை பல கட்சிக்காரர்களும் எடுத்திருக்கிறார்கள். அந்த ஆற்றிலிருந்து மணலை அள்ளி அந்த yard–க்கு கொண்டு வருவார்கள், அங்கே அள்ளுகின்றபொழுது, அங்கே கேமரா பொருத்தப்பட்டிருக்கின்றது, அதோடு அந்த கேமரா மூலமாக இங்கேயே பார்த்துக் கொள்ளலாம், யாரும் ஏமாற்ற முடியாது. அந்த அளவிற்கு தகவல் தொழில் நுட்ப வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. GPS பொருத்தப்பட்ட லாரி தான் பயன்படுத்தவேண்டும், அதுமட்டுமல்ல, ஆன்லைனில் தான் book செய்ய வேண்டும். நீங்கள் சொல்வது போல், யாரும் தனியாக போய் மணல் அள்ள முடியாது. ஆன்லைனில் book செய்த பிறகுதான் அந்த yard–இல் சென்று மணல் அள்ள முடியும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் பசுமை வழி விரைவுச் சாலை, தரமணி முதல் சிறுசேரி வரையிலான உயர்மட்ட பாலம் மற்றும் பெருங்களத்தூர் – வண்டலூர் 8 வழிச்சாலையாக விரிவுபடுத்துதல் குறித்து எழுப்பிய வினாவிற்கு அளித்த பதிலுரை (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூத்த உறுப்பினர் ஒரு சாலை அமைப்பதைப் பற்றி, ஒரு தவறான கருத்தை பதிய வைத்துக் கொண்டிருக்கின்றார். அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர், மத்தியிலே தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபொழுது, எவ்வளவு சாலைகள் அமைத்தார்கள் என்ற விவரம் எல்லாம் என்னிடத்தில் இருக்கிறது, குறுக்கீடு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் நான் அமர்ந்து கொண்டிருக்கின்றேன். ஒரு சாலை அமைக்கின்றபொழுது, அங்கிருக்கின்ற பயன்பாட்டிற்கு தக்கவாறு அமைக்கப்படுகிறது, அதை குறை சொல்லக்கூடாது. ஆகவே, படிப்படியாக, எல்லா பகுதிகளிலுமே சாலை விரிவாக்கம் செய்யப்படும். பசுமை வழிச்சாலை சென்னையிலிருந்து சேலம் வரை அமைப்பதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? கொண்டு வருவது தவறா? மத்திய அரசிடம் போராடி பெற்றிருக்கின்றோம். நீங்கள் தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபொழுது, கோட்டை விட்டுவிட்டீர்கள், அதை நிறைவேற்றியிருக்கிறோம் நாங்கள். நாங்கள் இன்றைக்கு மத்தியிலே ஆளுங்கட்சியிலே இல்லை. நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தீர்கள், அப்பொழுதெல்லாம் தமிழகத்திலே தேவையான சாலை விரிவாக்கத்தை நீங்கள் மேற்கொள்ளவில்லை.

இன்றையதினம் எவ்வளவு சாலை இருக்கின்றது என்று தெளிவாக சொல்கின்றேன். நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம், மத்தியிலே ஆளுங்கட்சியாக இல்லைமாநிலத்திலும் உங்களுடைய ஆட்சி, மத்தியிலும் உங்களுடைய ஆட்சி, அப்போது ஏன் நிறைவேற்றவில்லை? நிறைவேற்றுவதை ஏன்

தடுக்கின்றீர்கள்? அதை ஏன் கொச்சைப்படுத்துகின்றீர்கள்? அப்படியென்றால், நீங்கள் சாலை அமைக்கின்றபொழுது, தனியாருக்காக தான் சாலை அமைத்தீர்களா? சொல்லுங்கள் பார்க்கலாம். பொதுமக்களுக்காகத் தானே சாலை அறிவிக்கிறீர்கள்? ஆகவே, சென்னையிலிருந்து சேலம் வரும் வரை அத்தனை நகரத்தில், ஊரில் இருக்கின்ற பொதுமக்களும் பயன்படுத்துகின்றார்கள். யாருக்கும் தனியாக இந்த சாலை அமைக்கவில்லை என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சிறுசேரி பற்றி இங்கே சொன்னார்கள், அங்கே இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணி அந்த வழியிலே நடக்க இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அந்தப் பணி துவங்குகின்ற காரணத்தினாலே தான் காலதாமதம் ஆகின்றது. இந்த இரண்டையும் ஒன்றாக சேர்த்து அந்தப் பணி துவக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்டலூர் பகுதியிலிருந்து சாலை விரிவாக்கம் செய்யவில்லை என்று சொல்லியிருக்கின்றார். இது மத்திய அரசிற்குட்பட்ட சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை, மாநில அரசினால் பராமரிக்கப்படுகின்ற சாலை அல்ல. நாம் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றோம். ஏன் நீங்களே அப்பொழுது மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தீர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு.டி.ஆர்.பாலு அவர்கள் மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார், ஏன் அப்பொழுது அது கவனிக்கப்படவில்லை? சென்னையிலே பிரதான சாலை என்று குறிப்பிடுகின்ற அப்படிப்பட்ட பிரதானச் சாலையை ஏன் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை? இருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, அங்கேயிருக்கின்ற போக்குவரத்து நெரிசலை அடிப்படையாகக் கொண்டு, மத்திய அரசிற்கு, அதை விரிவுபடுத்தவேண்டும் என்று கோரிக்கையும் வைத்திருக்கிருக்கின்றது. மத்திய அரசு, இது நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதியும் தந்திருக்கிறார்கள். தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை உயர்மட்ட பாலம் அமைக்க விரிவான திட்ட

அறிக்கை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

உயர்மட்டப் பாலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், அந்த அளவிற்கு நிதி இல்லை, இருந்தாலும், மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும், இல்லாவிட்டால், உலக வங்கியிடமிருந்து தேவையான நிதி பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும், அந்த அடைப்படையில், மத்திய அரசிற்கும் அந்த கோரிக்கை வைத்திருக்கின்றோம். மத்திய அரசினுடைய இத்திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

மரியாதைக்குரிய மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு நிதின் கட்கரி அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது, தரமணியிலிருந்து செங்கல்பட்டு வரை உயர்மட்டச் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தோம். அதையும் நிறைவேற்றித் தருவதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள் என்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறச் சாலைகளைப் பற்றி சொன்னார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் இருக்கின்ற பொழுது, கிராமம் வளர வேண்டும், கிராமத்தில் இருக்கின்ற சாலைகள் சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னிறைவு திட்டத்தை கொண்டு வந்து கிராமந்தோறும், நல்ல சாலைகளை கிராமத்தில் அமைத்துக் கொடுத்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் என்பதையும் இந்த தருணத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தஞ்சாவூரில் காவேரி உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளர் திரு.பெ.மணியரசனிடம் வழிப்பறி செய்த சம்பவம் குறித்து விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ் தேசிய பேரியக்க தலைவரும், காவேரி உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளருமான திரு. பெ.மணியரசன் என்பவர் நேற்று (10.06.2018) இரவு, சென்னை செல்வதற்காக தஞ்சாவூர் ரயில் நிலையத்திற்கு தனது நண்பர் சீனிவாசன் என்பவரின் இரு சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்துள்ளார்.

இரவு சுமார் 9.00 மணியளவில், வல்லம் சாலையிலுள்ள உணவு கிடங்கு அருகே அவர்கள் சென்று கொண்டிருந்த போது, மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் திரு.மணியரசன் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில், திரு. மணியரசன் தடுமாறி கீழே விழுந்துள்ளார். இதை பயன்படுத்தி திரு. மணியரசனிடம் இருந்த கைப்பை ஒன்றை பறித்துக் கொண்டு அந்நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கீழே விழுந்த திரு. மணியரசன் சிராய்ப்பு காயமடைந்ததால், அவர் உடனடியாக தஞ்சாவூர் விநோதகன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அடையாளம் தெரியாத நபர்கள் பறித்துச் சென்ற திரு.மணியரசனின் கை பையில் 700 ரூபாய் பணமும், இரண்டு ஏ.டி.எம் அட்டைகள், பான் கார்டு, கையடக்க கணினி, கைபேசி போன்றவை இருந்துள்ளது.

இது தொடர்பாக திரு.மணியரசன் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், காவல் துறையினர் வழக்கு பதிவு (கு.எண்.301/2018, ச/பி 394 இதச) செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வழக்கில் எதிரிகளை கண்டுபிடித்து கைது செய்ய மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பவ இடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி பதிவுகளை தனிப்படையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

எதிரிகள் விரைவில் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் சென்ட்ரல் இரயில் நிலைய ஸ்கைவாக் திட்டம் குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம்
(11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற சென்ட்ரல் இரயில்நிலைய ஸ்கைவாக் திட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதனால்தான் நாங்கள் விட்டிருக்கின்றோம். ஆகவே, மத்திய அரசால் ஏற்று நடத்தப்படும் என்று தெரிவித்த காரணத்தினாலே, மாநில அரசு அந்த திட்டத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சென்னை–சேலம் பசுமை வழி விரைவுச் சாலை திட்டம் மற்றும் திட்டத்திற்கான விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 25.02.2018 அன்று, மத்திய அரசின் "பாரத்மாலா பிரயோஜனா திட்டத்தின்" கீழ் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை – சேலம் இடையே பசுமை வழிச்சாலை திட்டம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டம் 277.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த பசுமை வழிச்சாலை 8 வழிச்சாலையாக, சென்னை அருகிலுள்ள தாம்பரம் முதல் சேலம் நகரம் அரியானூர் வரையில், காஞ்சிபுரத்தில் 59.1 கி.மீ., திருவண்ணாமலையில் 123.9 கி.மீ., கிருஷ்ணகிரியில் 2 கி.மீ., தருமபுரியில் 56 கி.மீ., மற்றும் சேலத்தில் 36.3 கி.மீ., என்று இம்மாவட்டங்கள் வழியாக அமைக்கப்பட உள்ளன. இந்த பசுமைவழிப் பாதைக்கு சேலம் முதல் அரூர் வரை NH 179A என்றும், அரூர் முதல் சென்னை வரை NH 179B என்றும் எண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களுக்கு செல்வதற்கு தற்போதுள்ள சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம், வாலாஜாபேட்டை, வேலூர், ஆம்பூர், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி வழியாக சுமார் 360 கிலோமீட்டர் அல்லது சென்னை – மதுரை தேசிய நெடுஞ்சாலையில், செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை மற்றும் ஆத்தூர் வழியாக சுமார் 350 கிலோமீட்டர் பயணித்து சேலம் செல்ல வேண்டும். தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலை வழியாக பயணித்தால் பயண நேரம் சுமார் 5 மணி நேரமாகும்.

தற்போது, இவ்விரு தேசிய நெடுஞ்சாலைகளிலும் இதன் கொள்ளளவை விட 130 சதவிகிதம் மற்றும் 160 சதவிகிதம்

அதிகமாக போக்குவரத்து செறிவு உள்ள காரணத்தினால், இச்சாலையில் விபத்துக்கள் மிகவும் அதிகமாக நடைபெறுகின்றன. இன்னும் 10 வருடங்களில், இவ்விரு தேசிய நெடுஞ்சாலைகளிலும், போக்குவரத்தானது 1,50,000 (Passenger Car Unit (PCU)) அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரு சாலைகளையும் விரிவுபடுத்தினால், போக்குவரத்து செறிவு 60 ஆயிரம் PCUலிருந்து 1 இலட்சம் PCU வரை மட்டுமே அதிகப்படுத்தலாம்.

ஆனால், இந்த புதிய எட்டு வழிச்சாலையின் போக்குவரத்து கொள்ளளவு 80,000 போக்குவரத்து செறிவு (PCU) ஆக இருந்தாலும், இச்சாலையானது பசுமை விரைவு நெடுஞ்சாலையாக உள்ளதால், இதன் போக்குவரத்து கொள்ளளவு 1,50,000 போக்குவரத்து செறிவு ஆகும். எனவே, தற்போதுள்ள இரண்டு நெடுஞ்சாலைகளின் 1 இலட்சம் PCUஉடன் சேர்த்து 2 இலட்சத்து 50 ஆயிரம் PCU கொள்ளளவு பயன்பாட்டிற்கு வரும். மேலும், இந்த பசுமைவழி விரைவு சாலையுடன் நேரடியாக பிற குறுக்கு சாலையில் இணைவது முறைப்படுத்தப்பட்டு அணுகுசாலை மூலமாக, அல்லது கீழ்மட்ட பாலங்களின் வழியாக கடப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதால், விபத்துகள் பெருமளவு குறையும். அதே நேரத்தில், பெருகிவரும் போக்குவரத்து செறிவையும் தாங்கி பயன் அளிக்கும்.

வருங்காலத்தில் இந்த இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளையும் அகலப்படுத்தினால், ஒவ்வொரு தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களும் 15 மீட்டர், அதாவது 30 மீட்டர் அகலத்திற்கு கையகப்படுத்த வேண்டும். இதற்கென மொத்தம் சுமார் 2,200 ஹெக்டேர் அளவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு கையகப்படுத்தும் போது அந்நிலங்களில் சுமார் 40 ஆயிரம் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் கட்டடங்கள் இடிக்கப்பட வேண்டியிருக்கும். ஆனால், இந்த பசுமை விரைவுச்சாலை அமைக்க சுமார் 1,900 ஹெக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்படும். பல்லாயிரக்கணக்கான ஹெக்டர் இல்லை, வெறும் 1,900 ஹெக்டேர் நிலம் தான் கையகப்படுத்தப்படும். இதில் 400 ஹெக்டேர் நிலம் அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகும். இப்புதிய சாலையினால், கிட்டதட்ட

300 ஹெக்டேர் நிலம் குறைவாக கையகப்படுத்தப்பட வேண்டும். இச்சாலையின் மொத்த நீளமான 277.30 கிலோமீட்டரில், 9.955 கிலோமீட்டர் நீளமுள்ள சாலை மட்டுமே, செங்கல்பட்டு, ஆரணி, போளூர், செங்கம் மற்றும் அரூர் ஆகிய வனப்பகுதியில் செல்கிறது. அதாவது, கையகப்படுத்த தேவையான 1,900 ஹெக்டேரில், 49 ஹெக்டேர் வன நிலம் மட்டுமே அடங்கும். இச்சாலை அமைக்க 70 மீட்டர் அகலத்திற்கு நிலம் கையகப்படுத்தப்படும். இது, வனப்பகுதியில் செல்லும்போது, அதன் அகலம் 45 முதல் 50 மீட்டர் ஆக குறைக்கப்படும்.

இத்திட்டத்திற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், இத்திட்டத்தினால் காடுகளிலுள்ள மரங்கள் அழிக்கப்படும் என்றும், இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்றும், சேலம் கஞ்சமலை, திருவண்ணாமலை கல்வராயன் மலை ஆகியவற்றிலிருந்து கனிம வளங்கள் சுரண்டப்படும் என்றும், விளைநிலங்கள் பாதிக்கப்படும் என்றும் கூறி, சில அமைப்புகளும், சில அரசியல் கட்சிகளும் மற்றும் சில இடதுசாரி அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த பசுமை வழி விரைவுச் சாலையின் நேர்பாடு, குறைவான வனப்பகுதியில் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சாலை அமைப்பதற்கு எடுக்கப்படும் வன நிலத்திற்கு ஈடாக, இரு மடங்கு அரசு புறம்போக்கு நிலம், மாவட்ட நிருவாகத்தினரால் நில மாற்றம் செய்து, வனத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 2 மடங்காக காடு வளர்க்கப்படும்.

சென்னை முதல் சேலம் வரையிலான இச்சாலை 10 கிலோமீட்டர் நீளத்திற்கு குறைவாகவே வனப்பகுதியில் செல்கிறது. அவற்றில், சேலம் புறவழிச்சாலை அமைப்பதற்காக சுமார் 3.1 கிலோமீட்டர் நீளம் வனப்பகுதியில் இச்சாலை செல்கிறது. இவ்வனப்பகுதியில் உள்ள மலைக்குள், வனத்திற்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாமல் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. மலைக்குள் சுரங்கப்பாதையாக அமைப்பது வனத்தை பாதுகாக்கும் சிறந்த முறையாக உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

மேலும், இந்த விரைவுச் சாலையானது சரணாலயம், தேசிய பூங்கா, பாதுகாக்கப்பட்ட பகுதியிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவாகவே அமைக்கப்படுகிறது. எனவே வன விலங்குகளுக்கும் எவ்வித இடையூறோ, பாதிப்போ ஏற்படாத வண்ணம் இந்த பசுமைவழி விரைவுச் சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்த பசுமைவழி வரைவுச் சாலை அமைப்பதினால், குறைவான மரங்களே வெட்டப்பட உள்ளன. ஏனினும், இந்த விரைவுச் சாலை இருமருங்கிலும் சுமார் 10 மீட்டர் அகலத்திற்கு சுமார் 3 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும். இத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்படும் நிலங்கள் தேசிய நெடுஞ்சாலை சட்டம் 1956ன் படி கையகப்படுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் புதிய நில எடுப்பு சட்டத்தின்படியும் அந்த நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இச்சட்டத்தின்படி அடிப்படை சந்தை மதிப்பில் நகர்புறங்களில் குறைந்தபட்சம் இரண்டு மடங்கும், கிராமபுறங்களில் குறைந்தபட்சம் இரண்டரை மடங்கிலிருந்து 4 மடங்கு வரை இழப்பீடாக வழங்கப்படும். கையகப்படுத்தப்படும் நிலத்திலுள்ள மரங்கள், கட்டடங்கள் மற்றும் கிணறு ஆகியவற்றிற்கும் தனியே உரிய இழப்பீடு வழங்கப்படும். மேலும், கட்டடங்களுக்கு தேய்மான மதிப்பு ஏதும் கணக்கிடப் படாமல் தனியே இழப்பீடு வழங்கப்படும்.

மத்திய அரசின் தங்க நாற்கர சாலை மற்றும் வடக்கு தெற்கு சாலை திட்டத்தின்படி வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுகையில் தற்போதுள்ள இழப்பீடு சுமார் நான்கு மடங்கு அதிகமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியிலே ஆட்சியிலே இடம் பெற்றிருந்தது. அப்போது மத்திய தரைவழி போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு.டி.ஆர். பாலு அவர்கள் இருந்தார். அப்பொழுது கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையைவிட இப்பொழுது கூடுதலாக இழப்பீட்டுத் தொகை

அந்த நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும். உதாரணமாக, 2007–2008ஆம் ஆண்டு சேலம் நகரத்திற்கு அருகில் உள்ள அயோதிபட்டணத்திற்கு நான்குவழி சாலை நிலம் எடுக்கும் போது, ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை அப்பொழுது 8 இலட்சம் ரூபாய், ஆனால் தற்போது குறைந்தபட்சம் 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதே பகுதியில் உள்ள கான்கிரீட் தள வீடுகளுக்கு இழப்பீட்டுத் தொகை அன்று சதுரடிக்கு 100 ரூபாய் வழங்கப்பட்டது. இன்று சதுர அடிக்கு 340 ரூபாய் வழங்கப்படுகிறது. ஓட்டு வீடுகளுக்கு அன்று சதுர அடிக்கு 60 ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது, இன்றைக்கு ஓட்டு வீடுகளுக்கு சதுர அடிக்கு 200 ரூபாய் வழங்கப்படுகிறது. தென்னை மரம் ஒன்றிற்கு அன்றைக்கு வழங்கப்பட்ட தொகை 12,000 ரூபாய். இன்றைக்கு 40,000 ரூபாய் ஒரு தென்னை மரத்திற்கு வழங்கப்படுகிறது.

இந்த பசுமைவழி விரைவு சாலையினால், தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்கள், கருநாடகா மற்றும் கேரள மாநிலங்களுக்கு செல்லும் வாகனங்களின் பயண தூரம், சுமார் 60 கிலோமீட்டர் வரை குறையும். இதனால், சென்னை முதல் சேலம் வரையிலான பயண நேரம் சுமார் இரண்டு மணி நேரம், 15 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆக, இவ்விரைவுச் சாலையினால் பயண நேரம் பாதியாகக் குறையும். மேலும், இந்த குறைவான பயண தூரத்தினால், டீசல் சேமிப்பு ஒரு வருடத்திற்கு சுமார் 700 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும், தொழில் வளர்ச்சிக்கும் தரமான சாலைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில், இந்த பசுமைவழி விரைவுச் சாலையினால் தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றம் அடைவது மட்டுமின்றி, வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) உயரும். தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படும் கனரக வாகன போக்குவரத்து குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்றடையும். மேலும், கனரக வாகன நடை எண்ணிக்கை அதிகரிக்கும். இது தொழில் வளர்ச்சிக்கு மிகப் பயனுள்ளதாக அமையும்.

மும்பை–புனே விரைவுச் சாலையினால் பிம்பிரி–சின்சவத் பகுதி தொழில் துறையில் முன்னேறி உள்ளது. இதே போல் டெல்லி–ஆக்ரா விரைவுச் சாலையினால் கிரேட்டர் நொய்டா பகுதியும் தொழில் துறையில் முன்னேறி உள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம், கருநாடகா மற்றும் கேரள மாநிலங்களுக்கு செல்லும் வாகனங்கள் இந்த பசுமைவழி விரைவுச் சாலையில் செல்வதனால், தற்போதுள்ள சென்னை–பெங்களூரு மற்றும் சென்னை–மதுரை தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து குறைவதோடு மட்டுமின்றி, விபத்துகளும் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது. இவ்விரு தேசிய நெடுஞ்சாலைகளிலும் காற்று மாசுபடுவது மற்றும் ஒலி மாசுபடுவது வெகுவாக குறையும்.

அது மட்டுமல்லாமல், இந்த பசுமைவழி விரைவுச் சாலையினால், தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை, செங்கம், அரூர் மற்றும் பல வட்டங்களில், தொழில் வளர்ச்சி அடைய, நிறைய வாய்ப்புகள் ஏற்படும்.

திருவண்ணாமலையில் இருக்கின்ற உங்களுக்கும் தான் சேர்த்து சொல்கிறேன்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக சென்னை கிண்டியில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் அலுவலகம் அமைக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தேவையான நிலங்கள் அளவீடு பணிகள் செய்யப்பட்டு, கையகப்படுத்தும் பணியும், சம்மந்தப்பட்ட மற்ற துறைகளிடமிருந்து அனுமதி பெறும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்த பசுமைவழி விரைவுச் சாலை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இந்நிறுவனம், சாலை அமைப்பதற்கு தேவையான நிலங்களை அளக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

02.05.2018 அன்று சேலம் மாவட்டத்தில் உத்தமசோழபுரம் என்ற இடத்தில் நிலங்களை அளப்பதை சிலர் தடுத்ததினால், காவல்துறை அலுவலர்கள், அந்த இடத்திற்கு உடன் சென்று, சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தவிர்த்தனர்.

திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும், நிலங்களை அளப்பதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். 01.05.2018 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பும் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த பசுமைவழி விரைவுச் சாலை பற்றி தேவையற்ற சந்தேகங்களைப் போக்கவும், சரியான விவரங்களை பொதுமக்களுக்கு கொடுக்கவும் நான் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

- தற்போது இருக்கின்ற இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்தும்போது கையகப்படுத்தப்படும் நிலங்களில் சுமார் 400 ஹெக்டேர் நிலம் அரசு புறம்போக்கு நிலங்கள் என்பதாலும்,
- மிக குறைவான எண்ணிக்கையிலேயே வீடுகள், கட்டடங்கள் மட்டுமே பாதிக்கப்படும் என்பதாலும்,
- இந்த பசுமைவழி விரைவுச் சாலை நேர்பாட்டில் முக்கிய நகரங்கள் ஏதும் இல்லை என்பதாலும்,
- விபத்துக்களை குறைத்து பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் திட்டம் என்பதாலும்,
- பெருகி வரும் வாகன போக்குவரத்திற்கு தேவையான கொள்ளளவை இத்திட்டம் நிவர்த்தி செய்யும் என்பதாலும்,
- நில உடைமைதாரர்களுக்கு போதுமான அளவு இழப்பீடு, அதாவது தங்க நாற்கர வழி சாலை திட்டத்தின் போது வழங்கப்பட்ட இழப்பீட்டை விட, குறைந்தபட்சம் இரண்டரை மடங்கிலிருந்து அதிகபட்சம் நான்கு மடங்கு வரை அதிக இழப்பீடு புதிய நில எடுப்பு சட்டத்தின்படி கிடைக்கும் என்பதாலும்,

* இந்த பசுமைவழி விரைவுச் சாலை கடந்து செல்லும் பின்தங்கிய பகுதியில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்பதாலும்,

* இந்த பசுமைவழி விரைவுச் சாலையானது தடுப்புச் சுவருடன் கூடிய தடங்கல் அற்ற 8 வழிச்சாலையாக அமைவதால், விபத்துகள் வெகுவாக குறைந்து, விலைமதிப்பில்லாத மனித உயிர் காக்கப்படும் என்பதாலும்,

தற்போதுள்ள சென்னை—பெங்களூரு மற்றும் சென்னை—மதுரை தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவதை போல, பசுமைவழி விரைவுச் சாலை திட்டதினால் பாதிப்புகள் மிகவும் – குறைவாகவும், பயன்கள் அதிகமாகவும் இருப்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்துவது அவசியமாகும்.

எனவே, பொதுமக்களும், அமைப்புகளும் உண்மை நிலையினை அறிந்து, எதிர்ப்பினை கைவிட்டு, திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட தங்க நாற்கர சாலை மற்றும் வடக்கு தெற்கு வழித்தடம் அமைக்கும்பொழுது, கிருஷ்ணகிரி—தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் வனப்பகுதியிலும் மற்றும் ஒசூர்—கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் பேரண்டபள்ளி வனப்பகுதியிலும் மற்றும் திருநெல்வேலி—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் வல்லநாடு வனப்பகுதியிலும் சாலை அமைக்கப்பட்டது. இந்த திட்டங்கள் அனைத்தும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசினால் திட்டமிடப்பட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசினால் செயல்படுத்தப்பட்டது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்தில் நான் இருப்பதினால், தேவையில்லாத குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். அதை நான் முழுமையாக விளக்கியாக வேண்டும். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைய

நிலம் எடுப்பதாக சொன்னார். அப்பொழுது, உங்களுடைய கட்சியை சேர்ந்தவர் மத்தியிலே அமைச்சராக இருந்தபோது, கிட்டத்தட்ட 17 தேசிய நெடுஞ்சாலைகள் எடுக்கப்பட்டன. அதை நான் தவறாக சொல்லவில்லை. ஆகவே, இதை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். ஏதோ, மாண்புமிகு அம்மாவுடைய அரசு கொண்டு வந்த சாலையிலே அதிக நிலத்தை எடுப்பதாகவும், நிறைய பேர் பாதிக்கப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டை சொல்லுகிறீர்கள், அது தவறு என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சென்னை–சேலம் பசுமை விரைவுச் சாலை திட்டம் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அளித்த விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004–லிருந்து 2009ஆம் காலத்திலே 3,029.65 ஹெக்டேர் நிலம் இத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே, கடந்த காலத்திலே உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர், மத்தியிலே அமைச்சராக இருந்த காலத்திலே எவ்வளவு ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு சாலை, பல்வேறு சாலைகள் இருக்கின்ற போது, இந்த சாலை எதற்கு என்று சொன்னதாக சொன்னீர்கள். இது மத்திய அரசிடமிருந்து பெறப்படுகின்ற சாலை. கிடைக்கின்றபோதே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான், ஒரு அரசினுடைய நிலைப்பாடு. ஆகவே, இன்றைக்கு நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறோம். மத்தியிலே ஆளுங்கட்சியிலே இடம்பெறவில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இதுமட்டுமல்ல இன்னும் பல்வேறு சாலைகள் அமைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்திருக்கின்றோம். இது எல்லாம் என்னுடைய பதிலுரையில் வரவிருகின்றன. ஆகவே, இங்கே இருக்கின்ற ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எல்லாம், தங்கள் பகுதியிலே சாலைகளை விரிவுபடுத்த வேண்டும், தரமான சாலை கொடுக்க வேண்டும், பாலங்கள் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே,

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக சில பணிகள் செய்கின்றார்கள். அதேபோல, தேசிய நெடுஞ்சாலை மூலமாக பல்வேறு பணிகள் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்த கோரிக்கைளை எல்லாம் மத்திய அரசு ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டு இருக்கின்றன. தமிழகத்திற்கு சுமார் 75,000 கோடி ரூபாய் அளவிற்கு சாலை அமைப்பு பணி செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அரசினுடைய பரிசீலினையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

❖ ❖ ❖

2018–2019ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு அளித்த பதிலுரை (11.06.2018)

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ் மூன்றெழுத்து
அண்ணா மூன்றெழுத்து
எம்.ஜி. ஆர். மூன்றெழுத்து
நட்பு மூன்றெழுத்து
துணிவு மூன்றெழுத்து
வீரம் மூன்றெழுத்து
ஆளுமை மூன்றெழுத்து
அன்னை தமிழகத்தை அறனாக நின்று காத்து,
தன்னையே மெய் வருத்தி தமிழகத்தை உயர்த்திய
தனிப்பெரும் தலைவி நம்
அம்மா மூன்றெழுத்து
தொலைநோக்கு பார்வை,
துணிவுடன் செயல்திறன்,
கட்சியை – ஆட்சியை,
இரண்டு கண்களாய் போற்றி
வெற்றி ஒன்றை மட்டுமே தனதாக்கிக்கொண்ட
நம் அம்மா அவர்கள் –
அந்த இதய தெய்வத்தை வணங்கி,
எனது பதிலுரையை துவக்குகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு சமூகத்தின் ஒழுங்கிற்கும், நல்அமைதிக்கும், இணக்கமான வாழ்க்கை முறைக்கும் – மக்களுக்கிடையே தொடர்பு என்பது, குறிப்பாக

சாலைப் போக்குவரத்து இன்றியமையாதது என்பதைப் பள்ளி பருவத்திலிருந்து நாம் படித்து வருகிறோம்.

இந்தியாவின் மாமன்னர் அசோக சக்ரவர்த்தியைப் பற்றி நமக்கு சொல்லித்தரப்பட்ட முதல் பாடமே

“அசோகர் சாலைகளை அமைத்தார்,
அசோகர் மரங்களை நட்டார்”, என்பதுதான்.

தேகத்தின் நாடி நரம்புகளைப் போன்றவை
தேசத்தின் பாலங்களும், சாலைகளும் ஆகும்.

உடம்பின் நலனை நாடியைப் பார்த்துச் சொல்வதைப் போல, ஒரு தேசத்தின் வளர்ச்சியை அதன் சாலைகளைப் பார்த்துதான் மதிப்பிடமுடியும்.

“நீரின்றி அமையாது உலகு” என்பது போல,
சாலைகள் இன்றி அமையாது வளர்ச்சி!

பொருளாதாரத்தின் அங்கங்களான தொழில்துறை, தொழில்நுட்பம், வேளாண்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு சாலைகள், பாலங்கள் மற்றும் துறைமுகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. பயணிகள் மற்றும் சரக்குகளின் பாதுகாப்பான, சிக்கனமான மற்றும் விரைவான போக்குவரத்திற்கு, மேம்படுத்தப்பட்ட சாலை உட்கட்டமைப்பு வசதிகள் அத்தியாவசியமாகிறது. இதனைச் சீரிய முறையில் செயல்படுத்த 1946ஆம் ஆண்டில் தனித்தன்மை வாய்ந்த துறையாக, நெடுஞ்சாலைத் துறை தோற்றுவிக்கப்பட்டது.

புதிதாக சாலைகள், பாலங்கள் அமைக்கின்ற போதும், மற்றும் இருக்கின்ற சாலைகளை செப்பனிட்டுச் சீரமைக்கும் போதும், புதிய வேலை வாய்ப்புகளும், புதிய வாணிப சந்தைகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், சாலை மற்றும் பாலப்பணிகள், எழுச்சி அடைந்து, ஏற்றம் பெற்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

காலத்தில் அந்த பணிகள் மேலும் சிறப்புற்றன. வரலாற்றின் ஒளிவிளக்குகளாக திகழும் அந்த இருபெரும் தலைவர்களின் வழியில் பயணிக்கும் இந்த அரசும், அந்தத் தலைவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து, தொய்வின்றி ஆற்றிவருகிறது.

எல்லோரையும் இணைக்கும் சாலைகளாகவும், இதயங்களைப் பிணைக்கும் பாலங்களாகவும், செயல்பட்டு வளர்ச்சியை நோக்கிய தமிழ்நாட்டின் நெடிய பயணத்திற்குத் தேவையான அனைத்தையும் செய்து முடிப்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழிகளின்படி செயல்படும் இந்த அரசு மக்களுக்காக ஆற்றிவரும் பணிகளின் சாதனைகள் சிலவற்றை இப்பேரவைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ் நாட்டின் சாலைகளின் மொத்த நீளம் 63,650 கி.மீ ஆகும். இதில் தேசிய நெடுஞ்சாலை மொத்த நீளம் 5,324 கி.மீ. அதில் 2,039 கி.மீ. சாலைகள், மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை (NH) அலகின் மூலமும், 3,285 கி.மீ. சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மூலமும் பராமரிக்கப்படுகின்றன. மேலும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் 11,830 கி.மீ. மாநில நெடுஞ்சாலையும், 11,638 கி.மீ. மாவட்ட முக்கிய சாலையும், 34,858 கி.மீ. மாவட்ட இதர சாலைகளும் உள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தலைமையில் 2011–2016 வரை நடைபெற்ற நல்லாட்சியின் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மக்கள் பணியாற்றி வரும் இந்த அரசு நெடுஞ்சாலைத்துறை மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 12,246 கோடி ரூபாய் மதிப்பில் 12,874 கி.மீ. சாலைகளில் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர சாலை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கு 2,021 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 7,202 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் 650 பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு

மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு, பயணங்களை இனிதாக்குவதில் நெடுஞ்சாலைத்துறை மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் தி.மு.க. ஆட்சிகாலங்களில் சுணங்கிய முக்கியப் பாலப்பணிகள் முடுக்கி விடப்பட்டு விரைந்து முடிக்கப்பட்டன. அந்தவகையில் தென் சென்னையை, வட சென்னையுடன் இணைக்கும் மிக முக்கிய பாலமான வியாசர்பாடி பகுதியில் ரூ.80.68 கோடி மதிப்பில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம், போரூர் சாலை சந்திப்பில் பாலம், திருமங்கலம் சாலை சந்திப்பில் பாலம், மாட்டுமந்தை இரயில்வே கடவில் பாலம் போன்ற பல்வேறு இடங்களில் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்தான் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகும். 2005–06ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் வாயிலாக மாநிலத்தின் சாலை உட்கட்டமைப்பு வசதிகளை ஆண்டு தோறும் சீராக மேம்படுத்த ஏதுவாக தொடர்ந்து நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் சாலையின் கொள்ளளவை அதிகரிக்க கூடிய வகையில் அகலப்படுத்தும் பணிகளும், உறுதிப்படுத்துதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுதிப்படுத்துதல் மற்றும் தள மேம்பாட்டுப் பணிகளால் சாலைகளின் ஆயுட்காலம் அதிகரிக்கிறது.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் 58,326 கி.மீ. நீளமுள்ள சாலைகளில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,072 கி.மீ நீளமுள்ள சாலைகளில் உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் சில முக்கிய பாலப்பணிகளும், புறவழிச்சாலைப்பணிகளும் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. அவைகள்

- சேலம் மாநகரில், திருவாக்கவுண்டனூர் சந்திப்பில் ரூ.26.77 கோடி மதிப்பில், மேம்பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- ரூ.54 கோடி மதிப்பில், மதுரை மாநகரில் காளவாசல் சந்திப்பில் ஒரு மேம்பாலம் அமைப்பதற்கான பணியின் ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.
- வண்டலூர் – மாம்பாக்கம் – கேளம்பாக்கம் சாலை மற்றும் பெரிய தெற்கத்திய சாலை (G.S.T. சாலை) கி.மீ.32/4 சந்திப்பில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணி ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன.
- கோயம்புத்தூர் மாநகரில் ஆத்துப் பாலத்திலிருந்து உக்கடம் வழியாக ஒப்பணக்கார வீதி வரை செல்ல 1.685 கி.மீ நீளத்திற்கு நான்கு வழித்தடத்திலான மேம்பாலம் ரூ.121.82 கோடி செலவில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- சென்னை மாநகரின் சுற்றுப்புறத்தில் உள்ள பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலை, சென்னை – சித்தூர் – பெங்களூர் சாலை உட்பட 7 முக்கிய இணைப்புச் சாலைகளை ரூ.216 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- சென்னை மாநகரில் உள்ள சுரங்கப்பாதைகளில், அண்ணா மேம்பாலம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களில் உள்ள பாதசாரிகள் சுரங்கப்பாதைகளை ரூ.3.60 கோடி செலவில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் பாலப்பணிகள் பல்வேறு தர கட்டுப்பாடு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தர கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி என்ற தனி அமைப்பு நிறுவப்பட்டு பணிகளின் தரம் உறுதிபடுத்தப்படுகிறது.

புறவழிச்சாலை

நகரங்களில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும், கிராமங்களின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் உருவாக்கப்பட்டதுதான் புறவழிச்சாலை. இவற்றால் போக்குவரத்து நெரிசல் கணிசமாக குறைவதுடன், பயணம் இனிதாகிறது, வாகனச் செலவும், பயண நேரமும் குறைகின்றன. விபத்துகளும் பெருமளவில் தவிர்க்கப்படுகிறது.

நெடுஞ்சாலைத்துறை மூலம் 32 நகரங்களுக்கான புறவழிச்சாலைகள் முடிக்கப்பட்டு வாகன போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன. பத்து நகரங்களுக்கான புறவழிச்சாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 38 நகரங்களுக்கு புறவழிச்சாலைகளை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர, 15 நகரங்களுக்கான புறவழிச்சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஒரு நகரத்திற்கான புறவழிச்சாலைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இரயில்வே பணித்திட்டம்

விரைவான பயணத்திற்கும், விபத்தில்லா பயணத்திற்கும் இரயில்வே கடவுகளில் பாலங்கள் அமைப்பதில் நம் மாநிலம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

மாநில சாலைகளில் அமைந்துள்ள 353–ஆள் உள்ள இரயில்வே கடவுகளில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இரயில் வாகனச் செறிவு உள்ள 128 இரயில்வே கடவுகளில் மேம்பாலம் / கீழ்பாலம் அமைக்கப்பட வேண்டும். இவற்றில் 97 பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. மீதமுள்ள 31 இரயில்வே கடவுகளில் முன்னுரிமை அடிப்படையில் மேம்பாலம் / கீழ்பாலம் படிப்படியாக மேற்கொள்ளப்படும். இப்பணி இரயில்வே திட்டப்பணிகளின் கீழ் சம அளவு பணப்பகிர்வு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த காலங்களில் ஒரு இரயில்வே பாலம் கட்டி முடிக்க குறைந்தது 5 முதல் 6 ஆண்டுகள் ஆயின. ஆனால்

தற்போது இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து பணிகள் முடிக்கிவிடப்பட்டதால், 4 ஆண்டுகளில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நபார்டு வங்கி உதவியுடன் சாலை / பாலங்கள் கட்டுதல்

புதிய பாலங்கள் கட்டுதல் / மறுகட்டமைத்தல் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் மேம்பாடு ஆகிய பணிகள் நபார்டு வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் கடந்த 2017–2018 ஆம் நிதியாண்டில், 258 பாலங்களும், 1,523 கி.மீ. நீளமுள்ள 492 சாலைகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP) மற்றும் விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் புதிய பணிகள்

நம் நாட்டிலேயே அதிகமான வாகன நெரிசல் உள்ள நகரங்களில் ஒன்று சென்னை மாநகரமும் ஆகும். மொத்த சாலைகளின் நீளம் அதில் பயணிக்கும் மொத்த வாகனங்களின் எண்ணிக்கை என்ற விகிதாச்சார கணக்கின் அடிப்படையில் வாகன அடர்த்தி கணிக்கப்படுகிறது. சுமார் 54 இலட்சம் வாகனங்கள் உள்ள சென்னை மாநகரம் வாகன அடர்த்தியில் முதலிடத்திலும், இரண்டாவது, மூன்றாவது இடங்களில் புனே, ஐதராபாத் ஆகிய நகரங்களும் உள்ளன. எனவே பெருகிவரும் சென்னை மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத்துறை எடுத்துவருகிறது. சாலையை அகலப்படுத்துதல், பல்லடுக்குப் பாலம் கட்டுதல், பாதசாரிகள் சாலைகளைக் கடக்க தானியங்கி நடைமேம்பாலங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் கண்டறியப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பணிகளைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொண்டு நெடுஞ்சாலைத்துறை முனைப்புடன் செயல்படுகிறது.

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விரிவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பகுதியில் 251 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படுகிறது. 2014–2015ஆம் ஆண்டு முதல் இச்சாலைகளில் மேம்பாட்டு பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை வெளிவட்டச் சாலை – கட்டம் – I மற்றும் II

சென்னை வெளிவட்டச்சாலை முதல் கட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டமான நெமிலிச்சேரி (தே.நெ.205) முதல் மீஞ்சூர் வரையில் 30.50 கி.மீ. நீளம் கொண்ட ஆறு வழித்தடச் சாலை 1,075 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தலின் அடிப்படையில் (DBFOT) அரையாண்டு ஈவுத்தொகை வழங்கும் முறையில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 97 விழுக்காடு சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற வழக்கில் உள்ள பகுதிகளில் விரைவில் தீர்ப்புகளைப் பெற்று சாலைப் பணிகளை முடிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– II

தமிழகத்தில் அதிக போக்குவரத்துச் செறிவுள்ள சாலைகளை மேம்படுத்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II உருவாக்கப்பட்டது. உலக வங்கி நிதி உதவியுடன் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) ஒப்பந்தத்தின் மூலம் 427 கி.மீ நீளமுள்ள சாலைகளைக் கடின தளபுருவம் கொண்ட இருவழிச் சாலைகளாக அகலப்படுத்த, ரூ.1,705 கோடி மதிப்பில் 10 தொகுப்புகளாக பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருதொகுப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பு நிதியாண்டிலேயே முடிக்கப்படும்.

பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு (PPP) முறையில் 116 கி.மீ. நீளமுள்ள – ஒட்டன்சத்திரம் – தாராபுரம் சாலை மற்றும்

திருநெல்வேலி – தென்காசி சாலை பணிகளுக்கு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கோபி – ஈரோடு சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC)

மாவட்டங்களில் உள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை, செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் பராமரிக்கவும், சாலைத் திறனை அதிகரிக்கவும், தொடர்ச்சியான பராமரிப்பினை உறுதி செய்யவும் வடிவமைக்கப்பட்ட திட்டம் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை என்பது ஆகும்.

இந்த ஒப்பந்த முறை மூலம், ஒரே ஒப்பந்ததாரர் மூலம் முதல் நிலை சீரமைத்தல், கால முறை பழுதுபாரித்தல், சிறு அளவிலான மேம்பாட்டுப் பணிகள், சாதாரண பராமரிப்பு மற்றும் அவசரகால சாலைப் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013–2014ஆம் ஆண்டில், பொள்ளாச்சி கோட்டத்தில் ஐந்து ஆண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் முதன்முதலில் தொடங்கப்பட்டது.

பின் இத்திட்டமானது கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் கோட்டங்களில் 2015–2016ஆம் ஆண்டிலும், விருதுநகர் கோட்டத்தில் 2017–2018ஆம் ஆண்டிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் கோட்டங்களில் 1,564 கி.மீ மாநில நெடுஞ்சாலைகளும், 1,382 கி.மீ மாவட்ட முக்கிய சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலை

தமிழ்நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்படவும், புதிதாக தேசிய நெடுஞ்சாலைகள் உருவாக்கப்படவும், மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தோடு தொடர்ந்து

பேசி தமிழகத்தின் தேவைகளை வலியுறுத்தியதின் காரணமாக, மத்திய அரசிடமிருந்து கடந்த 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய நிதியாண்டுகளில் கூடுதலாக நிதி பெறப்பட்டது. மேலும் மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சரோடு சென்னையில் மூன்று கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, சாலைப்பணிகள் தொடர்புடைய பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டுத்திட்டம் 2017–2018இன் கீழ், மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், 1,060 கோடி ரூபாய் மதிப்பிலான 510.07 கி.மீ நீளமுள் 64 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் 1,418.66 கோடி ரூபாய் மதிப்பிலான 322.30 கி.மீ நீளமுள்ள 36 சாலைப்பணிகள் மற்றும் 13 பாலப்பணிகள் நிலுவைப்பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 250.83 கி.மீ நீள 19 சாலைப் பணிகள் மற்றும் 6 பாலப்பணிகள் 664.48 கோடி ரூபாய் செலவில் 2017–2018இல் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்

மாநிலத்தின் பொருளாதார மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கான பல்வேறு சாலை உள்கட்டமைப்பு திட்டங்களை மாநில நிதி, மத்திய நிதியுதிவி மற்றும் வெளிப்புற நிதியுதவித் திட்டங்கள் மூலம் நெடுஞ்சாலைத்துறை செயல்படுத்திவருகிறது. நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்புத்துறை அறிவித்த 5 தொழில்துறை வழித்தடங்களில், கிழக்குக் கடற்கரைப் பொருளாதார நெடுஞ்சாலையும் (ECEC) ஒன்றாக கருதப்படுகின்றது. கிழக்குக் கடற்கரைப் பொருளாதார நெடுஞ்சாலையை ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் உதவி பெற்று மேம்படுத்துவதற்கு இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.

23 மாவட்டங்கள் (13 கடலோர மாவட்டங்கள், 10 உள் மாவட்டங்கள்) மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் NH–7, NH–45 மற்றும் SH–49 ஆகியவற்றை இணைக்கும் வகையில்

சென்னை – கன்னியாகுமரி – இன்டஸ்டிரியல் காரிடார் (CKIC) திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட பயன்விளை மண்டலத்தில், சாலை உள்கட்டமைப்பின் கீழ், ஆறு கட்டங்களில் மேம்படுத்துவதற்கு 8,047 கி.மீ. சாலைகள் கண்டறியப்பட்டுள்ளது. இது 4,318 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 3,729 கி.மீ மாநில நெடுஞ்சாலைகளை உள்ளடக்கியது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள 15 சாலை திட்ட பணிகள், 6,448 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படும். இதில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவித் தொகையான 3,288 கோடி ரூபாய் போக, மீதமுள்ள தொகையை மாநில அரசே ஏற்கும்.

பொதுப்பணித் துறை

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!

வெற்றி என்றால் அம்மா
சாதனை என்றால் அம்மா!
சரித்திரம் என்றால் அம்மா!
சகாப்தம் என்றால் அம்மா!
என்பதை இந்த மண்ணுக்கு உணர்த்தி
எங்களையெல்லாம் விட்டு விண்ணுக்குச் சென்ற
மனித சக்தி கடந்த மகா சக்தி,
ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் சக்தி,
எட்டு கோடி தமிழர்களின் இதய சக்தி,
அம்மா என்னும் அற்புத சக்தியின்
திருவடியினை மீண்டும் ஒருமுறை பணிந்து வணங்குகிறேன்.

பழம்பெரும் அரசு துறைகளில் ஒன்றான பொதுப்பணித்துறையின் கட்டடப்பிரிவு மிகுந்த அர்ப்பணிப்புடன் கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதுடன் அரசுக்கு அசையா சொத்துக்களை உருவாக்குகிறது. புதிய அறிவியல் மற்றும் நவீன

தொழில்நுட்பங்களை கொண்டும் இந்திய தர நிருவன விதிகளில் தரப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில், பாதுகாப்பான கட்டடங்களை கட்டி வருகிறது.

பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பு மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப கட்டடங்களை கட்ட திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட கட்டட தொடர்புடைய பணிகளை திறம்பட செயல்படுத்திவருகிறது.

வாழ்ந்தவர் கோடி – மறைந்தவர் கோடி,
மக்களின் மனதில் நிற்பவர் யார் ?

என்ற கேள்வியை எழுப்பிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அதற்கான பதிலையும் கூறினார்.

மாபெரும் வீரர், மானம் காப்போர்
சரித்திரம் தனிலே நிற்கின்றார்.

ஆம், இந்த இலக்கணத்திற்கு ஏற்ப தனது வாழ்வை, மாபெரும் வீராங்கணையின் வாழ்வாக மாற்றிக்காட்டியவர் நம் அம்மா.

தமிழர்கள் உரிமைகளை காக்கின்ற மகத்தான தலைவராக, சரித்திரத்திலே இடம் பெற்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்த பின்னும், கட்சி பாகுபாடின்றி லட்சோபலட்சம் மக்கள் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடத்திற்கு வந்து செல்வதிலிருந்து அறியலாம்.

பொது வாழ்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மக்கள் பணியாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவகத்தை, இவ்வையகம் போற்றும் வகையில் மிக பிரம்மண்டமான நினைவகம் 50 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக, அண்மையில் கட்டுமான பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மிகச்சிறப்பாக மேற்கொள்வதற்கு பொதுப்பணித் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், அரசு துறைகளான சமூக நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை, நீதித்துறை, வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை, வணிகவரித்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, கால்நடைத்துறை, மீன்வளத்துறை போன்ற 32 துறைகளுக்கான கட்டடங்களை தேவைக்கு ஏற்ப மிகச்சிறப்பான முறையில் பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவு கட்டித் தருகிறது.

பொதுப்பணி கட்டடத்துறை அரசு அலுவலகங்கள், பிரத்யோக அலுவலக உபயோக கூடம் கட்டுதல் மட்டுமல்லாமல், நீதிபதிகள், மற்றும் அலுவலர் குடியிருப்புகளை மிகச்சிறப்பாக, குறித்த காலக்கெடுவில் கட்டுவதற்கும் செயல்பட்டு வருகிறது என்பதை பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

‘பொதுப்பணித்துறை – பாசனம்’

நீர்,
இயற்கை – உலகிற்கு வழங்கிய அருட்கொடை.
அதன் தன்மையால் – தண்ணீர் – எனச் சொல்கிறோம்.
தண்ணீர் இல்லாமல், உலகம் இல்லை.
தண்ணீரைத் தருவது, மழை
ஆற்று நீரும், ஊற்று நீரும், நிலத்தடி நீரும் –
மழையின்றி இல்லை
மழையைத் தருவது வான் –

அதனால்தான் மழையை “வான் சிறப்பு” என்று பெருமை பொங்க சொன்னார் வள்ளுவர் பெருந்தகை.

மழை நீர் விவசாயத்திற்கு எவ்வளவு அவசியமானது என்பதையும், அப்படி மழையால் பெறப்படும் தண்ணீரை பாசனத்திற்கு முறைப்படி பயன்படுத்துவதன் அவசியத்தையும் எடுத்து உரைத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை. இன்று இந்த உலகிற்கே மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பது தண்ணீர் பற்றாக்குறைதான்.

உலக மக்கள் தொகையில் 18 விழுக்காடு மக்கள் வாழும் நம்நாட்டிற்கு, உலக மொத்த தண்ணீர் அளவில் 4 விழுக்காடுதான்

கிடைக்கிறது. எனவே கிடைக்கின்ற தண்ணீரை சிறப்பாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தி வேளாண்மைக்கும், பொதுமக்களின் அன்றாட பயன்பாட்டிற்கும் அளிப்பது ஒரு அரசினுடைய அடிப்படை கடமைகளில் முதன்மையானது. இந்த புரிதலின் அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் அரசினுடைய நீர் பாசன கொள்கையும், நடைமுறையும் அமைந்துள்ளன.

காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டது

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவேரி நதி நீரில் தமிழ் நாட்டிற்கு உரிய பங்கினை பெற மேற்கொண்ட முயற்சிகளும், சட்டப் போராட்டங்களும் மகத்தானவை.

உச்சநீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு, மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கும் மகிழ்ச்சியான சூழலில், தமிழகத்திற்கு கிடைத்திருக்கும் இந்த வெற்றியை, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்பதில் மனநிறைவடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழ்பாடி "நடந்தாய் வாழி காவேரி" என்று நெஞ்சம் இனிக்க, நாவினிக்க வணங்கி மகிழ்கிறேன்.

காவேரி நதிநீர் பங்கீட்டில் தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டிட, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அவருடைய அடிச்சுவட்டில் நடைபோடும் இந்த அரசும் மேற்கொண்ட நடவடிக்கைகளை இப்பேரவையில் ஏற்கெனவே நான் பலமுறை பதிவு செய்துள்ளேன். இருப்பினும் இத்தருனத்தில் முக்கிய நிகழ்வுகளை நினைவுகூற விரும்புகிறேன்.

உச்சநீதிமன்றத்தில் 16.02.2018 அன்று வரைவு திட்டம் விவாதிக்கப்பட்டு, திருத்திய வரைவு திட்டத்தை 17.05.2018 அன்று மத்திய அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம்

உத்தரவிட்டது.

இந்த உத்தரவின் பேரில் மத்திய அரசு 17.05.2018 அன்று புதுடெல்லியை தலைமையகமாகக் கொண்ட காவேரி நீர் மேலாண்மை ஆணையம் (Cauvery Water Management Authority) மற்றும் பெங்களூருவை தலைமையகமாகக் கொண்ட காவேரி நீர் முறைப்படுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) ஆகிய அமைப்புகளைக் கொண்ட திருத்திய வரைவு திட்டத்தினை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

உச்சநீதிமன்றம் 18.05.2018 அன்று வெளியிட்ட இறுதி தீர்ப்பில் மத்திய அரசு தாக்கல் செய்த திருத்திய வரைவு திட்டத்தினை ஏற்றுக்கொண்டு –

- ✶ இந்த வரைவு திட்டத்தினை மத்திய அரசு அரசிதழில் வெளியிடும் என்றும்
- ✶ மற்றும் எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்து இவ்வழக்கினை முடித்துவைத்தது.

மத்திய அரசும் 01.06.2018 அன்று காவேரி நீர் மேலாண்மை ஆணையம் (Cauvery Water Management Authority) மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) ஆகிய அமைப்புகளைக் அமைத்து, மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டது.

வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை அரசிதழில் வெளியிட்ட இந்த நாள் – இனிய நாள் – மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சிக்கு – பூரண வெற்றி கிடைத்த நாள். தமிழகத்தின் காவேரி நீரின் உரிய பங்கினை பெற்றுத் தருவதற்காக அவர் எடுத்த முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்பதனை இப்பேரவையில் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

முல்லைப் பெரியாறு அணை

மாண்புமிகு அம்மா அவர்களின் சட்டப் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்று உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி மேற்பார்வை குழுவின் பரிந்துரையின் பேரில் முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்த்தப்பட்டது.

அணையின் முழுக்கொள்ளளவான 152 அடி வரை நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை

உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி அணையை பலப்படுத்தும் 6 பணிகளில் 3 பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு கேரள வனத்துறை அனுமதி அளிக்காததால், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் இசைவு தாமதமாகிறது. கேரள அரசு ஒத்துழைப்பு நல்காததால், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு அரசின் சிறப்பு வழக்கறிஞர்கள் மூலம் இவ்வழக்கில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பரப்பு பகுதியில் கேரள அரசால் மேற்கொள்ளப்பட இருந்த வாகன நிறுத்த கட்டுமானத்திற்கான தடை

கேரள அரசு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்பு உள்ளடக்கிய பகுதியில் பெரு வாகன நிறுத்தத்தை நிறுவ திட்டமிட்டது. இதனை எதிர்த்து, தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், தமிழ்நாடு அரசும் ஒரு எதிர்வாதியாக தன்னை இணைத்துக்கொண்டு, கேரள அரசு மேற்கொள்ளவிருக்கும் கட்டுமானப் பணிக்கு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது.

தேசிய பசுமை தீர்ப்பாயம், சுற்றுலா வாகனங்களை குமுளி நகரத்தில் நிறுத்திக் கொள்ள 17.02.2017 அன்று பிறப்பித்த உத்தரவில் அனுமதி அளித்தது. எனினும் அந்த இடத்தில் எந்த வளர்ச்சி பணிகளோ, கட்டுமானப் பணிகளோ மேற்கொள்ளக் கூடாது என்றும் ஆணையிடப்பட்டது.

பின்னர் 15.11.2017இல் பிறப்பித்துள்ள ஆணையில், நீர்ப்பரப்பு பகுதி குத்தகையிலுள்ள இடமா என்பதை தீர்மானிப்பது குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளதால், இந்த பிரச்சினையை உச்சநீதிமன்றம் மட்டுமே முடிவு செய்ய இயலும் என்றும் தெரிவித்துள்ளது.

பசுமைத்தீர்ப்பாயம், 15.11.2017 அன்று பிறப்பித்த ஆணையை எதிர்த்து, சிவில் மேல்முறையீட்டு மனு தமிழ்நாடு அரசால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, 04.12.2017 அன்று விசாரித்த உச்சநீதிமன்றம், கேரள அரசிற்கு இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டின் உரிமைகளை என்றும் விட்டுக்கொடுக்கா வண்ணம் அனைத்து முயற்சிகளையும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அம்மாவின் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

பாலாறு நதி நீர் பிரச்சினை

நம் அண்டை மாநிலமான ஆந்திரா வழியாக தமிழ்நாட்டிற்கு பாயும் பன்மாநில நதியான பாலாறு நதியின் குறுக்கே, ஆந்திரா அரசு கணேசபுரம் என்ற இடத்தில் ஒரு அணையினை கட்ட திட்டமிட்டது. விவசாய மக்களின் வாழ்வாதரத்தை என்றும் காக்கும் அம்மாவின் அரசு, உடனடியாக சட்ட நடவடிக்கையினை எடுத்து, உச்சநீதிமன்றத்தில் சிவில் வழக்கு 10.02.2006 அன்று தொடரப்பட்டதால், அணை கட்டும் திட்டம் தடுக்கப்பட்டு இன்றுவரை அத்திட்டத்தை நிறைவேற்றாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பாலாற்றில் சில இடங்களில் தடுப்பணை கட்டுதல் மற்றும் உயரப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் தெரிய வந்தவுடன் அவைகளை தடுக்கவும், உயரத்தை பழைய நிலைக்கு கொண்டுவர

நடவடிக்கை எடுக்கப்பட்டு, குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயத்திற்கு இடையூறுகள் ஏற்படாமல் இருக்க மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டம்

மேற்கு நோக்கி ஒடுகின்ற எட்டு நதிகளில், அதாவது மலைப்பகுதியில் செல்லுகின்ற ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் அதன் கிளை நதிகளான பெருவாரிப் பள்ளம் மற்றும் தூணக்கடவு மற்றும் சமவெளிப்பகுதியில் ஒடுகின்ற ஆழியாறு மற்றும் பாலாறு, ஆகிய நதிகளில் கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும் வகையில் கேரள அரசின் இசைவுடன், தமிழ்நாடு அரசினால், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1955–1960) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது.

இதனால் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய தாலுக்காக்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகிறது. சிறப்பு வாய்ந்த இத்திட்டத்தின் மூலம் பெறும் பயன்களை மேம்படுத்தவும், இரு மாநில ஒப்பந்தத்தை ஆய்வு செய்து நீர் ஆதாரத்தை அதிகரிக்கவும், தமிழ்நாடு – கேரள அரசுகளுக்கிடையே பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அண்மையில் மத்திய நீர் வள குழுமத்தின் தலைவர் முன்னிலையில் இரு மாநில அதிகாரிகளின் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஆனைமலையாறு

ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்திற்கு 2.5 டிஎம்சி அடி நீரை திருப்புவதற்கு ஒப்பந்தபடி உரிமை உண்டு. இத்திட்டத்திற்கு ஒரு துணை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், இடமலையாறு திட்டம் முடிவு பெறவில்லை என கேரள அரசு தொடர்ந்து கூறி வருவதால், ஒப்பந்தப்படி திட்டம் நடைபெற இயலவில்லை. இருப்பினும் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை செயலாக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

நீராறு – நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்பு திட்டம்

நீராறு – நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்பு திட்டத்தில் நல்லாற்றின் குறுக்கே 7 டி.எம்.சி அடி நீரை தேக்கிவைக்க ஒரு நீர்த் தேக்கம் கட்டவும் மற்றும் மேல் நீராறு சிற்றணையிலிருந்து நேரடியாக சுரங்க வழியாக நீரை நல்லாற்று வழியாக திருமூர்த்தி அணைக்கு திருப்பவும், 265 மெகாவாட் நீர்மின் உற்பத்தி செய்யும் பல்நோக்கு திட்டமாகும். நீராறு அணையிலிருந்து திருமூர்த்தி அணைக்கு சுற்றுப் பாதையில் நீரை கொண்டு செல்வதால், நீர் இழப்பைத் தவிர்க்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்கு கேரள அரசின் இசைவும் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பன்மாநில நதி நீரை சிறப்பாக உபயோகிக்கவும் மற்றும் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற நீரை திறம்பட பயன்படுத்தவும் கருத்துருக்கள் பெற்று துரிதமாக திட்டங்களை செயல்படுத்த ஓய்வு பெற்ற பொறியாளர்கள் அடங்கிய இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுக்கள் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினருடன் அண்மையில் 24.05.2018 அன்று கலந்து பேசினேன். விரைந்து கருத்துக்களை அரசுக்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டுள்ளேன் என்பதை இப்பேரவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கோதாவரி ஆற்றின் மிகை நீரில் ஒரு பகுதியை காவேரி ஆற்றிற்கு திருப்புதல்

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, (National Water Development Agency) மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – பாலாறு – காவேரி – வைகை – குண்டாறு இணைப்பு திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை 2004இல் தயாரித்தது.

இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

முதற்கட்டமாக இணைக்கப்பட்டுள்ள ஆறுகளின் மூலம் வழியில் உள்ள மாநிலங்களின் நீர்தேவைகளை நிறைவு செய்தபின்,

தமிழ்நாட்டிற்கு காவேரி (கல்லணை)யில் 1,600 மி.கன.மீ. (57 டி.எம்.சி.) நீர் கிடைக்கப்பெற திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய நீர் மேம்பாட்டு முகமை தெரிவித்திருக்கிறது.

23.11.2017 அன்று சென்னையில் மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நான் கலந்து கொண்டு இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொண்டேன். அப்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களும் இத்திட்டத்தின் மூலம் 125 டி.எம்.சி. நீரை காவேரி ஆற்றிற்கு திருப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு நதிகளை இணைக்கும் திட்டத்தினை அமலுக்கு கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிமராமத்து திட்டம்

நீர்நிலைகளை பயனீட்டாளர்களின் ஒத்துழைப்போடு மீட்டெடுத்து, குடிமராமத்துத் திட்டத்தினை உயிரூட்ட அரசு தீர்மானித்து 2016–2017இல் இத்திட்டம் தொடங்கப்பட்டு, வேளாண் பெருங்குடி மக்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களின் ஏகோபித்த வரவேற்பினையும், பாராட்டினையும் இத்திட்டம் பெற்றுள்ளது என்பதனை இப்பேரவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏரிகள், கால்வாய்கள் மற்றும் வரத்துவாய்க்கால்களைப் பராமரித்தல், மதகுகள், மிகை நீர் கலிங்குகள் மறுகட்டுமானம் செய்தல், ஏரிக்கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் விவசாய சங்கங்கள் அல்லது பாசன சபைகள் அல்லது ஆயக்கட்டுதாரர் மற்றும் ஆயக்கட்டுதாரர்களின் தொகுப்பின் மூலம் செயல்படுத்தப்படும்; மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவீகிதம் விவசாய சங்கங்கள் / பாசன சபைகள் / ஆயக்கட்டுதாரர்கள் ஆகியோரின் உழைப்பு அல்லது பொருள் அல்லது பணப் பங்களிப்பாகப் பெறப்படுகிறது.

2016–2017ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் செலவில் 1,519 குடிமராமத்து பணிகளை 30 மாவட்டங்களில் செயல்படுத்த அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியது. இதில், 1,513 பணிகள் முடிவடைந்து உள்ளன. இதனை தொடர்ந்து தற்பொழுது 1,511 பணிகளுக்கு 328 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வண்டல் மண் வழங்குதல்

1959 தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி, எந்த ஒரு மட்பாண்டம் செய்தல், பொதுமக்கள் வீட்டு உபயோகம் மற்றும் வேளாண் தேவைகளுக்காக மாநிலத்தில் உள்ள ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் (சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள மக்கள் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள ஏரியின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை சம்மந்தப்பட்ட மாவட்ட நிருவாகத்தின் முன்அனுமதி பெற்று விதிமுறைபடி இலவசமாக எடுத்துச் செல்லலாம். இதன் மூலம் நீர்நிலைகளின் கொள்ளவை மீளப்பெற வழிவகை ஏற்படுகிறது.

மாநிலத்தில் மொத்தம் 61.447 மில்லியன் கன மீட்டர் வண்டல் மண் 5,37,756 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதாரத்துறையில் மட்டும் 14.412 மில்லியன் கன மீட்டர் வண்டல் மண் 1,01,618 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்திக்கடவு – அவிநாசி திட்டம்

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டமாக 1,652 கோடி ரூபாய்க்கு மாநில நிதியின் கீழ் செயல்படுத்த அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளது.

காளிங்கராயன் அணைக்கட்டில் இருந்து 230 மீட்டர் கீழ்ப் பகுதியில், பவானி ஆற்றின் குறுக்கே, நீர் சேகரிப்பு கட்டுமானம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து இறவை மற்றும் புவிஈர்ப்பு விசை மூலம் 115.40 கி.மீ தூரம் பிரதான குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீர்க் குறைவாக உள்ள பகுதிகளுக்கும் பாசன வசதி அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் 32 பொதுப்பணித்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய குளங்கள் மற்றும் ஏனைய 971 கசிவு நீர்க் குட்டைகள் ஆகியவற்றை நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மின்சார பயனீட்டு செலவை எதிர்கொள்வதற்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரித்து அருகில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய உபநிலையத்திற்கு வழங்குவதற்கு கூடுதலாக ஒரு திட்டம் 137 கோடி ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுத் திட்டமான, அத்திக்கடவு – அவிநாசி திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகள் இணைப்பு

தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைப்பதற்காக புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து 2,765 மில்லியன் கன அடி உபரி நீரினை உபயோகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் 33,298.07 ஏக்கர் நிலங்களும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 23,610.73 ஏக்கர் நிலங்களும் பாசனப் பயன்பெறும்.

மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (AIBP) கீழ், நிதியை எதிர்நோக்கி 369 கோடி ரூபாய்க்கு நிருவாக

ஒப்புதல் வழங்கப்பட்டு, நான்கு நிலைகளாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் மற்றும் அனைத்து நிலைகளிலும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

மத்திய அரசின் நீண்டகால பாசன நிதியின் கீழ், மத்திய அரசின் நிதியுதவி பெற ஏதுவாக 31.01.2018இல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியுதவியினை பெறுவதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில நிதி திட்டங்கள் – புதிய பாசனக் கட்டமைப்புகளை உருவாக்குதல் – நடைபெறும் பணிகள்

திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில், கண்ணன்கோட்டை இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி திருத்திய மதிப்பீடு 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்காக இரண்டு முறை நிரப்புதலில் ஒரு டி.எம்.சி. அடி நீரினை தேக்கிவைக்கவும் தற்போதுள்ள 696 ஏக்கர் பாசன நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 76 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமத்தின் அருகே, மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி 124 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 4,194 ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறும். இதுவரை 65 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம், மலட்டாற்றின் குறுக்கே மண் அணை, வழிந்தோடி மற்றும் ஆற்று மதகுகள் அமைக்கும் பணிகள் 29 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் 4,243 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும்.

மேலும், 21 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் 2 மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1 ஆகமொத்தம் 3 புதிய வழங்கு வாய்க்கால்கள் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 13,380 ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறும்.

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதனூர் – குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே மைல் 74/3–இல் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தலை மதகுகளுடன் கூடிய ஒரு கதவணை அமைக்கும் திட்டத்திற்கு 31.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலம் கையகப்படுத்த 23.02.2018 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் ஆலங்குளம் வட்டங்களில் உள்ள ஜம்புநதியின் பாசன பகுதிகளுக்கு அம்பாசமுத்திரம் வட்டம், இராமநதியின் வெள்ள நீரினை திருப்பும் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 5 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வு பணிகள் முடிவுற்று, விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையில் உபரிநீர் வழிந்தோடியின் சேதமடைந்த கதவு எண் 1–ஐ, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிக்கு 04.05.2018 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நபார்டு நிதி உதவியுடன் புதிய பாசன கட்டுமானப்பணிகள்

பெருகி வரும் மக்கள் தொகையினால் அதிகரித்துள்ள உணவு மற்றும் குடிநீர் தேவைகளின் பற்றாக்குறையை சரி செய்ய ஏதுவாக,

புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு அதிகபட்ச அக்கறை செலுத்தி வருகிறது. அதன் அடிப்படையில், மாநில நிதியிலிருந்தும், நபார்டு வங்கியின் கடனுதவி பெற்றும், பல்வேறு பாசன உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில முக்கிய திட்டப் பணிகளை இப்பேரவை முன் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு வங்கியின் கடனுதவியுடன் புதிய அணைக்கட்டுகள், தடுப்பணைகள், வழங்கு கால்வாய்கள் மற்றும் ஏரி அமைக்க 138 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 மாவட்டங்களிலுள்ள சுமார் 12,856 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் விதமாக 13 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர, 11 மாவட்டங்களில் சுமார் 9,967 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைய ஏதுவாக புதிய ஏரி, கடைமடை கதவணை, தடுப்பணைகள் மற்றும் தலைமதகு அமைக்க 125 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 15 பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

புதிய பாசன கட்டமைப்புகள் உருவாக்குவதோடு நின்று விடாமல், பல்வேறு காலகட்டங்களில் உருவாக்கப்பட்ட பாசன உள்கட்டமைப்புகளை, அவற்றின் செயல்பாட்டுத்திறன் குறையா வண்ணம், பாதுகாக்கும் பொருட்டு, புனரமைத்து, நவீன படுத்தும் புனரமைப்புப் பணிகளுக்கு அம்மாவின் அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றது. அதன் பொருட்டு, நபார்டு வங்கி கடனுதவியுடன், 7 மாவட்டங்களிலுள்ள சுமார் 54,325 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் விதமாக, 128 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 பணிகள் அணைக்கட்டுகள், ஏரிகள் மற்றும் வழங்கு கால்வாய்களை புனரமைத்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் 5 மாவட்டங்களில் நீர்த்தேக்கம் மற்றும் கால்வாய்களில் 6 புனரமைப்பு பணிகள் 78 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் துவங்கப்படவுள்ளன. இப்பணிகளை செயலாக்குவதன்

மூலம், பல்வேறு மாவட்டங்களில் உள்ள சுமார் 16 இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

அணைகளின் பலம், பாதுகாப்பு மற்றும் இயக்கச் செயல்முறை ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், நீர்வள ஆதாரத்துறை, வேளாண் பொறியியல்துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகிய மூன்று அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகள் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) 38 அணைகளையும் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2012இல் துவங்கிய இத்திட்டத்தின் செயலாக்க காலம் தற்போது ஜூன் 2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி மற்றும் மாநிலத்தின் நிதி பங்களிப்பு 80:20 என்ற விகிதத்திலுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 745 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஆகும்.

மொத்தமுள்ள 69 அணைகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 60 அணைகளில் (கண்காணிப்பு உபகரணங்கள் பொருத்துதல் பணி தவிர) பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 9 அணைகளில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

காவேரி கழிமுகப்பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பருவநிலை மாறுதல் தழுவல் திட்டம்

காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல் தழுவல் திட்டம் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிப் பங்கு 1,092 கோடி ரூபாய் மற்றும்

மாநிலத்தின் பங்கு 468 கோடி ரூபாய் ஆகும். ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் மாநிலத்தின் நிதி பங்களிப்பு 70:30 என்ற விகிதத்திலுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள கீழ்வெண்ணாறு அமைப்பிலுள்ள பாசன கட்டமைப்புகளை மேம்படுத்துல், மீளகட்டுதல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்கு 960 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம், மாநிலத்தின் 29 மாவட்டங்களிலுள்ள 66 உபவடிநிலங்களில் 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில் 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2017ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வளமேலாண்மைத் திட்டத்தின் (நீர்வள நிலவளத் திட்டம்) தொடர் திட்டமாகும்.

இத்திட்டம், நீர்வள ஆதாரத் துறை, மற்றும் தொடர்புடைய 6 துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில், 4 கட்டங்களாக நீர்வள ஆதாரத்துறையின் மூலம் 2,131 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரியின் நீர்ப் பரப்பு பகுதியில் செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல், காவேரி கழிமுகப்பகுதி மற்றும் பிற உபவடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2018 ஜனவரி முதல் செயலாக்கத்தில் உள்ளது.

மத்திய அரசின் நிதியுதவி மற்றும் பங்கீட்டுத் திட்டங்கள் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)

மத்திய அரசின் நிதியுதவியுடன், தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடுப்பணைகள், அணைக்கட்டுகள், படுகை அணைகள் அமைத்தல் மற்றும் நீரொழுங்கிகளைப் புனரமைத்தல் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 2,541 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும். இதுவரை 2 பணிகள், 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. மேலும், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் 16 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம், வல்லவிளைத்துறை கிராமத்திலுள்ள வீடுகளை பாதுகாக்க கடலரிப்புத் தடுப்புச் சுவரினை மறுகட்டுமானம் செய்யும் பணிகளுக்கு 94 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2 பணிகள் துவங்கப்படவுள்ளன.

மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்கள் பெண்ணையாறு (சாத்தனூர் அணை) – செய்யாறு இணைப்பு

இத்திட்டத்தில் சாத்தனூர் அணையின் முழுநீர் மட்ட அளவிலிருந்து 23.55 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும் ஒரு புதிய கால்வாய், செய்யாற்றுடன் ஆலத்தூர் அணைக்கட்டின் மேற்புறத்தில் இணைக்கப்படும். மேலும், மேற்கூறிய பிரதானக் கால்வாயிலிருந்து பிரியும் 28.72 கி.மீ நீளமுள்ள கிளைக்கால்வாய் துரிஞ்சல் ஆற்றுடன் இணைந்து, அதன் மூலம் நந்தன் கால்வாயின் ஆயக்கட்டுகள் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம், பெண்ணையாற்றின் உபரிநீரின் ஒரு பகுதியை திருப்புவதன் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, செங்கம், போளூர், வந்தவாசி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் செஞ்சி ஆகிய வட்டங்களிலுள்ள 46,069 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு) – பாலாறு இணைப்பு

இத்திட்டமானது, அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மாதங்களில், பெண்ணையாற்றில் வரும் வெள்ள நீரில் 3.5 டி.எம்.சி நீரினை பாலாற்றுக்கு திருப்பும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தேசிய நதிநீர் மேம்பாட்டு முகமையின் (NWDA) பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தினை செயலாக்குவதன் மூலம் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மூலம் 23,465 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை தயாரிக்கும் பணிக்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் பணியினை ஆலோசகர் நியமனம் மூலமாக மேற்கொள்ளுவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பேரவையில் நெடுஞ்சாலை, பொதுப்பணி கட்டடங்கள் மற்றும் நீர் ஆதாரம் ஆகிய துறைகள் ஆற்றிவரும் பணிகள் குறித்து எடுத்துரைத்து உள்ளேன். இந்தியாவில் உள்ள மாநிலங்களில், தமிழ்நாடு இயற்கையாகவே நீர் பற்றாக்குறை அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. இருப்பினும், கிடைக்கும் நீரைக் கொண்டு குடிநீர், விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு திறம்பட பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள நீர் ஆதாரங்களை பாதுகாப்பதிலும், ஏரிக் குளங்கள் மற்றும் அணைகளை தூர் வாருதல் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நீர் ஆதாரங்களை பெருக்குவதிலும், அண்டை மாநிலங்களிடம் இருந்து தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதிலும்,

மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் நடைபெறும் இவ்வரசு உறுதியான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய அறிவிப்புகள்

நெடுஞ்சாலைத்துறை

1. புறவழிச்சாலைகள் அமைத்தல்

மாநகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, கடலூர் மாவட்டம் திட்டக்குடி, பெரம்பலூர் நகரம், நாமக்கல் மாவட்டம் இராசிபுரம், நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் குன்னூர், கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், விருதுநகரில் மாநில நெடுஞ்சாலை 41இல் இணைப்புச் சாலை, திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஆகிய நகரங்களில் புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.4.68 கோடியில் தயாரிக்கப்படும்.

2. மாநகராட்சிகளில் சாலை மேம்பாடு செய்தல்

கோயம்புத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, மதுரை ஆகிய மாநகராட்சிகளில், மாநகராட்சிப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளை அகலப்படுத்தி, நடைபாதையுடன் கூடிய வடிகால் வசதி அமைத்து, சாலைச் சந்திப்பு மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை ரூ.5 கோடியில் தயாரிக்கப்படும்.

3. ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்

விழுப்புரம் மாவட்டம் கடலூர்–சித்தூர் சாலையில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் மற்றும் வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூர் – சத்துவாச்சாரி கிராமங்களை இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.50 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

4. பாலங்களை நீட்டித்தல்

கோயம்புத்தூர் மாவட்டம் காந்திபுரத்தில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தில் புதிதாக ஒரு கிளைப் பாலம் அமைத்தல் மற்றும் உக்கடம் உயர்மட்டப் பாலத்தில் உக்கடம் நோக்கி செல்லும் பாலத்தை நீட்டிப்பு செய்தல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட றிக்கை ரூ.10 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

5. மதுரை மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மதுரை, எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் முதல் கூடல் நகர் ரேடியோ நிலையம் வரை புதிய நான்கு வழி இணைப்புச் சாலைகள் ரூ.50 கோடி மதிப்பில் ஒருங்கிணைத்து அமைக்கப்படும். வைகை ஆற்றின் செல்லூர் இரயில்வே மேம்பாலத்தின் கீழ் குலமங்கலம் பகுதியை அடைய சேவைபாலம் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்படும். மேலும் மதுரை நத்தம் சாலை முதல் மதுரை உள்வட்டச் சாலை வரை இணைப்பு சாலை அமைக்கும் பணி மற்றும் மாடக்குளம் ஏரி முதல் திருப்பரங்குன்றம் புறவழிச் சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தின் பசுமலை நோக்கி செல்லும் கிளைப் பாலத்தை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.80 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

6. இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்டுதல் மற்றும் அகலப்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டத்தில் மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலை கி.மீ. 20/8ல் உள்ள இரயில்வே மேம்பாலம் ரூ.12 கோடி மதிப்பில் அகலப்படுத்தப்படும். காஞ்சிபுரம், நாகப்பட்டினம், வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் புதிதாக 7 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சென்னை – திருத்தணி சாலையில் மேலும் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.2.80 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

7. அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்காக பழநியில் கோட்ட அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், திருமயம் மற்றும் ஆலங்குடி ஆகிய இடங்களில் உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம், திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் உதவிப் பொறியாளர் அலுவலகம் ஆகியவை ரூ.2.65 கோடி மதிப்பில் கட்டப்படும்.

8. பயிற்சி மையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

நெடுஞ்சாலைத்துறை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி மையத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.3.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். மேலும், இப்பயிற்சி மையத்தின் மூலம் விக்ரோட்ஸ், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியின் மூலம் 20 பொறியாளர்கள் இரண்டு குழுக்களாக வெளிநாடுகளில் பயிற்சி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

9. சென்னை பெருநகர மாநகராட்சியில் இணைப்பு சாலை அமைத்தல்

கிரீன்வேஸ் சாலை மற்றும் துர்காபாய் தேஷ்முக் சாலைகளை தமிழ்நாடு இசைக் கல்லூரி வழியாக இணைக்கும் வகையில் 650 மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலை ரூ.30 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

10. சென்னை மற்றும் திருப்பூரில் சாலை மேம்பாலம் மற்றும் நடைமேம்பாலம் அமைத்தல்

சென்னை மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு சர்தார் பட்டேல் சாலை மற்றும் ராஜீவ் காந்தி

சாலை ஆகியவற்றை இணைக்கும் மத்திய கைலாஷ் பகுதியில் சாலை மேம்பாலம் அமைத்தல், சென்னை உள்வட்டச் சாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைத்தல் மற்றும் திருப்பூர் மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்ட பாலம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.3 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

11. நபார்டு வங்கி உதவியுடன் பாலங்கள் கட்டுதல்

29 மாவட்டங்களில் உள்ள 1,213 கிராமங்களில் வசிக்கும் சுமார் 60 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், ரூ.638.50 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 188 ஆற்றுப் பாலங்கள் நபார்டு வங்கி கடனுதவியுடன் நடப்பாண்டில் கட்டப்படும்.

12. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல்

2,000 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தி ரூ.800 கோடி மதிப்பில் மேம்பாடு செய்யப்படும்.

13. நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக வாகனங்கள் கொள்முதல்

சாலைப் பணிகளின் தரத்தினை கண்காணிக்க ஏதுவாக கண்காணிப்பு பொறியாளர்களின் பழுதடைந்த 13 சீருந்துகளுக்கு பதிலாக புதிய சீருந்துகள் ரூ.1.30 கோடி மதிப்பில் வாங்கப்படும்.

14. மேம்பட்ட சாலை பராமரிப்பிற்காக இயந்திரங்கள் கொள்முதல்

நவீன தொழில்நுட்பங்களை அரசுத் துறைகளில் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளின் பராமரிப்பை இயந்திரமயமாக்க மற்றும் சாலைகளை சீரிய முறையில் பராமரிக்க,

நொடிகளை சீர் செய்யும் இயந்திரங்கள் (Pot Hole Repairing Machine) கொள்முதல் செய்யப்படும். இவ்வாண்டு, முதற்கட்டமாக மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளை பராமரிக்க நொடிகளை சீர் செய்யும் 12 இயந்திரங்கள் ரூ.8.40 கோடி மதிப்பில் மூன்று ஆண்டு பராமரிப்பு செலவுடன் சேர்த்து கொள்முதல் செய்யப்படும்

15. பாலங்கள் தகவல் அமைப்பை உருவாக்குதல்

மாநிலத்தில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் அனைத்துப் பாலங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய தன்மைகளை ஆய்வு செய்து, பாலங்களின் தன்மைகளை உள்ளடக்கிய பாலங்கள் தகவல் அமைப்பு, துறையின் பாலங்களை பராமரிக்க ஏதுவாக உருவாக்கப்படும்.

16. தயார்நிலை திட்ட தொகுப்பு

சாலை உள்கட்டமைப்புகளுக்கான தேவை அதிகரிப்பதை கருத்தில்கொண்டு, பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை உள்ளடக்கிய திட்டத் தொகுப்பும், அதற்கான விரிவான திட்ட அறிக்கையும் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியமாகிறது. மேலும், இத்தகைய தயார் நிலை விரைவான திட்ட செயலாக்கம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி போன்ற வெளி நிதி ஆதாரத்தை விரைவாக பெறுவதற்கு உதவுகிறது. அதனடிப்படையில், சுமார் 3,319 கி.மீ. சாலைகளை, ரூ.30,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.133 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

17. சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம்

சிறந்த சாலைக் கட்டமைப்பு, பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கை, புதிய வாகனங்களின் திறன், நகரமயமாக்கல், ஆகியவை பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டினாலும், அதிக அளவிலான வாகன விபத்து உயிரிழப்புகள் மாநிலத்திற்கு பெரும் சுமையாகவே இருந்து வருகிறது. சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,360 கோடி

மதிப்பிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாண்டு, கூடுதலாக ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.200 கோடியும் சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.100 கோடியும் ஆக மொத்தம் ரூ.300 கோடி மதிப்பிலான சாலைப் பாதுகாப்பிற்கான பிரத்யேக பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இது தவிர, சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தி விபத்துகளை தடுக்கும் பொருட்டு காவல், சுகாதாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் கூட்டு முயற்சியோடு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும். மேலும், கிழக்கு கடற்கரைச் சாலையில், தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, போக்குவரத்து மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் ரூ.8 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டு சாலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

18. நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு தொழில்நுட்பக் கையேடு வழங்குதல்

நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் அனைத்து பொறியாளர்களுக்கும் நெடுஞ்சாலைத் துறையின் தொழில் நுட்பங்கள் மற்றும் துறையின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியவாறு கையேடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

பொதுப்பணித்துறை

1. கால்வாய் புனரமைப்புப் பணிகள்

பாசனவாய்க்கால்களின் திறனைமேம்படுத்த, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள பாசனக் கால்வாய்கள் மற்றும் அதைச் சார்ந்த அமைப்புகளைப் புனரமைக்கும்பொருட்டு, திருவள்ளூர் மாவட்டம் – ஊத்துக்கோட்டை வட்டம் – கண்டலேறு பூண்டிகால்வாயின் எல்.எஸ் 3.88 கி.மீ முதல் 10 கி.மீ வரையுள்ள கரைகளில் சரிந்த மற்றும் பாதிப் படைந்த பகுதிகள் ரூபாய் 27 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம் – தெற்கு வட்டம் – திருப்பரங்குன்றம் அவனியாபுரத்தில் உள்ள அயன்பாப்பாகுடி கண்மாயின் கால்வாய் ரூபாய் 7 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை மற்றும் திருக்கோவிலூர் வட்டம் – திருக்கோவிலூர் அணைக்கட்டு எல்.எஸ். 0 மீ முதல் 2,400 மீ வரைமலட்டாறு வாய்க்கால் மற்றும் விழுப்புரம் கடலூர் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை மற்றும் பண்ருட்டி வட்டம் – மலட்டாறு கால்வாயின் எல்.எஸ். 24,000 மீ முதல் 40,000 மீ வரை ரூபாய் 23 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம் – மண்ணச்சநல்லூர் வட்டம் – உப்பாறு நீர்த்தேக்கத்தின் வரத்துவாரிகளான ஓமாந்தூர் ஏரிஉபரி நீர் வாய்க்கால் மற்றும் பெரமங்கலம் ஏரிஉபரி நீர் வாய்க்காலினை ரூபாய் 1 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் – கோபிச்செட்டிப்பாளையம் வட்டம் – அரக்கன்கோட்டை கால்வாயின் மைல் 1/2ல் இருந்து 20/1 வரை உள்ள பாசன மதகுகள் மற்றும் கிளைக் கால்வாய்களை ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம் – பெத்தநாயக்கன்பாளையம் வட்டம் – புத்திரக்கவுண்டன் பாளையம் கிராமத்தில் புத்திரக்கவுண்டன்பாளையம் ஏரி வரத்து வாய்க்கால் எல்.எஸ். 0 மீ முதல் 980 மீ வரை ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. அணை மற்றும் படுகை அணை புனரமைப்புப் பணி

திருவாரூர் மாவட்டம் – வலங்கைமான் வட்டம் – கண்டியூர் கிராமத்தில்வெட்டாற்றின் குறுக்கேநெடுகை 102.170 கி.மீஇல் உள்ள செல்லூர் அணைக்கட்டினை ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம் – வலங்கைமான் வட்டம் – அமராவதி கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே நெடுகை 95.630 கி.மீஇல் உள்ளமாத்தூர் படுகை அணை ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

3. ஏரிகளைப் புனரமைக்கும் பணி

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம் பனங்குடி ஏரியை தூர்வாரும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம் – முடிகொண்டான்

கண்மாயினை சீரமைக்கும் பணி ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம் – எருமைக்குளம் ஏரிக்கு தடுப்புச்சுவர் அமைத்து மற்றும் தமராக்கி சாலைப்பாலத்தின் கீழ்ப்புறத்தில் உப்பாற்றின் கரைகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 89 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி வட்டம் – தென்காசி கிராமத்தில் சீவலப்பேரிகுளத்தின் வழிப்பாதையினை செப்பனிடும் பணி ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் – கங்கைகொண்டான் கிராமத்தில் அமைந்துள்ள பராக்கிரம பாண்டியன் குளத்தினை புனரமைக்கும் பணி ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை வட்டம் –தோவாளை பெரியகுளத்தின் மதகு மற்றும் உபரிநீர்ப் போக்கியினை சீரமைக்கும் பணி ரூபாய் 91 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. புனரமைக்கும் பணிகள்

பாசன வாய்க்கால்களின் திறனை மேம்படுத்த, பாசனம் சார்ந்த கட்டுமானங்கள் மற்றும் அமைப்புகளைப் புனரமைக்கும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர் வட்டம் – செம்பரம்பாக்கம் ஏரியில் உள்ள 19 கதவுகளில் ரோலர் அமைப்பு, பக்கவாட்டு மற்றும் அடிப்பக்கசீல் அமைப்புகளை பழுது பார்த்து சீரமைத்தல் மற்றும் 24 நீர்ப்போக்கி கதவுகளை ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம் – நிலக்கோட்டை வட்டம் – அணைப்பட்டியில் பேரணை ரெகுலேட்டர், பெரியாறு பிரதான கால்வாய் மற்றும் இணைப்புக் கால்வாயில் உள்ள கதவுகளை மின் வசதி மூலம் இயக்குவதற்கான வழிசெய்தல் மற்றும் கதவுகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம் – ஆத்தூர் வட்டம் – மருதாநதி அணையின் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் வலது புற பிரதான கால்வாயில் உள்ள ஆற்று மதகு மற்றும் பாசன மதகுகளின் கதவுகளை செப்பனிடும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை வட்டம் – சோலையாறு அணையின் மின் நிலையம் 2 நுழைவாயில் குப்பைத் தடுப்பான் வடிவமைத்து தயாரித்து போக்குவரத்து செய்து

புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை வட்டம் – மேல்நீராறு அணையின் 3ம் எண் நீர்ப்போக்கியில் உள்ள அரிக்கப்பட்ட ஆரவடிவ வழிந்தோடியை மாற்றுதல் மற்றும் சுற்றுமானிகள், மின்காந்ததடுப்புக் கருவி, ஆய்வு மேடை ஆகியவற்றை வடிவமைத்து உருவாக்கி தளத்திற்கு கொண்டு சென்று பொருத்தும் பணி ரூபாய் 3 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டிலும், பாலக்காடு (கேரளமாநிலம்) – பரம்பிக்குளம் அணையின் குகைப்பாதை கால்வாயின் தொடக்கத்தில் உள்ள பழையகுப்பைத் தடுப்பானுக்குப் பதிலாக புதிய குப்பைத் தடுப்பான் வடிவமைத்து உருவாக்கி தளத்திற்கு கொண்டு சென்று பொருத்தும் பணி மற்றும் எல்.எஸ். 4,000 மீட்டரில் உள்ள கதவுகளுக்கு மின் இயக்கு வசதி ஏற்படுத்தும் பணி ரூபாய் 5 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம் – உப்பாறு ஓடை ரெகுலேட்டரின் பழைய துருப்பிடித்த கதவுகளை சீரமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டம் – அரசப்பட்டி அணைக்கட்டில் இருந்து குறையூர் அணைக்கட்டு வரை கவுண்டநதி ஆற்றைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி வட்டம் –அசுவமாநதி ஆற்றின் எல்.எஸ். 0 மீ முதல் 12,500 மீ வரை புனரமைக்கும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் – உப்பாற்றின் குறுக்கே உள்ள குறுக்குக் கட்டுமான அமைப்புகளை புனரமைத்தல் மற்றும் உப்பாற்றினை சீரமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம் – அவிநாசி நகரத்தில் நல்லாற்றின் கரைகளை சீரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

5. புதிய தரைப்பாலம் மற்றும் நடைபாலம் கட்டுதல்

கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில், வேலூர் மாவட்டம் – ஆம்பூர் வட்டம் – ஆம்பூர் நகரம் மளிகை தோப்பு பகுதியிலிருந்து துத்திப்பட்டு கிராமத்திற்கு இடைப்பட்ட பாலாற்றில் தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம் – திருக்காம்புலியூர்

கிராமத்தில் கட்டளை மேட்டு வாய்க்கால் மைல் 1/7 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம் – பிச்சாம்பட்டி கிராமத்தில் கட்டளை மேட்டுவாய்க்கால் மைல் 2/2 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம் –கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் தென்கரைக் கால்வாய் மைல் 3/7 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம் –திருக்காம்புலியூர் கிராமத்தில் தென்கரைக்கால்வாய் மைல் 1/3 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம் – கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் (வலையபாளையம்) தென்கரைக் கால்வாய் மைல் 3/4 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. நீர் நிலைகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசடைதல் குறித்த விரிவான ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்

நீர்நிலைகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசடைதல் குறித்து 8 ஏரிகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

7. உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் பாசனப் பிரிவு

மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சியில் உள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு, சுற்றுச்சூழல் குழும கோட்ட அலுவலகங்கள் மற்றும் உபகோட்ட அலுவலகங்களுக்கான சிறப்பு மராமத்துப் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டத்தில் உள்ள தரக்கட்டுப்பாடு உபகோட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் – திருவாடானை வட்டம் – கீழ் வைகை வடிநில உபகோட்ட அலுவலகங்கள் மற்றும் அதன் இருபிரிவு அலுவலகங்களுக்கு புதிதாக கட்டடம் கட்டும் பணி ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம் – பாசன மேலாண்மைப் பயிற்சி நிலைய

அலுவலக கட்டடம் புதுப்பிக்கும் பணிரூபாய் 1 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம் – பூண்டியில் உள்ள நீரியல் நீர்நிலையியல் மற்றும் நீராய்வு மையத்தின் பாசன அமைப்புகளின் மாதிரி வடிவுகள், ஆய்வுமாளிகை மற்றும் பூங்கா ஆகியவற்றை மேம்படுத்தி பராமரிக்கும் பணி ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

8. பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர்களுக்கு மகிழுந்துகள் வழங்குதல்

நீர்வள ஆதாரத் துறையிலுள்ள தலைமைப் பொறியாளர்கள் திட்டத் தளங்களை செவ்வனே ஆய்வு செய்யும் பொருட்டு, நீர்வள ஆதாரத் துறையில் தலைமைப் பொறியாளர்களின் பழுதடைந்த மகிழுந்துகளுக்குப் பதிலாக புதிய 3 மகிழுந்துகள் ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்

9. உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் (கட்டடப்பிரிவு)

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் அலுவலகத்திற்கு கழிவு செய்யப்பட்ட கணினி மற்றும் உபரிபாகங்களுக்குப் பதிலாக புதிய கணினிகள் மற்றும் உபரிபாகங்கள் ரூபாய் 41 இலட்சம் மதிப்பீட்டிலும், கட்டடத்துறையின் கீழ் இயங்கும் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்குப் பதிலாக புதிய 21 ஈப்புகள் ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும், கட்டடத் துறையின் தலைமைப் பொறியாளர்களின் பழுதடைந்த மகிழுந்துகளுக்குப் பதிலாக புதிய 3 மகிழுந்துகள் ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்படும். மதுரை மாவட்டம் – மதுரையில் அரசு அலுவலர்களுக்கான 100 எண்ணிக்கை கொண்ட ‘சி’ வகை குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலும், சென்னை – சேப்பாக்கத்தில் உள்ள பாரம்பரியமிக்க புராதன கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும், சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),

சென்னை மண்டலம், சென்னை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலும், சென்னை – அடையாறில் மாண்புமிகு அமைச்சர்களுக்கான 4 எண்ணிக்கை குடியிருப்புகள் கட்டும் பணி ரூபாய் 9 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டிலும், சென்னை – சேப்பாக்கத்தில் உள்ள தீயினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான புனரமைக்கும் பணி ரூபாய் 36 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

கோவை மாநகரில் புதிய தலைமுறை தொலைக்காட்சியின் வட்டமேசை விவாத நிகழ்ச்சியின் போது ஆட்சேபகரமான கருத்து பதிவு செய்தது தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய தலைமுறை தொலைக்காட்சியினர், தொடர் போராட்டங்கள் அடிப்படை உரிமைகளுக்காகவா ? அரசியல் காரணங்களுக்காகவா ? என்ற தலைப்பில் வட்டமேசை விவாதம் ஒன்றை, கோவை மாநகர், பீளமேடு, ஆவாரம்பாளையத்திலுள்ள ஒரு தனியார் கல்லூரி வளாகத்தில் உள்ள கலையரங்கம் ஒன்றில், உள்ளரங்க கூட்டமாக 08.06.2018 அன்று மாலை நடத்த விண்ணப்பிக்க விவரம் கேட்டு, கோவை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தை 04.06.2018 அன்று அணுகிய போது, காவல் துறையினர், மத ரீதியாக பதற்றம் நிறைந்த கோவை மாநகரில் சர்ச்சைக்குரிய இம்மாதிரியான கூட்டங்கள் நடத்துவது சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என அறிவுறுத்தியுள்ளனர்.

அப்போது தொலைக்காட்சி நிறுவனத்தினர், நிகழ்ச்சிக்காக முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்துவிட்டதாகவும், உள்ளரங்க கூட்டமென்பதால், கோவை மாநகரில், முக்கிய இடங்களில் பிளக்ஸ் போர்டுகளை வைத்து விளம்பரம் செய்து கொள்ள மட்டுமாவது அனுமதி வழங்குமாறு கோரியதற்கு, காவல் துறையினர் மறுத்துள்ளனர். பின்னர், அத்தொலைக்காட்சி நிறுவனம் சார்பில், அதன் நிருபர் திரு.சுரேஷ்குமார் என்பவர் மீண்டும் அதே கோரிக்கையுடன் காவல் துறையினரை அணுகிய போது, காவல் துறையினர் உள்ளரங்க நிகழ்ச்சியாக இருந்தாலும், காவல் துறை தடையின்மைச் சான்று வழங்கினால், அது அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி ஆகி விடும் என்று எடுத்துரைத்துள்ளனர். அதற்கு, திரு.சுரேஷ்குமார், தங்கள் நிறுவனம் அந்நிகழ்ச்சி குறித்து

ஏற்கெனவே தொடர்ந்து விளம்பரம் செய்து வருவதை சுட்டிக்காட்டி, வாய்மொழியாக அனுமதி கோரிய போது, காவல் துறையினர் அதற்கு வாய்ப்பில்லை என அறிவுறுத்தி அனுப்பியுள்ளனர்.

இருப்பினும், 05.06.2018 அன்று, புதிய தலைமுறை செய்தியாளர் திரு. சுரேஷ்குமார், வட்ட மேஜை விவாத நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கக்கோரி கடிதம் ஒன்றை பீளமேடு காவல் நிலையத்தில் அளித்துள்ளார். அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட நிலைய எழுத்தர், உயர் அதிகாரிகளிடம் கேட்டு பதில் சொல்வதாக அவரிடம் சொல்லி அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், போலீஸாரின் அனுமதியின்றி, 08.06.2018 அன்று, மாலை புதிய தலைமுறை தொலைக்காட்சி சார்பில், அதே தனியார் கல்லூரி கலையரங்கில், வட்டமேசை விவாதம், அத்தொலைக்காட்சியின் நிருவாக ஆசிரியர் திரு.கார்த்திகைசெல்வன் தலைமையில் துவங்கியது.

இவ்விவாதத்தில், மேட்டூர் சட்டமன்ற தொகுதி அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.செம்மலை, தி.மு.க. மாநில அமைப்பு செயலாளர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன், பாஜக மாநிலத் தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், த.மா.கா. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஞானதேசிகன், சி.பி.எம். மாநில செயலாளர் திரு.கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை நிறுவனத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் திரு.தனியரசு, திரைப்பட இயக்குநர் திரு.அமீர், திரு.செ.கு.தமிழரசன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். மேலும், விவாத நிகழ்ச்சியை பார்ப்பதற்காக சுமார் 800 பேர் அரங்கத்தில் கூடியிருந்துள்ளனர்.

போலீஸார் அனுமதி வழங்காதபோதும், பல கட்சி மற்றும் அமைப்புகள் சார்ந்த தலைவர்கள் பங்கு பெறுவார்கள் என்ற காரணத்தால், போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி, அன்று மாலை 5.55 மணிக்கு துவங்கி, சுமார் ஒன்றரை மணி நேரம் எவ்வித பிரச்சினையுமின்றி நடந்து கொண்டிருந்த

நிலையில், சட்டமன்ற உறுப்பினர் திரு.தனியரசு, பாபர் மசூதி இடிப்பு மற்றும் விவாத தலைப்பிற்கு தொடர்பில்லாத சங்கதிகளைப் பற்றி குறிப்பிட்ட போது, கூட்டத்தில் சற்று சலசலப்பு எழுந்துள்ளது. பின்னர், திரைப்பட இயக்குநர் அமீர் சர்ச்சைக்குரிய சில கருத்துக்களை பேசிய போது, அரங்கத்தில் அமர்ந்திருந்த ஒரு குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்கள், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒருமையில் கோஷமிட்டுள்ளனர். அப்போது மேடையிலிருந்த அக்கட்சியின் மாநிலத் தலைவர், அவர்களை சமாதானம் செய்தும், கூச்சலும், குழப்பமும் தொடர்ந்து இருந்து வந்ததால், அந்நிகழ்ச்சி இரவு 8.05 மணிக்கு முடிக்கப்பட்டது.

உள்ளரங்க கூட்டமாக இருந்த போதிலும், பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட்டிருந்த ஒரு காவல் ஆய்வாளர் மற்றும் 40–க்கும் மேற்பட்ட காவலர்கள் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு, கூட்டத்தை கட்டுப்படுத்தி, எவ்வித அசம்பாவிதமும் இன்றி, தலைவர்களை பாதுகாப்புடன் அரங்கத்தைவிட்டு அனுப்பியும், மாநகரத்தில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தும், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து, கலையரங்கத்தின் பொறுப்பாளர் திரு.சுந்தரராஜன் 09.06.2018 அன்று, பீளமேடு காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், திரைப்பட இயக்குநர் திரு.அமீர் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மேலும், கலையரங்கின் மேலாளர் திரு.ஆனந்தகுமார் என்பவர் அன்றே பீளமேடு காவல் நிலையத்தில் அளித்த புகாரில், புதிய தலைமுறை தொலைக்காட்சியின் நிருபர் திரு.சுரேஷ்குமார் என்பவர், நிகழ்ச்சிக்கு அரங்கத்தை பதிவு செய்த போது, வட்டமேசை விவாத நிகழ்ச்சியை மாணவர்களை வைத்து நடத்துவதாக தெரிவித்துவிட்டு, விவாதத்தில் எதிர்மறைக் கருத்துக்கள் கொண்ட பிரமுகர்களை அழைத்து, அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடு விதிக்காமலும், நிகழ்ச்சியை பார்க்க வருபவர்களை பதிவு செய்யவும், அவர்களை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும்

எவ்வித முன்னேற்பாடுகளும் செய்யாமல், நிகழ்ச்சியின் போது சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பேசப்பட்டால் பிரச்சினை வரும் என்று தெரிந்தும், சிலரை பேச அனுமதித்து பிரச்சினை ஏற்படுத்தியதற்காக நிருபர் திரு.சுரேஷ்குமார் மீதும், தொலைக்காட்சி நிறுவனம் மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார்.

இது தொடர்பாக, காவல் துறையினர் குற்ற எண். 964/2018, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 153 (A), 505 மற்றும் தமிழ்நாடு பொது சொத்திற்கு சேதம் விளைவித்தல் மற்றும் இழப்பு தடுப்பு சட்ட பிரிவு 3(1)இன்படி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

10.06.2018 அன்று பீளமேடு காவல் நிலையத்தில் புதிய தலைமுறை தொலைக்காட்சியின் நிறுவனத்தினர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல், புதிய தலைமுறை தொலைக்காட்சியின் செய்தியாளர் குமாரி ஐஸ்வர்யா அவர்களிடம் வழங்கப்பட்டது.

சர்ச்சைக்குரிய வகையில் இயக்குனர் திரு. அமீர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகள், காவல்துறையினரால் அனைவரும் வெளியேற்றப்பட்ட நிகழ்வுகள் உட்பட மேலும் சில காட்சிகள் வெட்டப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு விவாத மேடை காட்சியானது, ஒளிபரப்பப்பட்டு வருகிறது. வெட்டுக்கள் ஏதும் இல்லாத, ஆட்சேபகரமாக திரு. அமீர் தெரிவித்த கருத்துக்கள் அடங்கிய வீடியோ பதிவு, போலீஸார் வசம் உள்ளது.

தனியார் தொலைக்காட்சி நிறுவனம், காவல் துறையின் முன் அனுமதியின்றி, தவறான தகவல்களை கல்லூரி நிருவாகத்திற்கு அளித்து கலையரங்கை பதிவு செய்து, முறையான முன்னேற்பாடுகள் செய்யாமலும், கட்டுப்பாடுகள் விதிக்காமலும் நிகழ்ச்சியை நடத்தியதால், அந்நிகழ்ச்சியின் போது பார்வையாளர்களிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டதாக, அத்தொலைக்காட்சி நிறுவனத்தின் மீதும், அந்நிகழ்ச்சியின் போது ஆட்சேபகரமாக பேசிய திரு. அமீர் அவர்கள் மீதும், கல்லூரி நிருவாகம் அளித்த புகார்களின் பேரில் மட்டுமே, காவல் துறையினர் இரண்டு வழக்குகளை பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விவாத மேடை நிகழ்ச்சியில் தூத்துக்குடி நிகழ்வுகளைப் பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் முழுமையான அமைதி நிலவி வரும் சூழ்நிலையில், இதுபோன்ற விவாதங்கள் தூத்துக்குடியில் சட்ட ஒழுங்கை பாதிக்கக்கூடும். தூத்துக்குடி நிகழ்வுகள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் வழக்குகள் நிலுவையிலுள்ள தருணத்திலும், ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தருணத்திலும், இதுபோன்ற விவாதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

மேலும், அந்நிகழ்ச்சி நடைபெற்ற போது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போதுமான காவலர்கள் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டதன் காரணமாகவே, பிரச்சினை ஏற்பட்டபோது, அவர்கள் உடனடியாக தலையிட்டு, மோதல் ஏதும் நடக்காமல் தடுத்து, அனைவரையும் பாதுகாப்புடன் அனுப்பி வைத்துள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் காவல் துறையினர் வழக்குகள் பதிவு செய்துள்ளதை குறிப்பிட்டு, அவ்வழக்குகளை திரும்ப பெற வேண்டுமென சில பத்திரிகை சங்கங்களும், சில அரசியல் கட்சி தலைவர்களும் கோரியுள்ளனர். இது தொடர்பாக காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதால், விசாரணை முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, பேச்சுரிமைக்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் எப்போதும் மதிப்பும் முன்னுரிமையும் அளித்து வருகின்ற அரசு. இருப்பினும், இது போன்ற பொது நிகழ்ச்சிகள், மதரீதியாக அல்லது சட்டஒழுங்கை பாதிக்கக்கூடிய வகையில் அமையுமேயானால், அதனை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டிய தலையாய பொறுப்பு அரசுக்கு உண்டு. மேலும், மதரீதியான பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ள மாநகரமான கோவை மாநகரில், சர்ச்சைக்குரிய கருத்துக்களை பதிவிடுவதும், பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும்

வகையிலான தலைப்புகளுடன் நிகழ்ச்சிகளை அமைப்பதும், சட்டஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வேண்டுமென்றே பதிவு செய்யும் பங்கேற்பாளர்களைக் கொண்ட எந்த ஒரு விவாத நிகழ்ச்சியையும் நடத்தலாமா ? என்ற பொறுப்புணர்வுடன் ஊடகங்களும் செயல்படவேண்டும் என இப்பேரவையின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், அங்கே கலந்து கொண்டவர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டார்கள். தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் புதிய பாலங்கள் கட்டுமானம் பற்றி எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

போரூர் பாலத்தை குறிப்பிடுகின்றபொழுது, முதற்கட்டப் பணியை நீங்கள் செய்யாத காரணத்தினாலே, பல ஆண்டுகாலமாக அது கிடப்பிலே போடப்பட்டிருந்தது, அதைத்தான் சுட்டிக்காட்டினேன். ஒரு பணி துவங்குகின்றபொழுது, அதற்கான திட்டத்தை வகுத்து, அதன்பிறகு பணியைத் துவக்கினால் சரியாக இருக்கும். திட்டமிடாமலேயே பாலத்தை அறிவித்துவிட்டு நீங்கள் பணியை துவக்கினால், பாதியில்தான் நிற்கும். வியாசர்பாடி உயர்மட்ட பாலம், பாதியில் நின்றதெல்லாம், நீங்கள் அதை சரியாக செய்யாத காரணத்தினால் தான், அங்கே கழிவுநீர் அகற்ற வேண்டியதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத காரணத்தால், பல பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு, நாங்கள் பேசி முடித்து, அதை நிறைவேற்றிக் கொடுத்தோம். அதேபோல, மோகனூர்–வாங்கல் பாலம், பல ஆண்டுகாலமாக அப்படியே கிடப்பில் இருந்தது, நாங்கள் தான் செய்து கொடுத்தோம். திருமங்கலம்–முகப்பேர் சந்திப்புப் பாலம், மூலக்கடை மேம்பாலம், திரு.வி.க. பாலம் அனைத்தையும் பாதியிலே விட்டுச் சென்றுவிட்டீர்கள். அதை நாங்கள்தான் கட்டிக் கொடுத்தோம், நிறைவேற்றிக் கொடுத்தோம்.

அதுமட்டுமல்லாமல், புதிய பாலத்தைப் பற்றிக் கேட்டார்கள். வேளச்சேரி சந்திப்பில் ரூபாய் 108 கோடியில் பாலம் கட்டும் பணி நடைபெற்றிருக்கிறது. பல்லாவரம் பாலம் ரூபாய் 85 கோடியில் நடைபெற்றிருக்கிறது. காளியம்மன்கோயில் சந்திப்பில், கோயம்பேடு பகுதியில் ரூபாய் 95 கோடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேடவாக்கம் மேம்பாலம் ரூபாய் 146 கோடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கீழ்க்கட்டளை மேம்பாலம் ரூபாய் 58 கோடியில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. திருவொற்றியூர்–பொன்னேரி–

பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே பாலம், ரூபாய் 53 கோடியில் கட்டிக் கொண்டிருக்கிறோம். இதுமட்டுமல்லாமல், ஆற்றுப்பாலம் நிறைய இருக்கிறது. குறுகிய காலத்தில் திருச்சி இரயில்வே சந்திப்பிற்கு அருகில் மேம்பாலம் கட்டிக் கொண்டிருக்கிறோம். இப்படி நிறைய பாலங்கள் அம்மாவினுடைய ஆட்சியில் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சர் இருந்த காலத்திலே பாலம் அமைக்கின்ற பணியானாலும் சரி, சாலை அமைக்கின்ற பணியானாலும் சரி, சரியான நேரத்தில் துவங்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட்டது. அதுதான் திட்டமிட்டு பணி செய்வது. அவ்வாறு, திட்டமிட்டு பணி செய்த காரணத்தினாலே, குறுகிய காலத்திலே, பாலப் பணிகள், சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் டெண்டர் விதிமுறை குறித்து எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம் (11.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

டெண்டர் போடுகிறபொழுது Pre-qualification Certificate கேட்கப்படுகிறது. இந்தியா முழுவதும் அதை கடைபிடித்து வருகின்றார்கள். ஒரு வேலை செய்கின்றபொழுது, அந்த வேலைக்குத் தகுந்த சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும். அதுதான், இப்பொழுது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களும் அதை கடைபிடித்து வருகின்றன. இந்திய அளவிலும் டெண்டர் விடுகின்றபொழுது, இந்த Pre-qualification Certificate வைத்தால்தான் அப்பணியைச் செய்யமுடியும். 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் டெண்டர் போடுகிறார்கள் என்றால், அதற்குத் தகுந்த சான்றிதழை வைத்தால்தான் அந்த ஒப்பந்தத்திலேயே இடம்பெறமுடியும்.

ஒரு டெண்டர் கோருகின்றபொழுது அல்லது டெண்டரை எடுத்தபிறகு, அந்த பணியை மேற்கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்த கருவிகள் இருந்தால்தான் அந்த டெண்டர் விதிகளை பூர்த்தி செய்யமுடியும். ஆகவே, டெண்டரை எடுத்த பிறகு, அந்தப் பணியை சரியான முறையிலே செய்வதற்காகத்தான் இந்த நடைமுறையை பின்பற்றுகிறோம். அதற்குத் தேவையான வாகன வசதிகள், என்னென்ன வாகனங்கள் இருக்கின்றது என்று குறிப்பிடப்படுகிறது. அவையெல்லாம் இருந்தால், சரியான அளவிலே முறையாக அந்த சாலை அமைக்கப்படுகிறது. சாலையை அப்படி அமைத்தால்தான் அது உறுதிப்பாட்டோடு இருக்கும்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே இதை தெரிவித்தார்கள், சாலை சிறப்பாக இருக்க வேண்டும், அதற்கு என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு,

அவருடைய ஆலோசனையை பெற்றுத்தான், இந்த நடைமுறையை கடைபிடித்தோம். இந்த நடைமுறையை பயன்படுத்தியதின் விளைவாகத்தான், கிட்டத்தட்ட, 2011–2012இல் போடப்பட்ட சாலைகள்கூட மிக உறுதியாக உள்ளன. இன்னும் patch work கூட செய்யவில்லை. நல்ல தரமான இயந்திரங்களை பயன்படுத்தி அந்த சாலைப் பணி மேற்கொண்டதன் விளைவாக, அதனுடைய ஆயுட்காலமான 5 ஆண்டுகள் நிறைவடைந்தும்கூட patch work கூட இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசால் போடப்பட்ட சாலைகள் தரமாக இருக்கிறதா என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்து கொள்ளலாம், இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆகவே, சாலை அமைக்கின்றபொழுது, தரமான சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டும், உறுதியாக இருக்க வேண்டும், நீண்ட காலத்திற்கு பயன்பாடு இருக்க வேண்டுமென்கிற காரணத்தால்தான், இந்த நடைமுறையெல்லாம் பின்பற்றப்படுகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

ஜாக்டோ – ஜியோ போராட்டம் மற்றும் தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை பற்றிய விளக்கம் (12.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜாக்டோ – ஜியோ அமைப்பை அழைத்து பேச வேண்டும் என்று இங்கே தெரிவித்தார்கள். கருத்து சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக, தெளிவாக அரசு எடுத்த நடவடிக்கையை தெளிவுபடுத்தி இருக்கின்றார். இதற்கு குழு அமைக்கப்படுகின்றது. அந்த குழு அறிக்கை தாக்கல் செய்த பிறகு தான், அதில் எதை எதை நிறைவேற்ற முடியுமோ, அதை அரசால் நிறைவேற்றப்படும் என்பதை தெளிவாக சொல்லியிருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, தூத்துக்குடி சம்பவத்தை பற்றி சொன்னார்கள். ஏற்கெனவே தூத்துக்குடியிலே 14 முறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், சார் ஆட்சியரும், அவர்களை அழைத்து பேசியிருக்கின்றார்கள். பேசவில்லை என்று சொல்வது தவறு. பலமுறை பேசப்பட்டு இருக்கின்றது. அந்த பேச்சுவார்தையின் அடிப்படையில்தான், ஸ்டெர்லைட் நிருவாகம், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில், அதனுடைய காலஅளவை 5 ஆண்டு காலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். அதையும், மாண்புமிகு அம்மாவின் அரசு, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் 09.04.2018 அன்று ரத்து செய்யப்பட்டது. அதை 14.04.2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், அங்கிருக்கின்ற பத்திரிக்கைகள் வாயிலாக விளம்பரப் படுத்தப்படுத்தப்பட்டு இருக்கின்றது. ஆகவே, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினால், ரத்து செய்யப்பட்டு ஆலை இயங்காது என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டு, அது அத்தனை பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கின்றன.

அதுமட்டுமல்ல, 18.04.2018 அன்று அங்கே மாசு கட்டுப்பாடு வாரியம் அதனுடைய நிலைமையை பற்றி ஆய்வு செய்வதற்காக, ஆய்வு செய்து அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலே

23.04.2018 அன்று ஆலைக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப் போல, போராட்டக்காரர்களை அழைத்து பேசவில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார், அதெல்லாம் இல்லை. போராட்டக்காரர்களை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சார் ஆட்சியாளர்களும், பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். அவர்களின் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தான், மாசு கட்டுப்பாட்டு வாரியம் அந்த ஆலை விண்ணப்பத்தை நீடிக்க வேண்டும் என்று கேட்டு வந்தார்கள். அதையும் அந்த போராட்டக்குழு சேர்ந்தவர்கள் அறிவுறுத்தினார்கள். அந்த ஆலை இயங்கக்கூடாது, அதில் மாசு ஏற்படுகிறது என்ற ஒரு செய்தியை சொன்னதன் அடிப்படையிலே, அதை ஆராய்ந்து, மாசு கட்டுப்பாட்டு வாரியம், அந்த ஆலை விண்ணப்பித்ததை ரத்து செய்து, அதையும் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் விழுப்புரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி குறித்த கவன ஈர்ப்பு மீது ஆற்றிய உரை (14.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில் இரயில்வே கடவு எண் 2இல் புதிதாக மேம்பாலம் அமைக்க கருத்துரு பெறப்பட்டு இரயில்வே பணிகள் திட்டம் 2010–2011இல் மேம்பாலம் அமைக்க ரூ.31.60 கோடி மதிப்பில் நிருவாக அனுமதி 10.11.2010 அன்று வழங்கப்பட்டது.

தலைமைப்பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், சென்னை அவர்களால் 26.02.2014இல் ரூ.34.75 கோடிக்கு இப்பணிக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிக்கான வேலைத்தளம் 25.11.2014 அன்று ஒப்படைக்கப்பட்டது. பாலப்பணிகளின் அனைத்து மேல் தள (Deck Slab) பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சென்னை மார்க்கத்தில் அணுகு சாலை அமைக்கும் பணி, தடுப்பு சுவர் மற்றும் சேவை சாலை ஆகிய பணிகள் முடிவுற்றன.

விழுப்புரம் மார்க்கத்தின் அணுகு சாலை, மற்றும் சேவை சாலை அமைக்க 42 நபர்களிடமிருந்து 1,411 ச.மீ நிலம் கையகப்படுத்தி அப்பகுதிகளில் வலுவூட்டப்பட்ட தரைதள தடுப்புச்சுவர் (Reinforced Earth Wall) மற்றும் அணுகுசாலை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் விழுப்புரம் நகராட்சியின் பாதாள சாக்கடை குறுக்கிடுகிறது. இதனை மாற்றி அமைக்கும் பணி விழுப்புரம் நகராட்சி மூலம் நடைபெறுகிறது. இப்பணி முடிவடைந்தவுடன் விழுப்புரம் பகுதி அணுகுசாலை பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, விரைவில் பாலம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

அமைதி . வளம் . வளர்ச்சி

திருச்சி பால் பண்ணை – துவாக்குடி அணுகு சாலை அமைத்தல் குறித்த கவன ஈர்ப்பு மீது ஆற்றிய உரை (14.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலை 67இல் கி.மீ.80/0–கி.மீ.136/490 வரை (தஞ்சாவூர் முதல் திருச்சிராப்பள்ளி வரை) நான்கு வழிச் சாலை அமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டது. இச்சாலையில் துவாக்குடி முதல் பால்பண்ணை வரை 14.49 கி.மீ. நீளத்திற்கு சேவைச் சாலை அமைக்காததால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வந்தது.

அடிக்கடி ஏற்படும் விபத்துகளை தவிர்க்கும் வண்ணம், துவாக்குடி முதல் பால்பண்ணை வரை சேவைச் சாலை அமைக்கத் தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தி, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் வழங்க தேவையான நில எடுப்புத் தொகை 84.50 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்புதலளித்து அரசாணை 29.08.2011இல் வெளியிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், 60 மீட்டர் அளவிற்கு சேவைச் சாலை அமைப்பது அவசியம் என்பதால், நில எடுப்புப் பணிக்கு 196 கோடி ரூபாய் தேவைப்படும் எனத் தெரிவித்து, 60 மீட்டர் சேவைக் சாலை அமைக்க தேவைப்படும் நிலத்தை கையகப்படுத்த அறிவிக்கைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை சட்டம், 1956, பிரிவுகள் 3(A) மற்றும் 3 (B)–இன்படி வெளியிடப்பட்டது.

60 மீட்டர் அகலத்திற்கு சேவைச் சாலை அமைக்க சில அமைப்புகளின் எதிர்ப்பு மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளை தொடர்ந்து, 25.01.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்கூறிய சாலையில், 60 மீட்டர் சேவைச் சாலைக்கு பதிலாக 45 மீட்டர் சேவைச் சாலை அமைக்க திருத்திய அறிவிக்கைகளை வெளியிடவும், நில எடுப்பு பணிக்குத் தேவைப்படும் செலவினத்தில் 50 சதவீதத்தை இந்திய தேசிய

நெடுஞ்சாலை ஆணையம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது.

சேவைச் சாலை அமைப்பதற்கு நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தடையாணை விலக்கப்பட்ட பிறகும், சேவைச் சாலை அமைய உள்ள பகுதிகளில் உள்ள கட்டடங்களை இடிக்க வழங்கப்பட்ட தடையாணை தொடர்வதன் காரணமாக, சேவைச் சாலை அமைக்கும் பணியினை தொடர இயலாத நிலை உள்ளது. இந்த வழக்கு 23.08.2016 அன்று இறுதியாக நீதிமன்றத்தில் வரப்பெற்று தேதி குறிப்பிடாமல் இறுதி தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது (Judgment reserved).

எனவே, நீதிமன்ற இறுதித் தீர்ப்பு பெற்ற பின்னரே நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட ஒரு நெடிய விளக்கத்தைச் சொன்னார்கள். இந்த சாலை அமைக்கப்பட்டது 2006இல், திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியிலே ஆட்சியிலே இருந்த காலத்திலே அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, இப்பொழுது ஏதோ மாண்புமிகு அம்மாவுடைய அரசு வந்த பிறகு தான், இந்த சாலை அமைக்கப்பட்டது மாதிரியும், பல உயிர்கள் போனது போலவும், இரக்கப்பட்டீர்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், ஒரு சாலை அமைக்கின்ற போது, முதல் கட்டப்பணி நிலத்தை கையகப்படுத்தப்பட்ட பின்பு தான் சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எங்களிடத்திலே எடுத்து சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் சாலை அமைக்கின்றபோதே, இதற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்தி, சாலை அமைத்திருந்தால், இவ்வளவு உயிர் போயிருக்காது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, நீங்கள் 2006இல் சாலை அமைக்கின்றபோதே, எவ்வளவு அகலம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கணக்கிட்டு, அதற்கு தக்கவாறு சாலை அமைத்திருந்தால், இந்த பிரச்சினை ஏற்பட்டிருக்காது. ஆகவே, உங்களுடைய காலத்திலே, சரியான முறையிலே இந்த

சாலை அமைக்காத காரணத்தினால், இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இது இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுகின்ற பணி. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அங்கிருக்கின்ற மக்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலே, அம்மாவுடைய அரசால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையிலே, மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்கள் வந்த போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையெல்லாம் அவரிடத்திலே நான் பதிவு செய்திருக்கின்றேன். ஆகவே, அதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கின்றேன். அவர்களும் பரிசீலிப்பதாக சொல்லி இருக்கின்றார்கள். தமிழ்நாடு அரசாங்கத்தினால் எந்த சுணக்கமும் இல்லை. இது மத்திய அரசால் மேற்கொள்ளப்படுகின்ற பணி. இருந்தாலும் 60 மீட்டர் அகலத்திலிருந்து 45 மீட்டராக குறைக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கின்றோம். அப்படி இருந்தால் கூட, நிறைய கடைகள் அடிபடுகின்றன. ஆகவே, 2006–லே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது, நீங்கள் அகலமாக அந்த சாலையை அமைத்திருந்தால், அங்கே புதிதாக கட்டடம் கட்டி இருக்க மாட்டார்கள். ஆகவே, இப்போது இடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்காது. நாளைக்கு தேவையான நிலத்தை நீங்கள் கையகப்படுத்தாமல், ஒரு சாலைக்கு எவ்வளவு அகலம் வேண்டும் என்பதை கணக்கிடாமல், சாலை அமைத்ததன் விளைவு தான், இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள். மாண்புமிகு அம்மாவுடைய அரசு, மத்திய அரசிடம் இதை வலியுறுத்தி சொல்லி கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த சர்வீஸ் சாலை அமைப்பதற்கு உண்டான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மீது ஆற்றிய உரை (14.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த சித்தன் என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர், 31.05.2018 அன்று கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த போது, கட்டட விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு. முருகன் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, சு. கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவரின் மகள் செல்வி மகாலட்சுமி என்பவர், 07.06.2018 அன்று, பள்ளி கழிவறையில் மயங்கிய நிலையில், மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, செல்வி மகாலட்சுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணபுரம் உள் வட்டம், திப்பிரெட்டி அள்ளி தரப்பு குக்கல்மலை கிராமத்தில் 03.06.2018 அன்று திடீரென இடியுடன் கூடிய மழை பெய்த போது, இடி தாக்கியதில், திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகள் செல்வி. வித்யா என்பவர் உயிரிழந்த செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, இயற்கை பேரிடரில் உயிரிழந்த காரணத்தினால் தற்போதைய நடைமுறைகளின்படி செல்வி வித்யாவின் குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், மாவலிங்கை கிராமத்தைச் சேர்ந்த திரு.சக்திவேல் என்பவரின் மகன் செல்வன் பூபதி மற்றும் திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் பாரதி ஆகிய இருவரும் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, உயிரிழந்த பூபதி மற்றும் பாரதி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சை புளியம்பட்டி உள்வட்டம், நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள ஏரியில் 31.05.2018 அன்று குளிக்கச் சென்ற மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் ராஜ்குமார், திரு. சுரேஷ் என்பவரின் மகன் கௌதம் மற்றும் திரு. செல்வன் என்பவரின் மகன் சஞ்சய் ஆகிய மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அக்குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், சேனங்கோடு, திற்பரப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. நெல்லையப்பன் என்பவர் மரத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற

செய்தியை அறிந்து நான் வேதனையடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவர் 09.06.2018 அன்று வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால், மின்கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; விளவங்கோடு வட்டம், அருமனை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலஸ் என்பவரின் மகன் திரு. அகஸ்டின் என்பவர், 10.06.2018 அன்று, தனது இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது, பலத்த காற்றினால் மரம் முறிந்து, மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; ஆறுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கொச்சப்பி என்பவரின் மகன் திரு. பாலையன் என்பவர் 10.06.2018 அன்று பலத்த காற்று மழையினால், அறுந்து கிடந்த மின்கம்பியை கவனிக்காமல் மிதித்ததால், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தற்போதைய நடைமுறைகளின்படி, தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தேவையூர் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. உளியன் என்பவரின் மகன் செல்வராஜ் என்பவர் 10.06.2018 அன்று, இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மின் கம்பம் மீது உரசி, மின் கம்பம் சாய்ந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு,

அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், வரகூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வம் என்பவரின் கூரை வீடு மின் கசிவின் காரணமாக தீப்பற்றி எரிந்ததில், அவருடைய மகள் செல்வி. கீர்த்தி என்பவர் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், அனவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு.விநாயகம் என்பவரின் மகன் திரு.தமிழ்செல்வன் என்பவர் அவரது தோட்டத்தில் உள்ள மரத்தில் ஏறும் போது, மின்சாரம் தாக்கி, உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி ரெட்டி என்பவரின் மகன் திரு. கண்ணியப்பன் என்பவர் 09.06.2018 அன்று அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

சிலை திருட்டு குறித்து விளக்கம்
(26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திரு.பொன் மாணிக்கவேல் அவர்கள் ஏற்கெனவே பல ஆண்டு காலமாக சிலைத் தடுப்புப் பிரிவிலே பொறுப்பில் இருந்தார். அதற்குப் பிறகு நாம் மாற்றினோம். நீண்ட நாட்களாக ஒரே துறையில் இருந்த காரணத்தினாலே இரயில்வே துறைக்கு மாற்றினோம். தவிர, அதற்குப் பிறகுதான் நீதிமன்றம் நியமித்தது. அதற்கு முன்பு மரியாதைக்குரிய காவல்துறை அதிகாரி பொன் மாணிக்கவேல் அவர்கள் ஏற்கெனவே சிலை தடுப்புப் பிரிவில் இருந்தபோதுதான் நிறைய திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசுதான் களவு போன சிலைகளை அதிக அளவிலே கண்டுபிடித்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அவர் அந்த பொறுப்பில் தான் இருந்தார், இடையிலே, நீண்ட காலமாக இருந்த காரணத்தினாலே பணிமாறுதல் செய்தோம். மீண்டும் பொதுநல வழக்குகள் போடப்பட்டதன் காரணத்தினாலே, அவர் மீண்டும் அதே பணியில் அமர்த்தப்பட்டார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறை உயர் அதிகாரிகள் இல்லப் பணிகள் என்பது குறித்து சொன்னீர்கள், காவல் துறையில் தற்கொலையைப் பற்றி சொன்னீர்கள், காலத்தின் நேரம் கருதி, நான் நாளை பதிலுரையில் சொல்கிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசை பொறுத்தவரைக்கும் காவல் துறைக்கு தேவையான நன்மைகள் செய்து வருகின்றது. அதேபோல, சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. காவல் துறை மானியத்தில் இன்னும் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டியிருப்பதால், நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு, கால நேரம் கருதி, நாளைக்கு எனது பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ❖

தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலை குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அளித்த விளக்கம் (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்டெர்லைட் ஆலையை மூடவேண்டுமென்று முடிவெடுத்து, அதற்குண்டான நடவடிக்கை மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் எடுக்கப்பட்டு வருகிறது. ஸ்டெர்லைட் நிருவாகம் ஆலையை தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதி வேண்டுமென்று மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் விண்ணப்பித்திருந்ததை, அம்மாவினுடைய அரசு மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றும் விதமாக, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் கோரிக்கையை ஏற்றதன் அடிப்படையிலே 09.04.2018 அன்றே மாசுக்கட்டுப்பாடு வாரியம் அனுமதி கொடுக்க மறுத்து அவர்கள் விண்ணப்பத்தை ரத்து செய்துவிட்டது. 14.04.2018 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், அரசு எடுத்த நடவடிக்கை, தூத்துக்குடியில் இருக்கின்ற பத்திரிகைகளின் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டுவிட்டது, இது அனைவருக்கும் தெரியும். மேலும், நடவடிக்கை ஒவ்வொன்றாகத்தான் எடுக்க முடியும். 2018ஆம் ஆண்டு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அனுமதி ரத்து செய்த பிறகு, ஸ்டெர்லைட் ஆலை எவ்வாறு இருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்காக, மே மாதம், 18ஆம் தேதி அந்த ஆலைக்குச் சென்று அந்தக் குழு ஆய்வு செய்தது. அந்தக் குழுவின் ஆய்வின் அடிப்படையில், 2018ஆம் ஆண்டு 23ஆம் தேதியன்று அந்த ஆலைக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசியல் கட்சித் தலைவர்களும், அங்கிருக்கக்கூடிய மக்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றிவரும் இந்த நேரத்தில், இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் வருகின்றபொழுது, எங்கே இந்த அரசுக்கு நல்ல பெயர் வந்துவிடுமோ என்று சில அரசியல் கட்சி தலைவர்களும், சில

அரசியல் கட்சி பிரமுகர்களும் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த செயலை செய்வதாக நான் எண்ணுகிறேன். ஏனென்று சொன்னால், ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும்பொழுது எதற்காக அங்கே போராட்டம்? தேவையில்லாமல், பிரச்சினையை உருவாக்கி இந்த அரசுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுத்து, இதன்மூலமாக அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறதோ என்று எண்ணத் தோணுகிறது. ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும் ஸ்டெர்லைட் ஆலை மூடப்படவேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை பற்றித்தான் நான் இங்கே குறிப்பிட்டோம். எனவே, இதற்கு மேலும், வேண்டுமென்றே, தேவையில்லாமல் ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டுமென்று கருதுவதுதான் தவறு என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேனே அல்லாமல், குற்றச்சாட்டு அல்ல. எனவே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ அதைத்தான் அரசும் செய்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், நாங்களும் ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்குண்டான நடவடிக்கையை எடுத்திருக்கின்றோம் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன, தொழிற்சாலைகள் இயங்குவதற்கான சட்டமும் இருக்கின்றது, அந்த சட்டம் அதனுடைய கடமையை செய்து கொண்டிருக்கின்றது. அந்த சட்டத்திற்குட்பட்டுத்தான் இந்த தொழிற்சாலை வருகின்றது. ஆகவே, இன்றைக்கு இந்த தொழிற்சாலை மூடுவதற்குண்டான நடவடிக்கை சட்டபூர்வமாக எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அமைச்சரவையை கூட்டி எடுக்க வேண்டிய அவசியமே கிடையாது. அமைச்சரவை கூடினாலும், மீண்டும் முதலமைச்சருக்குத்தான் வரும், டெல்லிக்கு அனுப்ப முடியாது, இங்கேதான் வரும். அதுமட்டுமல்ல, இதையெல்லாம் மதுரை உயர்நீதிமன்ற கிளையிலே வாதம் வருகின்றபொழுது, எடுத்து வைத்தவுடன் ஏற்றுக் கொண்டுவிட்டனர். ஆகவே, இன்றைக்கு

1 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழகத்தில் இயங்கி கொண்டிருக்கின்றன. அனைத்திற்கும் பொதுவான சட்டம்தான், அது 5 கோடியில் இயங்கினாலும் சரி, 50 கோடியில் இயங்கினாலும் சரி, 5,000 கோடியில் உருவாக்கப்பட்டிருந்தாலும் சரி, சட்டம் பொதுவானது. ஆகவே, இன்றைக்கு ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அமைச்சரவை கூட்டி முடிவெடுக்க வேண்டியது அவசியம் இல்லை. சட்ட பூர்வமாக அனைத்து மூத்த அதிகாரிகளை அழைத்துப் பேசி, சட்ட நிபுணர்களை அழைத்துப் பேசி, அதற்குப் பிறகுதான் அரசு ஒரு முடிவை எடுத்து அறிவித்திருக்கின்றது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

பசுமை வழிச்சாலை குறித்து அளித்த விளக்கம் (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் பேசுகிறபொழுது, பசுமை வழிச்சாலை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் பல நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டது. உங்களுடைய ஆட்சிக் காலத்தில், 2006ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை 3,023 ஹெக்டேர் நிலத்தை நீங்கள் கையகப்படுத்தியிருக்கிறீர்கள், அதற்கான புள்ளிவிவரம் என்னிடம் இருக்கின்றது. நீங்கள் நிலம் கையகப்படுத்தும்பொழுது, நில இழப்பீட்டுத் தொகை குறைந்த அளவில்தான் வழங்கப்பட்டது. இப்பொழுது புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, அதிகமான நில இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படும். ஆகவே, எவ்வளவு இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படுகிறதென்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சாலை அமைக்க வேண்டிய நிலத்தின் அளவீட்டிற்காக எல்லைக் கல் நடப்பட்டுவிட்டது. தருமபுரியில் 90 சதவிகிதம் எல்லைக் கல் நடப்பட்டு விட்டது. சாலை அமைப்பதற்காக, 56 கிலோ மீட்டரில், 53 கிலோ மீட்டருக்கு எல்லைக் கல் நடப்பட்டுவிட்டது. அதேபோல, சேலத்தில், கிட்டத்தட்ட 36.9 கிலோ மீட்டரில், 26.9 கிலோ மீட்டருக்கு எல்லைக் கல் நடப்பட்டுவிட்டது. ஒரு சிலர் இதில் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது, அவர்கள் போராட்டம் செய்கின்றார்கள். அதை பெரிதுப்படுத்த வேண்டாமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். சாலை அமைப்பதற்காக 53 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு எல்லை நடப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் சொல்ல மறுக்கின்றீர்கள். ஒரு சிலர் சொல்வதை வைத்து, இந்த சாலை அமைக்கக்கூடாது என்று சொல்வது முறையாக இல்லை. அதுமட்டுமல்ல, இந்த சாலைக்காக எடுக்கப்படுகின்ற மொத்த நிலம் தோராயமாக 1,900 ஹெக்டேர், இதில் 400 ஹெக்டேர் அரசுக்குச் சொந்தமான

புறம்போக்கு நிலமாக வந்துவிடுகிறது. மீதி 1,500 ஹெக்டேர் நிலத்தில், 1,100 ஹெக்டேர் நிலம் வறண்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்ற நிலம், 400 ஹெக்டேர் நிலம் மட்டுமே விவசாயம் செய்யக்கூடிய பகுதியிலிருந்து எடுக்கப்படக்கூடியது என்பதையும் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, எந்த ஆட்சி இருந்தாலும், வளர்ச்சித் திட்டங்களுக்காக சாலை அமைக்கப்படுவது வழக்கம். உங்களுடைய ஆட்சியிலும் 3,023 கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல, சாலை அவசியம் குறித்து இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். மத்தியிலும், மாநிலத்திலும் உங்களுடைய ஆட்சி இருந்த காலத்தில், 31.03.2008இல் நிலம் கையகப்படுத்தப்பட்டது, அப்பொழுது தமிழகத்தினுடைய வாகனங்களின் எண்ணிக்கை 1 கோடியே 7 இலட்சம் இருந்தபொழுது உளுந்தூர்பேட்டை சாலை அமைத்தீர்கள், அதேபோல, சேலம்–கிருஷ்ணகிரி சாலையும் அமைக்கப்பட்டது. இப்பொழுது தமிழகத்தில் இருக்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை 31.03.2018 அன்று, 2 கோடியே 57 இலட்சத்து 78 ஆயிரம் என கணக்கிடப்பட்டிருக்கிறது. இருசக்கர வாகனங்களின் எண்ணிக்கை 2008ஆம் ஆண்டில் 82,60,019, இதர கனரக மற்றும் இலகுரக 4 சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 18,08,991. தற்போது 31.03.2018 அன்று, இருசக்கர வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டு 2,15,86,210, இதர கனரக மற்றும் இலகுரக 4 சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 41,92,286. ஆகவே, வாகனங்களின் எண்ணிக்கை 1 கோடியே 7 இலட்சம் இருந்தபொழுதே நீங்கள் இரண்டு சாலைகள் அமைத்தீர்கள். இன்றைக்கு வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்ற காரணத்தினால் சாலைகளின் அவசியம் மிக முக்கியம். ஏனென்றால், விலை மதிக்க முடியாத உயிர்களின் இழப்பு சாலை விபத்தினால் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, இந்த சாலையில் நீளமே 277.30 கிலோ மீட்டர், கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. இதன்

காரணமாக, வாகனத்தின் எரிபொருள் சிக்கனமாகிறது, எரிபொருள் செலவு குறைகிறது, வாகனங்களின் தேய்மானம் குறைகிறது, பயண நேரம் குறைகிறது, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளலாம். பசுமை வழிச் சாலையைப் பொறுத்தவரை, ஒரு தொழில் நுட்பத்துடன் நவீன முறையிலே அமைக்கப்படுகிறது. எந்த விபத்தும் ஏற்பட முடியாத வகையில் இந்த சாலை வடிவமைக்கப்படுகிறது. இதனால் தமிழகத்தின் வளர்ச்சி அதிகமாகும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்தப் சாலை அமைப்பதினால், சேலம், கரூர், ஈரோடு, திருப்பூர், கேரளா செல்கின்ற வாகனங்கள் எல்லாம் இந்த வழியாக செல்கின்றபொழுது நேரம் குறைகின்றது. கனரக வாகனங்களின் பாதுகாப்பு மிக முக்கியம். பாதுகாப்பு அம்சங்களை எல்லாம் ஒன்றாக சேர்த்துத்தான் இந்த பசுமை வழிச்சாலையை ஏற்படுத்துகின்றார்கள். பசுமை வழிச் சாலைக்கு பெரும்பாலோர் ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள், ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். அதை பெரிதுபடுத்தி, ஊடகங்களின் வாயிலாகவும், பத்திரிகைகளின் வாயிலாகவும் மிகப் பெரிதுபடுத்துகிறார்கள். ஏற்கெனவே, சொன்னதைப்போல, சேலம், தருமபுரியில் எல்லைக் கல் நடப்பட்டுள்ளது, மீதமுள்ள மாவட்டங்களிலும்அப்பணிகள்விரைவில்துவங்கப்படவிருக்கின்றன. இது மிகப்பெரிய ஒரு திட்டம். தமிழகத்தில், மத்திய அரசின் மூலமாக நிதியை பெற்று இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எல்லாம் சாலை விபத்துக்களை குறைக்க வேண்டும், சாலைகளை அகலப்படுத்த வேண்டுமென்று வைத்த கோரிக்கையின் அடிப்படையில் கிட்டத்தட்ட 40 சாலைகள் தரம் உயர்த்தப்பட்டு தேசிய சாலைகளாக உருவாக்கப்பட்டு, பல்வேறு சாலைகளை அகலப்படுத்தும் திட்டத்தையும் அரசு வைத்திருக்கின்றது, அந்தப் பணியும் விரைவில் துவங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மணல் குறித்து அளித்த விளக்கம்
(26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கு முன்பே நான் விளக்கமாக அவையில் தெரிவித்திருக்கின்றேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, விதிகளுக்கு மாறாக மணல் அள்ளுவதை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது, அதற்கெல்லாம் எவ்வளவு அபராதம் விதிக்கப்பட்டது என்றெல்லாம் நான் தெளிவாக சொல்லியிருக்கின்றேன். கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விதிகளுக்கு மாறாக மணல் அள்ளுபவர்களிடம் இருந்து எவ்வளவு அபராதம் வசூலிக்கப்பட்டது, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆட்சிக்கு வந்த பிறகு விதிகளுக்கு மாறாக மணல் அள்ளுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு அரசாங்கத்தால் பல்வேறு வழியிலே இது தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறது. இருந்தாலும், ஆங்காங்கே சில நடந்து கொண்டிருக்கின்றது. அதை தடுப்பதற்குண்டான வழிமுறைகளை அரசு செய்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மணலை பொறுத்தவரைக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த கட்டுப்பாட்டிற்குள் தான் மணலை அள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, மணல் அள்ளியிருந்தால், அந்த இடத்தில் மணல் அள்ள முடியாது, குறிப்பிட்ட அளவுதான் அள்ளவேண்டும். அதற்கு இடைவெளி இருக்கவேண்டும், பாதை இருக்கவேண்டும், இவ்வளவு பிரச்சினை இருக்கிறது. ஆகவே, புதிதாக குவாரி திறக்கப்பட்டாலும் கூட, விதிமுறைக்குட்பட்டுதான் அந்த குவாரியை திறக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, நிறைய வழக்குமன்றத்திற்கு, நீதிமன்றத்திற்கு சென்று விடுகிறார்கள். அதன் காரணமாக காலதாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும், அதிகமான குவாரிகள் திறக்கப்பட்டு, குறைந்த விலையில், நியாயமான முறையிலே பொது மக்களுக்கு, கட்டுமான

தொழிலுக்கு மணல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன். விதிகளுக்கு மாறாக மணல் அள்ளப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து வகையிலும் காவல் துறையும், வருவாய் துறையும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் தான் படிப்படியாக மணல் உபயோகப்படுத்துவதை குறைக்க வேண்டும் என்ற நிலையிலே அரசு இருக்கின்றது. அதற்குத்தான் M-Sand–ஐ பயன்படுத்தவேண்டும் என்று பொதுமக்களிடத்திலே வேண்டுகோளாக வைக்கப்படுகின்றது, அவர்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இன்றைக்குக் கூட, திருவள்ளூர் பகுதியில் மணல் குவாரி துவங்கியவுடனேயே அங்கே ஒரு போராட்டம் நடத்துகின்றார்கள். இப்படி பல்வேறு இடங்களிலே மணல் குவாரிகள் துவங்குகின்றபொழுது, விவசாயிகளும், பொதுமக்களும் போராட்டம் நடத்துகின்றார்கள். ஆகவே, அதையெல்லாம் கருத்திலே கொண்டு, எங்கே மணல் அதிகமாக இருக்கின்றதோ, அங்கே மணல் அள்ளுவதற்கு தேவையான குவாரிகளை துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும், விவசாயிகள் பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுக்கு ஒரு சமாதானத்தை ஏற்படுத்தி, அங்கே எவ்வளவு மணல் இருக்கிறது என்று கணக்கிட்டு அதற்கேற்றவாறு, அந்த குவாரிகளில் மணல் அள்ள பொதுமக்களுக்கும், கட்டுமான தொழிலுக்கும் இயன்ற அளவு அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன். அது மட்டுமல்லாமல், வெளிநாட்டிலிருந்து மணல் இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

தமிழகத்தில் கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, கூட்டுக் கொள்ளை மற்றும் கன்னக்களவு சம்பந்தமான குற்றங்கள் குறித்து அளித்த விளக்கம் (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கொலை கொள்ளை, திருட்டை பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். இவை எல்லா ஆட்சியிலும் நடைபெற்று கொண்டிருக்கிறது. எங்கள் ஆட்சியில் நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. உங்களுடைய ஆட்சியிலே எப்படி நடைபெற்றது என்ற விவரத்தையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

கொலை குற்றங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2005ஆம் ஆண்டு இறுதியில், 1,366 ஆக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இறுதியில் 2010இல் 1,715 ஆக உயர்ந்தது. இவ்வழக்குகள் 2017இல் 1,466 ஆக குறைந்துள்ளது. அதாவது தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 5.1 சதவீதம் கூடி வந்த இவ்வழக்குகள், அ.இ.அ.தி.மு.க.ஆட்சியில் 2.1 சதவீதம் குறைந்தது.

ஆதாயக் கொலைக் குற்றங்கள், 2005ஆம் ஆண்டு இறுதியில், 74 ஆக இருந்தது, 2010ஆம் ஆண்டு 153 ஆக உயர்ந்துள்ளது. ஆனால் இவ்வழக்குகள் 2017இல் 94 ஆக குறைந்துள்ளன. அதாவது தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் 21.4 சதவீதம் கூடி வந்த இவ்வழக்குகள், அ.இ.அ.தி.மு.க.ஆட்சியில் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீதம் குறைந்துள்ளது.

கூட்டுக்கொள்ளை வழக்குகள் பொறுத்தவரைக்கும், 2005ஆம் ஆண்டு இறுதியில், 73 ஆக இருந்தது, 2010ஆம் ஆண்டு இறுதியில் 85 ஆக உயர்ந்துள்ளது. இவ்வழக்குகள் 2017இல் 97 ஆக தாக்கலாகியுள்ளது. அதாவது தி.மு.க. ஆட்சியின் போது, ஆண்டொன்றுக்கு சராசரியாக 3.3 சதவீதம் கூடி வந்த

இவ்வழக்குகள், அ.இ.அ.தி.மு.க.ஆட்சியில் சராசரியாக 2 சதவீதம் மட்டுமே கூடி வந்துள்ளது.

கொள்ளை வழக்குகள், கடந்த 2005ஆம் ஆண்டு இறுதியில் 437ஆக இருந்தது, 2010ஆம் ஆண்டில் 1,817ஆக உயர்ந்துள்ளது. இவ்வழக்குகள் 2017ஆம் ஆண்டில், 1,850–ஆக தாக்கலாகியுள்ளன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சராசரியாக ஒவ்வொரு வருடமும் 63.2 சதவீதம் கூடி வந்த இவ்வழக்குகள், அ.இ.அ.தி.மு.க.ஆட்சிக் காலத்தில் 0.3 சதவீதம் மட்டுமே கூடியுள்ளது.

கன்னக்களவு வழக்குகள், 2005ஆம் ஆண்டு, 3,738ஆக இருந்தது, 2010ஆம் ஆண்டில், 4,715ஆக உயர்ந்துள்ளது. இவ்வழக்குகள் 2017ஆம் ஆண்டில் 4,751 தாக்கலாகியுள்ளது. தி.மு.க. ஆட்சியில் சராசரியாக ஒவ்வொரு வருடமும் 5.2 சதவீதம் உயர்ந்து வந்த இவ்வழக்குகள், அ.இ.அ.தி.மு.க.ஆட்சியின் போது 0.1 சதவீதம் மட்டுமே கூடியுள்ளது என்ற விவரங்களை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, கொலை, கொள்ளை, திருட்டை பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சொன்னதைப் போல, திருடனாக பார்த்து திருந்தாவிட்டால், ஒன்றும் செய்ய முடியாது. எந்த ஆட்சி வந்தாலும் சரி, உங்களுடைய ஆட்சியிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை பொறுத்தவரைக்கும், இன்றைக்கு காவல்துறையை பொறுத்த வரைக்கும், மிக வேகமாக, விரைவாக, குற்றம் செய்தவர்களை கண்டுபிடித்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சம்பவத்தை சொன்னார்கள். இரண்டு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். நீங்கள் எத்தனை கமிஷன்கள் அமைத்தீர்கள் என்று பட்டியலிட்டு போனமுறை சொன்னேன். நீங்கள் வெளிநடப்பு செய்து விட்டீர்கள். சுருக்கமாக மட்டும் சொல்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2006ஆம் ஆண்டு

17 துப்பாக்கி பிரயோக சம்பவங்களும், 2007ஆம் ஆண்டு 13 சம்பவங்களும், 2008ஆம் ஆண்டு 17 சம்பவங்களும், 2009ஆம் ஆண்டு 8 சம்பவங்களும், 2010ஆம் ஆண்டு 12 சம்பவங்களும், ஆக மொத்தம் 67 சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றில் மொத்தம் 33 பேர் உயிரிழந்துள்ளார்கள். ஆகவே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், உயிரிழப்பு ஏற்பட்டு இருக்கின்றது. அவ்வப்போது ஏற்படுகின்ற சட்டப் பிரச்சினையொட்டித்தான் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே, இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்பது எல்லாம் கிடையாது. உங்களுடைய ஆட்சியிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் உயிரிழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை பொறுத்தவரைக்கும், மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், மத்திய அமைச்சரை பற்றி சொன்னார்கள். தமிழகத்தை பொறுத்தவரைக்கும், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கின்ற போது, குற்றங்களும் குறைவாக இருக்கின்றன, சட்டம் ஒழுங்கும் பேணிக் காக்கப்படுகிறது. சில அமைப்புகள் வேண்டுமென்றே, தூண்டிவிட்டு அந்த போராட்டத்தின் வாயிலாக தங்களுக்கு ஏதாவது பெயர் கிடைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு செயல்படுகின்ற காரணத்தினால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும், இன்றைக்கு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும்விதமாக போராட்டங்களோ, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கின்ற வகையில் யாராவது நடக்க முற்பட்டால், கடுமையான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கும், அதற்கு தயங்காது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மத்திய அரசின் 2018ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு வரைவு மசோதாவின் மீதான சட்டமன்றப் பேரவைத் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு, 2010ஆம் ஆண்டு வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை தயாரித்து மாநில அரசுகளின் கருத்துக்களை கேட்டது. இந்த வரைவு மசோதாவில், தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ள அணைகள் அண்டை மாநிலத்தில் இருக்கும் போது அதனை இயக்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படும் என்ற காரணத்தால், அந்த வரைவு மசோதாவில் இடம்பெற்ற தமிழ்நாட்டிற்கு பாதகமான அம்சங்கள் குறித்து மறுப்பு தெரிவிக்கப்பட்டு, அவைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள், 29.07.2011 மற்றும் 17.03.2012 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள்.

எனினும், இந்த வரைவு மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தின் நிலைக்குழுவின் கருத்து வேண்டி அனுப்பி வைக்கப்பட்டது. அத்தருணத்தில், 03.08.2011 அன்று புதுடில்லியில் அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் திரு. வேணுகோபால் அவர்களும், நமது பொதுப்பணித் துறை உயர் அதிகாரிகளும் நீர்வள ஆதாரத்திற்கான பாராளுமன்ற நிலைக்குழுவின் தலைவரான திரு.கோகாய் அவர்களை நேரில் சந்தித்து மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்ட மறுப்புக்களை விரிவாக எடுத்துரைத்தனர்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு, 2010ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை கைவிட்டது

இருப்பினும், அணை பாதுகாப்பு குறித்து, நாடு முழுவதும் பின்பற்றக் கூடிய ஒரு சட்டத்தை இயற்ற, மத்திய அரசு 2016ஆம்

ஆண்டு ஒரு வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை தமிழ்நாட்டின் கருத்து கோரி அனுப்பி வைத்தது.

இந்த வரைவு மசோதாவை தமிழ்நாடு அரசு விரிவாக ஆய்வு செய்ததில், தமிழ்நாட்டிற்கு பாதகமான அம்சங்கள் கண்டறியப்பட்டது.

அதில் குறிப்பாக, ஒரு மாநிலத்திற்குள் ஓடுகின்ற நதியின் குறுக்கே அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை அந்தந்த மாநிலமே கட்டிக்கொள்வது குறித்து அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டப்படும் அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் அந்த மாநிலத்திற்கே சொந்தமானது என்றும், அவை அம்மாநிலங்களாலேயே இயக்கப்பட்டும், பராமரிக்கப் பட்டும் வரும் என்றும், இந்த வரைவு மசோதாவில் தேசிய அணை பாதுகாப்பு நிறுவனத்திற்கு மாநிலங்களிலுள்ள அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை ஆய்வு செய்யும் அதிகாரங்களை அளிக்க உத்தேசித்திருப்பது, நடைமுறைக்கு உகந்ததாக இருக்குமா என தெரியவில்லை.

மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் மூலம் ஒரு மாநிலம் வேறொரு மாநிலத்தில் கட்டிய அணைகள், அந்த அணையை கட்டிய மாநிலத்திற்கு சொந்தமானதாகும் மற்றும் அதனை இயக்குகின்ற மற்றும் பராமரிக்கக் கூடிய பொறுப்புகள் அம்மாநிலத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும் என்பது உச்சநீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் அணைகள், அண்டை மாநிலமான கேரளாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களினால் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டும், இயக்கப்பட்டும் மற்றும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய அணைகள் பற்றிய விவரம் குறித்து இந்த வரைவு மசோதாவில் இடம் பெறவில்லை. மத்திய அரசின் அமைச்சரவையினால் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைவு மசோதாவினால், இந்த 4 அணைகளை பராமரிப்பதில் இடையூறுகள் ஏற்படும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மற்றும் அணை பாதுகாப்புக் குழு ஆகிய அமைப்புகளினால் அணைகளை பராமரிப்பதில் ஏற்படும் இடையூறுகளில் தீர்வு காண இயலாது.

ஒவ்வொரு மாநிலத்திலும் அணை பாதுகாப்பு நிறுவனம் இயங்கி வருகிறது. இவை, மத்திய நீர்வளக் குழுமம் அவ்வப்போது அளித்துவரும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்பட்டு வருகின்றன. மேலும், அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த பொறியாளர்கள், அணை பாதுகாப்பு குறித்த பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் 11.09.2016 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். இக்கடிதத்தில், இவ்வரைவு மசோதா மாநிலங்களின் அதிகாரங்களில் குறுக்கீடு செய்கிறது என்றும், மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின்படி, அண்டை மாநிலத்தில் இருக்கும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும் என்றும், எனவே, இந்த மசோதா அவசர கதியில் பரிசீலிக்கப்பட கூடாது எனவும், அனைத்து அம்சங்களும் விரிவாக பரிசீலிக்கப்பட்ட பின்னரே சட்டம் இயற்றுவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி, 2016ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவிற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்தார்கள். தமிழ்நாடு அரசு இம்மசோதாவிற்கு தன்னுடைய எதிர்ப்பினை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2018ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு மசோதாவிற்கு, மத்திய அமைச்சரவை 13.06.2018 அன்று ஒப்புதல் அளித்துள்ளது என பத்திரிகை மற்றும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்த வரைவு மசோதாவின் மீது மத்திய அரசு தமிழ்நாட்டின் கருத்தை கோரவில்லை. இந்த வரைவு மசோதாவில், தமிழ்நாட்டின் உரிமைகளை பாதிக்கும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாலும்,

குறிப்பாக, அண்டை மாநிலத்தில், தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ள அணைகளான முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றிற்கு பல்வேறு பிரச்சினைகள் இவ்வரைவு மசோதாவால் எழக்கூடும் என்பதாலும், மாநிலங்களை கலந்தாலோசித்து, மாநிலங்களின் ஒருமித்த கருத்து ஏற்படும் வரையில், மத்திய அரசு, அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்றக்கூடாது எனவும், அது வரையில் மத்திய அமைச்சரவை தற்பொழுது எடுத்துள்ள முடிவை நிறுத்திவைக்க வேண்டும் எனவும், நான் 15.06.2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக் கொண்டேன்.

27.02.2006 மற்றும் 07.05.2014 ஆகிய நாளிட்ட உச்சநீதிமன்ற தீர்ப்புகளில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில், தமிழ்நாட்டின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டு, அத்தீர்ப்புகளின்படி 21.11.2014 மற்றும் 07.12.2015 ஆகிய நாட்களில் முதற்கட்டமாக 142 அடி வரையில் அணையில் நீர் தேக்கி வைக்கப்பட்டது. மேலும், மத்திய நீர் வளக் குழுமம் மற்றும் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளின்படி, தமிழ்நாடு அரசு, முல்லைப்பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான 152 அடி வரையில் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதன்பொருட்டு, தமிழ்நாடு அரசு செய்து முடிக்க வேண்டிய மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளைச் செய்வதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்காமல், தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. எனினும், தமிழ்நாடு அரசு இவ்விடையூறுகளை நீக்கி, பணிகளை விரைந்து செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், அணை பாதுகாப்பு குறித்து மத்திய அரசு உத்தேசித்துள்ள சட்டத்தை நிறைவேற்றுமானால், அணை பாதுகாப்பு என்ற போர்வையில், முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளைப் பராமரிப்பதில் தமிழ்நாட்டிற்கு இடையூறுகள் ஏற்படும்.

மத்திய அமைச்சரவை 13.06.2018 அன்று இசைவு அளித்துள்ள, 2018ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை நிறுத்தி வைக்கவும், மாநிலங்களை கலந்தாலோசித்து, மாநிலங்களின் ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின்னரே, மத்திய அரசு அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்றலாம் எனவும், அது வரையில் மத்திய அரசு, அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்ற உத்தேசித்துள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்ற கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம்

“மத்திய அரசு இயற்ற உத்தேசித்துள்ள 2018ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவில், தமிழ்நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடிய அம்சங்கள் உள்ளதாலும், குறிப்பாக, தமிழ்நாடு அரசால் அண்டை மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும் என்பதாலும், மாநிலங்களை கலந்தாலோசித்து ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின்னரே, மத்திய அரசு அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்ற வேண்டும் எனவும், அது வரையில், மத்திய அரசு அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்ற எடுத்துள்ள நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும், இம்மாமன்றம் மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.”

இந்த தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றித்தரும்படி தங்கள் வாயிலாக இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

கோவையில் சட்டவிரோதமாக குட்கா தயாரித்தது தொடர்பாக காவல் துறையினர் சோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தது குறித்து விளக்கம். (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், சூலூர் காவல் நிலைய சரகம், கண்ணம்பாளையம் கிராமம், நல்லம்மாள் தோட்டத்தில் பான்பராக் மற்றும் குட்கா தயார் செய்து விற்பனை செய்து வருவதாக காவல் துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கோவை மாவட்ட காவல் துறையினர் 27.04.2018 அன்று மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் "அமித் எஸ் ஃபிராக்ரன்சஸ்'' என்ற பெயரில் இயங்கி வந்த தொழிற்சாலைக்குள் சென்று சோதனையிட்டனர். சோதனையின் போது, அங்கிருந்த அக்கம்பெனி மேலாளர் ரகுராம் என்பவரை விசாரித்த போது, மேற்படி தொழிற்சாலை புது தில்லியைச் சேர்ந்த அமித் ஜெயின் என்பவருக்கு சொந்தமானது என்பதும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்காவை சட்டவிரோதமாக தயாரித்து விற்று வந்ததும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, இது தொடர்பாக காவல் துறையினர் சூலூர் காவல் நிலையத்தில் அமித் ஜெயின் மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் போது, காவல் துறையினர், மேலாளர் ரகுராம் மற்றும் அங்கு பணிபுரிந்து வந்த அஜய், ராம்தேவ் மற்றும் சொஜிராம் ஆகியோரை கைது செய்து, அவர்களது ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். மேலும், சோதனையின் போது அத்தொழிற்சாலையில் இருந்த 200 மூட்டை கொட்டைப்பாக்கு, 10,520 கிலோ தூள் பாக்கு, 150 கிலோ ஏலக்காய், 95 கிலோ புகையிலை, 1,540 கிலோ லைம் பவுடர், 477 கிலோ கட்டா பவுடர், 3,24,000 இரண்டு கிராம் விஜபி குட்கா பாக்கெட்டுகள், 3,52,800 இரண்டு கிராம் பதான் பாக்கெட்டுகள், 25,500 நான்கு கிராம் பதான் பாக்கெட்டுகள், குட்கா

மற்றும் பான்பராக் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை கைப்பற்றினர். பின்னர் எதிரிகள் நான்கு பேரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

இதற்கிடையே அத்தொழிற்சாலையில் சோதனை நடைபெற்ற போது தி.மு.க.வை சேர்ந்த சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் தலைமையில் 25 பேர் அத்தொழிற்சாலை அருகே அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், தொழிற்சாலையினுள் நுழைய முற்பட்டு காவல்துறையினரை பணி செய்யவிடாமல் தடுத்து மிரட்டியுள்ளனர். இது தொடர்பாக சூலூர் காவல் நிலைய குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, கண்ணம்பாளையம் பேரூராட்சி முன்னாள் தலைவர் தளபதி முருகேசன் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வழக்கில் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் மற்றும் தங்கராஜ் ஆகியோர் நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்றனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட தி.மு.க.வினரை விடுவிக்கக்கோரியும், அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை கைவிடக்கோரியும், 02.05.2018 அன்று முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி தலைமையில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட முயன்ற 350 பேர் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டனர். இதே கோரிக்கையை வலியுறுத்தி 04.05.2018 அன்று கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் எதிர்கட்சி தலைவர் மரியாதைக்குரிய திரு.ஸ்டாலின் தலைமையில் சுமார் 3,500 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விசாரணையில், புது தில்லியைச் சேர்ந்த அமித் ஜெயின் என்பவர் கடந்த 2011ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நல்லம்மாள் தோட்டத்தில் பான்மசாலா மற்றும் குட்கா உற்பத்தி செய்து வந்ததும், கடந்த 2012ஆம் ஆண்டு குட்காவை தடை செய்த பிறகு, பதான் என்ற பெயரில் பான்மசாலா தயாரித்து வந்ததும், பின்னர் குட்காவிற்கு தேவையான கச்சா பொருட்களை வாங்கி அதே

இடத்தில் பதான் மற்றும் விஜபி என்ற பெயரில் ரகசியமாக குட்காவை தயாரித்து மதுரை உள்ளிட்ட சில இடங்களுக்கு அனுப்பி வந்ததும் தெரியவந்துள்ளது. மேலும், அமித் ஜெயின் பான்மசாலா மற்றும் ஸ்வீட் சுபாரி ஆகியவற்றை தயாரிக்க தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறையின் உரிமத்தைப் பெற்று தொழில் செய்து வந்ததும், 22.07.2018 வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளதும் தெரியவந்தது.

மேலும், கண்ணம்பாளையம் பஞ்சாயத்து முன்னாள் தலைவர் தளபதி முருகேசன், அத்தொழிற்சாலை கட்டட உரிமம் பெறாமலே கட்டப்பட்டு நடத்துவதற்கும், பொதுமக்கள் அத்தொழிற்சாலை குறித்து புகார் தெரிவித்த போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் பார்த்து கொள்ளவும், மதிப்பை குறைத்து சொத்து வரி செலுத்தவும், தொழிற்சாலையில் சட்டவிரோதமாக குட்கா தயாரித்து விற்பனை செய்து வருவதை அறிந்தும் அதை மறைத்து அமித் ஜெயினிற்கு உதவியாக இருந்து வந்ததும் தெரிய வந்தது.

இதனடிப்படையில், இவ்வழக்கில் தளபதி முருகேசன் 10.05.2018 அன்று சென்னையில் மீண்டும் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

தடை செய்யப்பட்ட குட்காவை அத்தொழிற்சாலையில் தயாரித்து வந்ததன் பேரில், கோவை மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரி அத்தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை 10.05.2018 அன்று ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கின் முதல் எதிரியான அமித் ஜெயினை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டு, தனிப்படையினர் தீவிரமாக அவரை தேடி வருகின்றனர்.

வழக்குகள் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, தவறு செய்தவர்களை தான் காவல்துறையினர்கள் நடவடிக்கை

எடுக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் புள்ளி விவரத்தோடு செல்லியிருக்கிறேன். நிறைய இருக்கிறது. உங்களுடைய காலநேரத்தினை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக சுருக்கமாக சொல்லியிருக்கின்றேன். ஆகவே, அங்கே இருக்கின்ற அந்த பேரூராட்சி தலைவர் பற்றி விளக்கமாக சொல்லி இருக்கின்றேன். விசாரணையின் அடிப்படையில் தான், அவர் அதில் ஈடுபட்டிருப்பதாக தெரிய வந்ததன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறாரே தவிர, தவறு செய்யாமல் யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

காவல்துறை பணியிடங்கள் குறித்து விளக்கம் (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காவல்துறையிலே ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்கள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மாவுடைய அரசு 2011 முதல் 2017 வரைக்கும் காவலர்கள் 20,173 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். உதவி ஆய்வாளர்கள் 1041 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் 39 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். காவல் வாத்தியக் குழு 128, மாவட்ட தீயணைப்பு அலுவலர் 1, நிலைய தீயணைப்பு அலுவலர் 15, தீயணைப்பு வீரர் 791, ஆக மொத்தம் 22,188 பேர் 2017ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

2017–2018ஆம் ஆண்டு 12,604 காவலர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல, காவல் துணை கண்காணிப்பாளர் 60 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். தீயணைப்பு வீரர் 1,434 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆக மொத்தம் 14,098 நபர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆக மொத்தம் 2011–2017 முதல் 2017–2018 காவலர்கள் 32,777 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். உதவி ஆய்வாளர்கள் மொத்தம் 1,041 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். காவல் துணை கண்காணிப்பாளர்கள் 99 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆக மொத்தம், 36,286 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

காலிப் பணியிடங்களை பொறுத்தவரைக்கும், சில நிலையிலே நீதிமன்றத்திற்கு சென்று விடுகிறார்கள். நீதிமன்றத்திற்கு செல்கின்றபோது, அந்த வழக்கு முடிந்த பிறகு தான், அங்கே நியமிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, காவல்துறை இயக்குநரை பொறுத்தவரைக்கும், 6 பணியிடங்களில் 5 நிரப்பப்பட்டு ஒன்று தான் காலியிடமாக இருக்கிறது. கூடுதல் காவல்துறை இயக்குநரை பொறுத்தவரைக்கும் 27 இடத்திலே 24 நிரப்பப்பட்டு

இருக்கிறது, 3 தான் காலியிடம், ஐ.ஜி.பி. பொறுத்தவரைக்கும் 43 பணியிடத்திற்கு 34 நியமிக்கப்பட்டு இருக்கிறது. காவல்துறை டிஐஜியை பொறுத்தவரைக்கும் 34 பணியிடத்திற்கு 27 நியமிக்கப்பட்டு இருக்கிறது, காவல் கண்காணிப்பாளர் SP பொறுத்தவரைக்கும் 137 பணியிடத்திற்கு 134 நியமிக்கப்பட்டு இருக்கிறது, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் 137 பணியிடத்திற்கு 117 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். துணை கண்காணிப்பாளர்கள் 830 பணியிடத்திற்கு 720 நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். சில பேர் நீதிமன்றத்திற்கு போன காரணத்தினாலே, பதவி உயர்வு கொடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. காவல் ஆய்வாளர் பொறுத்தவரைக்கும் 2,875க்கு பேருக்கு 2,842 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். 33 காலியிடங்களாக உள்ளது. காவல்துறை உதவி ஆய்வாளர் பொறுத்தவரைக்கும் 9,912–க்கு 8,543 பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், காலியிடங்கள் 1,369. சிறப்பு உதவி ஆய்வாளர் / தலைமைக் காவலர் / முதல்நிலைக் காவலர் / இரண்டாம் நிலைக் காவலர் பொறுத்தவரைக்கும் 1,10,234–க்கு 1,01,140 பேர் இருக்கிறார்கள், 9,094 காலியிடங்கள் உள்ளன. அதற்கும் விரைவில் அந்த காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கண்காணிப்பாளர் பொறுத்தவரைக்கும் 849–க்கு 849ம் இருக்கிறது. உதவியாளர்களை பொறுத்தவரைக்கும், 1570இல் 1,239 நியமிக்கப்பட்டு, 336 காலியிடங்களாக இருக்கிறது. இளநிலை உதவியாளர்கள் 1,358க்கு 1,107 பேர் இருக்கிறார்கள். அலுவலக உதவியாளர்கள் 810இல் 694 பேர் இருக்கிறார்கள்.

டி.என்.பி.எஸ்.சி. மூலமாக தேர்வு செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அந்த காலிப் பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்திலே பார்க்கும் போது, ஓய்வு பெற்ற பிறகுதான், இவர்களை தேர்ந்தெடுக்க ஆரம்பிப்போம். ஓய்வு பெற்ற பிறகு இவர்கள் தேர்ந்தெடுக்கும் போது, சில பேர் நீதிமன்றத்திற்கு போய்விடுகிறார்கள். பதவி உயர்வு

கொடுக்கவில்லை, போன்ற ஏதாவது ஒரு பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்திற்கு போய்விடுவதால் காலதாமதம் ஆகிவிடுகிறது. சில நேரங்களிலே ஒய்வு பெற்ற பிறகு அவர்களை தேர்ந்தெடுப்பதற்கு ஒன்றிலிருந்து ஒன்றரை ஆண்டு ஆகிறது. ஆகவே, அதை மாற்றி, வருகின்ற காலகட்டத்திலே ஒரு வருடத்திற்கு எத்தனை பேர் ஓய்வு பெறுகிறார்கள். அதாவது 2018 என்றால், 2018 டிசம்பர் வரைக்கும் எவ்வளவு பேர் ஓய்வு பெறுகிறார்கள் என்று கணக்கிட்டு அதற்கு முன்பாகவே காவலர் தேர்வை நடத்தி அவர்களை தேர்வு செய்து ஓய்வு பெற்றவுடன் அந்த குறிப்பிட்ட ஒரு வருடத்திலே ஜனவரி 2019 மாதம் என்றால் அப்போது இந்த காலிப்பணியிடங்களை நிரப்புவதன் மூலமாக காலிப் பணியிடம் இல்லாத அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உடல் நலத்தை பேணி காக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கம் (26.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல் துறையில் பணிபணிபுரியும் காவல் அதிகாரிகளும், காவலர்களும் இரவு, பகல் என பாராமல் ஓய்வின்றி காவல் பணிகளில் ஈடுபட்டு வருவதாலும், பொதுமக்களின் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போதும், போராட்டங்களை கையாளும் போதும், அவர்களுக்கு அதிக அளவில் மன அழுத்தம் ஏற்படுகிறது. மேலும், இவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் போதுமான நேரத்தை செலவிட்டு, இல்லப் பணிகளை கவனிக்க இயலாமல் இருந்து வருவதால், அவர்களின் குடும்பத்தினருக்கும் மன அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் அவர்களது உடல் மற்றும் மன நலம் பாதிக்கப்படுகிறது.

- ✶ குடும்ப சூழ்நிலை காரணமாகவும், உடல்நிலை காரணமாகவும் மற்றும் பணி நிமித்தம் காரணமாகவும் ஏற்படும் மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் வகையில் மன அழுத்த மேலாண்மை பயிற்சிகள் முறையாக நடத்தப்பட்டு வருகிறது.
- ✶ சென்னையில் உள்ள 12 காவல் மாவட்டங்களிலும் வார இறுதியில், யோகாசன நிபுணர்கள் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டு சுமார் 20,000–த்திற்கும் மேற்பட்ட காவல் ஆளிநர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- ✶ பெண் காவலர்களுக்கென (Work Life Balance) வேலை வாழ்க்கை சமநிலை குறித்து தனியாக உளவியல் / மனோதத்துவ நிபுணர்களைக் கொண்ட தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் 12 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் வாயிலாக சுமார் 1,500 பெண் காவலர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

- காவலர்களின் குறை தீர்ப்பதற்கு சனிக்கிழமை தோறும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஒவ்வொரு காவல் ஆளிநர்களின் மனுக்களை நேரடியாக பெற்று அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மேலும், 17.02.2018 அன்று எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டரங்கில் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் தலைமையில் சிறப்பு காவலர் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்பட்டது.

- இந்த முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் மற்றும் காவல் உயரதிகாரிகள் முன்னிலையில் 1,194 காவல் ஆளிநர்கள் பணிமாறுதல், ஊதிய முரண்பாடுகள் உள்ளிட்ட தங்களது குறைகளை மனுக்கள் மூலம் தெரிவித்தனர். அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை தினக் கொண்டாட்டத்தின் போது விளையாட்டு போட்டிகள் காவல் ஆளிநர்களின் குடும்பத்தினருக்கு நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

- சென்னை பெருநகர காவலர்களுக்கு மண்டலங்களுக்கு இடையேயான (Inter Zone) கபடி, கைப்பந்து மற்றும் தடகள போட்டிகள் நடத்தப்பட்டு காவலர்களுக்கு இடையே ஒரு இணக்கமாக சூழ்நிலையை ஏற்படுத்தி மன இறுக்கத்தை போக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- அதிக மதிப்பெண் பெற்ற காவலர்களின் குழந்தைகளை அழைத்து பரிசும் ஊக்கமும் அளித்து காவலர் குடும்பத்தினருக்கு உற்சாகம் ஏற்படுத்தப்படுகிறது.

இதனை உணர்ந்த, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, காவல் துறையினரின் மன அழுத்தத்தை போக்கவும், அவர்களது உடல் நலத்தை

பேணி காக்கவும் ஏதுவாக, பெங்களூருவில் உள்ள National Institute of Mental Health and Neuro Science (NIMHANS) நிறுவனத்தினருடன் இணைந்து உளவியல் ரீதியான பயிற்சியை அளிக்க முடிவு செய்தது. இப்பயிற்சிக்காக 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, 22.06.2018 அன்று, அரசாணை வெளியிட்டுள்ளது.

இப்பயிற்சியை உடனடியாக துவக்க, முதற்கட்ட செலவினங்களுக்காக 60 இலட்சத்து 47 ஆயிரத்து 600 ரூபாய்க்கு ஒப்புதல் அளித்து மேலும் ஒரு அரசாணை அன்றே வெளியிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி திட்டம் விரைவில் துவங்க உள்ளது. இதனால் தமிழ்நாடு காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மிகவும் பயனடைவர் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சிலை திருட்டு தடுப்புப் பிரிவு – உயர்நீதிமன்ற வழக்கு தொடர்பு பற்றி விளக்கம் (29.06.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிலை திருட்டு தடுப்புப் பிரிவு காவல் துறைத் தலைவர், சிலை திருட்டு தடுப்புப் பிரிவுக்கு தமிழ்நாடு அரசு போதிய ஒத்துழைப்பு அளிப்பதில்லை என்றும், இந்தப் பிரிவிலுள்ள போலீசாரை தன்னிடம் தெரிவிக்காமல் இடமாற்றம் செய்து விடுவதாகவும், அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் கூறியதாக வந்த செய்திகள் தொடர்பாக நான் கீழ்க்கண்ட விளக்கங்களை இப்பேரவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

சிலை திருட்டு தடுப்புப் பிரிவில் ஏற்கெனவே ஒரு காவல் துறை கண்காணிப்பாளரும், ஐந்து ஆய்வாளர்களும், மூன்று உதவி ஆய்வாளர்களும், நான்கு சிறப்பு உதவி ஆய்வாளர்களும், 16 காவலர்களும் என மொத்தம் 29 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி, திரு.பொன் மாணிக்கவேல், சிலை திருட்டு தடுப்புப் பிரிவின் காவல் துறைத் தலைவர் அவர்கள் திருச்சி சிறப்பு முகாம் அலுவலகத்திற்கு கூடுதலாக கேட்ட 7 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், 10 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 18 ஆய்வாளர்களும், 50 உதவி ஆய்வாளர்களும், 140 தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் என மொத்தம் 325 அலுவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர்.

மேலும், அவர் கேட்ட இன்னோவா கார்–1, பொலீரோ ஜீப்–2, டெம்போ டிராவலர்–2, மோட்டார் சைக்கிள்–10, வாக்கி–டாக்கி–17 மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் 35 இலட்சத்து 39 ஆயிரத்து 857 ரூபாய் செலவில் சிலை திருட்டு தடுப்புப் பிரிவின் திருச்சி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ராஜாராம் சிலை திருட்டு தடுப்புப் பிரிவில் அயற்பணியில் உள்ளார். தூத்துக்குடியில் பாதுகாப்பு பணிக்காக கூடுதலாக காவல் அதிகாரிகள் தேவைப்பட்டதால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ராஜாராமை சில நாட்களுக்கு அவசர நிமித்தமாக அனுப்பக் கோரி, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலிருந்து, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு காவல் துறைத் தலைவர் திரு. பொன் மாணிக்கவேல் அவர்களுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர், புலன் விசாரணைக்கு தேவைப்படுவதால், அவரை விடுவிக்க இயலாது என்று திரு. பொன் மாணிக்கவேல் அவர்கள் கூறியதன் பேரில், அவர் தூத்துக்குடிக்கு அனுப்பப்படவில்லை. அவர் தற்போதும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவில் தான் பணிபுரிந்து வருகிறார்.

மேலும், காவல் துறை உயர் அதிகாரிகள் நடத்தும் ஆய்வுக் கூட்டத்தில், நிலுவை வழக்குகளின் முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்கள் ஆய்வு செய்யப்படும். இதுபோன்ற ஆய்வுகள், அனைத்து காவல் துறைப் பிரிவுகளிலும் மாதாமாதம் நடைபெறும் வழக்கமான நடைமுறைதான். இவ்வாறான ஆய்வுக் கூட்டங்களிலும், சிலை திருட்டு தடுப்புப் பிரிவு தலைவர் அவர்கள் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை.

சிலை திருட்டு தடுப்புப் பிரிவு விசாரணையில், இந்து சமய அறநிலையத் துறை முழுமையான ஒத்துழைப்பு அளிக்கின்றது. மேலும், இந்து சமய அறநிலையத் துறை சார்பாக சில கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என சிலை திருட்டு தடுப்புப் பிரிவினால் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இக்கோரிக்கைகள் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக வரம்பிற்கு உட்பட்ட விஷயங்களாக இருப்பதால், அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என இந்து சமய அறநிலையத் துறையால், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதி ஆவணத்தில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற போது, எல்லா துறைகளிலுமே உயர் அதிகாரிகள், அவர்களுக்கு கீழ் பணிபுரிகின்ற அதிகாரிகளை விளக்கம் கேட்டால் விளக்கம் தருவது வழக்கம். அதன் அடிப்படையிலே, திரு.பொன் மாணிக்கவேல் அவர்கள், நீதிமன்றத்திலே உயர் அதிகாரிகள் விளக்கம் கேட்பதாக நீதிமன்றத்திலே தெரிவித்தார். நீதிமன்றத்திலே நீதிபதி அவர்கள், உயர் அதிகாரிகள் விளக்கம் கேட்டால் தாராளமாக தரலாம் என்ற செய்தியும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் சிலை திருட்டு போனது போலவும், நாங்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது போலவும், காங்கிரஸ் எதிர்க்கட்சி சட்டமன்றத் தலைவர் குறிப்பிட்டார். நாங்கள் எப்போதுமே தெய்வ பக்தி உடையவர்கள். நானும் தெய்வ பக்தி உடையவன். ஆகவே, உங்களுக்கு அந்த மாறுபட்ட கருத்தே தேவையில்லை. சிலை திருட்டு தடுப்புப் பிரிவை உருவாக்கிய ஆட்சியே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருக்கின்ற காலத்தில் 1983ஆம் ஆண்டு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு என்ற ஒரு பிரிவினை ஆரம்பித்தார்கள்.

ஆகவே, அம்மாவுடைய அரசு, அதை பேணிக் காத்து சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. ஆகவே, 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு களவுப் போன சிலைகள் எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1983ஆம் ஆண்டே சிலை திருட்டு தடுப்பு பிரிவு என்ற ஒரு பிரிவினை ஏற்படுத்தியதோடு, அந்த திருக்கோயில்களில் இருக்கின்ற சிலைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அந்த காலக் கட்டத்திலேயே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், திருக்கோயில்களில் உள்ள உலோகச் சிலைகள், ஆபரணங்கள், உண்டியல் மூலம் கிடைக்கப் பெற்றவை மற்றும் இதர விலை உயர்ந்தவைகளைப் பாதுகாத்திட, மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள் ஒரு தனி அமைப்பை திருக்கோயில் பாதுகாப்புப் படை என காவல் துறையில் ஏற்படுத்தி, கிரேடு 2 நிலையிலுள்ள 1,000 காவலர்களையும், 3,000 முன்னாள் ராணுவத்தினரையும் தமிழ்நாட்டிலுள்ள பல திருக்கோயில்களில் பணியமர்த்தப்பட்டார்கள் என்ற விவரத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உருவாக்கிய சிலை திருட்டு தடுப்புப் பிரிவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எல்லா திருக்கோயில்களிலும் இருக்கின்ற சிலைகள், மற்ற பொருட்களையும் காக்க வேண்டும் என்பதற்காக அம்மாவுடைய ஆட்சியிலே இந்த காவலர்களையும் நியமித்திருக்கிறார்கள். ஆகவே, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏதோ, இந்த ஆட்சியில் நடைபெற்ற சம்பவம் போல் நீங்கள் பேசுவது முறையல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பு களவு போன சிலைகளை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத் தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நிறைய கண்டு பிடித்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, காவல்துறை தலைவர் மரியாதைக்குரிய திரு.பொன் மாணிக்கவேல் இடம் மாற்றத்தை பற்றி சொன்னார்கள். அவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது தான், 2012ஆம் ஆண்டு இந்த பணியிலே அமர்த்தப்பட்டார். அப்போது டிஐஜியாக பணி செய்து கொண்டிருந்தார். 2015இல் பணி உயர்வு வழங்கப்பட்ட போது, ஐஜியாக பதவி உயர்வு வழங்கப்பட்ட போது, அந்த துறையிலேயே தொடர்ந்து இருந்தார். ஐந்தரை ஆண்டு காலம் அதே துறையிலே இருந்தார். ஆகவே, பணியிடம் மாற்றுவது எல்லா ஆட்சியிலும் நடைபெறும் ஒரு சம்பவம். நீண்ட நாட்கள் பணியிலே இருந்ததால், பணி மாறுதல் செய்வார்கள். அந்த அடிப்படையிலே தான் அவர் பணிமாற்றம் செய்யப்பட்டார் தவிர, வேறு ஒன்றும் இல்லை.

அதுமட்டுமல்ல இந்த பணிமாற்றம் செய்கின்ற போது, ஒரு தனிநபர் ஒரு பகுதியிலே சிலை திருட்டு போய்விட்டது, அந்த சிலை திருட்டை இவர் இருந்தால் சரியாக கண்டுபிடிப்பார் என்று நீதிமன்றத்திலே சொன்னதின் காரணமாக, நீதிபதி அவர்கள் இவரை நியமித்தார். ஆகவே, சிலை திருட்டு தடுப்புப் பிரிவிலே இவர் தொடர்ந்து இதை கூடுதலாக கவனிக்க வேண்டும் என்று தான் ஆணை பிறப்பித்தார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, களவு போன சிலைகளை கண்டுபிடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை சரியாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். நீதிமன்ற உத்தரவின்படி, திரு. பொன் மாணிக்கவேல் அவர்கள் என்ன என்ன கேட்டார் என்ற விவரம் முழுவதும் நான் சொல்லிவிட்டேன். அவர் கேட்டதை எல்லாம் கொடுத்துவிட்டோம். அந்த சிலை திருட்டு தடுப்புப் பிரிவிலே கூடுதலாக காவலர்களை கேட்டார்கள், கொடுத்துவிட்டோம். வாகனங்கள் கேட்டார்கள், கொடுத்து விட்டோம். ஆகவே, எல்லாமே கொடுத்துவிட்டோம், எதுவும் கொடுக்காமல் இல்லை. ஆகவே, நீங்கள் எதுவுமே கொடுக்கவில்லை, செய்யவில்லை என்று சொல்வது எந்த விதத்திலே சரியாக இருக்கும். நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களுக்கு கூடுதலான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலே, அவர்கள் கேட்ட கோரிக்கைகள் எல்லாம் அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிமன்றத்தை விமர்சிப்பது அவையிலே மரபு இல்லை. ஓரளவுக்கு தான் நாம் பேச முடியும். நீதிமன்றத்திலே வழக்கினுடைய தீர்ப்பை நாம் விமர்சிப்பது கிடையாது. ஆகவே, அந்த தீர்ப்பையொட்டி சில கருத்துக்களை நாம் இங்கே தெரிவிக்கின்றோம். ஆகவே,

உங்களுடைய ஆட்சி காலத்தை விட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் அதிகமான சிலை கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. நீங்கள் உங்கள் ஆட்சியிலே எவ்வளவு வசதி செய்து கொடுத்தீர்கள். அப்போது 29 பேர் தான் இருந்தார்கள். ஆகவே, இது பல ஆண்டுகளுக்கு முன்பு களவு போன சிலைகள். ஆகவே, அதையெல்லாம் கண்டு பிடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இருந்தாலும், தனிநபர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்ததின் அடிப்படையிலே மீண்டும் திரு. பொன் மாணிக்கவேல் அவர்கள் நியமிக்கப்பட்டார். அப்பொழுது நிறைய களவு போன சிலைகள் கிட்டத்தட்ட பல ஆண்டுகளுக்கு முன்பு அதையெல்லாம் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னால், தேவையான காவலர்கள், பிற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்திலே தெரிவித்தார். அந்த நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவுடைய அரசு அவர்கள் வைத்த கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றி தந்திருக்கிறது.

இது இரண்டு துறை சம்பந்தப்பட்டது. இந்து சமய அறநிலையத்துறையும், காவல்துறையும் சம்பந்தப்பட்டது. ஆகவே, இதிலே எங்கெங்கெல்லாம் சிலைகள் களவு போய் இருக்கிறது என்று கண்டுபிடித்து வருகிறோம். அதிகமான சிலையை கண்டுபிடித்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதற்கான நடவடிக்கைகளையும் அம்மாவுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

புதுடில்லியில் நடைபெறும் காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம் குறித்து அளித்த விளக்கம் (02.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி, விவாதிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே உச்சநீதிமன்றம் தெளிவான தீர்ப்பை கொடுத்திருக்கிறது. குறிப்பிட்ட ஆண்டு வரை, 15 ஆண்டுகள் வரை, இந்த தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்ற உறுதியான தீர்ப்பை கொடுத்திருக்கின்றார்கள். அதோடு, இதன் செயல்பாடு பற்றியும் தெளிவாக குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்; காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட வேண்டும்; இந்த ஆணையத்தில் எத்தனை பேர் இடம் பெறுகிறார்கள்; மத்திய அரசிலே எத்தனை பேர்; மாநில அரசிலே எத்தனை பேர் என்று எல்லாம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு, காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவிற்கும் எவ்வளவு பேர் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்ற விவரத்தை எல்லாம் தெளிவாக பட்டியல் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையிலே மத்திய அரசு அந்த குழுவை நியமித்து விட்டது. காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டிற்கும் குழு அமைக்கப்பட்டு விட்டது. மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்தை சேர்ந்தவர்களையும் உறுப்பினர்களாக யார் யாரை நியமிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அதன் அடிப்படையிலே தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அரசு, தங்களுடைய பிரதிநிதிகளை முதலிலே வழங்கியது. கருநாடக அரசு வழங்காமல் இருந்தது. மத்திய அரசே, அந்த உறுப்பினர்களை நியமித்தது. உடனடியாக கருநாடக அரசும் தங்களுடைய பிரதிநிதிகளை ஆணையத்திற்கும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவிற்கும் அமைத்தார்கள்.

ஆகவே, இன்றைக்கு குழு அமைக்கப்பட்டுவிட்டது. அந்த குழு செயல்பட ஆரம்பித்துவிட்டது. இன்றைய தினம் முதன்முதலில், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, நீண்ட நெடிய நாட்களாக போராடி கொண்டுவந்த, அதற்கு வடிவம் கொடுக்கின்ற விதத்திலே, இன்றைய தினம், காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம் நடைபெறுகிறது. அந்த கூட்டத்திலே, ஏற்கெனவே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் மத்திய அரசு இன்றைக்கு இந்த குழுவின் வாயிலாக என்னென்ன அம்சங்கள் குறிப்பிட்டிருக்கிறதோ, அதை எல்லாம் இன்றைக்கு பேசி தீர்க்கப்படும். அதனால் தான், நம்முடைய பிரதிநிதிகள், அரசின் சார்பாக செல்லக்கூடிய பிரதிநிதிகள், நான், மூத்த அமைச்சர்கள், டெல்டா பாசன இருக்கின்ற அந்த அமைச்சர்கள் எல்லாம், உயர் அதிகாரிகள், நம்முடைய அரசு வழக்கறிஞர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசி, நாம் எப்படி செயல்பட வேண்டும், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு எந்தெந்த வகையிலே நமக்கு சாதகமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த ஆணையம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற விவரங்கள் எல்லாம், கேட்டறிந்து நாம் எப்படி எல்லாம் செயல்பட வேண்டும் என்று ஒரு ஆலோசனையும் நாம் சொல்லி அனுப்பி இருக்கின்றோம். முதல் கூட்டம் இன்று நடைபெறுகிறது. அந்த முதல் கூட்டத்திலே என்ன என்ன பேசப்படுகின்றது என்ற விவரம் தெரிந்த பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது கருநாடக அரசு, உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்வதாக நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே, நமக்கு ஏற்கெனவே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீர் 177.25 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அதிலிருந்து எந்த மாற்றமும் கிடையாது. அந்த அடிப்படையிலே தான் நமக்கு ஒவ்வொரு மாதமும், இவ்வளவு தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று அதிலே தெளிவாக

குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு முறையும் அந்த குழுக்கள் பத்து நாட்களுக்கு ஒருமுறை கூடி எவ்வளவு தண்ணீர் தருகிறது என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலே நமக்கு தண்ணீர் வழங்க இருக்கின்றார்கள் என்பதையும் இந்த நேரத்தில் கோடிட்டுகாட்டி, மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, இதையெல்லாம் பொறுத்திருந்து பார்க்கலாம். நமக்கு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, மத்திய அரசு எவ்வாறு செயல்படுகிறது, இந்த ஆணையம் எவ்வாறு செயல்படுகிறது, இந்த காவேரி நீர் முறைப்படுத்தும் குழு எவ்வாறு செயல்படுகிறது என்பதை எல்லாம் விவரம் தெரிந்த பிறகு, நாம் அனைத்துக் கட்சி கூட்டத்தை தேவை இருப்பின் கூட்டி அதற்கு தேவையான மேல் நடவடிக்கை எல்லாம் எடுப்போம் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பது பற்றி அளித்த விளக்கம் (02.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சேலம் அணைமேடு இரயில்வே கடவு எண் 183–ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணி துவங்க உள்ளது. நிலம் எடுப்பதில் சில பிரச்சினைகள் இருக்கிறது. அதை எடுக்கின்ற பணியும் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கிறது. அந்த அணைமேடு பகுதியிலே இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல சேலம் முள்வாடி கேட், செரிரோடு இரயில்வே கடவு எண் 184, அதற்கும் தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. அதற்கும் நிலம் எடுக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு நன்றாக தெரியும். சாலைகளின் இரண்டு பக்கங்களிலும் வீடுகள் இருக்கின்றது. ஆகவே, அந்த வீட்டுனுடைய உரிமையாளரிடத்தில் பேசி சம்மதம் கடிதம் பெற்று, அவர்களிடத்திலே அந்த நிலத்தை கையகப்படுத்தி, அங்கேயும் பணி விரைவாக துவங்கப்படும். ஓரிடத்திலே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி விரைவில் துவங்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இன்னொன்று முள்வாடி கேட்டிலே இரயில்வே கடவு எண் 185, அதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பணி நிறைவேற்றப்பட்டவுடன், அங்கேயும் பணி துவங்குதவற்கான நடவடிக்கை அரசு எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

புதுடில்லியில் இன்று நடைபெற்ற காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அளித்த விளக்கம் (02.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அவை நடந்து கொண்டிருக்கும் போது, ஒரு வினாவை எழுப்பினார்கள். இந்த மாதத்திற்கு தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்ற அந்த விவரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அறிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, மத்திய அரசால் காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைக்கப்பட்டு, முதல் கூட்டம் புதுடில்லியிலே காவேரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் தலைமையிலே இன்றைக்கு நடைபெற்றது. சுமார் நான்கு மணி நேரம் அந்த கூட்டம் நடைபெற்றது. நான்கு மணி நேரம் நடைபெற்ற கூட்டத்திலே, இன்றையதினம் இந்த ஆணையத்தின் தலைவர் திரு.மசூத் உசேன் அவர்கள், இது வரலாற்று சிறப்புமிக்க தருணம் என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே, அப்படி வரலாற்று சிறப்பு மிக்க இந்த ஆணையத்தின் வாயிலாக இன்றைக்கு ஒரு நல்ல தீர்வு எட்டப்பட்டு, நம்முடைய மாநிலத்திற்கு இந்த மாதம், ஜூலை மாதம், வழங்க வேண்டிய நீரின் அளவு 31.24 டிஎம்சி, அதை இந்த மாதம் வழங்க வேண்டும் என்று காவேரி மேலாண்மை ஆணையத்தில் முடிவு எடுக்கப்பட்டு இன்றைக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

காவேரி நீர் முறைப்படுத்தும் குழு, கருநாடக அணையில் உள்ள நீர் இருப்பினை கருத்தில் கொண்டு நீரை விடுவிக்க ஆணையம் ஆணையிட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாதவாரியாக நமக்கு கிடைக்க வேண்டிய நீர் கிடைக்கும். ஒவ்வொரு 10 தினங்களுக்கு ஒருமுறை கணக்கிட்டு, அந்த கணக்கின்படி அணைக்கு எவ்வளவு நீர் வருகின்றதோ, கருநாடகத்திற்கு எவ்வளவு நீர் வருகிறதோ, அந்த நீரை நமக்கு பகிர்ந்தளிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே

தெரிவித்து, இது வரலாற்று சிறப்புமிக்க ஒரு சாதனை. ஜுன் மாதம் 9.19 டிஎம்சி நமக்கு கிடைக்க வேண்டும். அதாவது, ஜுன் மாதம் நமக்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவு 9.19 டிஎம்சி; 11 டிஎம்சி நீர் வந்திருக்கிறது. நமது அணைக்கு வந்திருக்கிறது. ஜுலை மாதத்தை பொறுத்தவரைக்கும், 31.24 டிம்எசி, தண்ணீர் நமக்கு கருநாடக அரசால் வழங்கப்பட வேண்டும். அதை இந்த ஆணையம் உறுதி செய்து இருக்கிறது. இந்த ஜுலை மாதத்திற்குள் நமக்கு கருநாடக அரசு அவர்களுடைய அணையிலிருந்து 31.24 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என்று ஆணையம் ஆணையிட்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், ஒரு கருத்தை சொன்னார்கள், “42 டிஎம்சி இந்த மாதம், எனக்கு ஞாபகம் இருந்தால், சரியாக இருந்தால் 42 டிஎம்சி வழங்க வேண்டும்” என்று ஒரு கருத்தை சொன்னார்கள். இல்லை, ஜுலை மாதத்தை பொறுத்தவரைக்கும், நம்முடைய மாநிலத்திற்கு கருநாடக அரசு வழங்க வேண்டிய நீரினுடைய அளவு 31.24 டிஎம்சி தான். அதனால், பக்கத்தில் உள்ள அண்டை மாநிலத்திற்கும் கொடுக்க வேண்டும், அதனை சேர்த்து தான் 31.24 டிஎம்சி, இன்றைக்கு கருநாடக அரசு திறந்து விட வேண்டும் என்ற ஒரு அறிவிப்பை தந்திருக்கிறது, ஆணையம் கட்டளையிட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்தை பொறுத்தவரைக்கும், 45.95 டிஎம்சி, செப்டம்பர் மாதம் 36.76 டிஎம்சி, அக்டோபர் மாதம் 20.22 டிஎம்சி, நவம்பர் மாதம் 13.78 டிஎம்சி, டிசம்பர் மாதம் 7.35 டிஎம்சி, ஜனவரி மாதம் 2.76 டிஎம்சி, பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை 2.50 டிஎம்சி. ஆக மொத்தம், 177.25 டிஎம்சி, உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி கருநாடக அரசு நம்முடைய தமிழகத்திற்கு வழங்க வேண்டும். அதை காவேரி மேலாண்மை ஆணையம் ஆணையிட்டு அந்த ஆணையத்தை காவேரி நீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைப்படுத்தும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

நேபாளம் – திபெத் எல்லையில் உள்ள மானசரோவர் யாத்திரை சென்ற தமிழர்களை நலமுடன் மீட்டு, அழைத்துவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த விளக்கம் (04.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இமயமலையில் அமைந்துள்ள கைலாஷ் மானசரோவருக்கு ஆண்டுதோறும் ஜுன் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில், நாடு முழுவதிலிருந்தும் பக்தர்கள் யாத்திரை செல்கின்றனர். இந்தியாவிலிருந்து புனித யாத்திரை சென்றவர்கள், அங்கு நிலவும் மோசமான பருவநிலை காரணமாக, 629 பேர் சிமிகோட் என்ற இடத்திலும், 451 பேர் ஹில்சா என்ற இடத்திலும், மேலும் 500 பேர் சீனாவின் திபெத் எல்லையிலும் சிக்கியுள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியானவுடன், தமிழ்நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர் அங்குள்ளனரா என கேட்டறிந்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டேன்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலிருந்து புனித யாத்திரை சென்றவர்களின் நிலை குறித்து, தமிழ்நாடு அரசு அதிகாரிகள், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் நேபாளத்தில் அமைந்துள்ள இந்திய தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, விவரங்கள் கேட்டறிந்தனர். சென்னையிலிருந்து 19 பேர் கொண்ட குழுவினர், நேபாளத்தில் சிமிகோட் பகுதியில் இருப்பதாகவும், அவர்கள் உடல்நிலை சீராக உள்ளதாகவும் தகவல் பெறப்பட்டது. நேற்று பருவநிலை மேம்பட்ட காரணத்தால், சிமிகோட் பகுதியிலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 யாத்திரிகர்கள் நேபாள்கஞ்ச் என்ற இடத்திற்கு விமானம் மூலம் வந்தடைந்தனர். அங்கிருந்து யாத்திரிகர்களை தமிழ்நாட்டிற்கு உரிய முறையில் அனுப்பி வைப்பதற்கு, புது தில்லி தமிழ்நாடு இல்லத்திலிருந்து இரண்டு அதிகாரிகளை நேபாள்கஞ்ச் செல்ல நான் உத்தரவிட்டேன். அவர்கள், இந்திய தூதரகம் மற்றும் நேபாள அரசின் ஒத்துழைப்போடு,

நம் மாநிலத்தைச் சேர்ந்த அனைத்து யாத்திரிகர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து, தமிழ்நாட்டிற்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இக்குழுவைச் சார்ந்த 18 பேர் இன்று காலை லக்னோ வந்தடைந்துள்ளனர். இக்குழுவைச் சார்ந்த மற்றொரு நபர் இன்று மாலைக்குள் லக்னோ வந்தடைவார். இவர்கள் அனைவரும் இன்று இரவு சென்னைக்கு வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து நான்கு பேர் யாத்திரை சென்றுள்ளனர். அவர்கள் நேற்று சிமிகோட் பகுதிக்கு திரும்பியுள்ளனர். அவர்களை, நேபாள்கஞ்ச் வழியாக இந்தியாவிற்கு அழைத்து வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர, தேனி மாவட்டத்திலிருந்து தனியே சென்ற 6 பேர் கொண்ட குழுவில், ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த 69 வயதான ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு. ராமச்சந்திரன் என்பவர், புனித யாத்திரை செல்லும் வழியில், உடல்நிலை காரணமாக யாத்திரையை முடிக்க முடியாமல் திரும்பி வரும்போது, மூச்சுத் திணறி இறந்ததாக தகவல் பெறப்பட்டது. தற்போது அவரது உடல் நேபாள தலைநகர் காட்மண்டு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தகவல் தெரிந்த அவரது மகனும், மகளும் அங்கே சென்றுள்ளனர். அன்னாரது உடலை இன்று அல்லது நாளைக்குள் அவரது சொந்த ஊருக்கு எடுத்துவர, நேபாள நாட்டின் காட்மண்டுவில் உள்ள இந்திய தூதரகம் மூலமாக புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நேபாள நாட்டிற்கு, தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள அனைத்து யாத்திரிகர்களும் பாதுகாப்பாக அவர்கள் சொந்த ஊர் திரும்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அம்மாவின் அரசு எடுத்து வருகிறது என்பதை தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் தொடர்பான உச்சநீதிமன்ற ஆணை குறித்து விளக்கம் (05.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல்துறை சீர்திருத்தங்கள் தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றம், திரு. பிரகாஷ் சிங் மற்றும் பலர் தாக்கல் செய்த வழக்கில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு 03.07.2018 அன்று தன்னுடைய இடைக்கால உத்தரவினை வழங்கியுள்ளது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம், மேற்கண்ட இடைக்கால உத்தரவில், மத்திய அரசின் சார்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் திரு.கே.கே.வேணுகோபால் அவர்கள் வாதிடும் போது 29 மாநிலங்களில், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் முந்தைய வழிமுறைகளை பின்பற்றவில்லை என்றும், தமிழ்நாடு உட்பட 5 மாநிலங்கள் மட்டுமே காவல் துறை தலைமை இயக்குநர் நியமனத்திற்கு தேர்வுப் பட்டியலை தயாரிக்க மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு கருத்துருக்களை அனுப்பி வைத்துள்ளன எனவும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றித் தான் தமிழ்நாட்டில் காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதோடு, 03.07.2018 அன்று மேற்படி வழக்கில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் சில வழிமுறைகளை புதியதாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வரும் காலங்களில், இந்த வழிமுறைகளை பின்பற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு ஆண்டுக்கு மேல் காவல்துறை தலைமை இயக்குநர் பணியாற்றக் கூடாது என்ற

ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றார். அது அவ்வாறு அல்ல. ஒரு காவல்துறை தலைமை இயக்குநர் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து அவர்கள் 2 ஆண்டு காலம் தொடர்ந்து அவர்கள் இருக்க வேண்டும் என்பது தான், என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஏற்கெனவே, டிஜிபி நியமனத்தை பொறுத்தவரைக்கும், சட்டத்திட்ட விதிகளுக்கு உட்பட்டுத்தான் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55இன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் பற்றிய உரை (05.07.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சாரம், இடி மின்னல் தாக்கி உயிரிழந்தோர், வனவிலங்கு தாக்கி உயிரிழந்தோர், நீரில் மூழ்கி உயிரிழந்தோர் மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோர் ஆகியோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வேண்டி பல சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சி தலைவர் உட்பட பலபேர் நிவாரணம் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்கள். அதோடு, பேரவை துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்தும் பரிந்துரைத்து உள்ள கோரிக்கைகளும் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகளை பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்.

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவரின் மகன் திரு. பழனி என்பவர் 05.06.2018 அன்று கொத்தவால்சாவடி அருகில் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூர் வட்டம், ஜமீன் எளம்பிள்ளை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவர் 24.05.2018 அன்று மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வேட்டைக்காரனிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்கிரிசாமி என்பவரின் மகன் திரு. பிரகாஷ்ராஜ் என்பவர், 19.06.2018 அன்று, வீடு இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், முகையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஜெயபால் என்பவரின் மகன் செல்வன் மணிகண்டன் என்பவர் 12.06.2018 அன்று எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், மகாதானம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேப்பையன் என்பவரின் மகன் திரு. சண்முகம் என்பவர் கடுவையாறு பிரிவு வாய்க்காலில் விழுந்து, நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், ஒரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜபாண்டியன் என்பவரின் மகன் திரு. சதீஷ்குமார் என்பவர் நம்பியார் நகர் கடற்கரையில் குளிக்கும் போது, கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவர் 15.06.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆலாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரகாஷ் என்பவரின் மகள் சிறுமி பிரகதி என்பவர் 20.06.2018 அன்று வாகனம் மோதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலைக் குன்றுகள் கிராமம், காஞ்சமலை எஸ்டேட்டைச் சேர்ந்த திரு. மதி என்பவரின் மனைவி திருமதி கைலாசவதி என்பவர் 15.06.2018 அன்று சிறுத்தைப் புலி தாக்கி உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பெருந்தலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரமேஷ் என்பவரின் மனைவி திருமதி ஆனந்தி என்பவர் பலத்த காற்று மற்றும் மழையின் காரணமாக தென்னை மரம் விழுந்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 01.05.2018 அன்று உயிரிழந்தார்.

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், தெக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி மற்றும் அவருடைய மனைவி திருமதிமல்லிகா ஆகிய இருவரும் 15.06.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தனர்.

பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த திரு. தர்மராஜன் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் 20.05.2018 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார்.

உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகபெருமாள் என்பவரின் மகள் சிறுமி லோக ஜனனி என்பவர் 17.06.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.மூர்த்தி என்பவரின் மகன் சிறுவன் அசோக் மூர்த்தி என்பவர் 03.06.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், புத்தளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவநாராயண பெருமாள் என்பவரின் மகன் திரு. சதாசிவம் என்பவர் 29.06.2018 அன்று வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

தோவாளை வட்டம், தாழக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. உமையோரான்பிள்ளை என்பவரின் மனைவி திருமதி சந்திரிகா என்பவர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து 28.06.2018 அன்று உயிரிழந்தார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், சேப்ளாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆண்டகுருநாதன் என்பவரின் மகன் திரு. ஆனந்தசெல்வன் என்பவர் 02.07.2018 அன்று வயலில் விளையாடிக் கொண்டிருந்த போது, மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 18 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. பழனி, திரு. மாணிக்கம் மற்றும் செல்வன் மணிகண்டன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்தும், வீடு இடிந்து விழுந்து உயிரிழந்த திரு. பிரகாஷ்ராஜ் மற்றும் திருமதி சந்திரிகா, நீரில் மூழ்கி உயிரிழந்த திரு. சண்முகம், திரு. சதிஷ்குமார், செல்வி லோக ஜனனி, திரு.அசோக் மூர்த்தி, சாலை விபத்தில் உயிரிழந்த திரு. பொன்னுசாமி, சிறுமி பிரகதி, திரு. பழனிசாமி மற்றும் அவருடைய மனைவி திருமதி மல்லிகா, திரு. ராஜேந்திரன், தென்னை மரம் விழுந்து உயிரிழந்த திருமதி ஆனந்தி, மற்றும் வெல்டிங் வேலையின் போது உயிரிழந்த திரு. சதாசிவம் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும்; சிறுத்தைப்புலி தாக்கி உயிரிழந்த திருமதி கைலாசவதி அவர்களின் குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் வனத்துறை மூலமும்; மின்னல் தாக்கி உயிரிழந்த திரு. ஆனந்தசெல்வன் குடும்பத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு இலட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.ஜி.பிரின்ஸ், திரு.H.வசந்தகுமார், திரு.ஆர்.கணேஷ், திரு.வி.எஸ்.காளிமுத்து, திரு.ச.பாண்டி, திரு.எஸ்.ராஜேஷ்குமார், திரு.இரா.ஜெயராம கிருஷ்ணன், திரு.ஆர்.டி.அரசு ஆகியோர் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு, ஏற்கெனவே என்னால் 14.06.2018 மற்றும் 23.06.2018 ஆகிய தேதிகளில் நிவாரணம் அறிவிக்கப்பட்டு பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாலை விபத்து நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து கொண்டு அமைகிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில், மேகதாது பிரச்சினை தொடர்பாக முன்மொழிந்த தனித் தீர்மானம் (06.12.2018)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரி உரிமையை மீட்டெடுக்க கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டு விவசாயம் செழிக்க செய்திட்ட தெய்வத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

நீண்ட நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டிற்கு உரிய காவேரி நீர் கிடைக்கும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்த இந்த நேரத்தில், மத்திய நீர்வளக் குழுமம், கருநாடகத்திலுள்ள மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, கருநாடக அரசுக்கு 22.11.2018 அன்று அனுமதி வழங்கிய செயல், நம் அனைவரையும் மிகவும் கொதிப்படைய வைத்திருக்கிறது. இதை தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் கடுமையாக எதிர்த்து வருகின்றோம். இந்த நிலையில் தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், நாம் அனைவரும் ஒருமித்த கருத்தோடு, நம் உணர்வையும், எதிர்ப்பையும், கண்டனத்தையும், தமிழ்நாட்டின் நிலைப்பாட்டையும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் விதமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டு வந்துள்ள இந்த தீர்மானத்தை, அவையில் நான் முன்மொழிய விழைகிறேன். இத்தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து அதனை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இம்மாமன்றத்தில் 05.12.2014, 27.03.2015

ஆகிய நாட்களில் கருநாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டக்கூடாது என ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கருத்தில் கொள்ளாமலும், உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்படுகை மாநிலங்களின் முன்அனுமதி பெறாமல், கருநாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது என்பதையும் மீறி, தற்பொழுது கருநாடக அரசு மேகதாது அணை கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை துவக்க உள்ளதற்கும், மேகதாதுவில் புதியதாக அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு மத்திய நீர்வளக் குழுமம் 22.11.2018 அன்று அனுமதி வழங்கியதற்கும் இம்மாமன்றம் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

மத்திய நீர்வளக் குழுமம் வழங்கிய அனுமதியை திரும்பப்பெற அக்குழுமத்திற்கு மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்றும் இம்மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றை மீறும் வகையில், கருநாடக அரசோ அல்லது அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களோ, கருநாடகாவில் உள்ள காவேரி படுகையில், மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் தமிழ்நாட்டின் இசைவின்றி எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று கருநாடகா அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திரு.மு. கருணாநிதி அவர்களின் மறைவுக்காக சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை (03.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சிறந்த முறையிலே பணியாற்றி மறைந்த முன்னாள் 12 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, முன்னாள் பாரதப் பிரதமர் திரு.அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் பல முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையிலே பணியாற்றியவர். பாரதிய ஜனதா கட்சியினுடைய மூத்த தலைவர், பாரதிய ஜனதா கட்சியினுடைய முதல் பாரதப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழக முன்னாள் ஆளுநர், மக்களவை முன்னாள் தலைவர், புகழ்பெற்ற தொழில் அறிஞர் அவர்களுக்கும் என்னுடைய இரங்கலை தெரிவித்து, மறைந்த நெல் ஜெயராமன் அவர்கள் டெல்டா பாசன விவசாயிகளுக்கு நன்கு அறிமுகமானவர். நெல் ஜெயராமன் என்று சொன்னாலே, வேளாண் துறை மக்களுக்கு பேர் உதவியாக திகழ்ந்தவர் என்ற பாராட்டுக்குரியவர். விவசாயிகளுக்கு முன்மாதிரியாக திகழ்ந்த நெல் ஜெயராமன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே இரங்கலை தெரிவித்து, மருத்துவர் எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் ஏழைகளுக்கு குறைந்த கட்டணத்திலே மருத்துவம் செய்து பெயர் பெற்றவர். அவருடைய மறைவிற்கும் இரங்கலை தெரிவித்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கஜா புயலால் உயிரிழந்த அனைத்து குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை இந்த நேரத்திலே தெரிவித்து, மறைந்த திரு.ஏ.கே. போஸ் அவர்கள் 1972ஆம் ஆண்டு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே தன்னை கழக உறுப்பினராக இணைத்துக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இடத்திலே

நெருக்கமாக இருந்து, அவர் தொண்டரணியிலே மிகவும் துடிப்புடன் செயல்பட்டு சிறந்த பணியாற்றியவர். அவருடைய மறைவிற்கு பிறகு கழகத்திலே சிறந்த முறையிலே பணியாற்றி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இதயத்திலே இடம் பெற்று 2004ஆம் ஆண்டு மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக போட்டியிட வாய்ப்பை பெற்றார். 2006ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தேர்தலில் கழகத்தின் சார்பாக போட்டியிடுவதற்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாய்ப்பு கொடுத்து, அந்த தொகுதியிலே வெற்றி பெற்று சிறந்த முறையிலே பணியாற்றியவர். கழகத்திலே மதுரை மாநகர மாவட்ட கழக அவைத் தலைவராக சிறந்த முறையிலே பணியாற்றி, பிறகு மதுரை மாநகர மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நியமித்து சிறந்த முறையிலே பணியாற்றியவர். 2011இல் கழகத்தின் சார்பாக மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்று சிறந்த முறையிலே சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர். 2016–லே திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவர் அந்த தொகுதியிலே வெற்றி பெற்று, சிறந்த முறையிலே பணியாற்றி கொண்டிருந்தார். இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீதும், கழகத்தினுடைய தலைமை மீதும் மிகுந்த விசுவாசம் கொண்டு பணியாற்றியவர் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.கே. போஸ் அவர்கள். கழகம் எதிர்கட்சியாக இருந்த போதும் கூட இவருடைய பணி சிறப்பாக அனைவராலும் போற்றப்பட்டது. கழகத்தின் சார்பாக நடைபெற்ற அனைத்து ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்ளக் கூடியவர். கழகத்தின் சார்பாக அறிவிக்கப்பட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றிருக்கின்றார். இவர் கழக தொண்டர்களிடத்திலும், பொதுமக்களிடத்திலும் அன்பாக, எளிமையாக பழகக்கூடியவர். இவருடைய உடல்நலம் சரியில்லாமல் 01.08.2018 அன்று புதன்கிழமை மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 02.08.2018 வியாழக்கிழமை விடியற்காலை சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தியுள்ளார்.

மறைந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு.போஸ் அவர்கள் மறைவு, கழகத்திற்கு பேரிழப்பும் வேதனையும் ஏற்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், இந்தியாவின் மிக மூத்த அரசியல்வாதியும், 50 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களுடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

1937இல் அரசுப் பள்ளிகளில் இந்திப் படிப்பு கட்டாயமாக்கப்பட்டது. அதனைக் கண்டித்து, நீதிக்கட்சி தொடர் போராட்டங்களை முன்னெடுத்தது. 13 வயதிலேயே அன்னார் இந்தப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டார். தன் பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து, ‘இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு’ என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் நடத்தினார். போராட்டத்திற்கு மாணவர்களைத் திரட்ட அந்த சிறு வயதிலேயே ‘மாணவ நேசன்‘ என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தினார். 17 வயதில் தமிழ்நாடு மாணவர் மன்றத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

1942இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய திராவிட நாடு பத்திரிகையில் அன்னார் எழுதிய ‘இளமைப்பலி’ என்ற படைப்பு வெளியானது. அப்படைப்பு பேரறிஞர் அண்ணா அவர்களை பெரிதும் கவர, திருவாரூரில் ஒரு விழாவுக்காக வந்திருந்த அவர், அன்னாரை அழைத்துப் பாராட்டினார்.

1957ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குள் நுழைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 13 முறை தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும், ஒரு முறை சட்ட மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.

1967இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சரான போது அன்னாரின் அமைச்சரவையில் போக்குவரத்து மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

கலைஞர் அவர்கள் 1969ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர். அரசியல் மட்டுமன்றி, தமிழ் இலக்கியம், தமிழ் திரைப்படங்களில் திரைக்கதை, வசனம் போன்ற துறைகளில் தனது திறமையை வெளிப்படுத்தி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், வரலாறு என எல்லா இலக்கியத் தளங்களிலும் தனக்கென தனி முத்திரைப் பதித்தவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். ‘பழனியப்பன‘ என்ற நாடகமே கலைஞர் அவர்கள் முதன்முதலில் எழுதிய நாடகமாகும். திருவாரூரில் அந்த நாடகத்தை அரங்கேற்றம் செய்தார்.

‘தூக்குமேடை’, ‘சிலப்பதிகாரம்‘, ‘மணிமகுடம்‘, ‘ஒரே ரத்தம்‘, ‘காகிதப்பூ’, ‘நானே அறிவாளி’, ‘வெள்ளிக்கிழமை’, ‘திருவாளர் தேசியம்பிள்ளை’, ‘அனார்கலி’, ‘சாம்ராட் அசோகன்‘, ‘சேரன் செங்குட்டுவன்‘, ‘நாடகக்காப்பியம்‘, ‘ உள்பட பல நாடகங்களை அவர் எழுதியவர்.

‘தூக்குமேடை’ நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்த நடிகவேள் திரு.எம்.ஆர்.ராதா அவர்கள், ‘கலைஞர்’ என்ற அடைமொழியை அவர்களுக்கு வழங்கினார்.

‘நளாயினி’, ‘பழக்கூடை’, உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். ‘புதையல்’, ‘வான்கோழி’. ‘சுருளிமலை’, ‘ஒரு மரம் பூத்தது’, ‘ஒரே ரத்தம்‘, ‘ரோமாபுரிப் பாண்டியன்‘, ‘தென்பாண்டிச் சிங்கம்‘, ‘பொன்னர் சங்கர்’ ஆகிய நாவல்களையும் எழுதியிருக்கிறார். ‘தென்பாண்டிச் சிங்கம்‘ நாவல், 1989ஆம் ஆண்டுக்கான தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் ‘ராஜராஜன்‘ விருதைப் பெற்றது. திருக்குறளை ஆய்ந்து எளிய

நடையில் எழுதிய 'குறளோவியம்', கலைஞர் அவர்களின் முக்கிய இலக்கியப் படைப்பாகும். 'நெஞ்சுக்கு நீதி' என்ற பெயரில் தன் வாழ்க்கை நிகழ்வுகளை ஆறு தொகுதிகளாகவும் வெளியிட்டிருக்கிறார்.

'சங்கத்தமிழ்', 'தொல்காப்பிய பூங்கா', 'இனியவை இருபது', 'மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று', 'மலரும் நினைவுகள்', 'கலைஞரின் கவிதை மழை', 'இளைய சமுதாயம் எழுகவே' உள்பட 178 நூல்களை கலைஞர் அவர்கள் எழுதியுள்ளார். தமிழ் மொழிக்காக அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது.

தமிழ்நாட்டு அரசியல் மட்டுமன்றி, இந்திய அரசியலிலும் தனது முத்திரையைப் பதித்தவர். கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பாராட்டத்தக்க அளவில் பணியாற்றி இருக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட சில திட்டங்களையும், இயற்றப்பட்ட சில சட்டங்களையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் மக்கள் நலன் கருதி அ.இ.அ.தி.மு.க.சார்பில் நாங்கள் வரவேற்று இருக்கிறோம். அதே சமயத்தில், கொள்கை ரீதியில் மாறுபாடு இருக்குமேயானால், அதனை நாங்கள் எதிர்த்திருக்கிறோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அதே போல நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நானும் 1989ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இம்மாமன்றத்தில் காலடி எடுத்து வைத்தபோது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்.

அப்போது நடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சிங்காரம் அவர்கள் உரையாற்றியபோது, "சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால் 50 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக இங்கே அறிவித்து இருக்கிறார்கள். இது ஒரு அரை லட்சியம் தான். ஆனால் நம்முடைய லட்சியம் இலட்சம். இந்த இலட்சத்தை வருகின்ற சட்டமன்ற கூட்டத்திலேயே லட்சியமாக அறிவிப்பதற்கும், இன்னும் பல கோரிக்கைகளை செய்வதற்கும்

நம்முடைய முதல்வர் அவர்கள் காத்திருக்கிறார்கள்'' என்று சொன்னார்கள். உடன் பதில் அளித்த அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ''என்னுடைய லட்சியம் உறுப்பினர் திரு.சிங்காரம் அவர்கள் நீண்ட காலம், பல ஆண்டு காலம், பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ வேண்டும் என்பது தான்'' என்று சொன்னார்கள். கோரிக்கையை அப்போது ஏற்கவில்லை என்றாலும் கோரிக்கை வைத்தவர் மனம் மகிழ்கிற வகையில், பதில் சொல்கிற வல்லமை பெற்றவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு, காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களும் மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல்நலம் குறித்து விசாரித்தோம். வயது மூப்பின் காரணமாக, உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது, விரைவில் உடல் நலம் தேறி, மீண்டும் தன்னுடைய அரசியல் பணியைச் செய்வார் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்த நேரத்தில், அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி, எங்களுக்கு அதிர்ச்சியாக அமைந்தது. நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நேரிலே சென்று மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினோம்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசியல் வாழ்க்கைக்கு, அவரிடமிருந்த பன்முக ஆற்றல் காரணமாக அமைந்தது. அவர் கதை வசனம் எழுதிய ''பராசக்தி'' என்ற திரைப்படத்தின் மூலம் தன்னை ஒரு பகுத்தறிவாளன் என்பதை சமுதாயத்திற்கு தெரியப்படுத்தினார். அதன் பிறகு அவர் கதை வசனம் எழுதிய படங்களில் எல்லாம் சமுதாய விழிப்புணர்வு கருத்துகளை பதிவு செய்திருந்தார். ராஜகுமாரி, 'மலைக்கள்ளன்', 'திரும்பிப்பார்', 'ராஜா ராணி', 'மந்திரி குமாரி', 'பூம்புகார்', 'மனோகரா', 'புதுமைப்பித்தன்', 'அரசிளங்குமரி', 'இருவர் உள்ளம்', 'எங்கள் தங்கம்', 'குறவஞ்சி' என 75–ற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் கதை, வசனம் எழுதியிருக்கிறார். கலைஞர் அவர்களின் 'பொன்னர்

சங்கர்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு அதே பெயரில் திரைப்படம் உருவாக்கப்பட்டது. எளிய தோற்றம், இனிய பண்பு, எல்லோரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய குணம் அவரிடம் அமைந்திருந்தன.

இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த திரு. ஜவஹர்லால் நேரு முதல் தற்போது பிரதமராக இருக்கும் திரு. நரேந்திர மோடி வரை அனைத்து பிரதமர்களையும் கண்ட பெருமை அவருக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, ஒருவர் பிறக்கிறார், வாழ்கின்றார், மறைகின்றார். அந்த இடைப்பட்ட காலத்திலே செய்த சாதனை என்றைக்கும் இந்த மண்ணிலே நிலைத்திருக்கும். அந்த வகையிலே, கலைஞர் அவர்கள் செய்த சாதனை இந்த மண்ணிலே நிலைத்திருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அன்னாருடைய மறைவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை பிரிந்து வாடும் எதிர்கட்சி தலைவர் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும், அவர் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை மீண்டும் தெரிவித்து, அமைகின்றேன். வணக்கம்.

❖ ❖ ❖

கஜா புயலால் வீடுகளை இழந்த ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது தொடர்பாக ஆற்றிய உரை (04.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, இதேபோல் இயற்கை சீற்றம் ஏற்பட்டது. 2007–2008இல் கனமழை, அப்பொழுது தற்காலிக நிவாரணத்திற்காக 449.91 கோடி ரூபாய், நீண்டகால சீரமைப்பிற்கு 689.87 கோடி ரூபாய், மொத்தம் 1,139.78 கோடி ரூபாய் அப்பொழுது இருந்த அரசு கோரியது. ஆனால் மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி 142.95 கோடி ரூபாய் தான். அதேபோல், 2008–2009இல் "நிசா" புயல் ஏற்பட்டபோது, தற்காலிக நிவாரணத்திற்காக நீங்கள் கோரப்பட்ட நிதி 2,105.71 கோடி ரூபாய், நீண்டகால சீரமைப்பிற்கு 1,683.53 கோடி ரூபாய், மொத்தம் 3,789 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதில், மத்திய அரசு வழங்கியது 570.17 கோடி ரூபாய் தான். அதேபோல், 2010–2011இல் வெள்ளம் வந்த போது, தற்காலிக நிவாரணத்திற்காக 2,125.82 கோடி ரூபாய் நீங்கள் கேட்டு மத்திய அரசிற்கு கோரிக்கை வைத்தீர்கள். நீண்ட கால சீரமைப்பிற்கு நீங்கள் எதுவும் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் வழங்கியது 317.17 கோடி ரூபாய் தான். ஆகவே, நாம் கேட்கிற நிதியை எப்போதுமே மத்திய அரசாங்கம் ஒதுக்கியதே இல்லை. மாநிலத்திலும் உங்கள் ஆட்சி தான், மத்தியிலும் நீங்கள் அங்கம் வகித்தீர்கள். நீங்கள் அங்கம் வகிக்கின்ற போது, இவ்வளவு நிதி தான் கிடைக்கப்பெற்றது. நாங்கள் கூட்டணி கிடையாது. மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே நாங்கள் இல்லை. இருந்தாலும், நீங்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நிரந்தர நிவாரணம் வழங்கப்பட வேண்டும். தற்காலிக நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதற்காக நாம் கோரிக்கை வைத்தோம். ஆனால் கோரிக்கைகளில் குறைந்த அளவு தான்

கிடைத்தது. மேலும் நாங்கள் கேட்டிருக்கின்றோம். நிச்சயமாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இருந்தாலும் கூட நீங்கள் அந்த 1 இலட்சம் வீடுகள் கட்டித்தரப்படுமா என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறீர்கள். நிச்சயமாக 1 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற செய்தியும் சொல்லியிருக்கின்றோம். ஆகவே, நம்முடைய மக்களை பொறுத்தவரைக்கும், வீடில்லாத மக்களுக்கு, கூரை வீட்டிலே இருந்து இந்த புயலால் பாதிக்கப்பட்டு வசிக்க இடமில்லாமல் இருக்கின்ற அந்த ஏழை மக்களுக்கு, அம்மாவுடைய அரசு நிச்சயம் சொன்னதை செய்யும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

கஜா புயல் மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை (04.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊர் ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்."

அதாவது, துன்பம் வருவதற்கு முன்னரே அதைத் தடுத்து விடுவது; ஒரு வேளை மீறி வந்துவிட்டால் மனம் தளராமல் இருந்து அத்துன்பத்தைக் களைவது ஆகிய இரண்டுமே செயல் திறம் படைத்தவரின் கொள்கையாகும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, கடந்த ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கை இடர்பாடுகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எதிர்கொண்ட விதம், மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், மீட்புப் பணிகளையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளினால் மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவாக திரும்பியதும் மக்கள் நன்கு அறிவார்கள். அது குறித்து விளக்கமாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், 18 மாண்புமிகு உறுப்பினர்கள், கஜா புயல் குறித்து கவன ஈர்ப்பை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த விளக்கத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 14.09.2018 மற்றும் 07.10.2018 ஆகிய நாட்களில் நான் ஆய்வு கூட்டங்கள் நடத்தி, ஆலோசனைகளை வழங்கினேன்.

11.11.2018 அன்று கஜா புயல் வங்கக் கடலில் நிலை கொண்டிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததை அடுத்து 12.11.2018 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும்

அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆலோசனை கூட்டத்தினை நடத்தினேன்.

எனது உத்தரவின் பேரில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பல்வேறு துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், புயல், இந்த புயலினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை சமாளிப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக துவக்கினார்கள்.

மூத்த அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், புயலினால் ஏற்படும் சேதங்களை குறைக்கும் பொருட்டும், மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்களாக அனுப்பி வைக்கப்பட்டனர். தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 11 குழுக்கள், பல்வேறு துறைகளிலுள்ள 1,151 ஜே.சி.பி. இயந்திரங்கள், 1,650 மரம் அறுக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றுடன் தகுந்த பணியாளர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். கஜா புயலினால் பாதிக்கக் கூடிய மின் கம்பங்களுக்கு மாற்றாக 7 ஆயிரம் மின் கம்பங்களுடன், 2 ஆயிரம் மின்துறை ஊழியர்கள் மாவட்டங்களுக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டனர். புயல் கரை கடக்கும் நேரத்திற்கு முன்னரே அனைத்து மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு, மாலை 6 மணி முதலே பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. தனியார் நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு, பணியாளர்கள் விரைவில் வீடு திரும்பினர்.

புயல் கரையை கடப்பதற்கு முன்னரே, தாழ்வான பகுதிகள் மற்றும் புயல் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் இருந்து, 81 ஆயிரத்து 948 நபர்கள் 471 முகாம்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்க வைக்கப்பட்டனர். இதன் விளைவாக புயலின்போது ஏற்படவிருந்த உயிர்ச் சேதங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், வருவாய்த் துறை செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோர் கட்டுப்பாட்டு அறையில் இரவு முழுவதும் புயலின் நகர்வை

கண்காணித்து, உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கி வந்தனர்.

16.11.2018 அன்று அதிகாலை கஜா புயல் நாகப்பட்டினத்தில் 110 கி.மீ. வேகத்தில் கரையை கடந்தது. நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் கோட்டம் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் புயல் காரணமாக எண்ணிப் பார்க்க இயலாத அளவிற்கு பெரும் பாதிப்பிற்கு உள்ளாயின.

இந்த புயலின் தாக்கத்தினால்,

- ✶ 52 நபர்கள் உயிர் இழந்துள்ளனர்.
- ✶ 5 இலட்சத்து 57 ஆயிரத்து 492 வீடுகள் இந்த புயலினால் சேதமடைந்தன.
- ✶ 2 இலட்சத்து 21 ஆயிரத்து 485 கால்நடைகள் மற்றும் பறவைகள் இந்த புயலால் உயிர் இழந்தன.
- ✶ ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 63 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்தன.
- ✶ குறிப்பாக, 78 ஆயிரத்து 584 ஹெக்டேர் தென்னை மரங்களும், 8 ஆயிரத்து 486 ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர்களும் சேதமடைந்தன.
- ✶ 3 இலட்சத்து 31 ஆயிரத்து 772 மின் கம்பங்கள், ஆயிரத்து 655 மின் மாற்றிகள், 201 துணை மின் நிலையங்கள், 32 ஆயிரத்து 111 கி.மீ. நீளத்திற்கான மின் கம்பிகள் இந்த புயலால் சேதமடைந்தன.
- ✶ இந்த புயலினால் மீனவர்களின் 5 ஆயிரத்து 662 படகுகளும், 6 ஆயிரத்து 157 இயந்திரங்களும், 10 ஆயிரத்து 648 வலைகளும் சேதமடைந்தன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ✶ மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, 16.11.2018 அன்றே,
- ✶ உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 இலட்சம் ரூபாயும்,
- ✶ படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும்,
- ✶ சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000 ரூபாயும் நிவாரணமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
- ✶ 19.11.2018 அன்று புயல் பாதிப்பு குறித்து தலைமைச் செயலகத்தில் ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தி, உடனடியாக 1,000 கோடி ரூபாயை விடுவித்து, புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமான நிவாரண உதவிகளை அறிவித்தேன்.
- ✶ அதன்படி, முகாம்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கியதுடன் கூடுதலாக ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் 4 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்க உத்தரவிடப்பட்டது.
- ✶ பசு மற்றும் எருமை மாடு இறப்புக்கு தலா 30 ஆயிரம் ரூபாயும், காளை மாடு இறப்புக்கு 25 ஆயிரம் ரூபாயும், ஆடு ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாயும், முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு 10 ஆயிரம் ரூபாயும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு 4,100 ரூபாயும் அறிவிக்கப்பட்டது.
- ✶ வாழ்வாதார நிவாரணமாக, 5 ஆயிரம் ரூபாய் மற்றும் 27 பொருட்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பும் மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு வழங்கியது.
- ✶ தென்னை விவசாயிகளுக்கு சிறப்பு நிவாரணத் தொகுப்பாக மரம் ஒன்றுக்கு 600 ரூபாயும், விழுந்த மரங்களை வெட்டி எடுக்க 500 ரூபாயும் என ஒரு ஹெக்டேருக்கு 175 மரங்கள் என

கணக்கிட்டு, 1 இலட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாய் என்றும், அதிக பட்ச நிவாரணமாக ஒரு விவசாயிக்கு 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டது.

- தென்னை மறு சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 72 ஆயிரத்து 100 ரூபாய் வழங்கவும் அரசால் உத்தரவிடப்பட்டது.

ஆக மொத்தம் தென்னை விவசாயிகள் ஹெக்டேர் ஒன்றுக்கு 2 இலட்சத்து 64 ஆயிரத்து 600 ரூபாய் பெறுவர் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- 35 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

- நெல், கரும்பு, வாழை, சவுக்கு மற்றும் இதர இறவை பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயும், மா, பலா, முந்திரி, வெற்றிலைக் கொடி, மிளகு உள்ளிட்ட பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18 ஆயிரம் ரூபாயும், முந்திரி மரங்களை வெட்டி அகற்றிட மரம் ஒன்றுக்கு 500 ரூபாயும், உச்சவரம்பாக ஒரு விவசாயிக்கு 800 மரங்களுக்கு 4 இலட்சம் ரூபாயும் என நிர்ணயித்து வழங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

- முழுவதும் சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டுமரங்களுக்கு தலா 42 ஆயிரம் ரூபாயும், FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு தலா 85 ஆயிரம் ரூபாயும், விசைப் படகுக்கு 5 இலட்சம் ரூபாயும், வலை ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாயும் அரசு நிவாரணமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

- பகுதியாக சேதமடைந்த FRP படகு மற்றும் வலைக்கு 30 ஆயிரம் ரூபாயும், விசைப் படகுக்கு 3 இலட்சம் ரூபாயும், எஞ்சின் பழுது நீக்கம் செய்ய 5 ஆயிரம் ரூபாயும் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்களை 41.63 கோடி ரூபாய் மதிப்பில் மீனவர்களுக்கு வழங்க உத்தரவிட்டேன்.

- ✶ மீனவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்ததை கருத்தில் கொண்டு, முழுவதும் சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு ஏற்கெனவே அறிவித்த நிவாரணமான 85 ஆயிரம் ரூபாயை, ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்துத் துறை நடவடிக்கைகளையும் நான் துரிதப்படுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவில் திரும்ப வேண்டி, பிற மாவட்டங்களிலிருந்து நிவாரணப் பொருட்களை அனுப்ப ஏற்பாடு செய்தும், அவ்வாறு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்கள் உரியவர்களுக்கு சென்றடையும் பணிகளை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருந்தேன். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் முகாமிட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொண்டு வந்த நிலையிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாகச் நேரடியாகச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை துரிதப்படுத்தினார்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

சாலைகளில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் விழுந்தும், பழுதடைந்தும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டும் இருந்தன. மேலும், சாலை மார்க்கமாக சென்றால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களையும் பார்க்க இயலாது. எனவே தான் 20.11.2018 அன்று நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் ஹெலிகாப்டரில் சென்று புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பாதித்த பகுதிகளை பார்வையிட்டோம். அந்த நேரத்தில் மழை விடாமல் பெய்து மோசமான வானிலை இருந்ததால், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு என்னால் செல்ல முடியவில்லை.

அவ்வாறு ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டபோது புயலின் தீவிரத்தையும், புயலால் பாதிக்கப்பட்ட பரந்த நிலப் பரப்பையும், விழுந்த தென்னை மற்றும் பிற பயிர்களின் பரப்பையும், வீடுகளின் சேதாரத்தையும் என்னால் உணர முடிந்தது. இதனால்தான் மாநில பேரிடர் நிவாரண நிதியின் விதிமுறைகளை தளர்த்தி, வேறு எந்த இயற்கை சீற்றத்தின்போதும் வழங்காத அளவிற்கு நிவாரணத் தொகைகளை உயர்த்தி வழங்க முடிந்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதிப்பின் அளவினை பார்த்த நான், உடனடியாக, அதாவது 22.11.2018 அன்று, புது டில்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, புயலினால் ஏற்பட்ட சேதங்களை ஹெலிகாப்டர் மூலமாக எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் விளக்கி, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு அன்று வரை எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி 14 ஆயிரத்து 910 கோடி ரூபாயும், தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காக 1,431 கோடி ரூபாய் நிதியும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மத்திய அரசின் சேத மதிப்பீட்டுக் குழுவை அனுப்பவும் கோரிக்கை விடுத்தேன்.

அதனை உடனடியாக ஏற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மறுநாளே, அதாவது 23.11.2018 அன்றே சேத மதிப்பீட்டுக் குழுவினை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அக்குழுவினர், 24.11.2018 அன்று என்னை நேரில் சந்தித்தனர். அச்சமயம், புயல் பாதிப்பு குறித்த விவரங்களை அவர்களிடம் எடுத்துரைத்தேன். அதன் பின்னர், புயல் பாதித்த பகுதிகளில் ஏற்பட்ட சேதங்களை குழுவினர் பார்வையிட்டு, பின்னர் என்னிடம் அது சம்பந்தமாக 27.11.2018 அன்று விரிவாக விவாதித்தனர். இதற்கிடையில், சேதம் பற்றிய கணக்கீடு முழுவதுமாக முடிந்ததால் 05.12.2018 அன்று, தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு 2,709 கோடி ரூபாயும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு 15 ஆயிரத்து 190 கோடி ரூபாயும் தேவை என்பது தெரிய வந்தது. இதை மத்திய அரசுக்கு தெரிவித்து, கூடுதல் தொகை கோரப்பட்டது.

பின்னர், 28.11.2018 அன்று திருவாரூர் மாவட்டத்தில் கட்டிமேடு, திருத்துறைப்பூண்டி, தென்பாதி, மேலமருதூர், மணலி, மான்குடி, திருவாரூர் ஆகிய இடங்களுக்கும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் புஷ்பவனம், நாலுவேதபதி, வெள்ளபள்ளம், கோவில்பத்து, வேட்டைக்காரணிருப்பு, விழுந்தமாவடி, காமேஸ்வரம், பிரதாமராமபுரம், பெரிய குத்தகை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சருடன் நான் நேரில் சென்று பாதித்த பகுதிகளை பார்வையிட்டேன்.

அப்போது அங்கிருந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், முதியோர், முகாமில் தங்கியிருந்தோர், களப்பணியாளர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து, அப்பகுதிகளின் தேவைகளை கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் நிறைவேற்ற களத்திலேயே உத்தரவிட்டேன். மேலும், அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த மின் பணியாளர்கள், தூய்மைப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பணியாளர்களை சந்தித்து, அவர்களை ஊக்கப்படுத்தினேன். மின்சாரம், குடிநீர், சாலைப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசியத் தேவைகளை போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்க நேரில் அறிவுரை வழங்கினேன். அத்துடன், முகாமில் வழங்கப்படும் குடிநீர் மற்றும் உணவுகளின் தரத்தையும் சோதனை செய்தோம்.

அச்சமயம் முகாம்களிலிருந்து வீடு திரும்புவோர் உடனடியாக தங்கள் அன்றாடப் பணிகளை துவக்கும் வகையில், 10 கிலோ அரிசி, 2 கிலோ துவரம் பருப்பு, கால் கிலோ புளி, ஒரு கிலோ பால் பவுடர், 2 கிலோ சர்க்கரை, ஒரு கிலோ உப்பு, 200 கிராம் டீத்தூள், 100 கிராம் சாம்பார் பொடி, 2 கிலோ ரவை, 4 பிஸ்கெட் பாக்கெட்டுகள், ஒரு பாய் அல்லது ஜமுக்காளம், 2 லிட்டர் சமையல் எண்ணெய், 2 வேட்டிகள், 2 சேலைகள், 2 துண்டுகள், ஒரு நைட்டி, ஒரு கைலி, ஒரு போர்வை, 50 கிராம் தேங்காய் எண்ணெய், 2 குளியல் சோப்பு, 2 துணி துவைக்கும் சோப்பு, ஒரு பாக்கெட் கொசுவர்த்திச் சுருள், 2 பாக்கெட்டு சானிட்டரி நாப்கின்கள், பிளாஸ்டிக் வாளி, பிளாஸ்டிக் கோப்பை, ஒரு குடை மற்றும் 2 தீப்பெட்டிகள் என 233.59 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் 27 பொருட்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பு மாண்புமிகு அம்மாவின் அரசால் தாயுள்ளத்தோடு வழங்கப்பட்டது. அப்பொருட்கள் புயலால் பாதித்த 6 இலட்சத்து 39 ஆயிரத்து 495 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பாதிக்கப்பட்ட கூரை வீடுகளில் குடியிருப்போருக்கு தார்ப்பாலின் வழங்க உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தந்த மாவட்ட மின் ஊழியர்கள் மட்டுமன்றி, சுமார் 28,644 மின் வாரிய ஊழியர்கள் பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்தும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இரவு பகல் பாராமல் பணியில் ஈடுபட்டனர். பசி வேளையில் கூட, பணி செய்த மின் ஊழியர்கள் சாலையிலேயே, ஏன், மின் கம்பங்களிலேயே கூட அமர்ந்து உணவருந்தி, கடுமையான இன்னல்களுக்கிடையே தங்கள் கடமை செய்தனர். புயலின் தாக்கத்தால் மிகக் கடுமையாக பாதித்த 4 மாவட்டங்களுக்கும் முழுவதும் புதியதாக மின் இணைப்பு மற்றும் மின் சேவை வழங்குவதற்கு ஒப்பான இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள், அலுவலர்களை நான் நேரில் சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளித்ததுடன், விவசாய நிலங்களில் இருந்த மின் கம்பங்களை சீரமைக்கும்போது, அவற்றை சாலை ஓரங்களில் நடுமாறும், இதனால், இனி வரும் காலங்களில் மின்சார பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்றும் நான் வழங்கிய அறிவுரையின்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக அத்தியாவசிய சேவைகளான பொது மருத்துவமனைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கு ஒரே நாளிலும், மாநகராட்சிப் பகுதிகளில் மூன்றே நாட்களிலும் மின்சாரம் வழங்கப்பட்டது. மின் இணைப்பு பணிகளுக்கு என பிற மாவட்டங்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து 28 ஆயிரத்து 644 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களின் கடும் உழைப்பில், இது வரை கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மொத்தம் 66 இலட்சத்து 56 ஆயிரத்து 369 வீட்டு மின் இணைப்புகளில், 65 இலட்சத்து 78 ஆயிரத்து 590 மின் இணைப்புகள், பல

மாதங்கள் நடைபெற வேண்டிய இப்பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதன் விளைவாக 99 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முகமது அபுபக்கர் அவர்கள் மின்சார பணிகள் தொய்வடைந்ததாக சொன்னார்கள். இலட்சக்கணக்கான பேர்களுக்கு மின் இணைப்பு கொடுத்தவர்கள் நம்முடைய மின்சார ஊழியர்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டு காட்ட விழைகின்றேன். ஏனென்றால் மின்சாரப் பணி என்பது கடுமையான பணி, மற்ற பணிகள் எல்லாம் யாரை வைத்து வேண்டுமானாலும் பணியை செய்து விடலாம். ஆனால், மின்சாரப் பணியை பொறுத்தவரைக்கும் அதுபற்றி தெரிந்த மின் ஊழியர்களை வைத்துத் தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இன்றைக்குக்கூட திரு.தமீமுன் அன்சாரி அவர்கள் நான் அங்கே போயிருந்தபோது, அங்கே சில விளக்கங்களை கொடுத்தார்கள். மின்சார ஊழியர்கள் சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறார்கள் என்ற ஒரு தகவலை தெரிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள், அவர்களுடைய கஷ்டத்தை புரிந்து கொள்ள வேண்டும். இலட்சக்கணக்கான மின் கம்பங்கள் சாய்ந்து கிடந்தன. அதையெல்லாம் சரி செய்து மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அது காலதாமதம் ஆகும். ஏனென்றால் அது மிக சிரமமான பணி. அந்தப் பணியிலே ஈடுபட்டு கொண்டிருக்கின்ற போது பல ஊழியர்கள் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

கஜா புயலினால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டதால், குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்ட 184 நகராட்சி பகுதிகள், 270 பேரூராட்சி வார்டுகள் மற்றும் 9,048 ஊராட்சிப் பகுதிகளுக்கும் 1,334 ஜெனரேட்டர்கள் மூலமாகவும், 325 டேங்கர் லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டது. தற்போது குடிநீர் விநியோகம் முழுவதும் சீர் செய்யப்பட்டுள்ளது.

மறுநடவு செய்யப்படும் தென்னையில் விவசாயிகளின் இடைக்கால வருமானத்திற்காக ஊடுபயிராக சிறுதானியங்கள், உளுந்து, எள் போன்றவை பயிரிட 100 சதவீத மானியத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழ்வாதார தொகுப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. ராமசாமி அவர்கள் குறிப்பிடுகின்ற போது, மறு சீரமைப்பிற்கு என்ன செய்வீர்கள் என்று கேட்டீர்கள். மாண்புமிகு அம்மாவுடைய அரசு அதற்கும் திட்டம் தீட்டப்பட்டு விவசாயிகளுக்கு மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் தேவையான உதவி செய்வதற்காக இன்றைக்கு அந்த திட்டத்திற்காக கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வாழ்வாதார தொகுப்பு திட்டம் ஒன்று செயல்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படும். ஆக மொத்தம் தென்னை வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 81 கோடி ரூபாய் செலவில் மறுசாகுபடி செய்ய மானியத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது. அதேபோல், தோட்டக்கலை பயிர்களில் நுண்ணீர் பாசனத்துடன் மறுசாகுபடிக்கு 149 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னை விவசாயிகள் மறு சாகுபடி செய்வதற்காக இந்த திட்டத்தை அரசு செயல்படுத்த இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், 4.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 805 கனரக மரம் அறுக்கும் கருவிகளும், 2.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 107 டிராக்டரில் இணைக்கப்பட்ட துகளாக்கும் கருவிகளும் வாங்கி விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியின் கீழ் வாழ்வாதார திட்டத்திற்காக 11.90 கோடி ரூபாய் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் பட்டா நிலங்களில் சேதமடைந்த வீடுகளுக்கும், அரசு புறம்போக்கு இடங்களில் உள்ள சேதமடைந்த வீடுகளுக்கு மாற்று இடத்தில் வீடு கட்டித் தரப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென பிரதம மந்திரியின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் முதலாம் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகளும், அடுத்த நான்கு ஆண்டுகளில் தலா 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் வீடுகளும் என மொத்தம் 3 இலட்சம் வீடுகள் 5 ஆண்டுகளில் கட்டி முடித்திட நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கோரியுள்ளேன். நகர்ப் புறங்களில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள பிற மாவட்டங்களிலிருந்து 3,000க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, துப்புரவுப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன. கஜா புயல் தாக்கத்தால் தொற்று நோய் ஏற்படாமல் இருக்க 1,647 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டன. மேலும் 22,047 நடமாடும் மருத்துவ குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை நேரடியாக சந்தித்து மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மொத்தம் 11 இலட்சத்து 66 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதன் காரணமாக கஜா புயல் பாதித்த பகுதிகளில் நோய் தொற்று ஏற்படாமல் பொது சுகாதாரம் பேணி காக்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த 100 நாட்கள் வேலைவாய்ப்பினை 150 நாட்களாக உயர்த்தி வழங்கவும், அப்பணியாளர்களைக் கொண்டு புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விழுந்த மரங்களை வெட்டுவதற்கும், அகற்றுவதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில், 16.11.2018 முதல் 26.12.2018 வரை 88 இலட்சத்து 61 ஆயிரத்து 490 தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், புஷ்பவனம், பெரியகுத்தகை, நாலுவேதபதி, வெள்ளப்பள்ளம் ஆகிய கிராமங்களில் கடல் சேறு 5 அடி உயரத்திற்குப் படிந்து விவசாய, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்தது. வேளாண் பொறியியல் துறையின் மூலமாக மீனவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முதற்கட்டமாக பாதைகள் சுத்தம் செய்யப்பட்டு, வல்லம் மற்றும் வலைகள் கடலுக்குள் கொண்டு செல்ல ஏதுவாக சீரமைக்கப்பட்டன. தற்போது, மீதமுள்ள சேறுகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சாலைகளில் வேரோடு விழுந்த மரங்களை அகற்றி, உரிய விதிமுறைகளை பின்பற்றி ஆங்காங்கே ஏலத்தில் விற்க அரசு துறைகள் பணிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் வயல்களில் விழுந்த தென்னை, மா, பலா, முந்திரி மற்றும் சவுக்கு போன்ற மரங்களை அகற்றி அவற்றை ஏலம் விடுவதற்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், வனத்துறை மற்றும் தனியார் மர விற்பனையாளர்கள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனங்கள் தடையின்றி கிடைப்பதற்காக அவற்றை இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கடற்கரை மாவட்டங்களான 13 மாவட்டங்களிலும் கரை பாதுகாப்பு வளையங்களை உருவாக்க 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வனத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்ட மேலாண்மை அமைப்பைப் போன்றே, தற்போது கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு “கஜா மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டம்” என்று தனியாக ஒரு திட்ட அலகு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டுவது, தென்னை மறுசாகுபடி உள்ளிட்ட நிரந்தர மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த 3 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் 2 அதிகாரிகள் தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவார்கள்.

மத்திய அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியாக 353.70 கோடி ரூபாயை முதல் தவணையாக 2018–2019 நிதியாண்டு தொடக்கத்திலேயே வழங்கியது. மேலும், கஜா புயலுக்குப் பின் நமக்கு வர வேண்டிய இரண்டாம் தவணையான 353.70 கோடி ரூபாயை, டிசம்பர் மாதம் உடனடி தேவைக்காக விடுவித்தது. 31.12.2018 அன்று, தேசிய பேரிடர் நிவாரண நிதியாக 1,146 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு இது வரை 2,301.41 கோடி ரூபாய் பல்வேறு துறைகளுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

மாநில பேரிடர் நிவாரணத் தொகுப்பில் இருந்து தரப்படும் நிவாரணத் தொகையை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் ஒரு விரிவான கடிதத்தை நான் 29.11.2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ளேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்றொரு கடிதத்தில் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கான காலக்கெடுவினை நீட்டிப்பற்கும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளேன். அதன் பயனாக, காலக் கெடுவினை மேலும் 15 நாட்கள் மத்திய அரசு நீட்டித்தது. இதனால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பல விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

28.12.2018 அன்று கஜா புயல் நிவாரணம் மற்றும் சீரமைப்பு தொடர்பான ஆய்வுக் கூட்டம் ஒன்று எனது தலைமையில் மூத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை உடனடியாகவும், முழுமையாகவும் வழங்கிடவும், விவசாய மின் இணைப்புகளை சீராக்கும் பணிகளை கூடுதல் பணியாளர்களைக் கொண்டு விரைந்து முடிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்று மக்களுக்கு எடுத்துரைத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, வேளாண் பெருமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு இயற்கை பேரிடரினால் ஏற்பட்ட விவசாயிகளின் துயர் துடைத்து, அவர்கள் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

“ஊர் கூடி தேர் இழுத்தால் வந்து சேரும்; சிறு உளிகள் செதுக்குவதே சிற்பமாகும்” என்பது போல கஜா புயலினால் ஏற்பட்ட சேதங்களுக்கான மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இரவு, பகல் பாராமல் உழைத்த அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், அனைத்துத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் குறிப்பாக தங்கள் உயிரை பணயம் வைத்து பணியாற்றிய மின் வாரியப் பணியாளர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், வேளாண்மைத் துறை, குடிநீர் வழங்கல் வாரியம், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, கால்நடை மற்றும் மீன் வளத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாணாக்கர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகிய அனைவருக்கும், எனது சார்பிலும், மாண்புமிகு அம்மா

அரசின் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பாதிப்புகளை ஈடு செய்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிய மக்கள் பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள், தொழில் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அரசு ஊழியர்கள், பொதுத் துறை ஊழியர்கள், பொது மக்கள், மாணாக்கர்கள் மற்றும் தங்கள் உழைப்பையும், பல்வேறு நிவாரணப் பொருட்களையும் அள்ளிக் கொடுத்த பல்வேறு தரப்பினருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சி தான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பாடுபடுவேன்” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமுத மொழிக்கேற்ப மக்களுக்காகவே செயல்படும் அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு.கரி ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் பல இடத்திற்கு நிவாரணம் செல்லவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது நான் முழுமையாக தெரிவித்துக் கொள்வது எல்லாம் முழுமையாக கணக்கிடப்பட வேண்டும். இலட்சக்கணக்கான பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, எவ்வளவு பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று முழு விவரத்தையும் நான் தெரிவித்திருக்கின்றேன். அவைகளை எல்லாம் கணக்கிட்டு, உரிய முறையிலே அவர்களுக்கு அந்த நிவாரணம் போய் சேரவேண்டும். அந்த பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு கொண்டு, செயல்படுத்தி கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு.முகமது அபுபக்கர் அவர்கள் சொன்னார்கள், மின்சார துறையிலே இன்னும் முழுமையாக பல பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 99 சதவிகிதம் மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது.

எஞ்சிய 1 சதவிகிதம் தான் வழங்கப்படவில்லை. அதுவும் குறிப்பாக சொல்லப்போனால் டெல்டா மாவட்ட பகுதிகள் வயல்கள் நிறைந்த பகுதிகள். டெல்டா மாவட்ட பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும். ஆகவே, வயலிலே ஒரு மின்கம்பம் சாய்ந்துவிட்டால், ஒடிந்துவிட்டால், கிட்டத்தட்ட ஒரு 3 அல்லது 4 பர்லாங்கு அதை எடுத்துச் சென்று தான் மின்கம்பத்தை நடவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஒரு கம்பத்தை எடுத்து செல்வதற்கு 20 பேர் தேவைப்படுகிறது. அதுவும், வயலில், வழுக்கி விழுந்தால் அவர்களுடைய உடல் பாதித்துவிடும். கை, கால்கள் உடைந்துவிடும். எச்சரிக்கையாக அந்த மின்கம்பங்களை எடுத்துச்சென்று, அந்த வயலில் நடப்பட வேண்டும். அதுவும் நீர் சூழ்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த மண்ணை எடுத்தால், அந்த மண் குழ குழ என்று போய்விடும். ஆகவே, அந்த மண் உறுதித்தன்மை இல்லாத காரணத்தினாலே அந்த மின்கம்பத்தை நட்டாலும், அது உடனே சாய்ந்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு வெளியிலே இருந்துதான் அந்த மின் கம்பத்திற்கு தேவையான மணலை எடுத்துக் கொண்டு நிரப்பி அதை உறுதிப்படுத்தப்பட்டு, அந்த மின் பணியாளர்கள் அந்தப் பணியை செய்ய வேண்டும். ஒரு மின்கம்பத்தை நடுவதற்கு கிட்டத்தட்ட 6 முதல் 7 மணி நேரம் ஆகிறது. ஆகவே, இதனால் தான் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, நகரப் பகுதியிலும் சரி, பேரூராட்சிப் பகுதியிலும் சரி, வறண்ட பகுதியிலிருந்து எல்லாம் ஒடிந்த மின் கம்பங்கள் அதையெல்லாம் அகற்றி அந்த பகுதியிலே மின் கம்பங்கள நடப்பட்டு அந்தப் பகுதிக்கு எல்லாம் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டன. கிராமத்திலே இருக்கின்ற டெல்டா பாசன பகுதியிலே அதுவும் இப்பொழுது நெற்பயிர்கள் எல்லாம் முதிர்ந்திருக்கின்ற நிலை. ஆகவே, விவசாயிகள் அந்த கம்பத்தை எடுத்து சென்றால் அங்கே அந்த விவசாய நிலங்களிலே எடுத்துச் செல்ல கூடாது என்று தடை செய்தார்கள். ஏனென்றால் அதை எடுத்துச் சென்றால் அந்த விளைநிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு விடும். ஆகவே, இந்த சூழ்நிலையின் காரணமாகத்தான் இந்த

எஞ்சிய பகுதி இருக்கிறது. அதையும் விரைந்து செயல்படுத்தப்பட்டு அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கேயே தங்கி இருந்தார்கள். 15 நாட்கள் அங்கே தங்கியிருந்தார்கள். அதுவும் அரசு கொடுத்த நிவாரணத்தை விட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதிக அளவிலே நிவாரணம் கொடுத்திருக்கின்றோம். நீங்கள் அங்கே இருக்கின்ற மக்களைப் போய் பாருங்கள். கிட்டத்தட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெரியும். அங்கே கட்சி அலுவலகத்திலே 400 பேரை வைத்துக் கொண்டு, பல இடத்திலிருந்து கழகத்தினுடைய நிர்வாகிகள் அனுப்பி வைத்த அந்த பொருட்களை அந்த பையிலே போட்டு, அந்தந்த பகுதிக்கு நிவாரணம் கொடுத்தோம். அரசு கொடுத்த நிவாரணம், அதுமட்டுமல்லாமல், பல்வேறு மக்கள் கொடுத்த நிவாரணம், கட்சி சார்பாக கொடுக்கப்பட்ட நிவாரணம், எல்லா வீடுகளுக்கும் கொடுக்கப்பட்டது. பாகுபாடு இல்லாமல் கொடுக்கப்பட்டது. ஏதோ கையேந்தி நின்றார்கள் என்று சொல்வது எல்லாம் தவறு. ஆகவே, தான் 27 பொருட்களை கொடுத்திருக்கின்றோம். இதுவரை வறட்சியாலோ, புயலாலோ, பேரிடரால் ஏற்படுகின்ற இடர்பாடுகள் மக்கள் பாதிக்கப்பட்டபோது இவ்வளவு பொருட்கள் கொடுத்தாக வரலாறே கிடையாது. ஆகவே, மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து அந்த மக்களுக்கு அன்றாடம் என்ன என்ன பொருட்கள் பயன்பாட்டிற்கு தேவை என்பதை உணர்ந்து அத்தனை பொருட்களையும் பார்த்து அந்த பெட்டியிலே போட்டு அவர்களுக்கு வழங்கி கொண்டு இருக்கின்றோம். இங்கே சொன்னார்கள். ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கலாம். அந்த ஊருக்கு போனால் எல்லாருக்கும் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதுதான் பிரச்சினையே. ஆகவே, எல்லாம் கணக்கிடப்பட்டு இருக்கிறது. எல்லா அரசு அலுவலர்கள் கணக்கிட்டார்கள். இது எந்த கட்சி

சார்புடையதும் அல்ல. பொதுவான அரசு ஊழியர்கள் கணக்கிட்டு கொடுத்ததை தான் அரசு நிவாரணப் பொருளை கொடுக்கின்றது. நிவாரண முகாமிலே தங்கியிருந்த அனைவருக்கும் 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதில் எந்த ஒரு பாகுபாடும் கிடையாது. ஆகவே, இவ்வளவு பேர்களுக்கும் உடனுக்குடன் கொடுக்க வேண்டும் என்பதற்காக புயலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதில் 150 கணினிகள் வைக்கப்பட்டு, உடனடிக்குடன் ECS மூலமாக வங்கிகளில் கணக்கு வரவு வைக்கப்பட்டன. அதில் எந்தவித தவறும் நடைபெறக் கூடாது என்பதற்காக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வங்கி கணக்கில் பணம் அனுப்பி வைக்கப்பட்டது. இதையெல்லாம் அரசு செயல்படுத்தி கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான பேர்களுக்கு செயல்படுத்த வேண்டும். ஒருத்தர் இரண்டு பேருக்கு அல்ல, நீங்கள் சொன்ன உடனே கொடுப்பதற்கு. இத்தனை பேரையும் கணக்கிட வேண்டும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், இன்றைக்கு ஒவ்வொரு பகுதியாக போய் விவசாயிகள் கணக்கிட வேண்டும் என்று. இன்றைக்கு பார்த்தீர்களானால், வேளாண் பயிர்கள் மட்டும், 78,584 ஹெக்டர் அளவிற்கு தென்னை மரங்கள் எல்லாம் சாய்ந்திருக்கிறது அந்த பகுதியிலே. அத்தனை இடத்திலேயும் போய் பார்த்து, எவ்வளவு மரங்கள் சாய்ந்திருக்கிறது என்பதை கணக்கிட எவ்வளவு நாள் ஆகும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் நீங்கள் ஒரு விவசாயியாக இருக்கின்றீர்கள். ஆகவே, பாதிப்புக்குள்ளாகின்ற பகுதி கணக்கிடும் பொழுது, அதை துல்லியமாக கணக்கிட வேண்டும். எந்த விவசாயியும் விடுப்பட கூடாது என்பதற்காக தான் இந்த கணக்கிடப்பட்டு இருக்கின்றது. 23,141 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்து இருக்கின்றன. பிற வேளாண் பயிர்கள் 20,357 ஹெக்டேர் சேதம் அடைந்திருக்கின்றன. இதையெல்லாம் அங்கே இருக்கின்ற வருவாய் துறை அதிகாரிகள், வேளாண் துறை அதிகாரிகள் பார்வையிட்டு அவர்கள் கொடுக்கின்ற கணக்கின்படி தான் அரசால் இந்த நிவாரணத் தொகையை வழங்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

குடிசைகளை பொறுத்தவரைக்கும், மொத்தம் பாதிப்பு அடைந்த குடிசைகள் 5 இலட்சத்து 57 ஆயிரத்து 492. இவ்வளவு பேருக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும். இதற்கெல்லாம் மையங்கள் அமைக்கப்பட்டு உடனுக்குடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத்தை வழங்கக்கூடிய அரசு அம்மாவுடைய அரசு. புயல் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, எது வந்தாலும் உடனுக்குடன் மக்களுக்கு நிவாரணப் பணியை வழங்கக்கூடிய ஒரே அரசு, அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உணவிற்காக கையேந்துகிறார்கள். அந்த நிலை நிச்சயமாக இல்லை. ஏன் என்று சொன்னால், புயல் வந்தவுடன் எவ்வளவு சேதம் அடைந்தது என்பதை யாரும் கணக்கிட முடியாது. இது இயற்கை சீற்றம். இதுவரை வராத ஒரு புயல். இன்றைக்கு யாரும் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு புயலுடைய தாக்கம் இருந்த காரணத்தினாலே அதிகயளவிலே புயலால் சேதம் அடைந்துவிட்டன. ஒரு வாரம் தகவல் தொடர்பே கிடையாது. ஆகவே, இதை எல்லாம் சரி செய்கின்ற அந்த சூழ்நிலையில் யாரும் யாரையும் பார்க்க முடியவில்லை. போவதற்கு வழியும் இல்லை. சாலைகளில் எல்லாம் மரங்கள் சாய்ந்துவிட்டன. அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து நன்றாக தெரியும். அந்த நிலையிலே கூட, அரசு அதிகாரிகள் உடனுக்குடன் அந்த பகுதியிலே சாலையிலே இருக்கின்ற மரங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு அந்த தகவல் தொழில்நுட்பம் எல்லாம் சரி செய்யப்பட்டு வாகனம் செல்லக்கூடிய சூழ்நிலை எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, எந்தந்த அளவிற்கு அங்கே இருக்கின்ற அரசு ஊழியர்கள் உண்மையிலே கடுமையாக பணியாற்றினார்கள் என இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்றாக தெரியும். ஆகவே, முடிந்த அளவிற்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்து, அங்கே போர்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அந்த புயலில் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்டெடுக்கப்பட்டனர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நன்றி கூறி அமைகின்றேன்.

கஜா புயல் தாக்குவதற்கு முன்பாக அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆற்றிய உரை (05.01.2019)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது, கஜா புயலால் பாதிக்கப்பட்ட போது எந்த அதிகாரியும் அந்தப் பகுதியிலே வரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்துள்ளார். அது தவறானது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கஜா புயல் வருவதற்கு முன்பாகவே, இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, என் தலைமையிலே இருமுறை கூட்டம் கூட்டப்பட்டு, அந்தக் கூட்டத்திலே மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எல்லாம் கலந்து கொண்டு, புயல் ஏற்பட்டால் நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை எல்லாம் ஆலோசித்து, அந்த ஆலோசனையின்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், புயலால் பாதிக்கப்படக்கூடிய அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எல்லாம் அறிவுறுத்தப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, புயல் ஏற்படக்கூடிய அந்த மாவட்டங்களிலே, அந்த மாவட்ட அமைச்சர்கள் அங்கேயே தங்கியிருந்து, அந்தப் புயல் வருகின்ற போது, மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது அதற்கு முன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அவர்களுக்கு துணையாக மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்களும் முன்கூட்டியே அனுப்பிவைக்கப்பட்டனர். முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்ட காரணத்தினாலே, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினாலே, அனைத்து மின் இணைப்புகளும் புயல் அடிப்பதற்கு முன்பாக 6 மணிக்கு மின்சார இணைப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. போக்குவரத்து

இயக்கம் எல்லாம் நிறுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், இந்த புயல் கடுமையாக பாதிக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, குடிசையில் வாழ்ந்த மக்கள், தாழ்வான பகுதியிலே வாழ்ந்த மக்களை எல்லாம், அதிகாரி பெருமக்கள் தான் அவர்களை அழைத்து வந்து, பாதுகாப்பான முகாம்களில் தங்கவைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 81, 948 நபர்கள் 471 முகாம்களிலே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்க வைத்ததன் காரணமாக உயிர் சேதம் பெருமளவு தடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் எல்லாம் வந்த காரணத்தினாலே தான் இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கஜா புயலால் ஏற்பட்ட போது யாரும் வரவில்லை என்ற குற்றச்சாட்டு தவறு. வருவதற்கு முன்பாகவே, அங்கே இருக்கின்ற மாவட்ட அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள், மின்சாரத் துறை அதிகாரிகள், வேளாண் துறை அதிகாரிகள், இன்னும் பல்வேறு துறை சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் அங்கே அனுப்பி வைக்கப்பட்டு, புயல் ஏற்படுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு, மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

அணை பாதுகாப்பு சட்ட மசோதா குறித்து ஆற்றிய உரை (05.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அணை பாதுகாப்பு சட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிடும் போது, அதற்கு விளக்கத்தை இங்கே தர விரும்புகின்றேன்.

மத்திய அரசு 12.12.2018 அன்று அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018 ஐ நாடாளுமன்ற மக்களவையில் அறிமுகம் செய்தது. இது தொடர்பாக, மாண்புமிகு பிரதமருக்கு 14.12.2018 அன்று நான் எழுதிய கடிதத்தில் இந்த சட்ட மசோதாவை நீர்வள அமைச்சம் திரும்ப பெற உத்தரவிடுமாறும், அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளும் வரை இம்மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

இந்த மசோதாவிற்கு முன்பாக, மத்திய அரசு ஏற்கெனவே வரைவு அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2016ஐ நாடு முழுமைக்கும் பொருந்தும் வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பாக அனைத்து மாநிலங்களின் ஆலோசனை / கருத்துக்களை கோரியது. ஒரு மாநிலத்திற்கு சொந்தமான அணை வேறொரு மாநிலத்தில் அமைந்திருந்தால் அதற்கென தனிப்பட்ட சட்டப்பிரிவு ஏதும் இந்த மசோதாவில் தரப்படாததால், இந்த மசோதா தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதல்ல. எனவே, இந்த மசோதாவை எதிர்த்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 11.09.2016 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இந்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தி கடிதம் எழுதினார். 15.06.2018 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மீண்டும் இது தொடர்பாக நான் ஒரு கடிதம் எழுதியுள்ளேன். மேலும், இதே கருத்தினை வலியுறுத்தி

26.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், தமிழ்நாடு சட்டசபையில் 26.06.2018 அன்று தமிழக மக்களின் கருத்துகளை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் நான் எனது 14.12.2018 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

அணை பாதுகாப்பு சட்ட மசோதா, 2018இன் பிரிவு 23(1)இன் படி ஒரு மாநிலத்திற்கு சொந்தமான அணை வேறொரு மாநிலத்தில் அமைந்திருக்கும் பட்சத்தில், அந்த அணை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும். தமிழ்நாட்டிற்கு சொந்தமான முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், துணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் இருமாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்களின் அடிப்படையில் தமிழக அரசால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இந்த அணைகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அணையின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் அமைந்துள்ள மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழுவை அமைப்பது தமிழ்நாட்டின் உரிமைகளில் தலையிடுவதாகும். இது அரசியல் சாசன அமைப்பிற்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் முரணானதாகும். எனவே, அணை பாதுகாப்பு மசோதா, 2018இன் பிரிவு 23(1)ஐ, அணை வேறு மாநிலத்தில் இருந்தாலும் எந்த மாநிலத்திற்கு சொந்தமோ அந்த மாநிலத்தின் மாநில அணை பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும்படி திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளேன். மேலும், முல்லைப் பெரியாறு அணையின் மீதான தமிழ்நாட்டின் உரிமை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு 07.05.2014 அன்று வழங்கிய தீர்ப்பின் மூலம்

உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் 14.12.2018 தேதியிட்ட கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

மேலும், அணையை பராமரிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு, அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, அணை அமைந்துள்ள காடுகள் / வனவிலங்குகள் சரணாலயத்திற்குள் சென்று வர முழு உரிமை அளிக்கும் வகையில் பிரிவு 23இன் கீழ் ஒரு துணைப் பிரிவினை கூடுதலாக இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் எனவும் 14.12.2018 தேதியிட்ட கடிதத்தில் வலியுறுத்தினேன்.

எனவே, அணை பாதுகாப்பு சட்டமசோதா, 2018யை திரும்பப் பெற்று தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

அணை பாதுகாப்பு சட்ட மசோதா குறித்து ஆற்றிய உரை (05.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணை பாதுகாப்பு சட்டத்தை பற்றி பேசினார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஏன் என்று சொன்னால், நம்முடைய மாநிலம் அண்டை மாநில நீரை நம்பித்தான் இருக்கின்றது. முல்லைப் பெரியாறு அணையை எடுத்துக் கொண்டால், கேரள மாநிலத்திலே இருக்கின்றது. ஆகவே, இந்த அணை பாதுகாப்பு சட்டம் வந்து விட்டால், அந்த மாநிலத்திற்கு தான் அந்த அதிகாரம் கிடைக்கும். அந்த மாநிலம் தான் அந்த அணையை பராமரிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக நாடாளுமன்றத்திலே எதிர்த்து கொண்டு இருக்கிறார்கள். இந்த அணை பாதுகாப்பு சட்டம், நிறைவேற்றக்கூடாது, இந்த அணை பாதுகாப்பு சட்டம் நம் மாநிலத்திற்கு மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் என்று நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக நாடாளுமன்றத்திலே குரல் எழுப்பி கொண்டு இருக்கின்றோம். இந்த அணை பாதுகாப்பு சட்டத்தை மத்திய அரசு அமுல்படுத்தக் கூடாது என்று, முழுமையாக நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து குரல் கொடுத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் செயல்பட்டு வரும் TCPL ஆலையை மூட வேண்டும் என்பது தொடர்பான கேள்விக்கு அளித்த விளக்கம் (07.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மரியாதைக்குரிய திரு. இராமசாமி அவர்கள், அந்த ஆலையை மூட வேண்டும் என்ற நிலையிலேயே இருக்கின்றார். அதில் குறைபாடுகள் இருந்தால் தீர்க்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக தெரிவித்து விட்டார். இது பல ஆண்டுகளாக இந்த ஆலை நடைபெற்று கொண்டு இருக்கின்றன. இப்பொழுது ஒன்றும் புதிதாக கட்டி நடைபெறவில்லை. ஏற்கெனவே, பல ஆண்டுகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றன. அதில் இருக்கின்ற கழிவு நீரினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்து இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அங்கே ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்த ஆய்வு பணிகளில், தாங்கள் சொல்வது போல் ஏதாவது இருந்தால், அதில் மாற்றம் கொண்டு வந்து, அதை சரி செய்தால் அந்த ஆலை இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஏனென்றால், புதிய புதிய ஆலைகள் வந்தால் தான், நம்முடைய பொருளாதாரம் முன்னேற்றம் அடையும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, ஆலையை மூடுவதை விட்டுவிட்டு, அந்த ஆலையில் இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்கு உண்டான நல்ல ஆலோசனைகளை சொன்னால் நன்றாக இருக்கும் என்பதை தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

ஸ்டெர்லைட் ஆலை தொடர்பாக அளித்த விளக்கம் (07.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தை பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டு இருந்தார்கள். ஆகவே, அதை மீறி செயல்பட்ட காரணத்தினாலே, அந்த ஆலை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்றைக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக அரசு உத்தரவு வழங்கி, ஆலைக்கு சீல் வைக்கப்பட்டு இருக்கின்றது. இது ஒரு தொழிற்சாலை. இந்த தொழிற்சாலையை மாசு கட்டுப்பாட்டு வாரியமே மூடுவதற்கு அதிகாரம் இருந்தாலும் கூட, இந்த தொழிற்சாலையை பொறுத்தவரைக்கும் முதலமைச்சர் வரை கோப்பு வந்து, முதலமைச்சரே கையொப்பமிட்டு, இந்த தொழிற்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். இதுவரைக்கும் எந்த தொழிற்சாலையிலும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த ஸ்டெர்லைட் தொழிற்சாலையை பொறுத்தவரைக்கும், அவர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயிக்கப்பட்ட அந்த நிலை எதையும் நிறைவேற்றாத காரணத்தினாலே, மாசு கட்டுப்பாட்டு வாரியம் அதற்குண்டான நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஸ்டெர்லைட் சம்பந்தமாக ஏற்கெனவே விளக்கம் அளித்த நிலையிலே, நீங்கள் வெளிநடப்பு செய்திருந்தீர்கள். இருந்தாலும் சுருக்கமாக சிலவற்றை சொல்லுகின்றேன். ஏதோ, மாண்புமிகு அம்மாவுடைய அரசு இதற்கு எந்தஒரு நடவடிக்கையும் எடுக்காதது போல மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார். உங்களுடைய ஆட்சி காலத்திலே என்ன நடவடிக்கைகள்

எடுத்தீர்கள் என்று சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். உயர்நீதிமன்றம் மேற்கூறிய வழக்குகளை ஒன்றிணைத்து விசாரித்து 28.09.2010 அன்று கீழ்க்கண்ட தீர்ப்பினை வழங்கியது. ஸ்டெர்லைட் தொழிற்சாலைஉடனடியாகமூடப்படவேண்டும்.தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் தொழிலாளர்களுக்கு மாற்றுப்பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கூறிய உயர்நீதிமன்ற ஆணைக்கு எதிராக தொழிற்சாலை நிருவாகம் 01.10.2010 அன்று உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. 01.10.2010 அன்றே உயர்நீதிமன்றத்தின் மூடுதல் ஆணையை நிறுத்திவைத்து உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பிக்க, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தாக்கல் செய்த வாதுரையை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

14.10.1996 அன்று இந்த ஆலை இயங்குவதற்கான இசைவு ஆணையும், 20.05.1999 அன்று கூடுதல் பொருட்கள் தயாரிப்பதற்கான இசைவு ஆணையும், 02.11.2006 அன்று ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்தை நிறுவுவதற்கான இசைவு ஆணையும், 15.11.2006 அன்று ஆலையின் இரண்டாவது விரிவாக்கத்தை இயக்குவதற்கான இசைவு ஆணையும், 19.01.2009 அன்று ஆலையின் புதுப்பித்தல் இசைவு ஆணையும், 14.08.2009 அன்று ஆலையின் புதுப்பித்தல் இசைவு ஆணையும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் வழங்கப்பட்டது என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, இது எல்லாம் உங்களுடைய ஆட்சியிலேயே பதிலாக அங்கே உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறீர்கள். எல்லாமே ரிக்கார்டு ஆகி இருக்கிறது. ஆகவே, எங்களை பொறுத்தவரைக்கும் ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றோம். அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மேகதாது அணை மற்றும் விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக அளித்த விளக்கம் (07.01.2019)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது மேகதாது அணைப் பற்றி தெரிவித்தார்கள். மேகதாது அணை கட்டக்கூடாது என்பது தான் அனைவருடைய விருப்பம், ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய எண்ணமும். ஆகவே, அதை சுட்டிக்காட்டி தான் நாடாளுமன்றத்திலே நடைபெறுகின்ற கூட்டம் நடைபெறாத அளவிற்கு நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். அழுத்தம் கொடுத்து கொண்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் உச்சநீதிமன்றத்திலே வழக்கு போட்ட அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே எதிர்க்கட்சி தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். “குட்டகுட்ட” என்று சொல்கின்றார்கள். கடுமையான நடவடிக்கை அம்மாவுடைய அரசு எடுத்திருக்கின்றது. மேகதாது அணையிலே உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று மத்திய அரசையும், கருநாடகா அரசையும் வலியுறுத்தி கொண்டு இருக்கிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேபோல், 2007–லே நடுவர்மனறம் இறுதி தீர்ப்பு வந்தது. அப்போது மத்தியில் காங்கிரஸ் தலைமையிலே ஆட்சி நடைபெற்று கொண்டிருந்தது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அமைச்சரவையிலே இடம் பெற்று இருந்தது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் இருந்தார்கள். அப்பொழுது தமிழகத்தில் உங்களுடைய ஆட்சி தான் நடைபெற்று கொண்டிருந்தது. அந்த நடுவர்மன்ற இறுதி தீர்ப்பிலே நமக்கு தெளிவாக வழங்கப்பட்ட உரிமையை அப்போது நீங்கள் நிலைநாட்ட

தவறிவிட்டீர்கள். அந்த காலகட்டத்திலே 60 நாட்கள் இருந்தது. அந்த 60 நாட்களிலே மத்திய அரசிதழிலே வெளியிடப்பட்டு இருந்தால், கிட்டத்தட்ட 11 ஆண்டு காலம் நமக்கு காவேரி பிரச்சினையில் நமக்கு கிடைக்கவேண்டிய நீர், நம்முடைய விவசாயிகளுக்கு கிடைத்திற்கும். ஆனால் அந்த 60 நாட்களில் நீங்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது நாங்கள், இன்றைக்கு மேகதாதுவிலே மத்திய அரசு அனுமதி வழங்கியதை கண்டித்து, அதை திரும்ப பெற வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு அவையிலும் தொடர்ந்து குரல் கொடுத்து கொண்டு இருக்கின்றோம். அவை நடத்த முடியாத அளவிற்கு அந்த நிகழ்வு இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கின்றது. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே மத்தியிலே அதிகாரத்தில் இருந்த போது நீங்கள் இதை செய்திருந்தால் நிச்சயம் மத்திய அரசிதழிலே அப்போது வெளியிடப்பட்டு இருக்கும். அதை நீங்கள் செய்யாத காரணத்தினாலே, அவர்கள் நீதிமன்றம் சென்று விட்டார்கள். அதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்மை கிடைக்கிறது என்று சொன்னால், அதற்கு எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அதை சந்தித்து, எப்பொழுதும் பயப்படாது. எப்பொழுதும் தமிழ்நாட்டிற்கு நன்மை கிடைக்கக்கூடிய திட்டங்கள் எதுவாக இருந்தாலும் மத்திய அரசிற்கு துணை நிற்போம். தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக எந்த திட்டம் கொண்டு வந்தாலும், அம்மாவுடைய அரசு எதிர்க்கும். துணிச்சலோடு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை நாங்கள் தொடர இருக்கின்றோம். உங்கள் ஆட்சியிலே என்ன செய்தீர்கள். எதுவுமே செய்யவில்லையே. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை எந்த காரணத்திற்காக சொன்னார் என்று தெரியவில்லை. எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் தெளிவாக நாங்கள் எடுத்திருக்கின்றோம். தமிழ்நாட்டு விவசாய பெருங்குடி மக்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டு மக்கள்

வாழ்வாதாரத்திற்கு எந்த ஒரு இடர்பாடு வந்தாலும், அம்மாவுடைய அரசு துணை நிற்கும் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டம் கிடைக்கப் பெறவில்லை என்ற தவறான செய்தியை சொல்லியிருக்கின்றார். கடந்த முறை கூட, நம் எதிர்க்கட்சியின் கொறடா அவர்கள் தங்களுடைய பகுதியிலே வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைந்த அளவிலேயே ஒதுக்கப்பட்டது என்று கூட ஒரு புகாரை தெரிவித்தார். ஆகவே, காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சியினுடைய அளவை கருதி அதற்கெற்றவாறு காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக அவர்களுக்கு வங்கிகளின் மூலமாக அந்த தொகை அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 02.01.2019 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் பதிலுரை – 08.01.2019

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதிகை தந்த தென்றல்
புடம் போட்ட தங்கம்,
புரட்சியில் விளைந்த சுதந்திரம்
பூமியில் பிறந்த புண்ணியம்!
கடையேழு வள்ளல்களின் வாரிசு
கடைகோடி ஏழையையும்
வாழ்விக்கும் கருணை மழை!

மாண்புமிகு புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இலை ஆட்சி ஒன்றுதான் தொலைநோக்குத் திட்டங்களை அளிக்கும் என்று மக்கள் மலை போல நம்புகிறார்கள்.

வணங்க வந்தோர் பசி போக்க – அன்னதானத் திட்டம், குறைந்த விலையில் தரமான உணவிற்கு – அம்மா உணவகம், கருவில் இருக்கும் சிசுவிற்கு – ஊட்டச்சத்து, பிறக்கும் குழந்தைக்கு – அம்மா பரிசுப் பெட்டகம், பிறந்த குழந்தைக்கு – தாய்ப்பால் வங்கி, தலைமுறையை உருவாக்கும் தாய்மார்களுக்கு – அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், மக்கள் நல்வாழ்வுக்கு – முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்.

பள்ளிக் குழந்தைகளுக்கு – பலவகை கலவைச் சாதம், 14 வகையான கல்வி உபகரணங்கள், பால்வாடியிலிருந்து பல்கலைக் கழகம் வரை பயிலும் ஏழை மாணவர்களுக்கு ஏற்றமிகு திட்டங்கள்

இரண்டாம் பசுமைப் புரட்சி – இதனால் 5 முறை கிருஷி கர்மான் விருதுகள், வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டம்,

வீடு இல்லாதோருக்கு – பசுமை வீடுகள், ஆதரவற்றோருக்கு நான் இருக்கிறேன் தாயாக – என்று நம்பிக்கை அளித்த மாண்புமிகு அம்மா ஆட்சியில் இன்னும் ஏராளமான திட்டங்கள்.

கருநாடகம் அடைத்து வைத்திருந்த – காவேரித் தாயை மீட்டு – விவசாயத்திற்கு புத்துயிர் கொடுத்ததும், கடலோர மீனவர்களின் கண்ணீர் துடைத்து – உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளித்ததும், மின்சாரப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து – தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியதும், நிலத்தடி நீரை நிரந்தரமாய் உயர்த்தி, அடி பம்புகளிலும் அருவி போல் நீர் கொட்ட, மழைநீர் சேகரிப்பு திட்டம் வழங்கியதும், ஊரக மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த தாய்த் திட்டம் செயல்படுத்தியதையும், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட் என்று அடுக்கடுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியதையும் – யாரும், எங்கேயும், எந்தக் காலத்திலும் மறக்கவோ, மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் பாசறையிலும், ஆட்சிப் பணிகளிலும் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் என்பதால் அம்மா அவர்கள் வழியில் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம்.

நாங்கள் வகுக்கும் மக்கள் நலத் திட்டங்கள் அனைத்திலும் அம்மாவின் ஆத்மா இருக்கிறது. அதனால் தான், அகிலமே நமது திட்டங்களை முன்னோடித் திட்டங்களாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 02.01.2019 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களால்

முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய உறுப்பினர்கள் என அனைத்து உறுப்பினர்களுக்கும் முதற்கண் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை"

– அதாவது, குற்றத்தை ஆராய்ந்து, யார் பக்கமும் சாயாமல், நடுநிலையில் நின்று, குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை நல்லறிஞர்களோடு ஆலோசித்துத் தருவதே நல்ல நீதிமுறையாகும் என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, மாநிலத்தில், சட்ட ஒழுங்கு காக்கும் வகையில், நற்பணி செய்து மக்களை அச்சமின்றி வாழ வைக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

காவல்துறையை நவீனப்படுத்தியும், அவர்களது திறனை மேம்படுத்தியும், அவர்களுக்கு நவீன சாதனங்கள் வழங்கியும், அவர்களது மன வலிமை மேம்பட பயிற்சிகள் வழங்கியும் வருவதால், சாதிக் கலவரங்கள், தீவிரவாதம், மதவாதம், அடிப்படைவாதம், தொழிலாளர் கிளர்ச்சி போன்றவை பெருமளவில் குறைந்துள்ளன.

காவல்துறையை நவீனப்படுத்துவதன் ஒரு பகுதியாக எம்.பாஸ்போர்ட் செயலி, சி.சி.டி.என்.எஸ். திட்டம், நவீன தொழில்நுட்பத்துடன் மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு மையம், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் புத்துணர்வு பயிற்சி அளிக்கும் திட்டம், உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்தும் திட்டம் போன்ற திட்டங்களை அரசு செம்மையாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை கண்காணிப்பதற்காக உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்துவதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னிலையில் உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம், சமீபத்தில் நடந்த பெரும்பாலான குற்றங்கள் உடனுக்குடன்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்னையில், செயல்பாட்டில் உள்ள இரண்டு இலட்சத்திற்கும் மேலான கேமராக்கள் அதிக அளவிலான குற்றங்களை மிக விரைவில் கண்டுபிடிப்பதற்கு மிகவும் உதவிகரமாக உள்ளன.

திருக்கோயில்களில் உள்ள தொன்மை வாய்ந்த உலோகத் திருமேனிகள் மற்றும் கற்சிலைகளை பாதுகாக்க, 308.70 கோடி ரூபாய் செலவில் ஒரு திருக்கோயிலுக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 3,087 திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டிலேயே முதன்முறையாக காவல் துறையினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க நிம்ஹான்ஸ் (NIMHANS) நிறுவனத்துடன் இணைந்து காவலர் நிறைவாழ்வு பயிற்சி என்ற உளவியல்ரீதியான பயிற்சித் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சியினை வழங்க 254 காவல் அதிகாரிகளும், 208 மனநல ஆலோசகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பெங்களூரில் உள்ள நிம்ஹான்ஸ் நிறுவனத்தில் பயிற்சி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 50 இடங்களில் நடத்தப்படும் இப்பயிற்சியில், இது வரை 10 ஆயிரம் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும், அவர்களது குழந்தைகள் மற்றும் உறவினர்கள் சுமார் 9 ஆயிரம் நபர்களும் பங்கு கொண்டு பயனடைந்துள்ளனர்.

காவல் ஆய்வாளர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் இடையே, இப்பயிற்சி பரஸ்பர நல்லுணர்வு மற்றும் பணியிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டில் சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 511 உதவி ஆய்வாளர்களும், 6 ஆயிரத்து 140 காவல் ஆளிநர்களும் என மொத்தம் 6 ஆயிரத்து 651 நபர்கள் சீருடைப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு காவல்துறை நாட்டிலேயே சிறந்த படை என்ற பெயர் பெற்று விளங்குகிறது. இதற்குச் சான்றாக, அண்மையில்

இந்தியா டுடே பத்திரிகை, – சட்டம் ஒழுங்கில் சிறப்பாக செயல்படும் மாநிலம் – தமிழ்நாடு – என்பதற்காகவும், குறுகிய காலத்தில் இந்த சாதனை செய்ததற்காகவும் தனித்தனியாக 2 விருதுகள் வழங்கியுள்ளது.

சிறந்த மனித வளத்தினையும், தடையில்லா மின்சாரம் மற்றும் வலிமையான உட்கட்டமைப்புகளையும் நமது மாநிலம் கொண்டுள்ளதால், முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கின்றது. நாட்டிலேயே அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்டும், தொழிற்சாலை வேலைவாய்ப்புகளில் முதலாவது மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம், முதலீட்டை செய்ய வரும் நிறுவனங்களுக்கு 30 நாட்களுக்குள் ஒற்றைச் சாளர முறையில் அவர்களுக்கு வேண்டிய அனுமதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், 30 நாட்களுக்கு மேலாகும் பட்சத்தில், தானாகவே அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும் ஷரத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 46 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 28 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டும், மீதமுள்ளவற்றில், 3 விண்ணப்பங்களுக்கு கூடுதல் விவரங்கள் கோரப்பட்டும், இதர விண்ணப்பங்கள் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2015இன் மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து, உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019 ஜனவரியில் இம்மாதம் நடைபெற உள்ளது.

27 தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் புதிய விரிவாக்கத் திட்டங்களுக்கான முதலீடுகளை செய்வதற்கு இதுவரை மாண்புமிகு அம்மாவின் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிறுவனங்கள் சுமார் 50 ஆயிரத்து 444 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்யவிருப்பதால், சுமார் 50 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–1இல் 35 கி.மீ. நீளத்திலான வழித்தடங்களில் பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள AG-DMS முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான பணிகள் முடிவடைந்து விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. திருவொற்றியூர்–விம்கோ நகர் வரையிலான நீட்டிப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மக்கள் நலன் கருதி, மெட்ரோ இரயில் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்யும் வகையில், மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–2இல் மாதவரம் முதல் OMR சாலை சிப்காட் வரையும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரையும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையும் என 3 புதிய வழித்தடப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டம்–2இல், 52 கி.மீ. நீளத்திலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவி வழங்குகிறது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. கோயம்புத்தூர் நகருக்கும் மெட்ரோ ரயில் பணிகளுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு, புதிய சுற்றுச்சூழல் கொள்கை, மின் ஆளுமைக் கொள்கை, சூழியல் சுற்றுலாக் கொள்கை, தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை, மாநில வனக் கொள்கை, உணவு பதப்படுத்துதல் கொள்கை என பல்வேறு கொள்கைகளை இந்த நிதியாண்டில் வகுத்து, நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில், சிறு, குறு, நடுத்தர தொழில் முதலீடுகளுக்கு தகுந்த சூழ்நிலைகளை மேம்படுத்தவும், வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வதை எளிதாக்கவும், அதற்கென்று இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில், தனியே ஒரு இணையதள ஒற்றைச் சாளரத் தகவு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் புதிய முதலீடுகளுக்கு விரைவாகவும், எளிதாகவும் இசைவு வழங்கப்படுகிறது. இதுவரை 329 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 230 விண்ணப்பங்களுக்கு 30 நாட்களுக்குள் அனுமதி அளிக்கப்பட்டும், இதர

விண்ணப்பங்கள் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன. இதனால், 15 ஆயிரத்து 895 நபர்களுக்குப் புதியதாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கவும், வெளிநாட்டின் ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும் ஒற்றைச் சாளர அமைப்பாக "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" ஒன்று உருவாக்க உத்தரவிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

'Enchanting தமிழ்நாடு' என்ற தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் தாரக மந்திரம், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஒட்டுமொத்தமாக ஈர்த்ததன் காரணமாக, நாட்டிலேயே அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதனால் தான், இந்தியா டுடே பத்திரிக்கை சுற்றுலாவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான சூழல் இருப்பதும், பழமை வாய்ந்த கோவில்களும், புராதனத் தலங்களும், தமிழ்நாட்டின் கலாச்சாரமும் உலக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாடு திருக்கோயில்கள், வழிபாட்டிற்கு மட்டுமல்ல, கலை மற்றும் கலாச்சாரக் கருவூலங்களாகவும் திகழ்கின்றன. திருக்கோயில்களை பாதுகாக்கும் மகத்தான கடமையை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் பல்வேறு திட்டங்களை அறிவித்தும் செயல்படுத்தியும் வருகிறது. அந்த வகையில், சென்ற 2017–2018ஆம் ஆண்டில் 765 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதே போன்று இந்த ஆண்டும் தொடர்ந்து குடமுழுக்குகள் நடத்தப்படும்.

இவ்வாறு பல்வேறு திருப்பணிகள் செய்து வருவதனாலும், பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளை நமது மாநிலம் அதிக அளவில் ஈர்த்துள்ளது.

“ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்”

– அதாவது, தன்னால் முடிந்த இடத்தில் எல்லாம் சிறப்பாகவே செயல்பட வேண்டும். இயலாத இடத்திலும் வேறு வழிகளை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, இருண்ட தமிழகமாக இருந்த நம் மாநிலத்தை, மின்மிகை மாநிலமாக மாற்றியே தீருவேன் என்ற உறுதியோடு செயல்பட்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால், தமிழ்நாடு இன்று மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்து, சிறப்பான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இந்நிலை தொடர்வதற்கு ஏற்ற வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து இது வரையில், எண்ணூர் சிறப்பு பொருளாதார அனல் மின் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–3, எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம், உப்பூர் அனல் மின் திட்டம், உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–1, குந்தா நீரேற்று மின் திட்டம் என மொத்தம் 6,200 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது மட்டுமன்றி, பசுமை எரிசக்தி முயற்சியில் 11,750 மெகாவாட் எரிசக்தி மின் நிறுவு திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் பெருமக்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, பருவமழை பொய்த்து, மேட்டூர் அணை திறந்துவிட தாமதம் ஏற்படும் போதெல்லாம்,

இலட்சக்கணக்கான டெல்டா விவசாயிகள் பயன் பெறும் வகையில், குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு தொகுப்புத் திட்டத்தை அறிவித்து வருகிறது.

அது மட்டுமன்றி, பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, 2016–2017ஆம் ஆண்டில் அதிக அளவிலான காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றது. அதாவது, கடந்த 2016–2017ஆம் ஆண்டில் மட்டும் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து 3 ஆயிரத்து 526 கோடியே 78 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல, 2017–2018ஆம் ஆண்டில் ஆயிரத்து 8 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை இதுவரை ஒப்பளிக்கப்பட்டு உள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் இதுவரை 16 இலட்சத்து 39 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 2 இலட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் கூடுதல் இந்த ஆண்டு பதிவு செய்துள்ளனர் என்ற விவரத்தையும் இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் மிகப்பெரிய உணவுப் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை ஒன்றினை மாண்புமிகு அம்மாவின் அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இது மட்டுமன்றி, கிராம அளவில் குறிப்பிட்ட விளைபொருட்களுக்கான உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறான பல்வேறு முயற்சிகளினால், தமிழ்நாடு இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக, கடந்த 7 ஆண்டுகளில் 5 முறை உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னைக் கடந்து சாதனை புரிந்து, இந்திய அரசின் உயர் விருதான கிருஷி கர்மான் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமின்றி, பிற மாநிலங்களுக்கும் உணவு வழங்கி வருவது நமது டெல்டா மாவட்டங்கள் தான். அந்த டெல்டா மாவட்ட விவசாயிகளின் நீராதாரத்தை பெறுவதற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவேரி பிரச்சினையில் நடத்திய சட்டப் போராட்டத்தில், கடந்த ஆண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் தன்னுடைய இறுதித் தீர்ப்பை வழங்கியது. அத்தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டது. இது டெல்டா விவசாயிகளின் நிலம் மட்டுமல்ல, மனதையும் குளிரச் செய்தது என்றால் அது மிகையாகாது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி, காவேரியில் உள்ள தமிழ்நாட்டின் உரிமை இதன் மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக, மேட்டூர் அணை 4 முறை தன்னுடைய முழு கொள்ளளவினை எட்டியதுடன், 23.04.2018 முதல் 06.09.2018 வரையிலான காலத்தில், 30 நாட்கள் முழு கொள்ளளவிலேயே இருந்துள்ளது. காவேரி நீரினை முறையாக டெல்டா மாவட்ட பாசனத்திற்கு பயன்படுத்துவதை கண்காணிக்க ஒரு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின் மூலம் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம் கண்ணன்கோட்டை–ராஜநேரி தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத் திட்டம், பெரம்பலூர் மாவட்டம் மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் ஆகிய பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இது தவிர, பல்வேறு அணைகளில் தூர்வாரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, அணைகளின் கொள்ளளவினை மீளப் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஏரிகள் மற்றும் அணைகளில் படிந்துள்ள வண்டல் மண்,

விவசாயிகளுக்குத் தங்கள் மண் வளத்தினைப் பெருக்கிக் கொள்ள விலை இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

முன் எப்போதும் இல்லாத அளவில், 2018ஆம் ஆண்டில் மிக அதிகமாக, அதாவது 30 நாட்கள் காவேரியில் வெள்ள நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டது. இதன் காரணமாக, 182 ஆண்டுகள் பழமையான கொள்ளிடம் அணைக்கட்டின் மதகுகள் சேதமடைந்தன. சேதமடைந்த கொள்ளிடம் கதவணையை 24.08.2018 அன்று சக அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் நான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டேன். காவேரி ஆற்றில் பாசனத்திற்கான நீர் வெளியேற்றத்தை மீளப்பெற கொள்ளிடம் ஆற்றில் மேலணையின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு காவேரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு நீர் வழங்கப்பட்டது. மேலும், புதிய கதவணையின் கட்டுமானத்திற்கு 2 ஆண்டுகள் தேவைப்படும் என்பதால், தற்போதுள்ள நீரொழுங்கியினை பலப்படுத்த சுமார் 39 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீரொழுங்கி அமைக்கவும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைகள் கட்டுவது என 2017–2018ஆம் ஆண்டு என்னால் அறிவிக்கப்பட்டது. இதில் 2017–2018ஆம் ஆண்டில் 12 தடுப்பணைகள் 51.51 கோடி ரூபாய் மதிப்பிலும், 2018–2019ஆம் ஆண்டில் இதுவரை 59 தடுப்பணைகள் 244.89 கோடி ரூபாய் மதிப்பிலும் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி பெற்று பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களைத் தயாரித்து நீர் வள ஆதாரங்களை மேலும் செம்மைப்படுத்த, “தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைத்தல் கழகம்” என்ற ஒரு

அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு அரசு முதன்மைச் செயலாளர் நிலையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் அணைப் பாதுகாப்பு மசோதாவினை மத்திய அரசு திரும்பப் பெற்று தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. கேரள அரசு முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட உத்தேசித்துள்ள திட்டத்தை தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டிற்கான உரிமை நிலைநிறுத்தப்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேகதாதுவில் அணைகட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கருநாடகத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை திரும்பப் பெறக்கோரி, மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். மாண்புமிகு அம்மாவின் அரசு கொடுத்த திடமான மற்றும் தொடர் அழுத்தங்களின் காரணமாக, மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல், மேகதாதுவில் கருநாடகம் அணை கட்ட இயலாது என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, முல்லைப் பெரியாறு மற்றும் மேகதாது ஆகிய பிரச்சினைகளில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டவும், தமிழர்களின் நலனை கருத்தில் கொண்டும், சட்டரீதியான நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 60 ஏரிகளுக்கு தென்பெண்ணை ஆற்றில் எண்ணேகொல் அணைக்கட்டிலிருந்து இருபுறமும் புதிய வழங்கு கால்வாய்கள், அலியாளம் அணைக்கட்டின் வலதுபுற கால்வாயிலிருந்து ஒரு புதிய வழங்கு கால்வாய் மற்றும் சின்னாற்றிலிருந்து பிரியும் ஜெர்தலாவ் கால்வாயிலிருந்து ஒரு புதிய வழங்கு கால்வாய் அமைத்து, உபரிநீரைக் கொண்டு செல்வதற்கு

மூன்று திட்டங்களை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நூற்றாண்டு விழாவில் நான் அறிவித்தேன். இத்திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவில் தொடங்கப்படும். இத்திட்டத்தினால், 4 ஆயிரத்து 737 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் இதுவரை 3 இலட்சத்து 20 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் நடப்பாண்டு வரை 40 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

புலம் பெயர்ந்த மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2018–2019ஆம் ஆண்டிற்கு ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக 1,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, முழு சுகாதார தமிழ்நாட்டை அடையும் விதத்தில், தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல் போன்ற திட்டங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்தியமைக்கான இந்திய அரசின் பல்வேறு விருதுகளை தமிழ்நாடு இந்த ஆண்டு வென்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டில் 15 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கடனாக 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் கடந்த 2017–2018ஆம் ஆண்டில் 200 கோடி ரூபாய் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 67,228 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான பயனாளிகளை தேர்வு செய்யும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

வளர்ந்து வரும் சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்பு உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்த, சாலைகளும், மழைநீர் வடிகால்களும், நடைபாதைப் பணிகளும், தெரு விளக்கு அமைக்கும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டிலிருந்து நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு, கூவம் ஆறுகளில் மிதக்கும் ஆகாயத் தாமரை மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டு, வெள்ளநீர் முறையாக வடிந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், மோட்டார் வாகனம் அல்லாத போக்குவரத்தை ஊக்குவிக்கும் பணிகள், நீர்நிலைகளை மேம்படுத்தும் பணி, பல அடுக்கு வாகனம் நிறுத்தம் கட்டும் பணி, புதிய பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள் முடிவுற்றும், முன்னேற்றத்திலும் உள்ளன.

நகராட்சி நிருவாக ஆணையத்தின் கட்டுப்பாட்டில், 10 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

பேரூராட்சிப் பகுதிகளில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், இதுவரை 1 இலட்சத்து 39 ஆயிரத்து 157 தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு 2,922.30 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 35 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், 1,824 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2018–2019ஆம் நிதியாண்டில், நெடுஞ்சாலைத் துறை மூலம் 9 ஆயிரத்து 554 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், ஆயிரத்து 140 எண்ணிக்கையில் சாலை பாதுகாப்புப் பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள், தாங்கு சுவர் அமைக்கும் பணிகள், 7 இரயில்வே மேம்பாலங்கள், 80 ஆற்றுப் பாலங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில், 3 ஆயிரத்து 764 கோடி ரூபாய் மதிப்பில் 5 ஆயிரத்து 256 கி.மீ. சாலைப் பணிகளும், 47 ஆற்றுப் பாலங்களும், ஒரு சாலை மேம்பாலமும், 9 இரயில்வே மேம்பாலங்களும், ஒரு நடை மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. 12 ஆயிரத்து 306 கி.மீ. சாலைப் பணிகளும், 238 ஆற்றுப் பாலங்களும், 16 சாலை மேம்பாலங்களும், 68 இரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடச் சாலை, திருநெல்வேலி மேற்கு புறவழிச் சாலையை நான்கு வழித்தடமாக்கும் பணி ஆகியவற்றுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் தஞ்சாவூர்–திருக்காட்டுப்பள்ளி புறவழிச் சாலை அமைக்க நில எடுப்பு செய்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசிடமிருந்து, தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், மாநில சாலைகளை மேம்பாடு செய்யவும், 3 ஆயிரத்து 462 கோடி ரூபாய் நிதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் பழனி–தாராபுரம் சாலை, ஆற்காடு–திண்டிவனம் சாலை, வள்ளியூர்–திருச்செந்தூர் சாலை, கள்ளக்குறிச்சி–திருவண்ணாமலை சாலை, தஞ்சாவூர்–கோடியக்கரை சாலை – ஆகிய 5 மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மக்களுக்கு வாழ்விடங்கள் அமைத்துத் தருவது முக்கியம் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், குடிசைகள் அற்ற நகரங்கள் எனும் கனவினை நனவாக்க, தொலைநோக்குத் திட்டம் 2023ஐ உருவாக்கித் தந்தார்கள். நகரப்

பகுதிகளில் குடிசைகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு 13.91 இலட்சம் குடியிருப்புகள் தேவை என்பதை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கண்டறிந்துள்ளது. மேலும், மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசு 21 ஆயிரத்து 604 கோடி ரூபாய் மதிப்பில் 5 இலட்சத்து 17 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்ட ஒப்புதல் பெற்று, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய நாட்டில் இத்திட்டப் பணிகளை நிறைவேற்றும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. மேலும், முதன்முறையாக உலக வங்கியின் உதவியுடன் சென்னை மாநகர பகுதியில் நீர்வழிகளில் வாழும் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் ஏற்படுத்துவதற்காக ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும்.

“தவிதவிக்கிற ஏழைக்காக திட்டம் போடணும்,
பொருளை சரிசமமா பங்கு வைக்க சட்டம் போடணும்”

என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பாடிய பாடலுக்கு ஏற்ப, நடுத்தர மற்றும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக அனுமதிக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான தள பரப்பளவு குறியீட்டினை (FSI) 1.5–லிருந்து 2–ஆக உயர்த்தி மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாறு, உயர்த்தப்பட்ட தளப் பரப்பளவை கடைபிடிக்கும் வகையில், வரைவு விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் கட்டட பாதுகாப்பை உறுதி செய்யவும், விதிமீறல்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து அவற்றை தவிர்க்கும் வகையிலும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

கட்டடம் மற்றும் மனைப் பிரிவுகள் அமைப்பதை நெறிமுறைப்படுத்த, தற்போது தனியாக உள்ள திட்ட அனுமதி மற்றும் கட்டட விதிகளை ஒருங்கிணைத்து ஒரே தொகுப்பாக வரைவு விதி உருவாக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் விண்ணப்பிக்கும் முறைகள் எளிமையாக்கப்பட்டு விரைவில் அனுமதி அளிக்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையை நாடி வரும் பொது மக்களுக்கு விரைவான சேவையினை அளிக்கும் வகையில், மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வகையான சான்றிதழ்கள் உட்பட 20 வகையான சேவைகள் இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை எளிமைப்படுத்திடவும், விவசாயிகள் அடங்கல் பதிவேட்டினை எளிதில் பார்வையிடவும், பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும், இ–அடங்கல் திட்டம் மற்றும் பட்டா மாறுதல் சேவைகள் பொதுமக்களை நேரடியாக சென்றடைவதற்கு ஏதுவாக இணையவழி பட்டா மாறுதல் திட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களைத் தவிர்த்து, பிற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு ஆக்கிரமிப்பு செய்துள்ள தகுதியுள்ள ஏழை, எளிய நபர்களுக்கு அதனை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

வருவாய்த் துறையின் சேவைகள் எளிதில் கிடைக்க இந்த ஆண்டு புதியதாக ஒரு வருவாய்க் கோட்டமும், 8 வருவாய் வட்டங்களும், ஒரு வருவாய் உள்வட்டமும் மாண்புமிகு அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

இயற்கை பேரிடர்களை முன்னதாகவே அறிந்து கொள்ள தாய்லாந்தில் உள்ள ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட இணையதள புவியியல் தகவல் முறை (GIS) அமைப்பு மற்றும் TN-SMART என்ற செயலி கடந்த அக்டோபர் மாதம் என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது, இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இச்செயலி மூலம் குறுகிய காலத்தில் பேரிடர் எச்சரிக்கைகள் தெரிவிக்கப்பட்டு, பெருமளவிலான உயிர்ச் சேதத்தை தவிர்க்க இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு நிதியாண்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக தனியார் பேருந்துகளுக்கு இணையாக 60 எண்ணிக்கையிலான அரசு சொகுசுப் பேருந்துகளும், 40 எண்ணிக்கையிலான நீண்டதூர குளிர்சாதன பேருந்துகளும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இதனால் போக்குவரத்துச் சேவை மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, மாதவரத்தில் 95 கோடி ரூபாய் செலவில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

மேலும், சென்னையில், மின்சாரம் மற்றும் மின்கலப் பேருந்துகள் இயக்கத்திற்கு வர உள்ளன. இதற்கான ஒப்பந்தம் இலண்டனில் உள்ள சி–40 முகமைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கும் இடையே கடந்த மார்ச் மாதம் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். KFW வங்கியின் உதவியுடன் எரிபொருள் செயல்திறன் மிக்க பி.எஸ்.6 பேருந்துகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் நீண்டகாலமாக வழங்காமல் இருந்த ஊழியர்களின் நிதி நிலுவைகளை வழங்கவும், விபத்து இழப்பீட்டுத் தொகை நிலுவைகளை வழங்கவும் போதுமான நிதியினை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது.

மேலும், பல ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து வந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்களின் நிலுவைத் தொகையினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற பின்னர் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டதை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அந்த வகையில் 2017–2018ஆம் ஆண்டில் மட்டும் 2,147 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல், உணவு பாதுகாப்புச் சட்டம், மாண்புமிகு அம்மாவின் அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் நான்கு அடுக்குகளாக நடத்த திட்டமிடப்பட்டிருந்தது, அதில் 17 ஆயிரத்து 598 முதன்மை கூட்டுறவு சங்கங்களுக்கான 2 அடுக்கு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்களின் மூன்று மற்றும் நான்காம் கட்ட தேர்தல் விரைவில் நடத்தப்பட உள்ளது. இதர சங்கங்களுக்கான தேர்தல் நீதிமன்ற வழக்குகளால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மக்கள் ரம்ஜான் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்காக கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 292 மெட்ரிக் டன் பச்சரிசி வழங்கப்பட்டது. ஏழை எளியோர் பயன்படுத்தும் அம்மா உணவகங்களுக்கு, அரிசி மற்றும் கோதுமை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக, மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து மாவட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 1,000 ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசால் ஆணை வெளியிடப்பட்டு, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக இந்த நிதியாண்டில் 31.12.2018 வரை 9 இலட்சத்து 22 ஆயிரத்து 903 விவசாயிகளுக்கு 6 ஆயிரத்து 25 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலை மேம்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு மாசற்ற தமிழ்நாட்டை உருவாக்கித் தரும் வகையில், மாண்புமிகு அம்மாவின்

அரசு இந்த மாதம் 1ஆம் தேதி முதல் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை அமலுக்கு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்திற்கான நோக்கத்தினை நிறைவேற்ற வணிகர்களும், மக்களும் இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு தரத் தொடங்கி விட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தொடர்பாக, மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்வோரிடம் இருந்தும், அதை இருப்பில் வைத்துக் கொள்வோரிடம் இருந்தும் பறிமுதல் செய்யப்படும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோருக்கு தகுந்த அளவில் எச்சரிக்கை செய்து, அதையும் மீறுவோர் மீது அபராதம் விதிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தொலைநோக்குத் திட்டம் 2023இல் வழிகாட்டியுள்ளபடி, தமிழ்நாடு இயற்கை சார் வளங்களில் மிகுந்துள்ளதால், நில அமைப்பின் இயற்கை சூழலை பாதுகாக்கும் நோக்கத்தோடு, மாநில சூழல் சுற்றுலாக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான மலையேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு புதிய மலையேற்ற விதிகளை வகுத்துள்ளது.

சுற்றுச்சூழல் விதிமுறைகளை மீறியதால், தூத்துக்குடியிலுள்ள ஸ்டெர்லைட் காப்பர் ஆலையை நிரந்தரமாக மூட இந்த அரசு ஆணையிட்டது. ஆனால், இவ்வாணையை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தது. மாநில அரசு தனது ஆட்சேபணைகளை தெரிவித்த பின்னரும், இந்த ஆலையைத் திறக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டதை எதிர்த்து, இந்த அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

குழந்தை இறப்பு விகிதம், மொத்த கருவள விகிதம் மற்றும் தாய்மார்கள் இறப்பு விகிதம் போன்ற சுகாதாரக் குறியீடுகளில்

முறையே ஆயிரத்திற்கு 17, 1.6 மற்றும் ஒரு இலட்சத்திற்கு 62 என்ற இலக்கினை எய்தி, நமது மாநிலம் மிகச் சிறந்த சாதனையை புரிந்துள்ள காரணத்தினால், நிதி ஆயோக்கினால் வெளியிடப்பட்டுள்ள "சுகாதாரமான மாநிலம் – முற்போக்கு இந்தியா" என்ற அறிக்கையில், தமிழ்நாடு மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உடல் உறுப்பு தானம் வழங்குவதில் தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தொடர்ந்து விளங்கி வருகிறது.

அனைவருக்கும் மருத்துவச் சேவை கிடைக்கும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசை வலியுறுத்தி, மதுரை தோப்பூரில் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற எய்ம்ஸ் மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளது. மாநிலங்களின் உரிமையை பாதிக்கும் வகையில் கொண்டு வரப்படவுள்ள மத்திய அரசின் மருத்துவ ஆணைய மசோதாவினை மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் உள்ள நிருவாக அமைப்புகள், மூன்று அடுக்கு நிருவாக அமைப்பாக மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் 322.18 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக, தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கை விகிதம் 99.86ஆக உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக, அரசுப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் தங்கள் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், 3 ஆயிரம் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும், 6 ஆயிரத்து 29 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களும் அமைக்கப்பட உள்ளன.

விலையில்லா மடிக்கணினிகள் 2019–2020 கல்வியாண்டு முதல், ப்ளஸ்–1 வகுப்பில் இருந்தே மாணாக்கர்களுக்கு வழங்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக அரசு பள்ளிகளில் பாடப் புத்தகங்கள் QR Code மற்றும் காணொலிக் காட்சியுடன் இணைக்கப்பட்டு ஆற்றல் மிகு பாடப் புத்தகங்களாக (Energized Text Books) உருவாக்கப்பட்டுள்ளதால், பாடக் கருத்துக்களை மாணவர்கள் தேவைப்படும்பொழுதெல்லாம் எளிதாக கற்றிட இயல்கிறது. இதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

2018–2019ஆம் கல்வியாண்டில் 152 கோடி ரூபாய் செலவில் 41 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு கலை மற்றம் அறிவியல் கல்லூரிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தி வருவதன் காரணமாக, தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் 49.1 சதவீதமாகவும், மாணவிகளின் சதவீதம் 48.2 எனவும், ஆக மொத்தம் 48.6 சதவீதம் என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நம் மாநிலத்தை அறிவுத் தலைநகரமாகவும், புதிய கண்டுபிடிப்புகளின் மையமாகவும் மாற்றுவதே நமது உயர் கல்வித் துறையின் நோக்கமாகும்.

மத்திய அரசின் இந்திய உயர்கல்வி ஆணைய வரைவு மசோதாவினை கைவிடவும், பல்கலைக் கழக மானியக் குழு என்ற அமைப்பு தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும் அம்மாவின் அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

கல்வி மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கு அளித்து வரும் முக்கியத்துவத்திற்கு இணையாக, மாண்புமிகு அம்மாவின் அரசு சமூக நலத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகிறது.

அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளின் சீரான வளர்ச்சி விவரங்களை சேகரித்து கண்காணிக்க 20 ஆயிரத்து 150 அங்கன்வாடி பணியாளர்களுக்கு தொடுதிரை கைபேசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெண்களுக்கான பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், 24 மணி நேர கட்டணமில்லா தொலைபேசி எண் 181 சேவையும், கடந்த மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இது தவிர, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் நிரந்தர ஆதார் பதிவு செய்யும் வசதிக்காக 1,302 ஆதார் பதிவு செய்யும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் 43 ஆயிரத்து 205 சத்துணவு மையங்களில் 51.96 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

இவை தவிர, மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவித் திட்டங்களின் மூலம் சென்ற ஆண்டு ஒரு இலட்சத்து ஆயிரத்து 119 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் சமுதாயத்தில் அனைத்து நலன்களும் ஒருங்கே பெற்று சம உரிமையுடன் வாழ வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் –

➢ அவர்களது வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு 3 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக உயர்த்தியும்,

➢ அவர்கள் சுயதொழில் தொடங்க அளிக்கப்பட்டு வந்த கடனுதவியை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும்,

➢ அவர்களை தனியார் துறைகளில் பணியமர்த்த சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் உட்பட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மூன்றாம் பாலினத்தவர்களின் நலனுக்காக ,

➢ சொந்த தொழில் செய்ய வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

➢ தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக அரசுத்துறை பணிகளில் 9 மூன்றாம் பாலினத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

➢ 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற 1,000 மூன்றாம் பாலினத் தவர்களுக்கு மாதாந்திர ஒய்வூதியம் உட்பட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மனித வளத்தின் செயல்திறனை மேம்படுத்த, குறிப்பாக, பொறியியல் பட்டதாரிகளின் செயல்திறனை மேம்படுத்த, செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வுக் கூட்டம் 10.09.2018 அன்று என்னால் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு, தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை–2018ஐ வெளியிட்டது. இது தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சிக்கும், புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்க்கவும் பெரிதும் பயன்படும்.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), ட்ரோன்கள், மிகைத் தரவு (Big data), ஆளில்லாத வான்வழி வாகனங்கள், மிகைநிகர் உண்மை (Augmented Reality), பிளாக் செயின் (Block-chain),

பொருட்களின் இணையம் (Internet of Things) மற்றும் மெய்நிகர் உண்மை (Virtual Reality) போன்றவை 4ஆவது தொழில் புரட்சிக்கான புதிய தொழில்நுட்பங்கள் ஆகும்.

புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு மின் ஆளுமை (e-governance) பிரிவின் மூலமாக மக்களுக்கான சேவையை மேம்படுத்திடும் வகையில், தேசிய மின் ஆளுமைப் பிரிவின் உதவியோடு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் ஒன்று மத்திய–மாநில அரசின் பங்களிப்போடு உருவாக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டுப்பாடு மற்றும் கட்டளை மையம் ஒன்று நிறுவப்படும்.

அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சேவைகளை வெளிப்படைத் தன்மையுடன் செம்மையாக பெறும் பொருட்டு, மாநில குடும்ப தகவல் தொகுப்பு ஒன்று உருவாக்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டும், அவ்விடுதிகளில் சிசிடிவி கேமிராக்கள் பொருத்தியும் அவை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

பிற மலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மக்கள் வைத்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

வன்னியர் குல சத்திரிய சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மக்களின் கல்வி மற்றும் அவர்தம் முன்னேற்றத்தினை உறுதி செய்ய, தாராள மனம் கொண்ட கொடையாளிகள் வழங்கிய சொத்துக்களை பராமரிக்க மாண்புமிகு அம்மாவின் அரசால் சட்டம் இயற்றப்பட்டு, சொத்துக்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜெருசலேம் புனிதப் பயணம் செல்லும் கிறிஸ்தவ மக்களுக்கு மானியம் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் உயர்த்துதல், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல் மற்றும் தர்காக்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக நிதியுதவி வழங்குதல்

போன்ற திட்டங்கள் கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகள் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும், சொன்னதைச் செய்வோம், செய்வதைத் தான் சொல்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹஜ் பயணம் செல்ல கொடுக்கப்பட்டு வந்த மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், அதற்கு இணையான மானியத்தை மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்யும் என்பதை கூறிக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மேம்பாடு, கல்வியில் முன்னேற்றம் போன்றவற்றில் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு ப்ரி–மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைகள் இவ்வாண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில், 26.63 கோடி ரூபாய் மதிப்பில் 23 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு, மாணாக்கர்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், 33.83 கோடி ரூபாய் செலவில் 29 விடுதிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இயங்கி வரும் ஆயிரத்து 297 விடுதிகளில், 25.94 கோடி ரூபாய் மதிப்பில் மாணாக்கர்கள் பயன்பாட்டிற்காக லாக்கர் வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழங்குடியின மாணாக்கர்களுக்கு தரமான கல்வி வழங்க 7 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் விழுப்புரம், தருமபுரி, நாமக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி, கூடுதல்

வகுப்பறை, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் வழங்கும் பணிகள் 49.84 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு புதிய ஜவுளிக் கொள்கை வகுக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஜவுளித் தொழிலின் வளர்ச்சியை ஊக்குவிக்க கோயம்புத்தூர் நகரில் உள்ள ‘கொடீசியா’ அரங்கில் 2 கோடி ரூபாய் செலவில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி இம்மாதம் நடத்தப்பட உள்ளது.

மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்துவதில் தொழிலாளர் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. தொழிலாளர்கள் பணி பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய, பேச்சு வார்த்தைகள் மற்றும் கலந்தாலோசனைகள் மூலம் முடிவெடுத்து, விரிவான ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

பட்டாசுத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திட அவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு 200 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் இளைஞர்கள் இப்பயிற்சியினை பெற்று, அதில் 40 ஆயிரம் இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெற்று பயனடைந்துள்ளார்கள். மேலும் 12 ஆயிரம் இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னையில் பணிபுரியும் பதிவு

பெற்ற கட்டடத் தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்களில் விலையில்லா உணவு வழங்கும் திட்டத்தை விரைவில் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலனை மேம்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையை தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன் காரணமாக, முன் எப்போதும் இல்லாத வகையில், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய, காமன்வெல்த் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அதிக பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

விளையாட்டுத் துறையில் அதிகமான இளைஞர்களை ஈர்த்து, மேன்மேலும் சாதனைகள் படைக்க, அவர்களுக்கு தமிழ்நாடு அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில், குறிப்பிட்ட பதவிகளில், நிர்ணயிக்கப்படும் தகுதியின் அடிப்படையில், 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்துள்ளது. இதற்கான விதிமுறைகளை வகுப்பதற்கு தலைமைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவ்விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை நடைமுறைப்படுத்திட, வணிக வரித் துறை எடுத்த துரித நடவடிக்கையினால், வணிகர்கள் சிரமமின்றி, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் இதர வரி சட்டங்களிலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு மாறுவதற்கு ஏதுவாக இருந்தது.

ஜி.எஸ்.டி. வரியினை வெற்றிகரமாக செயல்படுத்தியதால், குறைந்த அளவிலேயே இழப்பீடு பெறும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இது தமிழ்நாட்டின் சிறந்த செயல் திறனைக் காட்டுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு ஜி.எஸ்.டி. மன்றக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தெளிவாக எடுத்துரைத்த பல்வேறு காரணங்களினால், 53 பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான ஜி.எஸ்.டி. வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஸ்டார் 2.0 புதிய ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் திட்டம் மூலம் சொத்து ஆவணப் பதிவு முறை மாண்புமிகு அம்மாவின் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், ஸ்டார் 2.0 நிலை–2, சொத்துப் பதிவு தவிர, திருமணம், சங்கம், சீட்டு மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனம் ஆகிய பதிவுகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்சேவைகளினால், பொது மக்கள் பெரிதும் பலன் அடைந்து வருகின்றனர்.

லோக் ஆயுக்தா சட்டம், 2018இல் இயற்றப்பட்டு, 13.11.2018 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. லோக் ஆயுக்தாவில் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் விரைவில் முடிவுற்று, விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்–1, 1–A, 1–B பணியிடங்களுக்கு தற்போதுள்ள SC/ST/MBC/BC மற்றும் DNC பிரிவினருக்கான வயது உச்சவரம்பு 35லிருந்து 37ஆகவும், இதர பிரிவினருக்கு தற்போதுள்ள வயது உச்சவரம்பு 30லிருந்து 32ஆகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தியுள்ளது.

புதிய பங்கேற்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பதிலாக, பழைய ஓய்வூதிய திட்டத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களின் கோரிக்கை குறித்த சாத்தியக்கூறுகளை ஆராய, மாண்புமிகு அம்மாவின் அரசு, ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு. டி.எஸ்.ஸ்ரீதர் அவர்கள் தலைமையில் ஒருநபர் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு தனது அறிக்கையை 27.11.2018 அன்று அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இதனை பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமல்படுத்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு. அதன் பின், ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக ஒரு நபர் ஆணையத்தை அமைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டது. அக்குழு தனது விசாரணையை முடித்து அரசுக்கு பரிந்துரை அறிக்கையை 05.01.2019 அன்று சமர்ப்பித்துள்ளது. அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் கூடுதல் சிறப்பு அம்சங்களுடன் மேலும் 4 ஆண்டுகளுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசின் வருவாய் இனங்களை நிகழ் நேரத்தில் மின்னணு வருவாயாகப் பெறவும், 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு எளிமையான முறையில் பராமரிக்கவும், நிதி மற்றும் மனித வள மேலாண்மையை மேம்படுத்திடவும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தினை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் விரைவில் என்னால் தொடங்கி வைக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

15ஆவது நிதிக் குழுவின் ஆய்வு வரம்புகளில், 2011 மக்கள் தொகையை பயன்படுத்தினால் தமிழ்நாட்டிற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால், 1971 மக்கள் தொகை கணக்கீட்டின் படியே ஆய்வு வரம்புகள் இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது. 15ஆவது நிதிக் குழுவும் இந்தக் கோரிக்கையை ஏற்று பாரபட்சமின்றி, நிதிப் பகிர்வு பரிந்துரையை அளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க நிதி வழங்கப்பட்டது போல, தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கல்வி

நிறுவனங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை 1 கோடி ரூபாய் வைப்புத் தொகையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளார் பெயரிலும், தமிழ் அறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரிலும் இரண்டு புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழுக்குப் பெருமை சேர்த்த மூன்று தமிழறிஞர்களது நூல்கள் நாட்டுடமை செய்யப்பட்டுள்ளது.

சமூக நீதிக்காக போராடிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களது திருவுருவப் படத்தை சட்டமன்றப் பேரவையில் வைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. அன்னாருக்கு கடலூரில் மணி மண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மணி மண்டபம் கட்டவும், தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் பாரத மாதா ஆலயம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமூக நீதிக்காக பாடுபட்ட திரு. ராமசாமி படையாச்சியாரின் பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாளும், கலைத் துறைக்கு அளப்பரிய சேவை புரிந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பிறந்த தினமான அக்டோபர் 1ஆம் நாளும், ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடி அவர்களை பெருமைப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது.

கலைத் துறையினருக்கான கலைமாமணி விருதுகளும், திரைப்படம் மற்றும் சின்னத்திரைக்கான விருதுகளும் விரைவில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் தொடங்கி கன்னியாகுமரி வரையிலான 32 மாவட்டங்களிலும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா மூலம் 5 ஆயிரத்து 744 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3,214 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டும், 5 ஆயிரத்து 158 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற 2,370 புதிய திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டும் உள்ளன.

மொத்தம் 568 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில்,

- 492 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 46 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 446 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றும் வருகின்றன.
- மீதமுள்ள அறிவிப்புகளில் 74 அறிவிப்புகளுக்கு ஆயத்தப் பணிகள் நடைபெற்றும், 2 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும் இருந்து வருகின்றன.

2011–2016ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் மொத்தம் ஆயிரத்து 55 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

- அதில் ஆயிரத்து 39 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, 754 பணிகள் நிறைவேற்றப்பட்டும், 301 அறிவிப்புகளின் மீதான பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

2017–2019ஆம் ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் மொத்தம் 259 அறிவிப்புகள் என்னால் வெளியிடப்பட்டன.

- அதில் 221 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டும், 38 பணிகள் நிறைவேற்றப்பட்டும், 191 அறிவிப்புகளின் மீதான பணிகள் நடைபெற்றும் வருகின்றன. மீதமுள்ள 30 அறிவிப்புகளுக்கு ஆணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதயமான விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமாக வெண்மைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இன்று வரை 76 ஆயிரத்து 836 கிராமப்புற பெண்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 2.66 இலட்சம் லிட்டர் தினசரி பால் உற்பத்தி செய்யப்படுவதுடன், 1.66 இலட்சம் கன்றுகளும் பிறந்துள்ளன.

பால் உற்பத்தியாளர்களின் சிரமங்களை குறைக்க ஏதுவாக நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு இடங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் துவக்கப்பட்டுள்ளன. ஒரே நாளில் 37 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து மாண்புமிகு அம்மாவின் அரசால் சாதனை படைக்கப்பட்டுள்ளது. ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்களை சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் இன்று வரை 9 இலட்சத்து 13 ஆயிரத்து 579 பயனாளிகளுக்கு 36 இலட்சத்து 54 ஆயிரத்து 316 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அவை இதுவரை 71 இலட்சத்து 33 ஆயிரத்து 690 குட்டிகளை ஈன்றுள்ளது என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழி அபிவிருத்தித் திட்டம் மூலம் 2 ஆயிரத்து 961 கறிக்கோழி பண்ணைகள் 18 ஆயிரத்து 545 நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது இத்திட்டம் மாநிலம் முழுவதும் 77 ஆயிரம் கிராமப்புற ஏழை பயனாளிகளுக்கு வாழ்வாதாரம் வழங்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒகி புயலின்போது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நிவாரணங்களை உடனடியாக வழங்கியது. இறந்த மற்றும் காணாமல் போன மொத்தம் 204 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா 20 இலட்சம் ரூபாய் வழங்கியதுடன், அதில் தகுதியுள்ள 159 மீனவர்களது வாரிசுகளுக்கு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பு

வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களது படகுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும் நிவாரணம் வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்தது.

ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு இயற்கை சீற்றங்களின்போது, தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில், ஆழ்கடல் தகவல் தொடர்பு கருவிகள் (NaVIC) வழங்கப்பட்டு வருகிறது. மேலும், செயற்கைக் கோள் தொலைபேசி மற்றும் 'நேவ்டெக்ஸ்' தொலைத் தொடர்பு கருவிகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட பொழிக்கரை கிராமத்தில் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, கடல் சீற்றத்தினை குறைக்கும் வகையில், தூண்டில் வளைவு அமைக்கப்படும்.

'கச்சத்தீவை மீட்போம்' என்ற நமது இதய தெய்வத்தின் இலட்சியத்தை அடையும் வரை மாண்புமிகு அம்மாவின் அரசு, தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தும் என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் திரு.ஐராவதம் மகாதேவன் அவர்களின் கட்டுரைகள், புத்தகங்களை நாட்டுடைமை ஆக்கி வெளியிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.)

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை தெரிவித்திருக்கின்றார்கள். இதை அரசு பரிசீலிக்கும் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சி துணைத் தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் முன்னோடித் திட்டங்களை இந்த அரசு திறம்பட செயல்படுத்தி, பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளித்தல், அவர்களது சுகாதாரத்தில் கவனம்

செலுத்துதல், மாணாக்கர்களது கல்விக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களை ஊக்குவித்தல், அவர்களின் உயர் கல்விக்கு பல்வேறு திட்டங்கள் வகுத்தல் போன்ற சமூகத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லும் பணியில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அத்துடன் நில்லாமல், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு பல்வேறு பயிற்சி அளிக்கவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஏதுவாக தொழில் வளர்ச்சி ஏற்பட தகுந்த சூழ்நிலைகளை உருவாக்கியும் வருவதால், தமிழ்நாடு அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அடைந்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் பின்பற்றுவதையும், அகில இந்திய அளவில் பாராட்டுதல்கள் பெறுவதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2030ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்குகளாக ஐ.நா. சபை நிர்ணயித்த பல்வேறு வளர்ச்சி இலக்குகளை அடைவதில், தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்வதாக சமீபத்தில் நிதி ஆயோக்கினால் வெளியிடப்பட்ட Sustainable Development Goal Index, 2018இல் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, வறுமை ஒழிப்பு, தூய்மையான மரபுசாரா எரிசக்தி வழங்குதல் மற்றும் ஒட்டுமொத்த செயல்பாட்டில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்.

மேலும், பெங்களூருவில் உள்ள பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு வெளியிட்ட 2018ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை அறிவித்துள்ளது.

மாண்புமிகு ஆளுநர் உரையில், இதுவரை நான் 11 ஆயிரத்து 286 கோப்புகளை பரிசீலித்து ஆணைகள் பிறப்பித்துள்ள விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது. கோப்புகளில் கையொப்பமிடுவது என்பதை

ஒரு சாதனையாக நான் கருதவில்லை, அது முதலமைச்சர் என்ற முறையில் என் கடமை ஆகும். ஒவ்வொரு கோப்பும்,

- வளர்ச்சி திட்டப் பணிகளுக்கான ஒப்புதலாகவும்,
- பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வாகவும்,
- ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்திற்கு பயன் தரும் நலத் திட்டங்களாகவும் இருக்கின்றது.

என்பதில் தான் எனக்கு மகிழ்ச்சியே தவிர, எண்ணிக்கையில் அல்ல என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் வேகமான வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்தார்கள். அவர்கள் காட்டிய ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற தாரக மந்திரத்தினையும், அவர் வகுத்துத் தந்த கொள்கைகளையும் செவ்வனே பின்பற்றி வரும் இந்த அரசு, மாநிலத்தின் பல்வேறு தேவைகளுக்கு விரைவாகவும், பொறுப்புணர்வுடனும் தீர்வு கண்டு வருகிறது. இதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த அரசு சட்டம் ஒழுங்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகிறது. வலிமையான கட்டமைப்புகளை ஏற்படுத்தி, ஆரவாரமின்றி அமைதியாகவும், திடமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுவதால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உயர்ந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, சமீபத்தில் பிரபல ஆங்கிலப் பத்திரிக்கையான இந்தியா டுடே விருது வழங்கும் விழாவில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் விரைந்து முன்னேறிய மாநிலம், சுற்றுலாவில் சிறந்த மாநிலம் மற்றும் ஒட்டுமொத்த செயல்பாடுகளில் முதலிடம் என தேர்வு செய்து, விருது வழங்கியது. இதற்கு சான்று என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களைப் பொருத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையிலேயே சென்று, அவரது கொள்கைகளை பின்பற்றி, மக்கள் பணியை அமைதியாக ஆர்பாட்டமின்றி செய்வதை

எங்கள் கடமையாகக் கருதி செயல்பட்டு வருகிறோம். அதே சமயம், தமிழ்நாட்டு மக்களின் நலனை என்றென்றும் மாண்புமிகு அம்மாவின் அரசு பாதுகாக்கும் என்பதையும் இங்கு உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 176(1)இன் கீழ் பொதுத் தேர்தல் முடிந்த பிறகும், ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், மாண்புமிகு ஆளுநர் உரையில், சென்ற ஆண்டின் அரசின் சாதனைகளும், முக்கியமான பிரச்சினைகளுக்கு அரசினுடைய நிலைப்பாடும், எதிர்காலத்தில் அரசு எப்படி செயல்பட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையும் இருக்க வேண்டும். திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும் இதைத்தான் பின்பற்றினீர்கள்.

மாண்புமிகு அம்மாவும், 23.06.2016 அன்று இந்தப் பேரவையில் உரையாற்றியபோது "கவர்னர் உரை என்பது சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களைத் தொகுத்து வெளியிடுகின்ற பெரிய அறிக்கை அல்ல. கோடிட்டுக் காட்டுகிற அறிக்கை" என்றார்.

உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், ஏன், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இதே நடைமுறை தான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆளுநர் உரையில், அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப, அடுத்து வரும் நிதிநிலை அறிக்கையிலும், ஒவ்வொரு துறையின் மானியக் கோரிக்கையிலும் அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த கருத்தைத் தான் பாராளுமன்ற நடவடிக்கை குறித்து கவுல் மற்றும் ஷக்தர் எழுதிய புத்தகத்தில் தெரிவித்துள்ளார். மேலும், மாண்புமிகு ஆளுநர் உரையின் மீது நடைபெறும் விவாதத்தின் போது, நானும், அமைச்சர் பெருமக்களும் தகுந்த விளக்கங்களை தெரிவித்திருக்கிறோம். மேலும், எனது பதிலுரையில் அனைத்து விவரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று தனது உரையை முடிக்கும்போது, அரங்கநாதன் என்ற ஒற்றை வார்த்தையை 8 வரிகளில் விடுகதை பாடலாக ஒரு புலவர் சொன்னதாகவும், அது போன்றே மாண்புமிகு ஆளுநர் உரையும், ஒன்றுமில்லை

என்பதை சுற்றி வளைத்து 52 பக்கங்களில் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

"எப்பொருள் யார், யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, ஒரு கருத்தின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, தெளிவு கொள்ள வேண்டும்.

பார்வையற்ற ஐந்து பேர் ஒரு யானையைப் பார்க்க சென்றார்களாம். அதில்,

ஒருவர் காலைப் பிடித்துப் பார்த்து யானை தடிமனாக இருக்கும் என்றும்,

இரண்டாமவர் வாலைப் பிடித்துப் பார்த்து, யானை ஒல்லியாக இருக்கும் என்றும்,

மூன்றாமவர் வயிற்றைப் பிடித்துப் பார்த்து யானை பானை போல இருக்கும் என்றும்,

நான்காமவர் காதை பிடித்துப் பார்த்து யானை தட்டையாக இருக்கும் என்றும்,

ஐந்தாமவர் தந்தத்தைப் பிடித்துப் பார்த்து யானை கூர்மையாக இருக்கும்

என்றும், சொன்னார்களாம். இதிலிருந்து தெரிவது என்னவென்றால், எதையும் முழுமையாக பார்த்துத் தெரிந்து கொள்ளாவிட்டால், அவரவர் நினைப்பு போலவே தோன்றும். அது போலத் தான், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் தோன்றிருக்கிறது என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பூஜ்ஜியத்தில் தான் இந்த ராஜ்ஜியம் நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த அவையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதே போன்று தான், 16.02.2017இல் நான் முதலமைச்சராக பதவியேற்ற போது, 10 நாட்கள் கூட இந்த அரசு தாக்குப்பிடிக்காது என்று சிலர்

கூறினார்கள். ஆனால், 10 நாட்கள் அல்ல, 100 நாட்கள் அல்ல, 100 நாட்களுக்கும் மேல் 700 நாட்களையும் தாண்டி மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வெற்றிகரமாக மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் பலனாக பல்வேறு விருதுகளையும், சிறப்புகளையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. இதிலிருந்து எது பூஜ்ஜியம், யார் பூஜ்ஜியம் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல, பூஜ்ஜியத்தில் ஆரம்பித்த இந்த ராஜ்ஜியம், இரண்டு பூஜ்ய இலக்க நாட்களைத் தொட்டிருக்கிறது. இது மூன்று, நான்கு பூஜ்ஜிய இலக்குகளை அடைந்து, மாண்புமிகு அம்மாவின் நல்லாட்சி தொடரும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு ஆளுநர் உரையை விடுகதை என்கிறார். ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசைப் பற்றி மக்களுக்கு நன்கு புரிந்ததால் தான், மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனை தொடர்கதையாகத் தொடர்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு மேலும் தொடர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம் அவர்களும், மாண்புமிகு உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.குமரகுரு அவர்களும், விழுப்புரம் மாவட்டம் பெரிய மாவட்டமாக உள்ளதால், அதனை பிரிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். இதனை பரிசீலித்து விழுப்புரம் மாவட்டம், பெரிய மாவட்டமாக இருப்பதால், நிருவாக வசதிக்காக விழுப்புரம் மாவட்டத்தை பிரித்து கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும். புதிதாக தோற்றுவிக்கப்படும் இந்த மாவட்டத்திற்கு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் விரைவில் தனி அதிகாரியாக நியமிக்கப்படுவார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு எனது உரையில் உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவ்வாறு ஏதேனும் அவர்களது கோரிக்கை விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் கொண்டு விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரையை ஒரு மனதோடு நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பேரவை துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு, எப்போதும் நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றை விரைந்து செயல்படுத்துவதிலும் தான் அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை